# DJH3C: HISTORY OF THE U.S.A (1865 TO 1987)

Unit - I

Civil War: Legancy of the Civil War – Abraham Lincoln – An Assessment - Reconstruction: Varieties of Reconstruction – Age of Exploitation – Industrialization of America.

Unit - II

Revolution and Reaction in Economic Life: Response to Industrialism – Labour Movements – New Immigration- Apartheid and Imperialism: City Life and their problems – Political tends between 1877 and 1896 their problems Political trend in 1990.

Unit - III

Rise of Progresivism - Theodore Roosevelt – Square Deal- Domestic policy - Progressive Era- America and the first World War: Woodrow Wilson – The 1920's – The great depression.

Unit - IV

Franklin Roosevelt – New deal - America and the Second World War – The Americanisation of the world.

Unit - V

Civil Rights: Policy of containment – Awareness of Civil rights – Martin Luther King- America 1960 – 1980: 1960s to 1980s – New Frontier Society and Racial Turmoil- Recent Development: Women's Liberation – Wartergate – Ford to Reagan – American Foreign Policy.

Reference Books:

1. Christopher p. Hill - History of the United States
2. Frank Freidal and Alan Frankly - America in the 20th century
3. Joh A. Krout - The United States since 1865
4. Rajayyan. K. - History of the U.S.A.
5. Subramanian. N. - A History of the U. S.A.
6. William Chage - The unfinished Journey in America since world war II

# அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாறு (1865 முதல் 1987 வரை)

## அலகு - I

## ஆபிரஹாம் லிங்கன் - உள்நாட்டுப் போர்

### உள்நாட்டுப் போருக்கான காரணங்கள்

பிரிவு மனப்பான்மை உள்நாட்டுப் போருக்கு வழி வகுத்தது. தட்பவெப்ப நிலை, மண்வளம், உற்பத்தி முதலியவற்றில் ஒன்றிற்கொன்று மாறுபட்ட இரு பூகோளப் பகுதிகளாக இயற்கையே ஐக்கிய நாடுகளைப் பிரித்தது. சுதந்திர மனப்பான்மை மற்றும் புதிய அனுபவங்களைப் பெற விருப்பமுடைய ஐரோப்பிய இனமக்கள் இப்பகுதிகளில் குடியேறினர். தேசிய மற்றும் பிரிவினை சக்திகள் எப்போதும் ஒன்றுகொன்று எதிராகச் செயல்படும் அவலநிலையை இது உருவாக்கியது. இவ்விரு சக்திகளுக்குமிடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியாக அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சிக் கோட்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. எனினும், போட்டிநிலை நீக்கப்படவில்லை. தேசிய மனப்பான்மையும், தேசிய சட்டங்களும், உள்சக்திகளோடு ஒன்றுபட முடியாத போது மாநிலங்கள், மாநில உரிமைகள் மூலம் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றன. குடியரசுத்தலைவர் ஆடம்ஸீன் நாட்டுத்துரோகச் சட்டங்களுக்கு எதிரான வெர்ஜினியா கென்டக்கித் தீர்மானங்களும், குடியரசுத்தலைவர் ஜாக்சனின் சுங்கவரிச் சட்டங்களுக்கெதிரான தென்கரோலினா தெளிவுரையும் செல்லுபடியற்றதாக்கும் பிரச்சனையை ஏற்படுத்தியது. மற்றும் மாநிலங்கள் தங்கள் சுதந்திரக் கருத்துக்களை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சியாகவும் இருந்தது. அடிமை முறைப் பிரச்சனை மூலம் இச்சூழ்நிலை வலிமை பெற்றது. உண்மையில் உள்நாட்டுப்போர், இதுவரை செயல்பட்டுவந்த பிரிவினை சக்திகளின் முதிர்வை வெளிப்படுத்தியது.

மக்களின் தன்னிச்சைமன ப்பாங்கை விட வடதென்பகுதிகளுக்கிடையே நிலவி வந்த பொருளாதாரப் பூசல்கள் தான் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தோழிற் புரட்சி வடபகுதியை தொழில்மயமாக்கியது. இது முதலாளித்துவ வகுப்பைச் சார்ந்த வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் வங்கியாளர்களைத் தோற்றுவித்தது. வணிக வகுப்பைச் சார்ந்தவர்கள் தொழிற்கூடங்கள் வாணிபமும், காப்பீடு, வங்கி, அந்நியச் செலவாணி போன்றவைகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். தங்கள் தொழில் நலன்களைப் பேணி பாதுகாத்து அவைகளை விருத்தி செய்ய காப்பு சுங்கவரி முறை, தேசியவங்கி, நெகிழும் தன்மை உடைய அரசியலமைப்பு, வலிமைமிக்க மத்திய அரசுமற்றும் கிழக்குப் பகுதியை, மேற்குடன் இணைக்க இருப்புப்பாதை போன்ற உள்நாட்டு முன்னேற்றங்களைக் கருதி செய்கின்ற சேவைகள் தங்களுக்குத் தேவையெனக் கோரினர். ஆனால் இதற்கு மாறாக தென்பகுதியினர் விவசாயிகளாகவும் பெரும் நிலச்சுவான்தாரர்களாகவும் இருந்தனர். பருத்தி, புகையிலை மற்றும் இதர முக்கிய கச்சாப் பொருட்களை அவர்கள் உற்பத்தி செய்து அவற்றை வடமாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் விற்றனர். சுங்கவரியின் மூலம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான பொருள்களில் பலவற்றை தேவையற்ற முறையில் அதிக விலை கொடுத்து வாங்கினர். இதன் விளைவாக ஐக்கிய நாடுகளின் அடிப்படை

வருவாயைத் தாங்கள் கொடுத்த போதிலும் வடமாநில நிதியாளர்களால் சுரண்டப்படுவதாக தென்பகுதியினர் எண்ணினர். துங்கள் நலனைப் பாதுகாக்கும் முயற்சியில் காப்புச் சுங்கவரி, தேசியவங்கி, நெகிழும் தன்மையுடைய அரசியலமைப்பு, கிழக்கையும் மேற்கையும் இணைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு அபிவிருத்தி முயற்சிகள் போன்றவைகளை அவர்கள் எதிர்த்தனர். உண்மையில் இப்பிரச்சனைகள் அனைத்தும் முன்பு ஹாமில்டன் ஜெபர்சன் போன்றோர்கள் கடைப்பிடித்த கொள்கைகளுக்கிடையே ஏற்பட்ட தகராறு அடிப்படையில் தோன்றியதாகும். பிற்காலத்தில் இம்முரணபாடு விக் கட்சியினருக்கும் ஜனநாயகக்கட்சியினருக்குமிடையே நிலவி வந்த கருத்து வேறுபாடாகவும் பின்னர் வட, தென் மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட ஒரு சிக்கலாகவும் நிலையாக நீடித்து விட்டது.

வடக்கின் தொழில்முறைக்கும், தெற்கின் விவசாய முறைக்கும் இடையே போட்டி ஏற்பட்டதென்றால் அதற்கான அடிப்படைக்காரணமாக அமைவது அடிமைப் பிரச்சனையாகும். முனிதாபிமான நெறிமுறையற்ற உணர்ச்சியே அடிமை முறைக்குக் காரணம் என்று பலர் கருதினர். ஒருசில வெள்ளையர்கள், குறிப்பாக குவேக்கர் நண்பர் கழகத்தைச் சார்ந்தவர்கள் நெறிமுறை அடிப்படையில் அடிமைமுறையை எதிர்த்தது உண்மையே! எனினும் அடிமைமுறை காரணமாகவே போர் ஏற்பட்டது என்று கருதுவது உண்மையல்ல. ஐக்கிய நாடுகளின் பிரிவினைச் சச்சரவில் அடிமை பாதிக்கப்பட்டானே தவிர அவன் காரணமாக பிரச்சனை எழவில்லை. அமெரிக்கர் பூர்வீக இந்தியரை மிகவும் கடுமையாக நடத்தினர் என்பது யாவருக்கும் தெரிந்த உண்மை. இந்நிலையில் அவர்கள் திடீரென்று கருணைமிக்கவர்களாக மாறினர் என்பதும், ஆப்பிரிக்க நீக்ரோக்களிடம் அன்பை காட்டினர் என்பதும், நம்பமுடியாத ஒன்றாகும். இரண்டாவதாக தென்மாநிலங்களில் நீக்ரோக்கள் இழிவாகக் கருதி கொடுமைப்படுத்தப்பட்டனர் என்றால் இதே போன்ற சூழ்நிலை தான் வடபகுதியிலும் நிலவி இருந்தது. வெள்ளை தொழிலாளி கூட கறுப்பு தொழிலாளி தன்னுடன் போட்டியிடுவதை விரும்பவில்லை. போர் வழியாக ஐக்கியத்தைக் காப்பாற்ற ஜனாதிபதி லிங்கன் முற்பட்ட போது கூட அடிமை முறையை ஒரு பிரச்சனையாகக் கருதவில்லை. தனது பதவி ஏற்பு தொடக்கச் சொற்பொழிவின் போது, அடிமைமுறை நிலவி இருக்கின்ற மாநிலங்களோடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தலையிடுவது தன்னுடைய நோக்கமல்லவென்று அவர் கூறினார். அவர் அடிமை முறையை ஒழித்தாரென்றால் வேறுபாடான இரு பொருளாதார முறைகளை பின்பற்றி வட,தென் மாநிலங்களுக் கிடையே நிலவிய தகராறத் தீர்ப்பதற்கும் ஐரோப்பிய தாராளக் கொள்கையினரின் ஆதரவைப் பெறுவதற்கும் ஆகும். நான்காவதாக, தென்பகுதியும் அடிமைமுறையை நீக்க முன் வந்ததென்றே கூறவேண்டும். உள்நாட்டுப் போரின் போது ஆங்கிலேயர்கள் தங்களுக்கு உதவி செய்வதாக இருந்தால் அடிமைத்தனத்தை ஒழித்து விடுவதாக தென்பகுதி புரட்சி மாநிலங்களின் தலைவராகிய ஜெபர்சன் டேவிட் கூறினார். அடிமை முறையைப் பாதுகாக்க வேண்டுமென்று போராடியிருந்தால் அதற்கு அவர் மறுத்து இருப்பார். எனினும் அடிமைமுறையாது ஒரு தேசியப் பிரச்சனையாக்கப்பட்டதேடு அரசியல், பொருளாதார அறநெறி அடிப்படைகளில் தாக்கப்பட்டது. ஏனெனில் தென் மாநிலங்களின் செல்வாக்கும், வளமு் அடிமைகளை வைத்திருந்த தென்பகுதி எஜமானர்களின்

அரசியல் பொருளாதாரச் செல்வாக்கை அழிப்பதற்கும், அதே நேரத்தில் வடமாநிலங்களின் அரசியல், பொருளாதார நிலையை உறுதியான அடிப்படையில் நிலை நாட்டவும் வேண்டுமெனில் அடிமைமுறையை ஒழிக்க வேண்டியதாக இருந்தது. ஐந்தாவதாக, தங்களது சுயநலத்தை அதிகரிக்க மேற்கொள்ளும் முயற்சிகளனைத்தையும் நன்னெறி சார்ந்த செயல்களென அழைப்பதே அமெரிக்கருடைய வழிமுறையாக இருந்தது. அடிமை முறை ஒழிப்பு, அறநெறி தழுவியதாகக் காணபட்டதால் ஐரோப்பிய நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றுக் கொண்டதில் வியப்பில்லை. ஆனால் கருத்தளவில் இது தென்மாநிலங்களை தற்காப்பு நிலையில் வைத்தது.

உண்மையில் வல்லமைச் சமநிலை பிரச்சனையே போருக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. வேறுபட்ட இரு பொருளாதார அமைப்புகளிடையே எழுந்த தகராறு தேசிய அரசில் அதிக முக்கியத்துவம் பெறுவதற்கு வழிவகுத்தது. வடதென் மாநிலங்களின் முன்னேற்றம் அவை காங்கிரஸில் பெற்றுள்ள பெரும்பான்மையின் அடிப்படையிலும் கூட்டிணைவின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதிலும் இருந்தது. தங்களது சுய முன்னேற்றத்திற்காக இவ்விரு பிரிவினரும் அரசியல் கட்சிகள் அடிமைகள், புதிய மாநிலங்களைச் சேர்த்தல் போன்றவற்றை கருவியாகப் பயன்படுத்தினர்.

துங்களுக்குள் வல்லமைச் சமநிலையை ஏற்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையை இவ்விரு பிரிவுகளில் ஏதேனும் ஒன்று கொண்டிருந்தபோது பிளவு ஏற்படவில்லை. ஆனால் வடமாநிலங்கள் காங்கிரசில் பெரும்பான்மை பெற்று ஐக்கிய நாடுகள் அரசியலில் தங்களது கட்சியின் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்குரிய நம்பிக்கை தென்மாநிலங்களுக்கு சிறிதளவும் இல்லை. எனவே அவர்கள் உள்நாட்டுப் போரில் ஈடுபட தீர்மானித்தனர்.

**உடனடிக் காரணங்கள்**

1850-ம் ஆண்டிற்குப் பிறகு பத்து வருடங்களாக தொடர்ந்து நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் போருக்கு வழி வகுத்தன. பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் வகையில் போடப்பட்ட ரயில் பாதைக்திட்டங்கள் தென்மாறில மக்களின் ஆர்வத்தைப் பாதித்தன. 1850-லிருந்து ரயில்பாதைகள் போடப்பட்டன. இதில் தென்மாநிலங்கள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டன. வடகிழக்கு, வடமேற்கு ரயில்பாதைகள் ரயில்பாதைகளனைத்தும் நேரடியாக இணைக்கப்பட்டபோது வட தென் ரயில்பாதைகளைப் பொறுத்தமட்டில் இணைப்புமுறை கடைபிடிக்கப்படவில்லை. தொன்றுதொட்டே மேற்குபகுதி தனது உற்பத்திப் பொருட்களைவ ிற்பதற்கு தென்பகுதியை சார்ந்து இருந்தது. அதற்காகப் பொருட்கள் நதிகள் வழியாக தென்பகுதி துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஆனால் ரயில்பாதைகள் போடப்பட்டவுடன் பொருள்களைக் கிழக்கு பகுதியிலுள்ள அங்காடிகளில் அதனால் விற்க முடிந்ததோடு வடக்கிலுள்ள துறைமுகங்கள் வழியாகப் பொருட்களை எடுத்துச் செல்லவும் முடிந்தது. தற்செயலாக இப்போக்குவரத்து முறையானது மேற்குப் பகுதி, தென்பகுதியோடு கொண்ட உடன்பாட்டை மீறியதோடு மேற்கு, வடக்கு மாநிலங்கள் தமக்குள் உடன்பாடு கொண்டு காங்கிரசில் செயல்பட வழிச்செய்தது. இப்புதிய உடன்பாடு தென்பகுதியை பிரதிகூல நிலையில் வைத்தது.

இரண்டாவதாக, 1850-க்குப் பின்னுள்ள பத்தாண்டு காலத்தில் வாணிபத்திற்கும் வேளாண்மைக்குமிடையே போட்டி மூண்டது. அந்நாட்களில் தொழில் மற்றும் வேளாண்மைப்பொருட்களுக்கு தேவை அதிகமாக இருந்தது. ஆகையால் இரு பிரிவுகளுமே தங்களுடைய உற்பத்தியையும், விநியோகத்தையும் அதிகரிக்க முயன்றபோது தொழிலாளர்களும் அதிகம் தேவைப்பட்டனர். ஐரோப்பாவிலிருந்து ஐக்கிய நாடுகளுக்கு குடிபெயர்தல் ஒரே சீராக இருந்தபோது வடமாநிலங்களுக்கு தொழிலாளர்கள் பெறுவது பற்றிய பிரச்சனையே எழவில்லை. ஆனால் இதற்கு மாறாக அதிக அடிமைகளை ஆப்பிரிகடகாவிலிருந்து பெறுவதை தென்மாநிலங்கள் இழந்ததோடு தனது அதிகாரத்தின் சீழிருந்த அடிமைகளை விடுதலை செய்ய வேணடும் என்றும் வற்புறுத்தப்பட்டன.

மூன்றாவதாக, 1854-ம் ஆண்டின் கான்சாஸ் நெப்ராஸ்கா சட்டம் இதுவரை வடதென் மாநிலங்களிடையே நிலவிவந்த சமாதானத்திற்கு முற்றுப்புள்ளி வைத்ததோடு இவ்வினப் பூசலுக்கு புதிய வடிவம் தந்தது. 1850-ம் ஆண்டு உடன்பாட்டைக் காப்பாற்றுவதாக உறுதி கூறிய ஹென்றி க்ளே போன்ற அரசியல்வாதிகள் அரசியலை விட்டு வெளியேறவே இவ்வுடன்பாட்டிற்கு எவ்வித மதிப்பும் அளிக்காத இளம் தலைவர்கள் தோன்றினர். அவர்களில் அதிகச் செல்வாக்கு மிக்கவர் இல்லினாய்ஸ் செனட்டரான ஸ்டீவன் யு.டக்ளஸ் என்பவராவார். தனது தாய் மாநிலத்தின் செல்வாக்கை உயர்த்தி, சிக்காக்கோ நகரை ஒரு ரயில்வே மையமாக மாற்ற வேண்டுமென்று அவர் விரும்பினார். இந்நேரத்தில் பசிபிக் மகாசமுத்திரம் வரை ரயில் பாதை ஒன்று அமைக்க வேண்டுமென்ற தீர்மானம் இருந்தது. வடக்கு வழியாகவோ சிக்காகோ வழியாகவோ, தெற்கு வழியாகவோ அப்பாதை அமைக்கப்படலாம் என்று யோசனை கூறப்பட்டது. சிக்காகோவை முடிவிடமாகக் கொண்ட மத்திய தடத்தை அமைப்பதில் அவர் தீவிரமாக ஈடுபட்டார். அவரது திட்டத்தின் படி லூாசியானாவின் வடபகுதியிலுள்ள கான்சாஸ் நெப்ராஸ்கா என்றழைக்கப்பட்ட ‘பிரய்ரீஸ்’ புல் வெளிகளின் வழியாக அப்பாதை அமைக்கப்பட வேண்டும். ஆனால் அப்பகுதியில் மக்கள் இன்னமும் குடியேறாதது அதற்கு இடையூராயிருந்தது. ஆகவே அந்நிலப்பரப்பை பல பகுதிகளாகப் பிரித்து அவைகளை அரசின் அதிகாரத்தின் கீழ்க கொண்டுவரும் போது மக்கள் அவ்விந்தியப் பகுதிகளுக்குள் எவ்விதத்தடையுமின்றி செல்ல முடியும்இ அடீத நேரத்தில் அவரது மத்தி தடத் திட்டத்திற்கு தென்பகுதி மக்களின் ஆதரவைப் பெறுவது இன்றியமைமயாததாக இருந்தது. இக்கருத்துக்களை மனதிற்கொண்ட அவர் 1)மிசௌரி உடன்பாட்டின் படி மேல் லூாசியானாவை கான்சாஸ், நெப்ராஸ்கா என்னும் இருபகுதிகளாகப் பிரிக்க எண்ணினார். ஆவ்வாறு பிரிக்கும் போது ஒன்று அடிமைப்பகுதியாகவும் மற்றொன்று சுதந்திரப்பகுதியாகவும் விளங்கும். 2)அதே நேரத்தில் மிசௌரி ஒப்பந்தம் ரத்து செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்களே, தங்கள் பகுதிகளுக்கு அடிமை முறை வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு அடிமை முறையானது ஓர் உள்மாநிலப்பிரச்சனையாகி விடும் என்று கருதப்பட்டது. இதன்படி அடிமைமுறையற்ற நெப்ராஸ்கா மாநிலத்தையும் பசிபிக் ரயில் பாதையையும் வடபகுதி பெறும் என்றும் கான்சாஸ் என்ற அடிமை மாநிலத்தையும் மிசௌரி ஒப்பந்தத்தை ரத்து செய்வதால் ஏற்படும்

நலன்களையும் தெற்கு பெறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. தென்பகுதி தலைவரும் தனது ராணுவச் செயலாளருமான ஜெபர்சன் டேவிஸ் என்பவரின் தூண்டுதலினால் குடியரசுத் தலைவர் பியர்ஸ் 1854-ல் அதைச் சட்டமாக்கினார்.

1854-ம் ஆண்டு சட்டம் மிசெளரி ஒப்பந்தத்தை ரத்து செய்ததோடு அடிமை முறையை விரிவுபடுத்துதல் மற்றும் தென்மாநிலங்கள் விரிவடைதல் போன்ற பிரச்சனைகளுக்கு மறுபடியும் இடமளித்தது. கான்சாஸ் தெற்குடன் இணைக்கப்பட்டதால் செனட் சபையில் சம எண்ணிக்கை பெற்றது. இதனால் வடமாநிலங்கள் டக்ளசு மீது நம்பிக்கைத்துரோகி எனக் குற்றம் சாட்டி அவரை குடியரசுத்தலைவர் பதவியைப் பெறுவதற்குரிய வாய்ப்பை இழக்கச் செய்தது. இரண்டாவதாக, இச்சட்டம் கான்சாஸ் பகுதி மீது ஆதிக்கம் செலுத்துவதற்காக வட தென் மாநிலங்களிடையே போட்யை ஏற்படுத்தியது. ஐயோவா, நெப்ராஸ்காவை ஒரு சுதந்திர நாடாக வடமாநில்திற்கு அளித்தது. அதனால் தெற்கு கான்சாஸின் தென்பகுதியைக் கைப்பற்றி அடிமைமுறையைப் புகுத்த திட்டமிட்டனர். இத்திட்டத்தை முறியடிக்க வடமாநிலங்கள் முயன்றனர். தனித்தனி மாறாடுகளைக் கூட்டிய இவ்விரு பிரிவினரும் ஆயுதம் தாங்கி நான்கு மாதங்கள் போரிட்டனர். ‘‘குருதிக்கொட்டும் கான்சாஸ்’’ (Bleeding Kansas) என்றழைக்கப்படும் இந்நிகழ்ச்சி பிராந்திய வேற்றுமையை வளர்த்தது. தென்பகுதி ஐக்கிய அமைப்பிலிருந்து விலகிய பின்பு கான்சாஸ் ஒரு சுதந்திப் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மூன்றாவதாக, இச்சட்டம் கட்சி அமைப்பில் புரட்சியை ஏற்படுத்தி பிராந்திய அடிப்படையில் கட்சியின் அமைப்பை மாற்றியமைத்தது. விக் கட்சியினர் வடதென் பகுதியினராகப் பிரிந்தனர். இச்சட்டத்தை ஆதரித்த ஜனநாயககட்சியினர் நெப்ராஸிகா எதிர்ப்பு ஜனநாயக கட்சியினரென்று அழைக்கப்பட்டனர். அடிமை முறையை எதிர்த்த சுதந்திர மண்கட்சி, வடக்கு விக் கட்சி மற்றும் நெப்ராஸ்கா எதிர்ப்புஜனநாயகக் கட்சியினரில் ஒரு சிலர் ஒரு பொதுக்கட்சியை அமைக்கும் நோக்கத்துடன் 1854-ல்குடியரசுக் கட்சியை அமைத்தனர். அக்கட்சி மிசெளரி உடன்பாட்டை ரத்து செய்தலைக் கண்டித்தது. மேலும் கான்சாஸ் நெப்ராஸ்கா சட்டமும், அடிமைச்சட்டமும் ரத்து செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்தியது. மற்றும் அடிமைமுறை பரவுவதை வன்மையாக எதிர்த்தது. இதனால் வட தென் மாநிலங்களுக்கிடையே பிரிவினை ஏற்பட்டது.

நூன்காவதாக, டரட்ஸ்காட் வழக்குத் தீர்ப்பு நீதித்துறையின் பாரபட்சமற்ற போக்கில் அடிமைமுறை எதிர்ப்பாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கையைக் குலைத்தது. மிசெளரியைச் சார்ந்த ட்ரட்ஸ்காட் என்னும் அடிமை சுதந்தி மாநிலங்களான இல்லினாய், மின்சோட்டா ஆகியவைகளில் தனது எஜமானனுடன் வாழ்ந்து வந்தவன். துன்னுடைய எஜமானனின் மரணத்திற்குப் பிறகு சுதந்திர மாநிலங்களில் வாழ்ந்து வந்தமையால் தான் ஓர் சுதந்திர மனிதனாகி விட்டேன் என்று அடிமைமுறை எதிர்ப்பாளர்களின் உதவியோடு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தாள். ஆனால் மிசெளரி உயர் நீதிமன்றமும், கூட்டிணைவு சர்க்குயிட் நீதிமன்றமும் அவனுடைய வழக்கைத் தள்ளுபடி செய்தன. எனவே அவன் தலைமை நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தான். நீதிபதி மார்ஷலுக்குப் பிறகு தலைமை நீதிபதியாக பதவியேற்ற ரோஜர் பி.டானி அவ்வழக்கை விசாரித்து நீக்ரோக்களனைவரும் அரசியலமைப்பு

விளக்கத்தின் படி வெள்ளையர்களின் உடமைகளன்றி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரஜைகள் அல்லவென்று தீர்ப்பு வழங்கினார். சுதந்தி மாநிலத்தில் வாழ்நத போதிலும் ட்ரஸ்காட் இன்னமும் ஓர் அடிமைதான் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூறினார். மேலும் எந்த ஒரு குடிமகனுடைய உடமையையும் அமெரிக்கக் காங்கஜரஸ் பறிக்க இயலாது என்ற அரசியலமைப்பின் ஐந்தாவது திருத்தத்தை மிசௌரி உடன்பாடு மீறியதால் அது அரசியலமைப்பிபுக்கு எதிரானதென்றும் தீர்ப்பில் கூறப்பட்டது. இதன்மூலம் எந்த ஒருபகுதியிலிருந்தும் அடிமை முறையை நீக்குவதற்கு காங்கிரசிற்கு அதிகாரமில்லையென்றும் அடிமை ஒருவனட அமெரிக்கரின் உடமையே என்ற கல்ஹௌனின் கூற்று சரியானதென்றும் எடுத்துரைக்கப்பட்டது. வடமாநிலத் தலைவாகள் இத்தீர்ப்பை தென்மாநிலங்களின் சதியே எனக் கண்டனம் செய்து அதனை ஓர் அரசியல் பிரச்சனையாக்கினர்.

ஐந்தாவதாக, 1860-ம் ஆண்டின் குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளாரான ஆபிரகாம் லிங்கன் வெற்றி பெற்றார். இவ்வெற்றி தேசிய அரசில் தங்களது செல்வாக்கை குறைப்பதாக தென் மாநிலங்கள் எண்ணின. எனவே 1861-ல் அவை ஐக்கிய கூட்டிணைவை விட்டுப் பிரிந்து சென்று ஒரு போட்டி அரசை அமைத்தன. இதுவே உள்நாட்டுப் பொருக்கான உடனடிக் காரணமாகும்.

### உள்நாட்டுப் போர்

தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் லிங்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதன் விளைவாக தென் மாநிலங்கள் கூட்டிணைவை விட்டு விலகி ஓர் நேசக் கூட்டிணைவை அமைத்தன. இது உள்நாட்டுப் போர் ஏற்பட வழி வகுத்தது. வட, தென் மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டப் போரின் இறுதியில் தென் மாநிலங்கள் தோற்கடிக்கப்பட்டு, கூட்டிணைவோடு இணைந்தன. நடமாநிலங்களின் இவ்வெற்றியின் விளைவாக பிரிவினை முறை மற்றும் அடிமை முறைப் பிரச்சனைகளுக்கு வன்முறையில் தீர்வு காணப்பட்டது.

**லிங்கனும், தென்மாநிலங்களின் பிரிவினையும்**

**லிங்கனின் இளமை வாழ்க்கை**

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மிகச்சிறந்த குடியரசுத் தலைவர்களில் ஒருவரான ஆபிரகாம் லிங்கன் 1809-ல் கென்டக்கி என்னுமிடத்தில் ஒரு சாதரண குடும்பத்தில் பிறந்தார். புதிய வாழ்வை தேடி லிங்கன் குடும்பத்தினர் மேற்கில் குடிபெயர்ந்தனர். தனது ஏழாவது வயதிலிருந்து 21 வயது வரை இவர் இந்தியானா என்னுமிடத்தில் தனது பெற்றோரோடு வாழ்ந்து வந்தார். பின்பு அவருடைய குடும்பம் ஸ்பிரிங் பீல்ட் என்னுமிடத்திற்கு குடிபெயர்ந்தனர். தன் சுய முயற்சியினால் லிங்கள் பல துறைகளில் தேர்ச்சி பெற்றார். இல்லினாய் மாநில சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விக் கட்சி உறுப்பினரான லிங்கன் அடிமை முறையை தீவிரமாக எதிர்த்த போதிலும் அதனை ஒழிக்க முடியவில்லை. 1847-ஆண்டு முதல் 1849-ம் ஆண்டு வரை வாஷிங்டனில் பணியாற்றினார். 1860-ம் ஆண்டின் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளாரான லிங்கன் நியூஜெர்சி தவிர ஏனைய எல்லா மாநிலங்களிலும் வெற்றி பெற்றார். தனது தொடக்கவுரையில் தப்பியோடிய அடிமைகள் பற்றிய சட்டத்தைச் செயல்படுத்துவதாகவும் அடிமை முறை உள்ள மாநிலங்களில்

தலையிடுவதில்லை என்றும் ஜனாதிபதி லிங்கன் வாக்களித்தார். தேர்தலில் வடமாநிலத்தவர் பெற்ற வெற்றி தென்மாநிலத்தவரால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை.

ஆகையால் 1861-ம் ஆண்டில் தென் மாநிலங்கள் பல கூட்டிணைவை விட்டுப் பிரிந்து அலபாமா மாநிலத்திலுள்ள மாண்ட கோமாரி என்னுமிடத்தில் ஜெபர்சன் டேவிஸ் என்பவர் தலைமையில் அமெரிக்க நேசக் கூட்டிணைவை ஏற்படுத்தின. பின்பு வெர்ஜீனியாவின் ரிச்தாண்ட் அதன் தலைநகராக்கப்பட்டது. கூட்டிணைவு அரசுக்கு எதிரான மாநிலங்கள் ஒரு பெரும் படையைத் திரட்டி கூட்டிணைவு அரசின் சொத்துக்களைக் கைப்பற்றியதோடு அதன் அதிகாரத்தையும் எதிர்த்தன.

தேர்தலில் குடியரசுக் கட்சியின் வெற்றி தென் மாநிலத்தவரின் நிரந்தர தோல்வி எனவும், கூட்டிணைவு நிர்வாகத்தில் தென்மாநிலங்கள் தங்களது செல்வாக்கை இழந்துவிட்டன எனவும் குடியரசு வாதிகள் அடிமைகளை விடுதலை செய்பவர்கள் எனவும், வடமாநிலங்களின் நலனுக்காக அவர்கள் நீக்ரோக்களின் ஆட்சியை தென்மாநிலங்களில் நிறுவ முயலுவதாகவும் கருதி தென்மாநிலங்கள் கூட்டிணைவிலிருந்து பிரிந்து செல்ல விரும்பின. வுடமாநிலங்களின் அதிகாரத்தினின்று விடுபட்டால் தான் அடிமை முறையை விரிவுபடுத்த முடியுமென்று எண்ணி தென் மாநிலங்கள் ஐரோப்பிய ஆதரவை நாடியது.

தேன்மாநிலங்கள் கூட்டிணைவிலிருந்து பிரிந்து செல்வதைத் தடுக்க குடியரசுத்தலைவர் புக்கன் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. 1861-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் நாள் லிங்கன் பதவியேற்ற போது போர் தவிர்க்க முடியாததென்று கண்டுணர்ந்தார். முதன் முதலாக தாக்குதல் தொடுக்கும்படி நேசக் கூட்டிணைவு அரசை கட்டாயப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் போர்ட் சம்டர் என்னுமிடத்தில் முற்றுகையிட்டிருந்த படைகளுக்கு லிங்கள் உதவி இராணுவத்தை அனுப்பினார். ஆனால் இராணுவ உதவிக்குச் சென்ற கப்பல்கள் போர்ட் சம்டரை சென்றடைவதற்கு முன்பே நேசக் 4ட்டிணைவுப் படைகள் அவற்றைக் கைப்பற்றி கொண்டன. இதனால் போர் ஏற்பட்டது.

## போரின் போக்கு

### போருக்கு முன் வட தென் மாநிலங்களின் நிலை

போரின் ஆரம்பத்தில் இரு மாநிலமுமே தங்களது எதிரிகளின் வலிமையைக் குறைவாக மதிப்பிட்டதோடு மட்டுமின்றி தாங்கள் விரவில் வெற்றியடைவோம் என்று எதிர்பார்த்தனர். தென்பகுதியினர் கூட்டாட்சியில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனரென்றும் ஒரு சில தீவிரவாதிகளே போரிடுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனரென்றும் வடபகுதியினர் கருதினர். ஆனால் தென்பகுதியினர் தங்களுக்கு ஒரு பெரும் எதிர்ப்பு வருமென்று எதிர்பார்க்கவில்லை.

வடபகுதியினரின் இராணுவத்தின் எண்ணிக்கை தென்பகுதியினரின் எண்ணிக்கையை விட மிகவும் அதிகமாக இருந்தது. வடபகுதியினர் ஏராளமான மூலவளங்களைப் பெற்றிருந்தனர். ஆனால் தென்பகுதியினர் அதிக உற்பத்திப் பொருட்களை பெற்றிருந்தனர். வடபகுதி தென்பகுதியைவிட இருமடங்கு அதிக நீளமான ரயில்பாதைகளைப் பெற்றிருந்தது. எனவே இராணுவ வீரர்களையும், யுத்த தளவாடங்களையும் மிகத்துரிதமாகக் கொண்டு

செல்வது அவர்களுக்கு எளிதாக இருந்தது. வடபகுதியினர் பண்ணைகளையும் தொழிற்சாலைகளையும் ரயில் பாதைகள் வழியாக ஒன்றிணைத்தனர். அதற்கு மாறாக உற்பத்திப் பொருள்களுக்காக இறக்குமதியை எதிர்பார்த்திருக்கும் ஒரு பெரும் பண்ணையாகவே தென்பகுதி தென்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக வெளிநாடுகளின் நல்லுறவையும் அனுதாபத்தையும் வடபகுதி பெற்றது. பருத்தி ஏற்றுமதி செய்கின்ற காரணத்தாலும் அனுதாபத்தின் அடிப்படையிலும் பிரிட்டனும் பிரனாசும் தனக்கு உதவ முன்வரும் என்று தென்பகுதி எதிர்பார்த்தது. ஆனால் அதில் அது ஏமாற்றமடைந்தது. அவ்வாண்டு பருத்தி உற்பத்தியின் பெரும் பகுதியை முன்பே ஏற்றுமதி செய்தது. மேலும் இந்தியாவிலிருந்தும் எகிப்திலிருந்தும் அதிகமான பருத்தியை இறக்குமதி செய்ய முடியுமென்று இங்கிலாந்து உணர்ந்தது. தென்பகுதியினருக்கு உதவலாம் எனறு பிரான்ஸ் எண்ணிய போதிலும் பிரிட்டிஷ் கடற்படையின் ஆதரவின்றி அதனால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை அறிந்தது. பெரும் ஐரோப்பிய நாடுகளில் ஏதாவது ஒன்று தென்பகுதியை அங்கீகரித்திருந்தால் வடபகுதியினருடைய படைகள் முறியடிக்கப் பட்டிருக்கும். ஆனால் இது நிகழவில்லை. இவ்வாறாக கடலாதிக்கமின்மை வெளிநாட்டு ஆதரவின்மை போன்ற பிரதிகூலங்களுக்கிடையே தெற்கு நேசக் கூட்டிணைவு போராடியது.

**ஆரம்ப போர்கால நடவடிக்கைகள்**

போர் சம்டர் நேசக்கூட்டிணைவு ஆதிக்கத்தின. கீழ் வந்தபின் தென்பகுதித் துறைமுகங்களை முற்றுகையிடும் படி லிங்கன் ஆணையிட்டார். இதன் விளைவால் தென்பகுதிக்கும் ஐரோப்பாவுக்குமிடையே உள்ள தொடர்பு அறுந்தது. ஆனால் 1861-ல் நேசக்கூட்டிணைவுப் படைகளால் புல்ரன் என்னுமிடத்தில் வடபகுதியினர் முறியடிக்கப்பட்டனர். 1862-ல் மேற்கில் மறுபடியும் போர் ஆரம்பமாயிற்று.மிஸிப்பப்பியை தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென்ற உறுதியான திட்டத்துடன் U.S. கராண்ட் என்பவரின் தலைமையின் கீழ் வடமாநில இராணுவத்தினர் போர்ட்ஹென்றியையும்ஷிலோவையும் கைப்பற்றினர். முற்றொரு கூட்டிணைவு இராணுவப் பிரிவு நீயூ ஆர்லியன்ஸை கைப்பற்றியது. நேசக் கூட்டிணைவு இராணுவத்தின் மீது கொண்ட வெற்றியின் காரணமாக 1863-ல் தளபதி கிராண்ட் தென்பகுதியினரின் முக்கிய இராணுவ கேந்திப் பகுதிகளான விக்ஸ்பர்க், சட்டநூகா ஆகிய இடங்களைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். இக்குறிப்பிடத்தக்க வெற்றி, மிஸிப்பி ஆற்றுப்குதியின் மீது வடமாநிலத்தவர் ஆதிக்கம் செலுத்த வழி வகுத்ததோடு, தென் மாநிலங்கள் மேற்கத்திய நாடுகளோடு கொண்ட தொடர்பையும் துண்டித்தது. 1864-ம் ஆண்டின் ஆரம்பத்தில் கிரண்ட் கூட்டாட்சிப் படைகளின் தலைமை அதிகாரத்தைப் பெற்றார். அவர் மேற்குப் பகுதியைவிட்டு சென்றபிறகு தளபதி ஷெர்மன் என்பவர் கிழக்குப் பகுதியில் அட்லாண்டா என்னுமிடத்தைக் கைப்பற்றினார்.

கிழக்கு அரங்கில் ஏற்பட்ட போரில் வெற்றியும் தோல்வியும் மாறிக் கொண்டே இருந்தது. 1862-ல் கூட்டிணைவுப் படைகள் இரண்டாவது முறையாக ரிச்மாண்டைத் தாக்கியது. ஆனால் அது இரண்டாம் புல்ரன் போரில் தோற்கடிக்கப்பட்டது. இப்போது தளபதி லீ

என்பவரின் தலைமையின் கீழ் செயல்பட்ட நேசக் கூட்டிணைவு படைகள் பென்சில்வேனியா மீது ஆக்கிரமிப்பைத்தொடர்ந்தது. ஆனால் அது ஆன்டிட்டாம் என்னுமிடத்தில் நடைபெற்ற போருக்குப்பின் வாங்கியது. அதே ஆண்டில் லிங்கன் விடுதலை அறிக்கையை வெளியிட்டார். கிளர்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மாநிலங்களில் அடிமைகளாக இருந்தவர்களனைவரும் 1863-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாளிலிருந்து விடுதலை பெற்றவராவார் என்று அவ்வறிக்கை கூறியது. ரிச்மாண்டை சென்றடைய வேண்டுமென கூட்டிணைவுப் படை மூன்றாவது முறையாக முயன்றும் பிரடெரிக்ஸ்பர்க் என்னுமிடத்தில் அது தோற்கடிக்கப்பட்டது. இதற்கிடையில் 1863ம் ஆண்டு தென்பகுதி படைத்தளபதியான லீ, சான்சலர்ஸ் வில்லா என்னுமிடத்தில் போட்டியாக அமெரிக்கா இராது என இங்கிலாந்து எண்ணியது. அதே போன்று பிரனான்ஸ் மெக்ஸிகோவில் தனது மேலாண்மையை நிலைநாட்ட முடியுமென எண்ணியது. இவ்விரு நாடுகளுக்கும் தென்மாநிலத்தில் உற்பத்தியாகும் பருத்தி தேவையாய் இருந்தது. அதோடு வடமாநில மக்கள் தென்மாநிலக் குடியானவர்களைச் சுரண்டி வாழ்கின்றவர்கள் என்று ஐரோப்பிய நாடுகள் கருதின. தேன்பகுதியில் வாழ்க்கின்ற வெள்ளையர்கள் ஆங்கில பிரபுக்களைப் போன்று சிறந்த பண்பாடுமிக்க விவசாயிகளென்றும் நிலச்சுவான்தார்களென்றும் அவர்கள் நம்பினர். எனினும் தென் மாநிலங்களுக்கு உதவி செய்வதற்கான கட்டாய நிலை இங்கிலாந்திற்கு ஏற்படவில்லை. இங்கிலாந்தின் ஒத்துழைப்பு இல்லாததால் பிரான்ஸ் தென்மாநிலங்களுக்கு உதவி செய்ய முடியாத நிலையில் இருந்தது. 1862-ல் கூட்டிணைவு படைகளுக்கு எதிராக மேரிலாந்தில் தளபதி லீ வெற்றி பெற்ற போது நேசக்கூட்டிணைவு நாடுகளை அங்கீகரிப்பதது பற்றி இங்கிலாந்து தீவிரமாக ஆராய்ந்தது. ஆனால் ஆன்டிட்டாம் போர்க்களம் கூட்டாட்சிக்கு ஆதரவாக அமைந்தபோது இங்கிலாந்து அதன் திட்டத்தைக் கைவிட்டது.

பிரிட்டன் மீது போர் தொடுத்தால் பிரிந்து சென்ற மாநிலங்கள் கூட்டிணைவோடு மறுபடியும் சேர்ந்து விடும் என்று மாநிலச் செயலாளரான சீவார்ட் கருதினார். ஆனால் லிங்கன் இதற்கு இணங்கவில்லை. ஐரோப்பிய ஆதிக்கங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போர் வடமாநிலத்திற்குப் பெரும் அழிவை ஏற்படுத்துமென்றும் வெளிநாட்டு உதவியை தென்மாநிலங்கள் பெறுவதற்கு அத பெருமளவில் உதவிசெய்யுமென்று லிங்கன் கருதினார். எனினும் சில நிகழ்ச்சிகள் பிரான்ஸ்ஈ இங்கிலாந்து போன்றவற்றுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகள் கொண்டிருந்த தொடர்பில் பல சிக்கல்களை ஏற்படுத்தின. 1861-ல் சான் ஜோசிந்டோ என்ற அமெரிக்கக் கப்பல் பிரிட்டனுக்குச் சொந்தமான 'டிரன்ட்' என்றழைக்கப்பட்ட நீராவிக் கப்பலை தடுத்து நிறுத்தியதோடு நேசக்கூட்டிணைவின் ஆணையாளர்களான மேஸன், ஸ்லைடன் என்பவர்களைச் சிறைப்பிடித்தது. இது கடல் சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கையென்று இங்கிலாந்து கண்டித்ததோடு ஆணையாளர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தியது. போர் ஏற்பட்டுவிடும் என்று அஞ்சி இங்கிலாந்தின் கோரிக்கைக்கு ஐக்கிய நாடுகள் அடிபணிந்தது. இங்கிலாந்து, பிரான்ஸ் போன்றவற்றில் போர்க்கப்பல்களைக் கட்டுவதற்கு நேசக் கூட்டிணைவு தாக்கல் செய்தபோது மற்றொரு பிரச்சனை ஏற்பட்டது. நேசக்கூட்டிணைவின் கப்பல்களில் குறிப்பாக 'அலாபமாவை' அமெரிக்க கப்பல்கள்

நாசமாக்கியது. அமெரிக்கர்களுடைய எதிர்ப்பினால் இங்கிலாந்தும் பிரான்சும் நேசக்கூட்டிணைவிற்கு போர்க்கப்பல்களை அனுப்ப மறுத்தனர்.

**படை திரட்டுதல்**

நேசக்கூட்டிணைவும், கூட்டிணைவும் முறையே 1862, 1863-ம் ஆண்டுகளில் கட்டாய ராணுவச் சேவையைச் செயல்படுத்தின. இதனை எதிர்க்கும் முகமாக ஆங்காங்கே கிளர்ச்சிகள் நடைபெற்றன.

**அடிமைகள் விடுதலை**

கூட்டாட்சியின் ஐக்கியத்தைக் காப்பதே லிங்கனின் முக்கிய நோக்கமாக இருந்ததால் அடிமை முறையை ஒழிப்பதில் அவர் அதிக ஆர்வம் காட்டவில்லை. வடமாநிலங்களில் அடிமைகளை விடுதலை செய்வதற்கு ஏற்பட்ட எதிர்ப்பினாலும் கூட்டிணைவோடு இணைந்து செயல்பட்ட மாநிலங்களின் ஆதரவை இழக்க நேரிடும் என்பதாலும் அடிமைகளை விடுதலை செய்ய அவர் தயங்கினார். எனினும் தனது அதிகாரங்களை பயன்படுத்தி 1863-ல் அடிமைகள் விடுதலைச் சட்டத்தை இயற்றி, அதன்மூலம் எதிர்ப்பு மாநிலங்களிலுள்ள எல்லா அடிமைகளும் விடுதலை பெற்றதாக அறிவித்தார். ஆனால் நடைமுறையில் அடிமைமுறையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இச்சட்டத்தின் வழியாக தீவிரவாதிகளின் ஆதரவையும் ஐரோப்பிய நாடுகளின் அனுதாபத்தையும் பெற்று நேசக் கூட்டிணைவை வலிமையற்றதாக்க முடியுமென லிங்கன் எதிர்பார்த்தார்.

**போர்க்கால நிதி நிலைமை**

எதிர்ப்பு அரசுகளிடையே நிதிநிலை வேறுபட்டு காணப்பட்டது. கூட்டிணைவு நாடுகள் நாணய முறையையும், கருவூலத் துறையையும் கொண்டு விளங்கிற்று. ஆனால் நேசக் கூட்டிணைவு இம்முறைகளைப் புதிதாகப் புகுத்தியது. வடமாநிலங்கள் தென்மாநிலங்களைவிட ஏராளமான அளவில் தங்கத்தையும், வெள்ளியையும் வைத்திருந்தது. இவ்விரு அரசம் போரை நடத்த அதிக வரிவிதித்தல், காகிதப் பணத்தைப் புழக்கத்தில் விடுதல், அதிக நிதி எழுப்ப பத்திரங்கள் விற்றல் போன்ற நடவடிக்கைளில் ஈடுபட்டன.

**மக்களின் வாழ்க்கை முறை**

போரின் விளைவாக வடமாநிலங்களின் பொருளாதாரம் ஆரம்பத்தில் பாதித்த போதிலும் விரைவில் அவை பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்தது. போர்க்கருவிகள், உணவு, உடைகளுக்கு அதிகத் தேவை ஏற்பட்டதால் தேவையை பூர்த்தி செய்ய அரசு தனியார் துறைகளிடம் தாக்கீது கொடுத்தது பணபுழக்கமும் அதிகரித்தது. பொருள்களின் தேவை அதிகரித்ததால், விலையும் உணர ராபமும் அதிகமாக கிடைத்தது. உணவு தானியங்களின் உற்பத்தியை பெருக்க வழி செய்யபட்டது. இராணுவம், இராணுவத்தளவாடங்கள் போன்றவற்றை கொண்டு செல்வதற்கு இரயில்பாதை அமைக்கப்பட்டது. இதனால் வடமாநில மக்களின் வாழ்க்கை நிலை அதிகமாக பாதிக்கப்படவில்லை.

ஆனால் தென்மாநில மக்கள் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வடமாநிலங்களைவிட தென்மாநில மக்கட்தொகை மிகவும் குறைந்தது. பருத்தி, புகையிலை

மற்றும் கச்சாப்பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியாததால் அநேக விவசாயப் பண்ணைகள் செயலற்றுப்போயின. ஊற்பத்தி குறைந்ததால் விலைவாசி உயர்ந்தது. ரயில் பாதைகளைச் செப்பினிடுவதற்கு முடியாததால் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வது கடினமாக இருந்தது. இவ்வாறு தென்மாநில மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**போரின் விளைவுகள்**

நூன்காண்டு காலமாக நீடித்த உள்நாட்டுப் போர் 1865-ல் முடிவுற்றது. ஆறு லட்சம் பேர் உயிரிழந்தனர். விவசாயப் பண்ணைகள் புறக்கணிக்கப்பட்டன. தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. ரயில் பாதைகள் சேதப்படுத்தப்பட்டன. கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. பல பிரச்சனைகளுக்கு முடிவு கண்ட இப்போர் வேறு பல பிரச்சனைகளை உருவாக்கியது. உயிருக்கும் உடைமைக்கும் அழிவு ஏற்பட்ட போதிலும் உள்நாட்டுப் போரின் விளைவாக ஐக்கிய நாடுகளில் அரசியல் ஐக்கியமும் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டது.

போரினால் சீரமைப்புப் பிரச்சனை ஏற்பட்டது. ஏராளமான நிலப்பகுதிகள் பாதிக்கப்பட்டன. மக்களின் பொருாளாதாரம் சீர்குலைக்கப்பட்டது. தென்மாநில உயர்குடி மக்கள் தங்களின் செல்வாக்கை இழந்தனர். சட்டத்தின்படி அடிமைகள் விடுதலை டிசய்யப்பட்ட போதிலும் அவர்களுக்குப் புனர்வாழ்வோ அல்லது விடுதலை வாழ்வோ கொடுக்கப்படவில்லை. வடமாநிலங்களுக்கு இப்பிரச்சனை பெரும் பிரச்சனையாக மாறியது. ஏல்லாவற்றிற்கும் மேலாக ஐக்கிய நாடுகள் உள்நாட்டுப் போரினால் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இந்திய இன மக்களோடு கொண்ட தொடர்பு பாதிக்கப்பட்டன. இங்கிலாந்தில் கட்டப்பட்ட நேசக் கூட்டிணைவின் போர்க்கப்பலான லெபாமா, ஷெனன்டோவா, புளோரிடா போன்றவைகள் ஐக்கிய நாடுகளின் கடலாதிக்கத்தைப் பெரிதும் பாதித்தன. வாஷிங்டன் லண்டனிடமிருந்து நஷ்டஈடு கோரியது. நடுநிலையாளர் குழுவின் மூலம் இப்பிரச்சனை தீர்க்கப்படுவது வரையிலும் நாடுகளுக்கிடையிலான இராஜாங்கத் தொடர்பு சீர்குலைந்து காணப்பட்டது. போரினால் ஏறப்பட்ட சூழ்நிலையை பயன்படுத்தி, பிரான்ஸ் மெக்ஸிகோவிற்குப் படைகளை அனுப்பி அதனைக் கைப்பற்றி ஆஸ்திரிய இளவரசர் மாக்ஸ் மிலியனை மெக்ஸிகோவின் மன்னராக்க முயன்றது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் போர் முடிவுற்ற பின்னர் மன்றோ கொள்கையின் அடிப்படையில் மெக்ஸிகோவில் தலையிடப்போவதாகக் கூறி பிரெஞ்சுப் படைகளைப் பின் வாங்கும்படி செய்தது. இதனால் அமெரிக்கா பிரான்சுடன் கொண்ட உறவு பாதிக்கப்பட்டது. இப்போரினால் இந்திய இனமக்கள் அவலநிலையடைந்தனர். இந்தியர்கள் அமெரிக்க ஏகாதிபத்தித்திடமிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள உள்நாட்டுப் போரில் நேசக்கூட்டிணைவோடு சேர்ந்துக் கொண்டு தங்களுக்குத் தாங்களே அழிவை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

**அரசியல் விளைவுகள்**

கூட்டிணைவின் வெற்றி ஐக்கியத்தின் விலிமையையும் தேசிய அரசின் மேலாண்மையையும் நிலைநாட்டியது. இதனால் கூட்டிணைவு முறையில் தேசியம்

பிரிவினைமுறை ஆகியவற்றின் அடிப்படையில் பிரச்சனைகள் எழுந்தன. மாநிலங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டது.

லிங்கன் வெளியிட்ட 1863-ம் ஆண்டின் அறிக்கை மாநிலங்களில் அடிமை முறையை ஒழித்தது. ஜனாதிபதியின் போர்க்கால அதிகாரங்களினடிப்படையில் வெளிடப்பட்ட இச்சட்டம் தெற்கு மாநிலங்களை கஷ்டப்படுத்த வேண்டுமென்றும், ஐரோப்பிய நாடுகளின் அனுதாபத்தை பெற வேண்டுமென்பதற்காகவுமே வெளியிடப்பட்டது போருக்குப்பின் அடிமை ஒழிப்பு நடவடிக்கைக்கு அரசியலமைப்பு முக்கியத்துவம் கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. ஐக்கிய நாட்டின் அதிகாரத்திற்குட்பட்ட எல்லாப் பகுதிகளிலும் அடிமைமுறை ஒழிக்கப்படுவதற்கு அரசியலமைப்பின் 13வது திருத்த சட்டவரைவு உதவியது. 14வது திருத்த சட்டவரைவு விடுதலைச் செய்யப்பட்ட நீக்ரோக்கனை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரஜைகளாக்கிற்று. எந்த ஒரு மாநிலமும் சட்டத்தின் அடிப்படையிலன்றி எந்த ஒரு குடிமகனுடைய உயிருக்கோ, உரிமைக்கோ, உடமைக்கோ பங்கம் விளைவிக்கக் கூடாதென்று இத்திருத்த சட்டவரைவு மேலும் கூறிற்று. இப்பிரச்சனைகளில் மாநிலங்கள் கூட்டாட்சி நீதிமன்றத்திற்கு பொறுப்பாயிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தியது. உள்நாட்டுப் போரின் விளைவாக உருவான இத்திருத்த சட்டவரைவுகள் அரசியலமைப்பில் ஒரு புரட்சியை தோற்றுவித்தன.

**பொருளாதார விளைவுகள்**

உள்நாட்டுப் பொரினால் பொருளாதார மாற்றம் ஏற்பட்டது. போர்க்கால தேவைகளினால் தொழிற்சாலைகளும் வாணிகமும் வளர்ச்சியடைந்தன. தேவை அதிகரித்தபோது பொருட்களின் விலை உயர லாபமும் அதிகரித்தது. எனவே ஐக்கிய அரசு அதிக அளவில் போர்க்கருவிகள், உணவுப் பொருட்கள் மற்றும் துணிகள் பெற தொழிலதிபர்களை வேண்டியது. பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல ரயில் உதவின. ஆனால் தேவைக்கேற்ற அளவில் தொழிலாளர்கள் கிடைக்காததால் தொழிலதிபர்கள் நவீன இயந்திரங்களின் மூலம் உற்பத்தியை அதிகரிக்க முயன்றனர். ஏராளமான நிலங்கள் விவசாயத்திற்கு கொண்டு வரப்பட்டன. புதிய சுரங்கங்கள் வெட்டப்பட்டன. ஏராளமான தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டன.

இதற்கிடையில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க காங்கிரஸ் சட்டங்களை இயற்றியது. தென்மாநிலங்கள் தேசிய சட்டமன்றத்திலிருந்து வெளியேறியமையால் கடும் எதிர்ப்புகளின்றி இவற்றை செயல்படுத்த முடிந்தது. 1863-ல் காங்கிரஸ் தேசிய வங்கி சட்டத்தை இயற்றியது. போர்ப்பத்திரங்களைவ ிற்பது தான் இதனுடைய உடனடி நோக்கமாக இருந்த போதிலும் நாளடைவில் ஒரு சிறந்த சீரான நாணய முறை ஏற்படுவதற்கு இது காரணமாயிருந்தது. புதிதாக இயற்றப்பட்ட சுங்கச் சட்டங்கள் இறக்குமதிச் செய்யப்பட்ட பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரியை அதிகரித்தது. இந்நடவடிக்கை வெளிநாட்டுப் போட்டியிலிருந்து உள்நாட்டுப் பொருட்களுக்குப் பாதுகாப்பளித்தது. தொழிலக உற்பத்தியை ஊக்குவிக்கவும், தொழிலாளர்களைக் கவரவும், தொழிற்சாலைகளுக்கு மட்டுமின்றி, வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்களுக்கும் நிலங்கள் இலவசமாக கொடுக்கப்பட்டன.

உள்நாட்டுப் போரின் போது இயற்றப்பட்ட சட்டங்கள் அந்நாட்டின் தொழில்வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. நிலச்சுவான்தார்களும், அடிமை எஜமானர்களும் இதுவரை பெற்று வந்த தலைமையை தொழிலதிபர்களும் வணிகர்களும் பெற்றார்கள். இது தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்த போது விவசாயிகளின் நிலையை தாழ்த்தியது. இப்போர் தொழில் மற்றும் விவசாயம் இவ்விரண்டிற்கிடையிலான பிரச்சனைகளை நீக்கியதால் இது அமெரிக்க வரலாற்றில் உண்மையில் ஒரு திருப்பமாக அமைந்துள்ளது.

**சீரமைப்பு**

1865-ம் ஆண்டு முதல் 1877-ம் ஆண்டு வரை தென்மாநிலங்களை சீரமைப்பதற்கான திட்டங்களும், அதனை செயல்படுவதற்கான வழிமுறைகளும் உருவாக்கப்பட்டன. நாட்டில் அரசியல், பொருளாதாரம் போன்றவற்றில் குழப்பங்கள் எழுந்தன. தெற்கு மாநிலங்களை அதன் பழைய நிலைக்கு மீட்டு, சட்டரீதியான அரசை நிறுவுவதே அதன் அரசியல் பிரச்சனையாக இருந்தது. விடுதலை செய்யப்பட்ட நீக்ரோக்களுக்கு மறுவாழ்சு அளிப்பதும், தென்மாநிலங்களின் பொருளாதார நிலையை சீரமைப்பதுமே அதன் பொருளாதாரப் பிரச்சனையாக இருந்தது. ஜனாதிபதி லிங்கனின் தலைமையின் கீழ் சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 1865-ல் லிங்கன் கொலை செய்யப்பட்டு உப ஜனாதிபதி ஜான்சன் ஜனாதிபதியானார். 1868-ல் குடியரசுக் கட்சி வேட்பாளாரான கிராண்ட் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் இரு தடவைகள் பதவி வகித்தார். அதன் பிறகு குடியரசுக் கட்சியைச் சார்ந்த ரூத்தர் போர்ட்பி.ஹேய்ஸ் என்பவர் ஜனாதிபதியானார். ஜனாதிபதி ஹேய்ஸ் நிர்வாகத்தின் போது சீரமைப்பு நடவடிக்கைகள் முற்றுப் பெற்றதாக கருதப்படுகிறது.

**சீரமைப்புப் பிரச்சனைகள்**

போரின் போது நிலக்கிழார்கள் மற்றும் அடிமைகளை வைத்திருந்த எஜமானர்கள் வாழ்ந்த தென்பதுகி பெரும் அழிவிற்குள்ளாயிற்று. நகரங்கள், வீடுகள் தீக்கியையாக்கப்பட்டன. செய்திப்போக்குவரத்து தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. விவசாயமும் வாணிபமும் பாதிக்கப்பட்டன. இதனால் ஏராளமான மக்கள் வறுமையில் வாடினர். விடுவிக்கப்பட்ட நீக்ரோக்கள் நகரங்களுக்கு சென்று குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்து வாழ்க்கை நடத்தினர். நேசக்கூட்டிணைவு படைகள் தோற்கடிக்கப்பட்டதால் அநேக மாநில அரசுகள் வீழ்ந்தன. ஒழுங்கான அரசுகள் இல்லாத நிலையில் கூட்டாட்சி இராணுவத்தினர் நாட்டில் அமைதியை நிலைநாட்டினர். இச்சூழ்நிலைகளில் சீரமைப்புப் பற்றிய பிரச்சனைகள் தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.

அரசியல், பொருளாதாரம் போன்ற பிரச்சனைகள் ஒன்றிணைந்து சீரமைப்புப் பிரச்சனைகளை உருவாக்கியது. கூட்டாட்சியுடன் தென்மாநிலங்களை ஒன்றிணைக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாக்கப்படவேண்டியிருந்தது. அரசியல் சீரமைப்பிற்கும், இப்பிரச்சனையைத் தீர்ப்பது எளிதாக இருந்த போதிலும் குடியரசுக் கட்சியினரிடையே காணப்பட்ட கருத்து வேறுபாடுகள் இடையூறாக இருந்தன. பிரிந்து சென்ற மாநிலங்களை தாங்கள் போர்க்கால வெற்றிமூலம் கைப்பற்றிய மாநிலங்கள் அவைகள் மீது இரக்கம் காட்டத்தேவையில்லை என

குடியரசு கட்சியின் தீவிரவாதிகள் கூறினர். இக்கருத்தை ஆதரித்த பென்சில் வேனியாவைச் சார்ந்த தடியூஸ் ஸ்டீவன்ஸ் என்பவரும் மசாசூசட்ஸ் மாநிலத்தைச் சார்ந்த சார்லஸ் சம்னர் என்பவரும் தென்மாநில உயர்குடியினரின் செல்வாக்கை அழித்து சமத்துவக் கொள்கையை நிலைநாட்ட முயன்றனர். ஆனால் அதற்கு மாறாக குடியரசுக் கட்சியின் பழைமைவாதிகளான லிங்கன், ஜாக்சன் போன்ற மிதவாதிகள் மாநிலங்கள் பிரிந்து சென்றதைப் பற்றி பொருட்படுத்தாமல் தென் மாநிலங்களில் மாமுல் நிலையை நிலைநாட்டுவதில் அதிக ஆர்வம் காட்டினர். அடிமைகள் பிரச்சனையை தவிர்க்கவும் சீர்குலைந்த பொருளாதாரத்தைச் சீர்படுத்துவதுமே இரண்டாவது பிரச்சனையாக இருந்தது. நீக்ரோக்களுக்கு புனர் வாழ்வளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கூட்டாட்சி, சீர்குலைந்த பொருளாதாரத்தை நிறைவுபடுத்தும் பொறுப்பை தென்பகுதி மக்களிடமே ஒப்படைத்தது. விடுதலை செய்யப்பட்ட நீக்ரோக்களைக் கவனிக்க அலுவலகமும், உதவியாளரும் கொண்ட ‘‘விடுவிக்கப்பட்டடோர்’’ என்ற துறையை (Freedmen’s Bureau) எல்லா தென் மாநிலங்களிலும் அமைத்தது. இதற்கு மாறாக வெள்ளையர்கள் தாங்களாகவோ அல்லது தொழிலாளர்களையோ பணியில் அமர்த்தி தங்கள் வாழ்க்கை வழிகளைத் தாங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

சீரமைப்புத் திட்டங்களை உருவாக்குவதால் ஏராளமான பிரச்சனைகள் ஏற்பட்டன. போர் முடிவுறுவதற்கு முன்பு கிளர்ச்சியில் ஈடுபட்ட மாநிலங்கள் பிரிந்து செல்லும் உரிமை அவைகளுக்கு இல்லையென்று வடபகுதித் தலைவர்கள் உறுதியாகக் கூறினர். ஆதற்கு மாறாக தென்மாநிலத்தவர்கள் தாங்கள் கூட்டாட்சியை பிட்டுப் பிரிந்து செல்லுதல் சட்டரீதியானதென்று கூறினர். ஆனால் போருக்குப் பின் தென் மாநிலங்கள் கூட்டாட்சியோடு ஒன்றினைய வேண்டுமென்று பெரிதும் விரும்பியதால் வடமாநிலத்தவரின் கருத்தை ஏற்றுக் கொண்டது. ஆனால் பிரிந்து சென்ற மாநிலங்களைத் தண்டிக்க வேண்டுமென்று வடமாநிலங்கள் தீர்மானித்தன. இரண்டாவதாக, போரின்போது ஏற்பட்ட பெரும் இழப்பை ஈடுசெய்ய வடமாநிலங்கள் தென் மாநிலங்களிடமிருந்து இழப்பீடு கேட்கத் தீர்மானித்தது. சுங்கவாழ, வங்கிமுறை முதலீடு, ரயில்வே போன்றவற்றில் தங்களுக்கு சாதகமான சட்டங்கள் இயற்றப்படவேண்டுமென தொழிலதிபர்கள் விரும்பினர். தேன்மாநிலங்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று வடமாநிலத் தொழிலதிபர்கள் திட்டமிட்டனர். மூன்றாவதாக, உயர்குடியினரின் செல்வாக்கை அழிக்க வேண்டுமென்றால் ஏழை வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் சமத்துவ நிலையளிக்க வேண்டும். இந்நிலையில் நசுக்கப்பட்டபிரிவினர் குடியரசுக் கட்சிக்கு ஆதரவளிப்பர் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சீரம்பி இருநிலைகள் இருந்தன. ஜனாதிபதி லிங்கனும் அவரைத் தொடர்ந்து பதவியேற்ற ஜான்சனும் வகுத்த திட்டங்கள் ஜனாதிபதியின் சீரமைப்பு என்ற முதலாவது நிலையாகும். இரண்டாவது நிலையில் சீரமைப்புத் திட்டங்களைக் காங்கிரஸ் தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்ததால் அது காங்கிரசின் சீரமைப்பு எனப்பட்டது.

## ஜனாதிபதியின் சீரமைப்பு

### லிங்கன் திட்டம்

தென் பகுதியினரைச் சமாதானப் படுத்தி ஐக்கியத்தைக் காப்பதே ஜனாதிபதி லிங்கனின் சீரமைப்புத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. வெறுப்புக்கும் பழிவாங்கலுக்கும் இனி இடமில்லை. மிதவாதியான அவர் தென் மாநிலங்கள் கூட்டிணைவை விட்டு பிரிந்து செல்லவில்லை. ஆனால் கூட்டிணைவிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர் என்றுக் கருதினார். ஆரசியலமைப்பின் அடிப்படையில் தனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் வழியாக அவர் கிளர்ச்சியாளர்களை மன்னிக்கத் தீர்மானித்தார். 1864-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்ட அவருடைய அரசியல் பொது மன்னிப்புச் சட்டத்தில் ‘‘பத்து சதவிகிதத் திட்டம்’’ (Ten Percent Plan) என்றழைக்கப்பட்ட அரசியல் சீரமைப்புத் திட்டத்தை லிங்கன் கோடிட்டுக் காட்டினார்.

திட்டத்தில் இரு கருத்துக்கள் இடம் பெற்றன. 1) அரசியலமைப்பிற்கு உண்மையான இருப்பதாக மனப்பூர்வமான பிரமாணம் எடுத்து, அடிமை ஒழிப்பு முறையை ஏற்றுக் கொள்ளுகின்ற அடிமைகளைத் தவிர பிற எல்லா உடைமைகளும் அவர்களுக்கு மறுபடியும் கொடுக்கப்படும், எனினும் நேசக் கூட்டிணைவின் உயர் சிவில் இராணுவ அதிகாரிகளுக்கு இச்சலுகைகள் பொருந்தாது. 2) எம்மாநிலத்தைச் சார்ந்தவர்களாயினும், 1860-ம் ஆண்டு தேர்தலில் வாக்காளர்களில் பத்தில் ஒரு பகுதியினர் விசுவாச பிரமாணம் எடுத்து, புது மாநில அரசுகளை அமைக்க தங்கள் மாநில பொதுப்பிரதிநிதி வேட்பாளர் கழகத்தைச் தேர்ந்தெடுப்பார்களாயின் பிரிந்து சென்ற மாநிலங்கள் கூட்டாட்சியில் அதன் பழைய நிலையை அடையும் இத்திட்டத்தின் அடிப்படையில் லூசியானா, அர்கன் சாஸ், டென்னீஸ் மேற்கு வெர்ஜீனியா ஆகிய நான்கு மாநிலங்களும் தங்கள் அரசுகளை அமைத்துக் கொண்டன. ஆனால் நீக்ரோக்களுக்கு வோட்டுரிமை வழங்குவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே காங்கிரஸ் லிங்கனின் திட்டங்களை ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு மிதமானவை என்கருதி புதிதாக சீரமைக்கப்பட்ட மாநிலங்களின் பிரதிநிதிகளை ஏற்றுக் கொள்ள மறுத்தது. 1865-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் நாள் பிரிவினைவாதியான ஜான்வில்க்ஸ்’ பூத் என்பவரால் லிங்கன் கொலை செய்யப்பட்டார். மாநிலச் செயலாளரான சீவர்ட் என்பவர் குத்தப்பட்டார். இது புதிய பிரச்சனைகளை உருவாக்கியது.

**லிங்கன் நாட்டுக்கு ஆற்றிய தொண்டுகள்**

வறுமையினால் பல இன்னல்களுக்கிடையில் போராடிய லிங்கன் தேசியத் தலைவராக எழுச்சி பெற்றார். நாட்டுப்புறத்தில் வாழ்ந்த அவர் அனைத்துக் கலைகளிலும் சிறந்து விளங்கினார். சீரிய அறிவும், நகைச்சுவை, எளிமை, கல்வியறிவு போன்றவற்றை பெற்றிருந்த லிங்கன் எல்லைப்புற மக்களால் கவரப்பட்டார். அனவேறுபாடுகளாலும் பிரிவினைகளாலும் நாடு அச்சுறுத்தப்பட்ட நெருக்கடியான வேளையில் லிங்கன் அரசியலில் புகுந்தார். டக்ளஸோடு கொண்ட சொற்போரின் வழியாக தான் ஒரு அனுபவமிக்க அரசியல்வாதி என்பதையும் ஆராய்’நதறிபவன் என்பதையும் நிருபித்து காட்டினார். குடியரசுக் கட்சியின் வேட்பாளரான இவரை நாட்டின் தலைவராக தேர்ந்தெடுத்தனர்.

லிங்கன் தன் நாட்டு மக்களுக்காகக் கூட்டாட்சியை காத்ததே ஒரு மாபெரும் சேவையாகும். நீண்டகாலமாக தென்மாநிலங்கள் தேசிய சட்டத்தைமீறவும், கூட்ணைவை விட்டுப்பிரிந்து செல்லவும் தங்களுக்கு உரிமை உண்டென நம்பின. 1860-ல் நடைபெற்ற ஜனாதிபதிதேர்தலில் குடியரசுக்கட்சி வெற்றி பெற்றதால் நிலைமை மேலும் மோசமாயிற்று. நாட்டின் ஐக்கியத்திற்கு ஏற்பட்ட அச்சுறுத்தல், புதிய ஜனாதிபதிக்கு ஒரு மாபெரும் சவாலாக இருந்தது. இந்நெருக்கடி வேலையில் லிங்கன் எல்லைப்புற அடிமைமுறை மாநிலங்களை கூட்டாட்சியோடு இணைத்துக் கொண்டதின் விளைவாக தென் மாநிலங்களைத் தனித்து இயங்கச் செய்து, பிற ஐரோப்பிய ஆதிக்கங்கள் அவைகளுக்கு உதவிக்குச் செல்வதை தடை செய்தார். போர்த் தந்திரங்களைக் கையாளுவதிலும் தளபதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் அவர் பல வேலைகளில் தவறு செய்த போதிலும் ஒரு வலிமைவாய்ந்த படைகளை உருவாக்கினார். நாட்டின் செல்வத்தை பெருக்கினார். அதன் பயனாக தென் மாநிலங்களைத் தோற்கடித்து தேசிய ஐக்கியத்தைப் பாதுகாத்தார். இரண்டாவதாக லிங்கன் தனது போர்க்கால அதிகாரங்களைப் பயன்படுத்தி அடிமைகளுக்கு விடுதலை அளித்தார். எனினும் இவற்றை அவர் அரசியல் நோக்கத்தோடுதான் செய்தாரேயன்றி மனிதாபிமானத்தோடு அல்ல என்பதை எவரும் மறுக்க முடியாது. எனவே தான் விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு வாக்குரிமை வழங்கும் எந்த முயற்சி களையும் அவர் மேற்கொள்ளவில்லை. மூன்றாவதாக கிளர்ச்சியில் ஈடுபட்ட மாநிலப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் லிங்கன் குறிப்பிடத்தக்க நிதானத்தை மேற்கொண்டார். போரினால் பெரும் அழிவுஏற்பட்ட போதிலும் பழிவாங்கும் எண்ணத்தை நீக்கி, தென் மாநிலத்தவரும் ஒரே தாய் நாட்டடின் அங்கத்தினர்களே என்று கருதும்படி அவர் மக்களை கட்டாயப்படுத்தினார். அவரர் அமைச்சரவையின் இறுதிக் கூட்டத்தில் ‘‘ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் நாம் எதிர்பார்த்ததால நமது காழ்ப்புணர்ச்சிகளைக் கைவிடவேண்டு’’மென அவர் கேட்டுக் கொண்டார்.

**ஜான்சன் திட்டம்**

லிங்கன் இறந்ததற்கு பிறகு உதவி ஜனாதிபதியாய் இருந்த ஜான்சன் 1865-ம் ஆண்டு ஜனாதிபதியானார். அவர் லிங்கனின் திட்டத்தை அடிப்படையாக கொண்டு தனது சீரமைப்புத் திட்டத்தை 1865-ம் ஆண்டு மே மாதம் அறிவித்தார். கிளர்ச்சியில் ஈடுபட்ட மாநிலங்களின் தலைவர்களாகப் பணியாற்றியவர்கள் இருபதாயிரம் டாலர் மதிப்பிற்கு மேலான அளவு சொத்து வைத்திருந்தவர்கள் தவிர ஏனைய தென் மாநிலத்தவருக்கு அவர் பொது மன்னிப்பு வழங்கினார். அவர்கள் விசுவாச உறுதி மொழி அளடுத்துக் கொண்டதால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அடிமைகள் தவிரஏனைய சொத்துக்கள் அவர்களுக்கு மறுபடியும் கொடுக்கப்படும். இரண்டாவதாக, லிங்கனின் சீரமைப்புத் திட்டப்படி உருவாக்கப்பட்ட வெர்ஜீனியா, டென்னிசி, அர்கன்சாஸ், லூசியானா அரசுகளை இவர் அங்கீகரித்தார். மூன்றாவதாக, பிரிந்து செல்லுதல், போர்க் கடன், அடிமைமுறை பற்றிய தங்களது சட்டங்களை ஏற்றுக் கொண்டு விட்டால் பிறமாநிலங்களும் கூட்டாட்சியோடு சேர்ந்துக் கொள்ளலாம் என்பதை அவர் தெளிவுபடுத்தினார். 1865-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள்ளாக டெக்ஸாஸைத் தவிர ஏனைய எல்லா தென்மாநிலங்களும் விதிக்கப்பட்ட

சட்டதிட்டங்களை நிறைவேற்றி கூட்டாட்சியோடு மறுபடியும் சேரும் நிலையிலிருந்தன. என்னும் ஜனாதிபதி ஜான்சனோ செய்யப்பட்ட நீக்ரோக்களுக்கு வாக்குரிமை வழங்கவில்லை.

தென் மாநிலங்களுடைய செய்கைகளினால் கோபமுற்ற காங்கிரஸ் ஜனாதிபதி லிங்கன், ஜான்சன் ஆகியோரது திட்டங்களை ஏற்க மறுத்தது. சீரமைப்பு மாநிலங்களின் அங்கத்தினர்களை சட்டமன்றத்தில் அனுமதிக்க மறுத்து, சீரமைப்புத் திட்டங்களை தாமாகவே செயல்படுத்தப் போவதாகவும் அறிவித்தது. இதன் விளைவாக ஜனாதிபதியின் சீரமைப்புத் திட்டம் கைவிடப்பட்டது. பின்பு அது காங்கிரசின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்டது உண்மையில் ஜனாதிபதி திட்டம் கிளர்ச்சி செய்த மாநிலங்களுக்கு மிக எளிதாக இருந்தமையால் தீவிரவாதிகளால் கட்டுப்படுத்தப்பட்டிருந்த காங்கிரஸ் இத்திட்டத்தை ஏற்க மறுத்தது. மாநிலங்களைக் கூட்டாட்சியோடு இணைத்துக் கொள்ளுகின்ற உரிமை ஜனாதிபதிக்கு இல்லை. ஆனால் காங்கிரசுக்கு தான் உண்டென காங்கிரஸ் கூறிற்று.

**காங்கிரசின் சீரமைப்பு**

சீரமைப்பின் சட்ட திட்டங்களை உருவாக்க ஸ்டீவன்ஸ், சம்னர் என்பவர்களின் தலைமையின் கீழ் காங்கிரசின் இரு சபைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட 15 பேரடங்கிய குழு ஒன்றை காங்கிரஸ் அமைத்தது. திட்டவட்டமான எக்கொள்கைளையும் உருவாக்குவதற்கு முன்பு நீக்ரோக்களின் நலனைக்காக்க காங்கிரஸ், ஜனாதிபதியின் தடுப்பதிகாரத்திற்கு மேலாக இரு சட்டங்களை இயற்றியது. உள்நாட்டுப் போரின் போது விடுதலை அடைந்தோர் கழகத்தின் காலத்தை அதிகரித்தது. 1866-ல் இயற்றப்பட்ட சிவில் உரிமைகள் சட்டம் நீக்ரோக்களுக்கு எதிராக மாநிலங்கள் வேறுபாடு காட்டுவதைத் தடை செய்து, சட்டத்தின் முன்பு சமமான பாதுகாப்புப்பெற அவர்களுக்கு உறுதி வழங்கியது.

1866-ல் காங்கிரஸ் அரசியலமைப்பின் 14-வது திருத்தச் சட்டவரைவை ஏற்றுக் கொண்டது. குடியுரிமை, சிவில் உரிமை சட்டத்தின் முன் அனைவரும் சமம் போன்றவற்றை இச்சட்டம் நீக்ரோக்களுக்கு வழங்கியது. மேலும் சட்டவரைவு நேசக் கூட்டிணைவின் போர்க்கடனை ஏற்றுக்கொள்ள மறுத்து, காங்கிரசின் மன்னிப்பைப் பெற்றதால்தான் நேசக் கூட்டிணைவினர் அரசு பதவிகளை வகிக்க முடியுமெனக் கூறி அவர்களைத் தகுதியற்றவர்களாக்கியது. தென்மாநிலங்களில் டென்னிசி மாநிலம் இத்திருத்தத்திற்கு ஆதரவாக வோட்டளித்ததால் அது கூட்டாட்சியோடு இணைத்துக் கொள்ளப்பட்டது.

**காங்கிரஸ் திட்டம்**

1867-ல் 15 பேரடங்கிய குழு தனது பரிசீலனையை முடித்து சீரமைப்பிற்கான தீர்மானங்களை உருவாக்கியது. அதன் ஆலோசனையின்படி ஏனைய பத்து மாநிலங்களின் சீரமைப்பிற்கான திட்டங்களை காங்கிரஸ் மேற்கொண்டது. 1869-ல் தொடர்ந்து இயற்றப்பட்ட மூன்று சட்டங்கள் வழியாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1) தென்மாநிலங்கள் இராணுவத் தளபதிகளின் தலைமையின் கீழ் ஐந்து இராணுவ மாவட்டங்களாக்கப்பட்டது. அவர்களுக்கு உயிர் உடைமைகளைக் காக்கும் பொறுப்பானது வழங்கப்பட்டது. 2) வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்ற கறுப்பர்களும் வெள்ளையர்களும் மாநிலக் குழுவிற்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இம்மாநில குழுக்கள் நீக்ரோக்களுக்கு வாக்குரிமை

வழங்குவதற்கான உத்திரவாதமளித்தது. புதிய மாநில அரசியலமைப்புகளை உருவாக்கும். வாக்காளர்களின் ஒப்புதல்களுக்காக இவ்வரசியலமைப்பு மக்கள் முன்னிலையில் வைக்கப்பெற்று பின்னர் காங்கிரஸின் ஒப்புதலைப் பெறும் 3) புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் அரசியலமைப்பின் 14-வது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்நிபந்தனைகள் நிறைவேற்றப்படுமாயின் கிளர்ச்சியில் ஈடுபட்ட மாநிலங்கள் ஐக்கிய இணைவோடு சேர்த்துக் கொள்ளப்படும். பத்து மாநிலங்களில் ஆறு மாநிலங்கள் இந்நிபந்தனைகளை நிறைவேற்றி 1818-ல் கூட்டாட்சியோடு சேர்ந்து கொண்டன.

இந்நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய மாநிலங்கள் வெர்ஜீனியா, மிஸிஸிப்பி, டெக்ஸாஸ், ஜார்ஜியா போன்றவைகள் கூட்டிணைவோடு சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமாயின் மேலும் ஒரு நிபந்தனையாக 15வது அரசியலமைப்புச் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டன. 1870-ல் நிறைவேற்றப்பட்ட இச்சட்ட வரைவு ஐக்கிய நாடுகளும் கூட்டிணைவு மாநிலங்களும்' உறுப்பு மாநிலங்களும் இனம், நிறம், முன்பு நிலவிய அடிமைமுறை ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குடிமகனுக்கு வாக்குரிமையை மறுப்பதைத் தடைசெய்தது. இந்நான்கு மாநிலங்களும் இந்நிபந்தனையை ஏற்றுக் கொண்டு 1870-ல் கூட்டிணைவோடு சேர்ந்து கொண்டன. இவ்வாறு நேசக் கூட்டிணைவு முறியடிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குள் எல்லா மாநிலங்களுமே கூட்டாட்சியோடு சேர்ந்தன. காங்கிரசின் திட்டங்கள் கடினமாகத் தோன்றி போதிலும் அது நாட்டிற்கு நன்மையே அளித்தது. அவைகள் ஏழை வெள்ளையர்களுக்கும், நீக்ரோக்களுக்கும் ஓரளவு வாக்குரிமை அளித்து, ஜனநாயகத்தை தென்மாநிலங்களில் அறிமுகப்படுத்தியது.

**ஜான்சன் மீது குற்றச்சாட்டு**

சீரமைப்புப் பிரச்சனையில் ஜனாதிபதிக்கும் காங்கிரசுக்குமிடையே எழுந்த கருத்து வேறுபாடு பிளவினை ஏற்படுத்தியது. காங்கிரசின் சீரமைப்பு நடவடிக்கைகள் மீது ஜான்சன் மறுப்பாணை அதிகாரத்தைப் புறக்கணித்தது. இதனால்ஜான்சன் காங்கிரசை கடுமையாகத் தாக்கினார். ஆகவே தீவிரவாதிகள் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க எண்ணினர். 1867-ல் இயற்றப்பட்ட பதவிக்கால சட்டம் செனட்டின் அனுமதியின்றி ஜனாதிபதி சிவில் அதிகாரிகளை பதவியிலிருந்து நீக்குவதைத் தடை செய்தது. இச்சட்டத்தை மீறுவது சட்டப்படி குற்றம் எனக் கூறியது. போர்ச் செயலாளரும் ஜனாதிபதி ஜான்சனின் பயங்கர விமர்சகருமான எட்வின் எம்.ஸ்டான்டன் என்பவரைக் காக்கும் எண்ணத்துடனே இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. ஜனாதிபதி காலம் தாழ்த்தாது ஸ்டான்டனை பதவியிலிருந்து நீக்கினார். எனவே பிரதிநிதிகள் ஜனாதிபதி ஜான்சன் மீது துரோகக் குற்றச்சாட்டு விசாரணைக்கு வாக்களித்தனர். செனட்டில் பத்து வாரங்கள் விசாரணை நடைபெற்றது. இறுதியில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

**சீரமைக்கப்பட்ட அரசுகள்**

நீக்ரோக்களும், ஏழை வெள்ளையர்களும் அரசியல் உரிமைகளைப் பெற்றார்கள. நீக்ரோக்கள், பயணப்பையினர் (Carper-baggers) என்றழைக்கப்பட்ட சந்தர்ப்பவாத வடவர், ஸ்காலஜ் வேஜ் (Scala Wage) எனப்பட்ட தென்மாநில வெள்ளையர்கள் ஆகியவர்களால் தென்

மாநிலங்களில் காங்கிரஸ் தீவிரவாதிகளின் ஆதரவுடன் அரசுகள் அமைக்கப்பட்டன. மாநழலங்களுக்கான அரசியலமைப்புகளை வரைந்து நீக்ரோக்களுக்கு வாக்குரிமையை உறுதி செய்தது. ஆனால் அவ்வுரிமையை நேசக் கூட்டிணைவின் முன்னாள் தலைவர்களுக்கு கொடுக்க மறுத்தது.

சீரமைக்கப்பட்டஅரசுகள் பல நல்லதும் கெட்டுமான செயல்களையும் செய்தன. பொருளாதாரச் சீர்திருத்தம் செயல்படுத்தப்பட்டது. போரிலட பழுதாக்கப்பட்ட சாலைகள், பாலங்கள், இரயில் பாதைகள் போட ஏராளமான பணம் முதலீடு செய்யப்பட்டது. சமுதாய அரசியல் சீர்திருத்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கட்டாய இலவச பொதுக்கல்வி முறை புகுத்தப்பட்டதன் விளைவாக நீக்ரோக்கள் கல்வி கற்றனர். தங்களுடைய திருச்சபையைத் தாங்களே செயல்படுத்தும் உரிமை கறுப்பர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தேர்தல் முறையும், நீதி ஆய்வு முறையும், வரிவிதிப்பு முறையும் மாற்றியமைக்கப்பட்டன. சிறுபண்ணையாளர்களுக்கு உதவி அளிக்கப்பட்டது. பொதுவாகநீக்ரோ ஆட்சி நன்மை பயப்பதாக இருந்தது. எனினும் இவ்வரசியலமைப்புச் சட்டம் வெள்ளை உயர்குடியினரின் சொத்துக்களை பறிமுதல் செய்யவோ அல்லது சமதுாய, பொருளாதாரத் துறையில் வெள்ளை ஆதிக்கத்தை ஒழிக்கவோ முயற்சிக்கவில்லை.

எனினும் கறுப்பர் ஆட்சிக் காலத்திலு் அதிக ஊழல் ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது. அதே நீக்ரோ சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு சிறந்த, திறம்படைத்த நிர்வகாத்தை ஏற்படுத்த வேண்டுமென்று உழைத்த போதிலும் அநேக வெள்ளையர் தங்களது சொந்த நலனைக் காக்க இச்சூழ்நிலையைப் பயன்படுத்தினர். குல்வி அறிவில்லாதவர்கள் பொதுப் பதவியில் அமர்த்தப்பட்டனர். அவர்களில் பலர் பொதுச் செலவில் ஆடம்பரவ ாழ்க்கை நடத்தினர் பொதுக்கடன் அதிகரித்தது.

**தென் மாநிலங்களின் பிரதிபலிப்பு**

தென்மாநில வெள்ளையர்களின் எதிப்பினால் காங்கிரசின் சீரமைப்புத் திட்டங்கள் முறியடிக்கப்பட்டன. 1) வெள்ளையர்கள் வாழ்ந்த வடகரோலினா, டென்னிசி போன்ற மாநிலங்களில் வெள்ளையர்கள் தேர்தல் மூலம் மாநில அரசாங்கங்களில் அதிகாரத்தைப் பெற்றனர். இம்மாநிலங்களில் ஜனநாயககட்சி பதவிக்கு வந்தது. 2) பிற மாநிலங்களில் கூட்டாட்சிப் படையினர் இன சமத்துவத்தை செயல்படுத்திய போது வெள்ளையர்கள் பயங்கரவாதக் கொள்கையில் நிறுவப்பட்டன. அவற்றில் குக்கிளக்ஸ் கிளான் வெள்ளை கமலியா வீரர்கள் போன்றவை மிகவும் முக்கியமானவை. இந்த இரகசியக் குழுவின் அங்கத்தினர்கள் நீக்ரோக்களை துன்புறுத்தினர். இதனை தடுப்பதற்கு 1810-ல் காங்கிரஸ் படைச் சட்டத்தை இயற்றியது. ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டத்தின் துணையை நாடுவதை நிறுத்தி வைக்கவும், தேர்தல்களை மேற்பார்வை செய்யவும் இராணுவத்தினரை பயன்படுத்தவும் இச்சட்டம் கூட்டாட்சி அதிகாரிகளுக்கு அதிகாரமளித்தது. இதனால் இரகசியக் குழுக்களின் தீய நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டன. எனினும் நீக்ரோக்கள் வாக்குச் சாவடிகளுக்கு செல்ல மறுத்தனர். இதனைப் பயன்படுத்தி வெள்ளையர்கள் மறுபடியும் மாநில அரசுகளின் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள். 3) பதவிக்கு வந்த பின்னர் வெள்ளையர்கள்

நீக்ரோக்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரசியல் உரிமைகளைப் பறிப்பதற்காகச் சட்டங்களை இயற்றினார்கள். ஆரசியலமைப்பின் 15-வது திருத்தச் சட்டம், இனம், நிறம்ஈ முன்பு நிலவிய அடிமைமுறை ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலங்கள் ஒரு குடிமகனுக்கு வாக்குரிமை மறுப்பதைத் தடைசெய்தது. ஆனால் மாநிலத்தின் புதிய சட்டங்கள் சொத்து, கல்வி அடிப்படையில் புதிய கட்டுப்பாடுகளை விதித்தன. அநேக நீக்ரோக்கள் எவ்வித சொத்துமில்லாததால் தங்களது வாக்குரிமையை இழந்தனர். எதிர்பாராத விதமாக சொத்துக்களில்லாத சில வெள்ளையர்களும் தங்களது வாக்குரிமையை இழந்தார்கள் எனவே வாக்குரிமை பெறவேண்டுமாயின் அவர்கள் விவிலியத்தின் ஒரு பகுதியையோ அல்லது அரசியலமைப்பையோ வாசிக்கக் கூடிய திறமை பெற வேண்டும் அல்லது அவர்களுக்கு அதனை புரிந்து கொள்ளும் திறமை வேண்டுமென கூறப்பட்டது. வெள்ளை தேர்வாளர் குழுவினர் வெள்ளையர்களுக்கு மட்டும்தான் இத்திறமை உண்டு என்று ஏராளமான நீக்ரோக்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்க மறுத்தனர்.

தென் மாநிலத்தவர் பொருளாதார சமுதாய வாழ்வில் வெள்ளையர்கள் தொடர்ந்து பெற்றிருந்த மேலாண்மையும் பயணப்பையினர் ஆட்சியின் செல்வாக்கின்மையும் காங்கிரஸ் சீரமைப்பின் தோல்விக்கு காரணங்களான அமைந்தன. வரிப்பழு, ஊழல், வடமாநிலங்களில் சீர்திருத்தக் கொள்கைகளை மிதப்படுத்தியமை. ஆதைக் தொடர்ந்து தென்மாநிலத்தின் வளர்ச்சியில் வடமாநிலம் காட்டிய அக்கரையின்மை ஆகியவை பயணப்பையினர் ஆட்சி செல்வாக்கிழக்கச் காரணங்களாகும்.

**சீரமைப்பின் விளைவுகள்**

1) தேன்மாநில வெள்ளையர்கள் தங்களுடைய அதிகாரத்தை இழந்ததால் அவர்கள் நீக்ரோக்களை பழிவாங்க வேண்டுமென்று எண்ணினர். இது இனவெறியை அதிகரித்தது. 2) தென் மாநிலங்களில் ஒரு கட்சியின் அடிப்படையில் ஆட்சிமுறை ஏற்படுவதற்கு இது காரணமாயிற்று. குடியரசுக் கட்சி மீதான வெறுப்புணர்ச்சியினால் தென் மாநிலத்தவர் ஜனநாயக் கட்சியை ஆதரித்தனர். 3) சீரமைப்புத் திட்டங்கள் காங்கிரஸ், ஜனாதிபதி ஆகிய இரு அமைப்புகளின் தொடர்பில் பிரச்சனைகளை ஏற்படுத்தியது. ஜான்சனின் குற்ற விசாரணையின் போது அரசின் இரு முக்கிய துறைகளும் பொதுமக்களின் விவாதத்திற்குள்ளாக்கப்பட்டன. இதன் விளைவாக தீவிரவாதிகள் செல்வாக்கிழந்தனர். 4) சீரமைப்பு அரசுகள் விதித்த வரிச்சுமை, தங்கள் நிலங்களைவ ிற்க நிலச்சுவான்தார்களைக் கட்டாயப்படுத்தியது. சமஅளவில் நிலங்கள் பய்கீடு செய்யப்படுவதற்கு இது பெருமளவில் உதவி புரிந்தது. நீக்ரோ அரசுகளால் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கை, கறுப்பர்களும் ஏழை வெள்ளையர்களும் சமுதாய விழிப்புணர்ச்சி பெற வழி கோலியது. எதிர்பாராத விதமாக வட, தென் மாநிலங்கள் தொழில்மயமாக்குதலையே தங்கள் ஒரே நோக்கமாகக் கொண்டிருந்தமையால் வட, தென் மாநிலங்கள் தங்கள் இனவெறியை மறந்தன.

## அலகு - II

## பொருளாதார வாழ்வில் ஏற்பட்ட புரட்சியும் அதன் விளைவுகளும்

1865-ம் ஆண்டிலிருந்து 1900-ம் ஆண்டு வரை தொழில், விவசாயம் போன்ற துறைகளில் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளைவிட மிகவும் பின்தங்கிய நிலையிலிருந் ஐக்கிய நாடுகள் விரைவாக முன்னேறியது. ‘‘உள்நாட்டுப் போர் முடிவிற்குப் பின் வந்த கால கட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நிகழ்ந்த அறியில் மற்றும் நவீன கண்டுபிடிப்புக்களில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் வாழ்க்கை வசதிகள் பெருவதற்கான வாயப்புக்கள் ஆகியவை போன்று உலக நாகரிக வரலாற்றில் வேறு எந்த காலக்கட்டத்திலும், வேறு எந்த நிலப்பகுதியிலும் நிகழ்ந்ததில்லை’’ என்று எட்வர்ட் அட்கிசன் என்பார் பொருத்தமாகவே கூறியுள்ளார். ஆப்போது குடியரசுக் கட்சியே அதிக செல்வாக்குடன் திகழ்ந்தது. ஜனாதிபதி கிராண்டு, ஹேய்ஸ், கார்பீல்ட், ஆர்தர் போன்றவர்கள் இக்கட்சியைச் சார்ந்தவர்கள். 1885-ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக் கட்சி வேட்பாளரான கிளிவ்லாண்ட் வெற்றி பெற்றார். பெஞ்சமின் ஹாரிசன் ஜனாதிபரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1892-ல் ஜனநாயக் கட்சி வேட்பாளரான கிளிவ்லாண்ட் மறுபடியும் ஜனாதிபதியானார். எனினும் 1896-ல் குடியரசுக் கட்சியைக் சார்ந்த மெக்கின்லீ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பெரும் வாணிகமும் கூட்டு வணிகமும்

மக்களின் பொருளாதார சமூக வாழ்வை முற்றிலும் மதற்றியமைத்த தொழிற்புரட்சி உள்நாட்டுப் போருக்கு முன்பே ஆரம்பமாயிற்று. எல்லாத் துறைகளிலும் ஏற்பட்ட அதன் பெரும் வளர்ச்சிக்கு பல காரணங்கள் இருந்தன. ஐக்கிய நாடு பரந்த நிலப்பரப்பும் கனிவளமும் பொருள்வளமும் நிறைந்து, சிறந்த சீதோஷ்ண நிலையும் பெற்றிருந்தது. நவீன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதின் விளைவாகவும் அடிமைமுறை ஒழிக்கப்பட்டதாலும் தொழிற்சாலைகளுக்கு வேலைச் செய்ய தொழிலாளர்கள் அதிகம் வந்ததாலும் உற்பத்தியை பெருக்க முடிந்தது. இரண்டாவதாக, முதலீட்டிற்குத் தேவையான மூலதனத்தை நாடு பெற்றிருந்தது. அரசியல் நிலையில் உறுதித்தன்மை, குறைந்த வரிவிதிப்பு, அதிக சேமிப்பு, நிர்வாகத் தலையீடின்மை போன்றவை முதலீடு செய்வதற்கு அதிக அளவு ஊக்கத்தை அளித்தன. குடியேற்ற அமைப்புமுறை நடைமுறையிலிருந்ததால் ஐரோப்பியர்கள் ஆசிய ஆப்பிரிக்க மக்களிடமிருந்து சுரண்டி பணத்தை அமெரிக்காவில் முதலீடு செய்தனர். மூன்றாவதாக, அங்காடி வசதிகளை ஐக்கிய நாடுகள் பெற்றிருந்தது. ஐரோப்பாவில் அமெரிக்கப் பொருட்களுக்கு நிரந்தர தேவை இருந்தது. போக்குவரத்து வசதிகள் இருந்ததால் பொருட்களைத் தொழிற்கூடங்களிலிருந்து சந்தைகளுக்கு எடுத்துச் செல்ல எளிதாக இருந்தது. நான்காவதாக, முதலீடுச் செய்ய விரும்பும் மக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். இதுவே அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

விஞ்ஞானத்தில் ஏற்பட்ட முன்னேற்றமும் அதிக உற்பத்தியை பெருக்க கையாண்ட வழிமுறைகளும் தொழில்துறையை வளர்ச்சியடைச் செய்தது. கனரகத் தொழிற்துறைகளான இரும்பு, எ∴கு எண்ணை இயந்திரங்கள் போன்றவை நெசவு, மரம், உணவுப் பதனிடுதல்

போன்ற இலகு ரகத் தொழிற்துறைகளைவிட மிக விரைவாக வளர்ந்தன. எஃகு அதிக அளவில் உற்பத்திச் செய்யப்பட்டமையாலும் மின்னஸோட்டாப் பகுதியிலுள்ள மெஸாபியில் சுரங்கங்கள் தோண்டப்பட்டதால் எஃகுக்கு எழுந்த தேவையும் தொழிலக வளர்ச்சிக்கு உறுதுணையாக இரந்தன. சுரங்கங்கள் தோண்டப்பட்டன. தொழிற்சாலைகள் பல நிறுவப்பட்டன. நாட்டில் எல்லாப்பகுதிகளிலும் சுத்திகரிப்பு சாலைகள் அமைக்கப்பட்டன. விவசாய இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டமையாலும் மேற்குப் பகுதியின் பெரும் சமவெளிகள் விவசாயத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமையாலும் விவசாயப் இயந்திரங்கள் உற்பத்தி அதிகரித்தது. ஆரம்பத்தில் டெக்ஸாஸ் மாநிலத்தில் மட்டிலும் இருந்த கால்நடை வளர்ப்பு நாளடைவில் மற்ற பகுதிகளிலும் விரிவாக்கப்பட்டன. வங்கிகள் நிலையான நாணய முறையைப் பின்பற்றியதோடு கடன்களையும் தந்து உதவியது. விரிவான சாலைகளை அமைக்க திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அடலாண்டிக் கரையிலிருந்து பசிபிக் சமுத்திரப்பகுதிகளுடன் தொடர்பு கொள்ள இரயில் பாதைகள் போடப்பட்டன. கப்பல், மோட்டார் வண்டிகள் , விமானங்கள் ஆகியவை பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. தந்தி, தொலைபேசி போன்றவை நாடெங்கிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட துறைகளில் ஏற்படுத்தப்பட்ட பெரும் வளர்ச்சி, மக்களை வளம் பெறச் செய்ததோடு, அமெரிக்க ஐக்கிய நாடுகளை உலக நாடுகளிலே வலிமை வாய்ந்த நாடாக வலுப் பெறச் செய்தது.

தொழில்மயமாதலின் ஆரம்ப காலத்தில் பெரும்பான்மையான தொழிற்சாலைகளை சிறு முதலாளிகளோ அல்லது சிறு கூட்டுக்குழுக்களோ (Corporation) சொந்தமாக வைத்திருந்தன. ஏராளமான தொழில் நிறுவனங்களுக்கிடையில் நிலவிய கடும் போட்டி காரணமாக விலைக்குறைப்பு, ஆதாய இழப்பு ஆகியவை ஏற்பட்டு 1837-ம் ஆண்டில் பெரும் திகில் தோன்றியது. இதனை நிவர்த்திச் செய்ய வாணிப நிறுவனங்கள் கூட்டுச் சேரவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தன. பெரும் வியாபார வளர்ச்சியை ஆதரிப்பதை தனது கொள்கையாகக் கொண்டிருந்த குடியரசுக்கட்சி பெரும் வணிக வர்க்கத்தினருக்கு முழு ஆதரவளித்தது. வெளிநாட்டுப் போட்டியிலிருந்து தொழில்துறைகளைக் காக்க குடியரசு நிர்வாகம் வெளிநாட்டுப் பொருட்கள் மீது அதிகச் சுங்க வரியை விதித்தது. உள்நாட்டுத் தொழிற் துறைகளுக்கு சலுகைகளும், வெகுமதியும் அளித்தது. அரசின் இந்நடவடிக்கைகள் பெரும் வியாபார நிறுவனங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தன.

தொழிலக் கூட்டு நிறுவனத்தில் மூன்று படிவங்கள் இருந்தன. முதலாவதாக, விளை பொருள் சேமிப்பு தொகுதி (Pooling) என்பது வியாபார அமைப்பாகும். இதன் அங்கத்தினர்கள் கிடைக்கக்கூடிய வியாபாரத்தைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு பொருள்களின் விலைகளைக் கட்டுபடுத்த முயன்றனர். ஆனால் 1890-ம் ஆண்டிற்குள்ளாக இயற்றப்பட்ட சட்டங்கள் குறிப்பாக மாநிலங்களுக்கிடையிலான வாணிபச் சட்டம் விளைபொருள் சேமிப்பு தொகுதிக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்தது. எனவே சேமிப்பு தொகுதிகளுக்குப் பதிலாக பொருள் கூட்டு நிறுவனமுறை (Trusts) நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. கூட்டுநிறுவனமுறை என்பது மற்றொரு வியாபார அமைப்பாகும். இதில் பங்குதாரர்கள்

தங்களுடைய மூலதனத்தை கூட்டு நிறுவனக் (Board of Trustees) குழுவிடம் ஒப்படைத்து அதற்குரிய பத்திரத்தையும் அதன் பயனாகக் கிடைக்கும் நிதி அனுகூலத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். கூட்டு நிறுவனக் குழுவினர் வியாபாரம் நடத்தும் முழு அதிகாரத்தையும் பெற்றிருந்தனர். உண்மையில் கூட்டு வாணிப நிறுவனம் என்பது ஒருவகையான வியாபார அமைப்பாகும். விரிவான நோக்கில் பார்க்கும் போது எந்த ஒரு முற்றுரிமையையும் பெரும் வாணிகக் கழகத்தையும் கூட்டு வாணிப நிறுவனம் எனக் கூறலாம். ஷெர்மன் கூட்டு நிறுவனத் தடைச் சட்டம் கூட்டு வாணிப முறைக்கு தடையாக எழுந்தது. எனவே அதற்குப் பதிலாக சார்புப் பங்கு கம்பெனிகள் (Holding Companies) தோன்றின. சார்புப் பங்கு கம்பெனிகள் என்பவை பெரும் மூலதனத்தைக் கட்டுப்படுத்தி அல்லது சொந்தமாக வைத்துக் கொண்டு பிற நிறுவனங்கள் மீது மேலாதிக்கம் செலுத்தும் ஓர் அமைப்பாகும்.

**ஒருங்கிணைக்கும் வல்லுநர்கள்**

ஆரம்பத்தில் ரயில் துறையில் தான் ஒருங்கிணைத்தல் நிகழ்ந்தது. பாதைக் கழகங்களை ஒன்றுபடுத்தி சீர்படுத்துவதில் தலை சிறந்தவராக கர்னீலியஸ் வாண்டர் பில்ட் என்பவர் விளங்கினார். நீராவிக் கப்பல் கழகத்தின் உடைமையாளராக இருந்து பெரும் பொருள் ஈட்டிய பின்னர் தமது 69-வது வயதில் நியூயார்க் மத்திய ரயில் பாதைத் தொகுதியின் மேலாண்மையைப் பெறும் வரையில் ஒன்றன்பின் ஒன்றாக பல ரயில் பாதைக் கழகங்களின் பங்குகளை விலைக்கு வாங்கினார். வாண்டர் பில்டின் வழியை வேறு ரயில்வே தொகுதிகளில் பலர் பின்பற்றினர்..தென்பகுதியில் மோர்கன் என்ற தொழிலதிபர் அநேக ரயில்பாதைகளை விலைக்கு வாங்கினார். அதன் விளைவாக தெற்கு ரயில்பாதை அமைப்பு தோன்றியது.

எஃகு தொழிற் துறையில் தலைச்சிறந்தவரான ஆண்ட்ரு கர்னகி என்பவர் ஸ்காட்லாந்திலிருந்து அமெரிக்காவிற்கு குடியேறி ஒரு பருத்தி தொழிற்சாலையில் வேலைக்காரராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார். எஃகு உற்பத்தியில் ஒருங்கிணைப்பு முறைகளைப் பின்பற்றி அதன் விலையைக் குறைப்பதிலும் போட்டிகளை தவிர்ப்பதிலும் இவர் வெற்றி கண்டார். அவர் இருப்புப் படிவங்கள் நிறைந்துள்ள மெஸாபிக் தொகுதியை குத்தகைக்கு எடுத்து, சுரங்கங்களைத் தோண்டி, பெரிய ஏரியில் உலோகத்தாலான கப்பல்களை இயக்கி ரயில் துறைகளிடமிருந்து தள்ளுபடி பெற்றார். அவரது போட்டியைச் சமாளிக்க முடியாத போட்டியாளர்கள் வேறு வழியின்றி தங்களது தொழில் நிறுவனங்களை விற்கும் கட்டாய நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். கர்னகியின் எஃகுப் பேரரசு உருவாகுவதற்கு அடிகோலியது.

ஜான்-டி-ராக் என்பவர் எண்ணைத் தொழிலை ஒருங்கிணைத்த தலைவராவார். குமாஸ்தாவாக தனது பணியை ஆரம்பித்த ராக்கெல்லர் தனது 19ம் வயதில் வர்த்தராக வெற்றிகரமாக வாழ்க்கையைத் தொடங்கி பின்னர் எண்ணைத் தொழிலில் ஈடுபட்டு சிறந்த தொழிலதிபதிராக உயர்ந்தார். உள்நாட்டுப் போரின் இறுதியில் கிளீவ்லாண்ட் என்னுமிடத்தில் எண்ணைச் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை நிறுவினார். புல்வேறு இடங்களிலுள்ள எண்ணெய் வர்த்தக தொழிலில் முற்றுரிமை பெற்றார்.

இதற்கிடையில் பிற தொழிலதிபர்களின் முயற்சி காரணமாக ஒருங்கிணைப்பு உருவாகி, பல்வேறு பொருளியல் நடவடிக்கைப் பகுதிகளில் சிறு நிறுவனங்களுக்குப் பதிலாக பூதாகரமான கூட்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டன.

**வலுப்படுத்தலின் விளைவுகள்**

மேற்குறிப்பிட்ட கூட்டு முறைகளின் விளைவாக மாபெரும் வியாபார நிறுவனங்கள் தோன்றின. 1900-ம் ஆண்டிற்குள் தமக்குள் போட்டியிட்டுக் கொண்டிருந்த ஐயாயிரத்திற்கு மேற்பட்ட சிறு நிறுவனங்கள் ஒன்றிணைந்து முந்நூறு பெரும் நிறுவனங்களாயின. இவைகளுள் ஐக்கிய நாடுகள் எஃகு நிறுவனம், அமெரிக்க சுத்திகரிப்பு கம்பெனி, ஐக்கிய நாடுகள் ரப்பர் கம்பெனி மற்றும் ஒன்றினைந்த தாமிர கம்பெனி ஆகியவை பெரும் வலிமை வாய்ந்தவையாகும். பிற நிறுவனங்களோடு எஃகு சுரங்கம், ரயில்பாதை, மின்சாரம், தந்தி, பெட்ரோல், மாமிசம், பழம் போன்றவற்றை பதம் செய்தல் போன்ற தொழில்துறைகள் மீதும் அவைகள் ஆதிக்கம் செலுத்தின. புது தொழிலதிபர்களும், வங்கிதார்களும், வடபகுதியின் வணிகர்களையும் தென்பகுதியின் விவசாயப் பண்ணையினரையும் நாட்டின் ஆளும் வகுப்பினர் என்று ஒதுக்கி வைத்தனர். பெரும் வியாபாரத் தொழில்களின் வளர்ச்சி செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்குமிடையில், முதலாளிகளுக்கும் உழைப்பாளிகளுக்குமிடையில் வேறுபாடுகளை அதிகரித்தது.

2)தொழில் மயமாதலும், அதை தொடர்ந்து ஏற்பட்ட இயந்திரமயமாதலும் மக்களின் சமுதாய வாழ்வில் பெரும் விளைவுகளை ஏற்படத்தின. தொழிற்சாலைகள் சமுதாயத்தின் பலவகைப்பட்ட மக்களையும் தம் பக்கம் இழுத்துக் கொண்டதோடு நகரங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. நுகர வாழ்க்கை பண்பாட்டை வளாத்த போது, மக்கள் நெருக்கடியும் எளியகுடிசை வாழ்க்கையும் அரசுக்கும், சமுதாயத்திற்கும் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தின.

3) பொருளாதார மாற்றங்கள் புதிய கோட்பாடுகளைப் புகத்தின. தொழிலதிபர்களில் அநேகர் எளிய நிலையிலிருந்து தங்களது நிர்வாகத்திறமை, வியாபாரத்தில் துணிவு போன்வற்றின் மூலம் மேன்மை பெற்றனர். செல்வத்தைப் பெறும் தகுதி தங்களுக்கு இருக்கின்ற காரணத்தால் தாங்கள் பெற்றதாகவும், அதிர்ஷ்டமற்றவர்களை அதனை பெறும் தகுதியற்றவர்களென்றும் கருதினர். போராட்டம் என்பது மக்களின் வழக்கமான செயல்முறை என ஹெர்பர்ட் ஸ்பென்சர் விவரித்துள்ளார். தகுதியுள்ளவர்கள் தான் போராட்டத்தில் நிலைத்திருக்க முடியுமென்ற டார்வினின் கோட்பாடு மக்களின் பொருதார வாழ்க்கைக்கும் பொருந்தும். எனினும் பெரும்பான்மையான அமெரிக்க மக்கள் இப்புதிய பொருளாதாரக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். ஏனெனில் ஒரு சிலரிடமே செல்வம் குவிந்திருப்பதை இக்கோட்பாடு சரியெ ஏற்றுக் கொண்டது. ‘‘வளர்ச்சியும் வறுமையும்’’ (Progress & Povertiy) என்ற தனது புத்தகத்தில் தொழில் மயமாதலின் விளைவாக அதிகரித்த செல்வங்கள் அனைத்தும் பெரும் வியாபாரங்களின் வளர்ச்சிக்கு உதவி, செல்வந்தர் ஏழை வகுப்பினரிடையேயுள்ள வேறுபாடுகளை அதிகரிக்கச் செய்யுமாயின் உண்மையில் அதனால் எவ்வித முன்னேற்றமுமில்லை என ஹென்றி ஜார்ஜ் குறிப்பிடுகின்றார்.

சமமற்ற செல்வப் பங்கீட்டு முறைதான் ‘‘பின் நோக்குப் பார்த்தல்’’ (Looking Backward) என்ற புத்தகத்தை எழுத எட்வர்ட் பெல்லாமி என்பவரைத் தூண்டியது. எல்லாச் சொத்துக்களுக்கும் கூட்டு உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் புதியதோர் சமுதாயம் அமைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

4.பொருளாதாரப் பரட்சி நாட்டை ஏகாதிபத்தியத்திற்கு எடுத்துச் சென்றது. அதிகமாக தொழிற்சாலைகள் நிறுவப்பட்டதால் அவற்றிக்கு அதிக கச்சாப்பொருள்கள் தேவைப்பட்டன. உற்பத்தி பொருள்களைவ ிற்க ஏராளமான அங்காடிகளும் தேவைப்பட்டன. பெரும் பொருளாதார வளர்ச்சியோடு இராணுவ வலிமையும் ஒன்றிணைந்தன. இச்சூழ்நிலைகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இலத்தீன் அமெரிக்காவிலும் பசிபிக் பெருங்கடலிலும் அதிகச் கவனம் செலுத்த ஆரம்பித்தது.

5. பல்வேறு வணிக நிறுவனங்களுக்கிடையில் முன்பு நிலவிய போட்டி, பொருள்களுக்கு ஒரு சிறந்த அங்காடி விலையை உறுதி செய்து, சிறந்த வேலை நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு தொழிற்சாலையிலிருந்து மற்றோர் தொழிற்சாலைக்குச் செல்ல தொழிலாளர்களுக்கு உதவியது. ஆனால் கூட்டு நிறுவனங்கள் (Trusts) மற்றும் கூட்டுக்குழு (Corporation) உருவான போது இந்நிலை மாறியது. போட்டி மறைந்தது. சிறுநிறுவனங்கள் அழிந்தன. விலைகள் உயர்த்தப்பட்டன. தொழிற்கங்கங்களில் தொழிலாளர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டது. வேலை நிபந்தனைகள் சீர்கேடுற்றன. ஒரு சில வணிகர்களிடமே செல்வம் குவிந்திருந்தது. பெரும் தொழிலதிபர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கையூட்டளித்து சலுகைகள் பெற்றனர். தங்களது நலநன விருத்தி செய்ய தொழில் வல்லுநர்கள் கைக்கொண்ட வழிகள் ஆக்கிரமிப்புத்தன்மை உடையதாகவும், கொடூரத் தன்மையுடையதாகவும் நேர்மையற்றதாகவும் இருந்தது. அவை பெரும் வாணிபங்களுக்கு எதிராகப் பெரும் எதிர்ப்புத் தோன்ற வழி வகுத்தன. இதன் எதிரொலியாகவே விவசாயக் கிளர்ச்சி தொழிற்சங்கங்கள், முன்னேற்றச் சட்டங்கள் என்றழைக்கப்பட்ட அரசு ஒழுங்குமுறை நடவடிக்கைகள் எழுந்தன.

**விவசாயக் கிளர்ச்சியும் பொது மக்கள் இயக்கமும் (Populist Movement)**

முதலாளித்துவத்திற்கு எதிராக விவசாயிகள் எழுச்சியுற்றதற்கு இரு அடிப்படைக் காரணங்களுண்டு. முன்பு விவசாயத்தில் ஆர்வம் காட்டிய விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் தொழிலாளிகளை விட மேம்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது அவர்கள் சமுதாயத்தில் தங்கள் நிலை தாழ்ந்து இருப்பதை உணர்ந்தனர். இரண்டாவதாக, பெரும் வாணிகத்தின் விளைவாக சமுதாயத்தில் பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகளாகவே இருந்தனர். பெரும்பான்மையான அவர்களது கோரிக்கைகள் நியாயமானதாகவே இருந்தது. விளைபொருள்களை அங்காடிகளுக்குக் கொண்டு செல்ல அவர்கள் ரயில்பாதைகளை நம்பியிருந்தனர். ஆனால் பொருட்களின் விலையில் பெரும் பகுதி பொருள்களைக் கொண்டு செல்வதற்காக செலவிடப்பட்டது.அவர்களது இரண்டாவது கோரிக்கையானது வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்களுக்கெதிராக இருந்தது. நிலங்கள், இயந்திரங்கள் மற்றும் உரங்களை வாங்குவதற்கு கடன் தேவைப்பட்டபோது அவர்கள் அதிக வட்டிக்குக் கடனை வங்கிதாரர்களிடமிருந்து பெற்றனர். மூன்றாவது கோரிக்கை வணிகர்களுக்கெதிரானதாக

இருந்தது. விளைபொருட்களுக்கு குறைந்த விலையும், இயந்திர உற்பத்திப் பொருட்களுக்கு அதிக விலையும் நிர்ணயம் செய்வதற்கு வணிகர்களும் தூண்டுகோலாக இருந்தனரென்று விவசாயிகள் கருதினர். தாங்கள் பல வழிகளில் சுரண்டப்படுவதாக அவர்கள் நம்பினர்.

புதிய கருவிகளும், புதிய விவசாய முறைகளும் உற்பத்தியைப் பெருக்கியது. எனினும் புதிய கருவிகளை வாங்குவதற்கு முடியாமல் விவசாயிகள் தவித்தனர். அதிக உற்பத்தியின் விளைவாக விவசாய பொருளின் விலை பெரும் வீழ்ச்சியுற்றது. மேலும் பொருட்களைவ ிற்பதற்காக அங்காடிகளுக்கு செல்ல பணம் ஏராளம் செலவிட வேண்டியதாயிற்று. பெருமளவில் பொருள்களை வியாபாரத் தலங்களுக்குக் கொண்டு சென்றவர்களுக்கு மட்டுமே தள்ளுபடி சலுகைகள் வழங்கப்பட்டது. தானியங்களின் தரத்தை நிர்ணயிப்பதிலும் அவைகளின் அளவை நிறுத்தலிலும் விவசாயிகள் எளிதாக ஏமாற்றப்பட்டனர். சுருங்கக்கூறின் உற்பத்தியாளர்கள் நியாயமான விலையைப் பெறாதபோது தரகர்களே பெரும்பான்மையான இலாபம் பெற்றனர்.

**கிரேன்ஜ் (The Grange)**

நியாயம் பெற பல காலமாக மேற்கொண்ட பயனற்ற போராட்டத்திற்குப் பின்னர் ‘கிரேன்ஜ்’ என்று சிறப்பாக அழைக்கப்பட்ட பண்ணை மனையை ஆலிவர் எச்.கெல்லி என்பவர் 1867ம் ஆண்டில் ஏற்படத்தினர். விவசாயிகள் மத்தியில் கூட்டுறவை வளர்த்தல், சிறந்த கல்வி வசதிகளை அளித்தல், சுற்றுலா, விரிவுரைகள், கூட்டங்கள் போன்ற சமுதாய பொழுதுபோக்கு வசதிகளை அளித்தல் போன்றவை இதன் ஒருசில நோக்கங்களாகும். இவ்வமைப்பு எவ்வளவு துரிதமாக வளர்ந்த தென்றால் 1874-ல் இதன் உறுப்பினர்கள் இல்லினாய்ஸ், விஸ்கான்சின் ஐயோவா, மின்னசோட்ட சட்டமன்றங்களில் ஆதிக்கம் செலுத்தினர்.

இக்கட்சியினரால் கட்டுப்படுத்தப்பட்ட சட்டமன்றங்கள் இரு வகைப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த முயன்றது. இச்சட்ட மன்றங்கள் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும், கிட்டங்களில் சேர்த்து வைப்பதற்கும் தேவையான கூலியை நிர்ணயிப்பதற்கும், சட்டங்களை இயற்றின. விவசாயிகள் மத்தியில் கூட்டுறவு இயக்கங்களை ஆரம்பித்தன. இச்சட்டஙகள், தலைமை நீதிமன்ற தீர்ப்புக்களையும் கூட்டு நிறுவனங்களின் எதிர்ப்புகளையும் மீறி விவசாயிகளுக்கு நன்மை பயத்தன.

புண்ணைக் காவலர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தோன்றிய வடமேற்குக் கூட்டு (Norht Western Alliance) விவசாயிகள் கூட்டு போன்ற தொழிற்சங்கங்கள் குறைந்த செலவில் போக்குவரத்தை ஏற்படுத்துதல் ரயில் பாதைகளை ஒழுங்குபடுத்துதல், நாணயத்தை அதிகமாகப் புழக்கத்திலிடுதல், வட்டியின்றி கடன்பெற வங்கியை சீர்திருத்தியமைத்தல், தொழிற்கூடங்கள் மீது அதிகக் கட்டுப்பாடுகளை விதிக்கும் வரிவிதிப்புக் கொள்கை ஆகியவற்றிக்காகப் போராடின. ஆனால் இவ்வமைப்புகளும் வலிமை இழந்தன.

**பாப்புலிஸ்ட் கட்சி**

விவசாயிகள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட இயக்கங்களில் பாப்புலிஸ்ட் கட்சி முக்கியமானதாகும். 1891-ல் சின்சின்னாட்டியில் தொடங்கிய

இக்கட்சிக்கு முதலில் மக்கள் கட்சி என்று பெயர். நெப்ராஸ்காவில் ஒமாஹா என்னுமிடத்தில் நடைபெற்ற மாநாட்டில் ''ஒமாஹா மேடை'' என்றழைக்கப்பட்ட தங்களது கோரிக்கைகள் அடங்கிய ஒரு சாசனத்தை வெளியிட்டனர். எல்லாப் பொருளாதார துறைகளிலும் அரசுக் கட்டுப்பாடுகள் விரிவாக்கப்பட வேண்டுமென இக்கட்சி கோரியது. ரயில் பாதைகள், தந்தி ஆகியவற்றை அரசே மேற்கொண்டு நடத்துதல், தபால் சேமிப்பு வங்கிகளை நிறுவுதல், அதிகப் பணத்தை புழக்கத்தில் விடுதல், நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல், வரையறுக்கப்பட்ட வருமான வரி முறையைப் புகுத்தல், நேரடி மக்களாட்சி முறைகளான மக்கள் முயற்சி மக்கள் வாக்கெடுப்பு முயற்சிகளை அறிமுகப்படுத்துதல் போன்றவைகளே இதன் முக்கியத் திட்டங்களாக இருந்தன. ஜனநாயகக் கொள்கைகளை கொண்டு விளங்கிய போதிலும் பாப்புலிசமானது யூத முதாலாளிகளுக்கெதிராக இனவெறுப்புக் கொள்கையை கையாண்டது. எனினும் வெள்ளையர் கறுப்பர்களிடையே ஒற்றுமையை வளர்க்கவும் நாட்டின் மூன்றாவது அரசியல் கட்சியாக தோன்றுவதற்கும் முயன்றது. தென்பகுதிகளிலும் பெரும் சமவெளிப்பகுதிகளிலும், ராக்கி மாநிலங்களிலும் இக்கட்சி செல்வாக்குப் பெற்றது. ஆனால் இக்கட்சி ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தது.

இருந்த போதிலும் விவசாயிகளின் ஆதரவினால் ''பாப்புலிசம்'' வளர்ந்தது. இக்கட்சியில் தலைசிறந்த தலைவர்கள் இக்னேஷியஸ்டோனல்லி, ஜேம்ஸ் வீவர், ஜெரிசிம்சன் போன்றவர்களாவார். முந்திய தலைமுறையில் அமெரிக்காவில் ''நோ நத்திங்ஸ்'' (Know nothings) என்ற கட்சி உருவாகியது. துங்களது கட்சியைப் பற்றி இக்கட்சியைச் சார்ந்தவர்களிடம் ஏதாவது வினா எழுப்பினால் அவர்கள் ''தங்களுக்கு ஒன்றும் தெரியாது'' என்று பதில் அளிப்பது வழக்கம். எனவே இக்கட்சியானது ஒன்று மறியாதவர் கட்சி என்றழைக்கப்பட்டது. இக்கட்சியின் முயற்சியால் ரயில் பாதைகளும் உள்நாட்டு வாணிகமும் பொது அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. வங்கியும், நாணயமும் சீர்திருத்தியமைக்கப்பட்டன. விவசாயிகளின் நலனைப் பேணுவதையே தேசிய கட்சிகளின் நோக்கமாக இருந்தது. தியோடர் ரூஸ்வெல்ட், உட்ரோவில்சன் போன்றோர் காலத்தில் அபிவிருத்திச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கு இவைகள் அடிகோலின.

பாப்புலிஸ்ட் கட்சியின் வீழ்ச்சிக்குப் பல காரணங்களுண்டு. அதனுடைய இடதுசாரித் திட்டங்களும் வெள்ளையர், கறுப்பர் ஒற்றுமைக் கொள்கையும் பொதுமக்களிடம் எவ்விதச் செல்வாக்கும் பெறவில்லை. தனியார் துறையில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த அமெரிக்கர், பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீட்டை விரும்பவில்லை. நீக்ரோக்களை வெள்ளையர்கள் வெறுத்ததால் இவர்கள் அரசியலில் வெள்ளையர்களோடு ஒத்துழைக்க மறுத்தனர். இரண்டாவதாக, கிழக்கு மாநிலங்களிலிருந்து எவ்வித ஆதரவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. மூன்றாவதாக, ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் இக்கட்சி செல்வாக்கிழந்தது. இறுதியாக, விவசாயிகளே இக்கட்சி மீது கொண்டிருந்த ஆர்வத்தை இழந்தனர். ரஷ்யாவிலும், அர்ஜென்டியனாவிலும் அறுவடை தவறியதால் தானியங்களுக்கு அதிக விலை கிடைத்தைக் கண்டு திருப்பதியடைந்தனர். இதனால்

தங்களது கோரிக்கைகளை எடுத்துரைக்க மூன்றாவது கட்சி தேவையற்றது என்று விவசாயிகள் கருதினார்கள்.

**தொழிலாளர் அமைப்பு**

முதலாளித்துவத்திற்கு எதிராக தங்களது நலனைப் பாதுகாக்க தொழிற் சங்கங்கள் அமைக்கப்படுவதன் அவசியத்தை தொழிலாளர்கள் உணர்ந்தனர். தொழிற்சாலைகளனைத்தும் தொழிலாளர்களின் நலனில் அக்கறை எதுவும் காட்டாது இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கின. இதனால் தொழிலாளிகள் தங்கள் நலனை காப்பதற்காக சங்கங்கள் அமைக்க விரும்பினர்.

தோழிற்கூடங்கள் இயந்திர மயமாக்கப்பட்டமையாலும் மூலதனம் ஒருங்கமைக்கப் பட்டமையாலும் தொழிலாளிகள் முதலாளிகளின் தயவில் இருந்து வந்தனர். வேலை நிபந்தனைகள் மிகவும் திருப்தியற்றதாகவே காணப்பட்டன. பெண்களும் குழந்தைகளும் சிரமமான வேலைகளில் அமர்த்தப்பட்டனர். வாரத்தில் ஆறு நாட்களிலும் நாள் ஒன்றுக்கு சராசரி 10 மணி நேரம் வேலை செய்தனர். பணியில் அமர்த்துவோர் தொழிலாளர்களுக்கு தொழிற்சாலகளில் பாதுகாப்பு அளிப்பதில் அக்கறைகாட்டாததால் விபத்துக்கள் அதிகம் ஏற்பட்டது. விபத்திற்குள்ளாக்கப்பட்டவர்களுக்கு எவ்வித, இழப்படுடம் கொடுக்கப்படவில்லை.

**சங்கங்களின் தோற்றம்**

உள்நாட்டுப் போரின் போது இருந்த கைவினைஞர் சங்கங்களைவ ிட 1870-ல் அதன் எண்ணிக்கை உயர்ந்தது. இதற்கிடையில் தொழிலாளர்கள் ஒரு தேசிய தொழிலாளர் சங்கத்தை 1866-ம் ஆண்டு தோற்றுவித்தனர். இது 1870-லிருந்து தொழிலாளிகளுக்கு ஊதிய உயர்வு, குறைந்த நேர வேலை, பணிப்பாதுகாப்பு ஆகியவற்றை பெற்றுத்தர இயலாததாலும், மக்களின் ஆதரவின்மையாலும் அவை நலிவுற்றன.

தேசிய தொழிற்சங்கத்தின் வீழ்ச்சிக்குப்பின், ‘‘உழைப்பு உயர்நிலை வீரர்கள்’’ (Kings of labour) செல்வாக்குப் பெற்றனர். ஓர் இரகசியக் குழுவாக 1869-ல் பில்டெல்பியாவில் அமைக்கப்பட்டு பௌடர்லி (Powderly) என்பவரின் தலைமையின் கீழ் தொழிற்சங்கங்களுக்குப் பதிலாக பெரியதோர் அமைப்பு ஏற்படவேண்டுமென இது விரும்பியது. தோழிலாளிகள் அனைவரும் இதில் உறுப்பினராக வேண்டும். நீக்ரோக்களும் வெள்ளையர்களும் திறமை பெற்றோரும், திறமையற்றோரும், ஆண்களும், பெண்களும் இதில் இடம் பெறவேண்டும். தொழிலை அடிப்படையாகக் கொள்ளாது, வாழும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்களின் சிறுகிளைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. சிறுகிளைக் குழுக்கள் பிரதிநிதிகளை மாவட்டக் குழுக்களுக்கு அனுப்ப, அவைகள் பொது குழுவிற்கு பிரதிநிதிகளை அனுப்பின. துாங்கள் உருவாக்கிய செல்வத்தை முழுமையாக அனுபவிக்கவும், தங்கள் அறிவு, நல்லொழுக்கப் சமுதாயப் பண்புகளை வளர்க்கத் தேவையான ஓய்வைப் பெறவும் இச்சங்கம் விரும்பியது. இச்சங்கத்தின் கொள்கைகள் பலரை கவர்ந்தன. ஆனால் 1866-ல் சீராக்கப்பட்ட வணிக அமைப்பு மற்றும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, எட்டு மணிநேர வேலையை பொதுவாகப் பின்பற்ற மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றது. அவ்வமைப்பும் வீழ்ச்சியடைந்தது.

ஊழைப்பு வீரர்கள் அமைப்பு செல்வாக்கிழந்த பிறகு சாமுவேல் காம்பர்ஸ் என்பவர் 1881-ல' பிட்ஸ்பர்க்கின் அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு ஒன்றை தோற்றுவித்தார். இச்சங்கமானது தனித்தியங்கும் கைவினைச்சங்கங்களின் ஆதரவைப் பெற்றிருந்தது. வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலையையும் நாள் ஒன்றிற்கு எட்டு மணி நேர உழைப்பையும், சிறந்த ஊதியத்தையும் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை தடைசெய்யவும் இது கோரியது. இவைகளைப் பெற வேலை நிறுத்தம் புறக்கணிப்பு ஆகியவை அடிக்கடி கையாளப்பட்டன. போராட்டத்தாலும் கூட்டு உடன்பாட்டாலும் இவ்வமைப்பானது நாள் ஒன்றிக்கு எட்டுமணிநேர வேலை என்ற முறையை பல ஆலைகளில் ஏற்றுக் கொள்ளச் செய்தது. தொழிலாளர் சங்கத்தில் சேரக்கூடாது என்று தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்திய நேர்மையற்ற தொழிலாளர் ஒப்பந்தங்களை இது ஒழித்தது.

தொழிலாளர் நிறுவனங்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள பொதுவாக நிறுத்தங்களையும் புறக்கணிப்பையும்(Boycott) மேற்கொண்டனர். ஆனால் இவ்வேலை நிறுத்தம் கூட்டாட்சிப் படைகளால் நசுக்கப்பட்டது. முதலாளிகள் தொழிலாளர்களைப் பல வகையில் துன்புறுத்தினர். தோழிற்சங்கங்களின் முயற்சிகளை முதலாளிகள் முறியடித்தனர்.

**கூட்டு வணிக நிறுவன எதிர்ப்புச் சட்டங்கள்**

விவசாயிகள், தொழிலாளர்கள் மத்தியில் வளர்ந்த அதிருப்தியும் கழகங்கள் மற்றும், கூட்டு வாணிப நிறுவனங்களுக்கு எதிராக அவர்கள் மேற்கொண்ட போராட்டங்களும், பெரும் வணிக நிறுவனங்களின் செயல் முறையில் தலையிட கூட்டாட்சியையும் மாநில எதிர்ப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

**கூட்டுவணிக நிறுவனத்தடைச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கான காரணங்கள்**

விவசாயிகளும், தொழிலாளர்களும் சமுதாய சீர்திருத்தவாதிகளும் கூட்டு வணிக அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென அரசைக் கட்டாயப்படுத்தினர். கூட்டு வணிக அமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காகப் போராட முற்றுரிமை எதிர்ப்புக் கட்சியானது அமைக்கப்பட்டது. பொருளாதார அதிகாரம் குவிக்கப் படுதலைப் பற்றியும் விலையேற்றத்தைப் பற்றியும் அதிக அக்கரை கொண்ட அவர்கள் விலையில் வீழ்ச்சியை ஏற்படுத்தவும், உற்பத்தியாளர்கள் மத்தியில் போட்டியை வளர்க்கவும், அரசுக்கட்டுப்பாடு நிலைநாட்டப்பட வேண்டும் மென்றும் வற்புறுத்தினர். போராட்டத்தின் விளைவாக மாநில அரசுகள் பெரும் வாணிபங்களை ஒழுங்கபடுத்தும் நோக்கத்தோடு தானியக் களஞ்சியக் கட்டணம் ரெயில்பாதைக் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயம் செய்தன. ஆனால் நீதித் துறையானது மாநில நடவடிக்கைகளைச் செல்லாதாக்கிற்று. 1886-ம் ஆண்டு வாபஷ் வழக்கில் (Wabask case) தங்களது எல்லைகளுக்கப்பால் பொருள்களை கொண்டு செல்வதற்கான கூலியை நிர்ணயிப்பதற்கு மாநிலங்களுக்குரிமை இல்லையென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. மேலும் 188, ம் ஆண்டின் மின்ன சோட்டா ரேட் வழக்கில் மாநிலங்கள் நிர்ணயித்த கூலி நியாயமானதா என்பதை மன்றமே தீர்மானிக்க வேண்டுமென கூறிற்று. மாநிலங்களின்

ஒழுங்குமுறைக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்புகள் அமைந்தமையால், கூட்டாட்சி சட்டமன்றங்கள் சட்டமியற்ற வேண்டியதின் அவசியத்தைத் தலைவர்கள் வற்புறுத்தினர். ஆதற்காக இரு குழுக்கள் அமைக்கப்பட்டன. கட்டணங்களைக் குறைக்க வேண்டுமாயின், தனியார் ரயில் போக்குவரத்து நிறுவனங்களுக்குப் போட்டியாக தேசிய அரசு ரயில்பாதைகளை நிர்வகிக்க வேண்டுமென 1874-ம் ஆண்டில் வின்டம் குழு கூறியது. மாநிலங்களுக்கிடையிலான வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த, காங்கிரஸ் சட்டங்களை இயற்ற வேண்டுமென குல்லாம் குழு கருத்துத் தெரிவித்தது.

அதன்படி 1887-ல் உள்நாட்டு வணிகச் சட்டம் இயற்றப்பட்டது. ரயில்வே துறைகள் தங்களது கட்டணங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டுமென்றும் இக்கட்டணம் நியாயமானதாக இருக்க வேண்டுமென்றும் இச்சட்டம் கூறியது. இச்சட்டமானது பல்வேறு ரயில் பாதைகளுக்கிடையிலான சூதாட்ட்தன்மை கொண்ட ஒப்பந்தங்களையும் பொருள்களைக் கடத்துபவர்களுக்கு தள்ளுபடி கொடுத்தலையும், அதைத் தொடர்ந்து ஏற்படுகின்ற கட்டண வேறுபாட்டினையும் தடை செய்தது. ரயில் பாதைகளின் முறையீடுகளை விசாரிக்க ஐந்து உறுப்பினர் கொண்ட ஓர் உள்நாட்டு வணிகக் குழு அமைக்கப்பட்டது. உள்நாட்டு வாணிபம் மத்திய அரசின் அதிகார எல்லைக்குட்பட்டிருந்ததால் மாநிலங்களால் அதனை ஒழுங்கு படுத்த முடியவில்லை.

**ஷெர்மன் கூட்டு வணிகத் தடைச் சட்டம் (Sherman Anti Trust Act)**

உள்நாட்டு வாணிகச் சட்டம், ரயில் பாதை கம்பெனிகளின் முறையற்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தவறியது. ஆகவே 1889-ல் செனட்டரான ஷெர்மன் கூட்டு வணிக அமைப்பின் செயல்முறையை ஒழுங்குப்படுத்தும் நோக்கத்தோடு கூட்டு வணிக நிறுவனத்தடை மசோதாவைக் கொண்டு வந்தார். அது நிறைவேற்றப்பட்டு அவர் பெயராலே ஷெர்மன் கூட்டு வணிக நிறுவனத் தடைச் சட்டம் என்றழைக்கப்பட்டது. இச்சட்டத்தின் ஷரத்துக்கள் பின்வருமாறு:-

கூட்டு நிறுவனம் அமைத்தல் என்ற நோக்கோடு செய்யப்படும் ஒவ்வொரு ஒப்பந்தமும் சட்டத்திற்கு புறம்பானது. 2) வாணிபத்தில் ஏகபோக உரிமையை நிலைநாட்டுபவர்களுக்கு அபராதம் அல்லது சிறைத் தண்டனையளிக்கப்படும். 3) வாணிபத்தைக் கட்டுப்படுத்தும் எந்த ஒரு ஒப்பந்தமுமு் சட்டத்திற்குப் புறம்பானது. 4) வாணிபத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனங்களை கூட்டாட்சி அதிகாரிகள் கலைக்கலாம். 5) இச்சட்டத்தின் ஷரத்துக்களை மீறுகின்றவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் சர்க்கியூட் நீதிமன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டன.

ஆனால் நாளடைவில் நிர்வாகத் தன்மையில் ஒழுங்கையும் மாற்றத்தையும் கொண்டுவர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததின் விளைவாக ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் வாணிகத் தொழிற்துறை ஒன்றையும் கூட்டு நிறுவனக் கழகம் ஒன்றையும் 1903-ல் உருவாக்கினார். விசாரணை செய்து வாணிகக் கூட்டுகள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இவ்விருதுறைகளுக்கும் கொடுக்கப்பட்டது. 1903-ல் இயற்றப்பட்ட எல்க்கின் சட்டம் (Elkin’s Act) ரகசியத் தள்ளுபடி கொடுத்தலும் அதனை ஏற்றுக் கொள்ளுதலும் சட்டத்திற்குப்

புறம்பானவை எனக் கூறிற்று. வடபகுதி காப்பு கம்பெனிக்கும் (Northern Securities Company) ஐக்கிய நாடுகளுக்குயிடயிலான 1904-ம் ஆண்டின் வழக்கில் தலைமை உயர் நீதிமன்றம் வாணிகத்திற்க்குத் தடையாக பங்குதாரர்கள் கம்பெனி (Holding company) வணிகக் கூட்டு ஒன்றை அமைத்துள்ளது எனத் தீர்ப்பு வழங்கியது இத்தீர்ப்பால் ஊக்கம் பெற்ற ரூஸ்வெல்ட்டும், டாப்ட்டும் (Taft) ஷெர்மன் கூட்டு வணிக நிறுவனத் தடைச் சட்டத்தை செயல்படுத்தி அநேகக் கம்பெனிகளுக்கெதிராக நடவடிக்கை எடுத்தனர். ஜனாதிபதி வில்சனும் முற்றுரிமையை ஒழிக்க பெரு முயற்சியை மேற்கொண்டார். நேர்மையற்ற போட்டியைத் தடைசெய்யவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும் தொடர்ந்து பல சட்டங்கள் இயற்றப்பட்டன. பெரும் வாணிபங்களை எப்போதும் கண்காணித்து அவைகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அரசின் உறுதியான திட்டத்தின் அடிப்படையில்தான் கூட்டு வணிக நிறுவனத் தடைச் சட்டத்தின் வெற்றி அமைந்திருந்தது.

## இன ஒதுக்கல் கொள்கையும் ஏகாதிபத்தியக் கொள்கையும்

மேற்கிந்திய இனத்தவர்களின் நலன்களுக்கு எதிராக விவசாய, தொழிலக வளர்ச்சிக் காலம் விளங்கியது. கிழக்கில் வாழ்ந்த கிளர்ச்சியுள்ளம் படைத்த மக்கள் ஐரோப்பாவிலிருந்து குடிபெயர்ந்தோர் ஆகியோர் இந்தியர்களுடைய நிலப்பகுதிக்குள் நுழைந்து, அவர்களுடைய உடமைகளை அபகரித்து, ஏழ்மை நிலையை அடையச் செய்தனர்.

**இந்தியர் அடைந்த இன்னல்கள்**

மிஸிஸிப்பி நதியின் மேற்குப் பகுதியிலுள்ள இந்திய நிலப்பகுதிகளில் கிழக்குப் பகுதியிலிருந்து விரட்டப்பட்ட மக்களும் ராக்கீஸ் மலைப் பகுதியைத் தங்கள் உறைவிடமாகக் கொண்டவர்களும் வசித்து வந்தனர். இப்பகுதிகளில் வாழ்ந்து வந்த இந்தியர்களில் மிக முக்கியமானவர்கள் சியாக்ஸ், அரபாகோ, செயின்னி, நெஸ்பெரீஸ் அப்பாசி ஆகியோர் ஆவர். அவர்கள் மிஸிஸிப்பி சமவெளிப் பகுதியிலிருந்தும், பசிபிக் கடற்கரைப் பகுதியிலிருந்தும் வந்த அமெரிக்கர்களுடன் போரிட்டுத் தோல்வியடைந்தனர்.

துங்களுடைய சமயச் சட்டங்களுக்கெதிராக அமெரிக்கர்கள் பிறநாட்டு நிலப்பகுதிகளை கைப்பற்ற எண்ணியதால் ஏற்பட்ட விளைவே இப்பிரச்சனைக்கான காரணமாகும். இந்தியர்களுடைய நிலப்பகுதிகளைக் கவர வேண்டுமென்று விரும்பிய அமெரிக்கர்கள், கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த மக்களை அவர்களுடைய பூர்வீக விரோதிகள் வாழ்ந்த துாரமேற்குப் பகுதிக்கு விரட்டியடித்தனர். இப்பூர்வீக இனத்தவர் அப்பகுதியினை இந்திய நிலமாக வேணிப் பாதுகாக்க முடியுமென்ற நம்பிக்கையுடன் இருந்தனர். ஆனால் அவர்களுடைய நம்பிக்கையை குடியேறிய வெள்ளையர்கள் முறியடித்தனர். தங்கம், எண்ணெய் மற்றும் தாதுக்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சுரங்கத் தொழிலாளர்கள் பூர்வீக இனத்தவரின் கிராமங்களை அழித்தனர். இதற்கிடையில் கூட்டாட்சி அரசு, ரயில் பாதைகளை அமைக்க இந்திய நிலப்பகுதிகளில் பெரும்பகுதிகளை ரயில்பாதைக் கம்பெனிகளுக்கு இலவசமாகக் கொடுத்தது. இந்நடவடிகடகைகள்

கொடுங்கோன்மையானதாகவும் இன்னல் இழைப்பனவாகவும் இருந்தன. அதனால் இந்திய நாடுகளின் நிலப்பகுதிகள் அபகரிக்கப்பட்டன. அரசியல் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டன.

வெள்ளையர், இந்தியர் போராட்டத்திற்கு வேறுபல காரணங்களும் உண்டு. உள்நாட்டுப் போர் அமெரிக்க மக்களுக்கும் பூர்வீக இந்தியர்களுக்கிடையே உள்ள வெறுப்புணர்ச்சியை நிரந்தரமாக்கியது. உள்நாட்டுப் போருக்கு பின்பும் ஐக்கிய நாடுகள் இந்தியர்களை தொடர்ந்து துன்புறுத்தி வந்தன. இந்தியர்கள் வளர்த்த மிருகங்களை கொன்று அழித்தனர். இதனைத் தொடர்ந்து தாங்களும் அழிக்கப்பட்டு விடுவோம் என்று அஞ்சி, இந்தியர்கள் அமெரிக்கரை எதிர்க்க முனைந்தனர்.

**போரினால் ஏற்பட்ட அழிவு**

கான்சாஸ், நெப்ராஸ்காட் பகுதியிலுள்ள இந்தியரை கைதி முகாம்களில் அடைத்து வைத்துவிட்டு, அவர்களுக்குரிய நிலப்பகுதிகளைக் கைப்பற்ற அமெரிக்க முற்பட்டபோதுதான் செய்யீனிஅரபாஹோ (Cheyennee-Arapaho war) என்ற போர் ஏற்பட்டது. இது 186-ம் ஆண்டியிலிருந்து 1864 வரை நடைப்பெற்றது. அமெரிக்கப்படைகளின் ஆதரவோடு சுரங்கத் தொழிலாளாகள் கோலராடோவிலுள்ள செய்யீனி-அரபாஹோ இனத்தவர்க்குச் சொந்தமான நிலப்பகுதிகளைக் கைப்பற்றினர். எனவே இந்தியர் பாதகாப்கைத் தேடி சான்ட் சிரீக்கிலுள்ள லையான் கோட்டையை அடைந்தனர். ஆனால் அங்கும் அவர்களை அமெரிக்கப் படைகள் சுட்டு வீழ்த்தினர்.

சூன்ட் கிரீக் படுகொலையினால் வெகுண்டு தங்களது நிலப்பகுதி முழுமையும் கவரப்பட்டு விடும் என்று எண்ணி சியூக்ஸ் இந்தியர்கள் ரெட் க்ளௌவுட் (Red claud) என்பவரின் தலைமையில் மான்டானாவோடு அமெரிக்கர்கள் கொண்ட தொடர்பைத் துண்டித்தனர். எனவே சியூக்ஸ் போர் (1865-1867) ஏற்பட்டது. இப்போரில் இவ்வினத்தவர் ஒடுக்கப்பட்டு பிளாக் ஹில்ஸ் (Black Hills) என்ற பகுதிக்கு விரட்டப்ப்டனர். இந்திய விவகாரங்களை ஆராய்ந்து ஒரு புதிய இந்தியக் கொள்கையை உருவாக்குவதற்கு ஆலோசனை வழங்க காங்கிரஸ் குழு ஒன்றை நியமித்தது. அக்குழுவின் பரிந்துரையின் பேரில் பழங்குடியனருக்கென்று தனி இடங்களை ஒதுக்க அரசு தீர்மானித்தது. இதன்படி தென் பகுதியினத்தவர்களும் கிழக்குப் பகுதியில் எஞ்சியவர்களும் ஒக்லஹோமா என்ற தனித்த பகுதிக்கு கட்டாயமாகத் துரத்தப்பட்டனர். பிற இனத்தவருக்கும் ஒதுங்கி வாழ இடங்கள் உருவாக்கப்பட்டன. நாளடைவில் எல்லா சுதந்திர இந்தியர்களும் வளமற்ற பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுடைய நிலப்பகுதிகளனைத்தும் அமெரிக்கரால் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இப்வொதுக் கிடங்கிளிலும் கூட அமைதியாக உயிர் வாழ இந்தியர்களை அனுமதிக்கவில்லை. தங்கமும், எண்ணையும் கண்டுபிடிக்கப்பட்டதால் அமெரிக்கர் இப்பகுதிகளுக்கு வந்து இந்தியர்களை தாக்கினர். இடாஹோவின் நெஸ் பெர்ஸ் ( Nez Perce) இனத்தவர்தங்கள் இருப்பிடங்களைவ ிட்டுவிட்டு பாலைவனப் பகுதிக்குச் செல்ல மறுத்ததால் 1877-ல் அமெரிக்கப்படை அவர்களை தாக்கி அவ்வினத்தினரை அழித்தது. அமெரிக்கரின்

மற்றொரு படை அரிஸோனா, நியூ மெக்ஸிகோ பகுதிகளிலுள்ள இந்தியர்களைத் தாக்கி அவர்களை ஒக்லஹோமாவின் ஒதுக்கிடத்திற்கு அனுப்பியது.

1890-ல் ஐக்கிய நாடுகள் பூர்வீக இனத்தவர்களுக்கு எதிராக இறுதிப்போரில் ஈடுபட்டது. செல்வாக்கிழந்து இருந்த எஞ்சிய இந்தியர்கள் தீவிர சமயப் பற்றாளர்களாக மாறி, தங்களது பரம்பரை ஆவிநடனம் வழியாக புரட்சியை ஏற்படுத்த முயன்றனர். ஆவிநடன சமயக் கொள்கையானது மேற்குப் பகுதிக்கும் பரவி, சியுக்ஸ் பிரிவினரில் பலரை மதம் மாற்றியது. இதனால் கூட்டாட்சிப் படையினர் ஒதுக்கிடங்களுக்கு சென்று இந்தியர்களை சுட்டனர்.

**ஒதுக்கிங்களின் அழிவு**

1900-ம் ஆண்டிற்குள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியர்களிடமிருந்து எல்லா நிலப்பகுதிகளையும் வன்முறையில் கைப்பற்றியது. இதனால் இந்தியர்கள் ஒதுங்கி வாழ்தல் என்ற அடிமைமுறையில் வாழ்ந்து வந்தனர். இது ஜெர்மானிய நாசிகளின் அரசியல் கைதிகளின் முகாமிற்கும் தென் ஆப்பிரிக்க இனவெறியர்களின் ஒதுக்கிட முகாமிற்கும் அடிப்படையாக அமைந்தது.

நாளடைவில் ஒதுக்கிடங்களையும் பொது இடங்களாக மாற்ற அமெரிக்க ஐக்கிய நாடுகள் தீர்மானித்தது. பூர்வீக இனத்தவரின் உரிமைகளை அங்கீகரிக்க மறுத்தது. இக்கொடிய கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ந்த பல நடவடிக்கைகள் மனதாபிமானமற்ற முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு, இந்தியர்களின் உடமைகள் என ஒதுக்கிடங்கள் கூடப் பறிக்கப்பட்டன. 1862-ல் இயற்றப்பட்ட “ஹோம் ஸ்டெட் சட்டம் (Home Stead Act) 160 ஏக்கர் பொது நிலத்தை 21 வயதுக்கு மேற்பட்ட அமெரிக்க குடிமகன் ஒருவனுக்கு இலவசமாக கொடுத்தது. இவ்வாறாகக் கொடுக்கப்பட்ட பொது நிலமானது இந்தியர்களுக்குச் சொந்தமான நிலத்தைத் தவிர வேறு எதுவுமில்லை. 1887-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட “டாவெஸ் சிவராலிட்டி (Dawes Severality) சட்டமானது பூர்வீக இனத்தவரின் பொது நில உடமை உரிமையை ரத்து செய்யது 1887-ம் ஆண்டில் அலாட்மென்ட் சட்டம் (Allotment Act) பெ ரும்பான்மையான ஒதுக்கப்பட்ட நிலப்பகுதிகளை எஞ்சியவை என எதேச்சதிகாரமான முறையில் அறிவித்து, அவைகளை வெள்ளையர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தது. சிறிய துண்டு நிலப்பகுதிகளை ஏற்றுக் கொள்ளும்படி பூர்வீக மக்கள் கட்டாயப்படுத்தப் பட்டனர். 1889-ல் ஒரு முன்னறிவிப்பின் பேரில் 50,000 வெள்ளையர்கள் ஒக்லஹோமாவிற்குள் புகுந்து இந்தியர்களின் நிலப்பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். அதோடு எப்போதாவது சுரங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டாலோ சாலை ஒன்று அமைக்கப்பட்டாலோ, ரயில் பாதை ஒன்று ஏற்படுத்தப்பட்டாலோ தங்களிடமிருந்த சிறிதளவு துண்டு நிலப்பகுதிகளையும் ஒப்படைக்கும்படி இந்தியர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். இவ்வாறாக 1900-ம் ஆண்டில் இந்திய நாடுகளென்று எதுவுமில்லையென்று ஆகிவிட்டது.

**ஏகாதிபத்தியம் விரிவடைதல்**

இந்தியரை வெளியேற்றிய பின் புதிய குடியேற்றங்களையும் நிலப்பகுதிகளையும் பெற அமெரிக்க ஐக்கிய நாடுகள் வெளிநாடுகளில் கவனம் செலுத்தியது. தொடர்ந்து எழுந்த பல

நிகழ்ச்சிகள் அமெரிக்க அதிகாரம் விரிவடைதலின் தேவையையும் சாத்தியத்தையும் எடுத்தியம்பின. தோழில் வளர்ச்சியின் காரணமாக வெளிநாட்டு வாணிபம் பெருமளவில் வளர்ந்தது. வளர்ச்சி பெறாத நாடுகள் கச்சாப் பொருட்களை வழங்குமிடமாகவும், அங்காடிகளாகவும் பயன்படும் வாய்ப்பிருந்தன. இக்காலத்தின் ஏகாதிபத்தியப் போக்கின் வளர்ச்சி பிற நாடுகளை ஆக்கிரமிப்பதைக் கூட நியாயப்படுத்தியது. அவை பிற வல்லரசுகளின் ஆதிக்கத்தில் விழுந்து விடாதபடி தடுக்க இத்தலையீடு தேவையான ஒன்றாகவே இருந்தது. இரண்டாவதாக அமெரிக்க முதலாளிகள் வெளிநாடுகளில் குறிப்பாக இலத்தீன் அமெரிக்காவில் தங்கள் பணத்தை முதலீடு செய்தனர். உள்நாட்டு எதிர்ப்பின் காரணமாக ஏதாவது துன்பங்களை எதிர்நோக்கிய போது அவர்கள் கூட்டாட்சியின் பாதுகாப்பை நாடினர். மூன்றாவதாக, இந்திய நிலப்பகுதிகள் அனைத்தையும் ஒன்றினைத்தபின் அமெரிக்கர்கள் ஐரோப்பிய வல்லரசுகளின் முன் மாதிரியை கருத்திற்கொண்டு தங்கள் நாட்டின் எல்லைக்ளுக்கப்பாலும் தங்கள் ஆதிக்கத்தை விரிவடையச் செய்ய விரும்பினர். ஏகாதிபத்திய உணர்வை மக்களிடம் வளர செய்ய எழுத்தாளர்களும், அரசியல்வாதிகளும் உதவியாயிருந்தனர். ஆங்கிலோ-சாக்சனியர் இங்கிலாந்து நாட்டிலிருந்தாலும் சரி அல்லது அமெரிக்க நாட்டிலிருந்தாலும் சரி, அவர்கள் பிற இனத்தவரைவிட மேம்பட்டவர்கள். அவர்கள் உலகின் பின்தங்கிய மக்களுக்கு தங்களது நாகரிகத்தினை பற்றி எடுத்து கூறும் கடமை பெற்றுள்ளனரென்று ‘நமது நாடு’ என்ற புத்தகத்தின் வழியாக ரெவரெண்ட் ஜோசையா ஸ்டிராஸ் என்பவர் அறிவித்தார். தேசியப் பெருமையை மேம்படுத்த பெருங்கடற்படை ஒன்றை அமைத்தலின் அவசியம் பற்றியும் கடற்படைத் தளங்கள் நிறுவுதலின் தேவையைப் பற்றியும் ஆல்பிரட் மோஹன் என்பவர் தனது எழுத்துக்கள் வழியாக எடுத்தியம்பினார். இறுதியில் கிறிஸ்துவ சமயப்பரப்பு நிறுவனங்கள் வெளிநாடுகளிலும் அமெரிக்காவின் அதிகாரம் விரிவாக்கப்படவேண்டுமென வேண்டினர். மதமாற்றம் செய்வதன் மூலம் அமெரிக்கப் பண்பாடு பரவும் என்று அவர்கள் கூறினர். ஆலாஸ்காவை விலைக்கு வாங்கியதால், அமெரிக்காவின் எல்லைப் பசிபிக் வரை விரிவடைந்தது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆர்வம் கரிபியன் பகுதியில் வளர வேண்டுமாயின் ஸ்பெயின் மீதான வெற்றி இன்றியமையாததாகக் கருதப்பட்டது.

**அலாஸ்கா வாங்கப்படல்**

இந்தியர்கள் வாழ்ந்த வட அமெரிக்காவிலுள்ள அலாஸ்கா என்ற பகுதி ரஷ்யாவின் அமெரிக்க கம்பெனியால் நிர்வாகம் செய்யப்பட்டது. இக்கம்பெனி திவாலா ஆகியது. ஆமெரிக்காவில் தங்களுடைய ஏகாதிபத்திய முயற்சிகளில் தோல்வியடைந்த ரஷ்யா, அலாஸ்காவை இங்கிலாந்து கைப்பற்றி விடுமோ என்று அஞ்சி, அதனை 7,200,000 டாலருக்கு அமெரிக்காவிற்கு விற்றது.

**கியூபா பிரச்சனை**

“ஆண்டைல்ஸ் முத்துக்கள்” (Pearl of Antilies) என்றழைக்கப்பட்ட செல்வச் செழிப்பான கியூபா தீவும், பியர்ட்டோரிக்கோவும் பதினெட்டாம் நூற்றாண்டில் புதிய உலகில் பரந்துபட்ட ஸபானிய பேரரசின் எஞ்சிய பகுதிகளாகும். இத்தீவின் பூர்வீக இனத்தவர் காரிப்

(Carib) என்ற இந்திய இனத்தவராவார்கள். ஆனால் இவர்களனைவரும் இப்பகுதியிலிருந்து துரத்தப்பட்டனர். எனினும் இவர்களது பெயராளலேயே கரிபியன் கடல் என்று அழைக்கப்படுகின்றது. 1848-ல் ஜனாதிபதி போல்க் இப்பகுதியை 10 கோடி டாலருக்கு வாங்க முயன்றார். ஆனால் ஸ்பெயின் இதனை விற்க மறுத்து விட்டது. ஜனாதிபதி பியர்ஸ் இத்தீவை ஐக்கிய நாடுகளோடு இணைத்து விடவேண்டுமென விரும்பினார். 1854-ம் ஆண்டின் ஆஸ்டெண்ட் அறிக்கையின் (Ostend Manifesto) மூலம் ஆயுத வலிமை வழியாக கியூபாவை உடமையாக்கும் உரிமையை அமெரிக்க பெற்றிருப்பதாக அமெரிக்கத் தூதர்கள் உறுதியாக அறிவித்தனர்.

உளள்நாட்டுப் போருக்குப்பின் ஐக்கிய நாடுகள் இத்தீவு மீது தனது பொருளாதார வலிமையை நிலைநாட்டியது. இத்தீவின் முக்கிய உற்பத்திப் பொருளான கரும்பு, புகையிலை போன்றவற்றிற்கு தேவை அதிகமாகியிருந்தது. 1868-ல் ஏற்படுத்தப்பட்ட கியூபா புரட்சி அமெரிக்க வர்த்தகத்தைப் பாதித்தது. ஆனால் கொடுங்கோன்மையுடன் கூடிய வலுவற்ற ஆட்சி நீடிக்கும் வரை இத்தகைய நெருக்கடிகளும் பொருளாதார பாதிப்புகளும் நீடிக்குமென அமெரிக்க வர்த்தகர்கள் எண்ணினர்.

கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பின் ஸ்பெயின் அம்மக்கள் மீது அதிக வரிப்பளுவைச் சுமத்தியது. அதோடு அமெரிக்க ஐக்கிய நாடுகள் சீனியைத் தடையில்லாப் பண்டங்களின் பட்டியலிருந்து நீக்கி அதன் மீது அதிக வரியை விதித்தது. இதன் வளைவாக 1895-ல் மறுபடியும் கிளர்ச்சி ஏற்பட்டது. கிளர்ச்சியாளர்கள் கொரில்லாப் போர்முறையை கையாண்டு மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பெருமளவில் அநியாயமாக தேசம் விளைவித்தனர். இதனால் அமெரிக்க வாணிபம் பாதிக்கப்பட்டது. அதோடு இலத்தீன் அமெரிக்காவில் ஐரோப்பிய குடியேற்றக் கொள்கை வலுவிழந்ததால் தனது செல்வாக்கு விரிவடையுமென்று ஐக்கிய நாடுகள் எண்ணியது.

எனினும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளரான ஜனாதிபதி கிளிவ்லாண்ட் தலையிட மறுத்தார். ஆனால் இத்தகைய அநியாயப் படுகொலைகள் தொடர்ந்து நிகழ்ந்ததால் அமெரிக்கா தலையிடும் என எச்சரித்தார். ஆனால் கிளிவ்லாண்டிற்குப் பின் வந்த வில்லியம் மாக்கின்லி ஆரம்பத்தில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண சமாதான வழிகளை ஆதரித்தார். ஆனால் இரு நிகழ்ச்சியின் விளைவாக இறுதியில் அவர் போரிடத் தீர்மானித்தார். வாஷிங்டனில் ஸ்பானிய அமைச்சரான டியூபை டிலோம் (Dupuy Delome) என்பவரின் தனிப்பட்ட கடிதம் ஹவானா அஞ்சல் நிலையத்திலிருந்து திருடப்பட்டு “தி நியூ யார்க் ஜெர்னல் (The Newyork Journal) என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்டது. ஜனாதிபதி மாக்கின்லே அதில் சூதுமதி கொண்ட அரசியல்வாதிகளைப் பற்றி எழுதியிருந்தார். இதன் விளைவாக டிலோம் ராஜினமா செய்த போதிலும் இந்நிகழ்ச்சி மக்களிடத்தில் ஆத்திரத்தைக் கிளறியது. 1898-ம் ஆண்டு அமெரிக்கப் போர்க் கப்பலான மெயின் குண்டு வெடிப்பினால் கியூபாவிலுள்ள ஹவானா துறைமுகத்தில் மூழ்கியது. யார் குண்டு வெடித்தார்கள் என்று தெரியவில்லை. எனினும் ஸ்பெயின் மீது பழிச்சுமத்தப்பட்டது. உடனடியாக மக்களை இராணுவ முகாம்களில் பிடித்து வைப்பதை

நிறுத்த வேண்டுமென்றும் ஸ்பெயினுக்கு மாக்கின்லே இறுதி எச்சரிக்கை ஒன்றை விடுத்தார். ஸ்பெயின் அரசியார் அமெரிக்க நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டார். எனினும் தனது செல்வாக்கை நிலைநாட்ட மாக்கின்லே போரிடத் திட்டமிட்டார். அதன் விளைவாக போர் மூண்டது.

**போரின் போக்கு**

போர்த் தொடங்கியதும் தியோடர் ரூஸ்வெல்ட்டின் ஆணையின்படி கடற்படை உதவிச் செயலாளரான காமடோர் ஜார்ஜ் டிவே (Commodore George Deway) பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள ஸ்பானிய கடற்படையைத் தாக்கினார். இதற்கிடையில் அட்மிரல் சாம்சனின் தலைமையிலான அட்லாண்டிக் கடற்படை கியூபா கடற்கரையை முற்றுகையிட்டது. இத்தீவைப் பாதுகாக்கச் சென்ற ஸ்பானிய போர்க் கப்பல்கள் சாண்டியாகோவில் நடைபெற்ற போரின் போது நாசமாக்கபட்டன. தயார் நிலையில் இல்லாததால் தரைப்படைகள் அவதியுற்றனர் எனினும் அவைகள் சான் ஜுவான் ஹில் (San Juan Hill) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் வெற்றி பெற்று, தலைநகரான சாண்டியாகோவைக் கைப்பற்றின. சாண்டியாகோ வீழ்ச்சியுற்று நான்கு நாட்களுக்குப் பிறகு ஓர் அமெரிக்கப்படை போர்டேரிக்கோவிற்கு வந்து எவ்வித எதிர்ப்புமின்றி இத்தீவைக் கைப்பற்றியது.

**ஐரோப்பிய ஆதிக்கங்களின் நிலை**

குடியரசு நாட்டிடம் ஸ்பெயின் தோல்வியுற்றால் மன்னராதிக்க நாடுகளை அது அச்சுறுத்தும் என்றும், ஜெர்மன் செல்வாக்கை வளர்க்க வேண்டுமென்றும் கெய்சர் ஸ்பெயினை ஆதரித்தார். ஆனால் கிரேட் பிரிட்டன் ஐக்கிய நாடுகளுக்கு ஆதரவு அளித்தது. மறைமுகமாக இப்போர் இவ்விரு ஆதிக்கங்களிடையே ஓர் ஒருமித்தக் கருத்தை ஏற்படுத்தவும் சீனாவில் திறந்த வாயிற் கொள்கையை (open door policy) உருவாக்கவும், ஐரோப்பாவில் ஜெர்மனிக்கெதிராகப் போரிடவும் உதவியது.

**பாரிஸ் உடன்படிக்கை (1898)**

1898-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ம் நாள் பிரான்சின் அமெரிக்கத் தூதுவர் ஸ்பெயின் சார்பில் பாரிஸ் உ்னபாடு ஒன்றில் கையெழுத்திட்டார். அதன்படி கியூபாவிற்கு சுதந்திரம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. இத்தீவை அமெரிக்கா எடுத்துக்கொள்ள வேண்டுமென ஸ்பெயின் அமெரிக்காவை வற்புறுத்தியது. ஆனால் டெல்லர் திருத்த தீர்மானத்தாலும், 40 கோடி டாலர் ஸ்பானியக் கடனை ஏற்றுக் கொள்ள விரும்பாததினாலும் அமெரிக்கா அதனைப் பெற்றுக் கொள்ளவில்லை. இரண்டாவதாக, ஸ்பானியர்கள் பியர்ட்டோரிக்கோ, குவாம் தீவுகளை அமெரிக்காவிற்கு கொடுத்தனர். மூன்றாவதாக, பிலிப்பைன்ஸ் தீவு மக்கள் அளித்த ஆதரவிற்காக அவர்களுக்கு உடனடியாக சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் நிலவியது. அமெரிக்கா இரண்டு கோடி டாலர் இழப்பீடாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

**போரின் விளைவுகள்**

போர் சிறிது காலமே நீடித்த போதிலும் அதன் விளைவுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். புதிய உலகில் ஸ்பெயின் தனது எல்லா குடியேற்றங்களையும் இழந்தது.

அது முதற்கொண்டே அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலக ஆதிக்கங்களில் ஒன்றெனக் கருதப்படலாயிற்று. மறைமுகமாக இப்போர் ஐக்கிய நாடுகளுக்கும் பிரிட்டனுக்குமிடையே நல்லுறவுக்கு வழிவகுத்தது. ஆனால் போரின் போது பிரிட்டிஷ் பத்திரிக்கைகள் ஐக்கிய நாடுகளைப் பொறுத்த மட்டில் ஒரு நட்புறவுக் கொள்கையைக் கையாண்டன. மணிலாவில் நடைபெற்ற போரில் ஸ்பானிய கடற்படைக்குத் துணையாக ஜெர்மன் கடற்படை உதவிக்கு சென்றதை பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் தடை செய்தன எனக் கருதப்படுகிறது. இதுவே இவ்விரு நாடுகளிடையே ஒத்துழைப்பு வளர காரணமாயிற்று. 2) ஐக்கிய நாடுகள் வளமிக்க நிலப்பகுதிகளைப் பெற்றுக் கொண்டதோடு ஆசிய நாடுகளில் அதிக ஆர்வம் காட்டிற்று. கியூபாவில் தனது செல்வாக்கை நிலை நாட்டிய ஐக்கிய நாடுகள் போர்ட்டோரிக்கோ மற்றும் குவாம் தீவுகளைக் கைப்பற்றியது. தென்கிழக்கு ஆசியாவின் நுழைவாயிலின் அருகாமையில் அமைந்திருப்பதால் பிலிப்பைன்ஸ், பசிபிக் பகுதியில் அமெரிக்காவின் ஓர் ராணுவ தளமாக விளங்கிற்று. எனவே மக்கள் தொகை அதிகமுள்ள ஆசிய நாடுகளோடு தனது வியாபாரத்தைப் பெருக்கி கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் இதனால் செலவினங்களும் ஏற்பட்டன. பிற குடியேற்ற வல்லரசுகளிடமிருந்து தனது புதிய உடமைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டமையால், பசிபிக் கடற்படை ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் ஐக்கிய நாடுகளுக்கு ஏற்பட்டது. பிலிப்பைன்ஸ் மக்கள் அமெரிக்க மேலாண்மையை ஏற்றுக்கொள்ளத் தயராக இல்லை. எமிலியோ அக்கியூனால்டோ (Emilio Aguinaido) என்ற தங்களது திறம் படைத்த தலைவரின் கீழ் அந்நாட்டு மக்கள் கிளர்ச்சி செய்தனர். இரு வருடங்களாக நீடித்த போரின் விளைவாக கிளர்ச்சியாளர்கள் ஒடுக்கப்பட்டு, அமெரிக்காவின் மேலாண்மை உறுதியாக்கப்பட்டது. 3) அட்லாண்டிக், பசிபிக் சமுத்திரங்களில் எழுச்சி பெற மத்திய அமெரிக்காவில் கால்வாய் ஒன்றை வெட்டுவதற்கான உடனடித் தேவையை ஐக்கிய நாடுகள உணர்ந்தது. இதன் விளைவாக பனாமா கால்வாய்ப் பகுதி கைப்பற்றப்பட்டு அங்கு கால்வாய் வெட்டப்பட்டது.

**ஹவாய், சமோவா இணைக்கப்படல்**

மத்திய பசிபிக் பகுதியிலுள்ள வளமான ஹவாய் தீவுகளில் ஆசிய மக்கள் வாழ்ந்து வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்கா சமயப் பரப்பாளர்களை அங்கு அனுப்பியது. 1875-ல் ஐக்கிய நாடுகள் ஹவாய்த் தீவுகளில் தன்காப்பாட்சியை நிலைநாட்டியது. அங்குள்ள சர்க்கரைத் தொழிலை ஐக்கிய நாட்டு மக்கள் நடத்தி வந்தனர். இதனால் பொருளாதார துறையில் ஐக்கியநாடுகள் முன்னேற்ற மடைந்தது. இந்நிலையில் பேர்ல் துறைமுகத்தை பெற்று, அத்தீவீன் பொருளாதார அமைப்பை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. இத்தீவினை ஐக்கிய நாடுகளுடன் இணைக்க வேண்டுமென்று அமெரிக்கா எண்ணியபோது லிலியோகலானி என்ற ஹவாய் நாட்டு அரசியார் அம்முயற்சியை முறியடிக்க எண்ணினார். இருந்தபோதிலும் 1898-ல் இத்தீவு அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.

பத்தொன்பாம் நூற்றாண்டின் பாதியில் அமெரிக்கர் பசிபிக் சமுத்திரத்தின் தென்பகுதியிலுள்ள சமோவன் தீவுக் கூட்டத்தை அடைந்தனர். டுட்யூலா தீவிலுள்ள பாகோ-பாகோ (pago-pago) துறைமுகத்தை ஐக்கிய நாடுகளின் உபயோகத்திற்கு விட்டுக்

கொடுக்கும்படி சமோவாவின் தலைவரை வேண்டினர். இங்கிலாந்தும் ஜெர்மனியும் சமோவா தலைவனிடமிருந்து இதுபோன்ற உரிமைகளைப் பெற்றிருந்தன. இதைத் தொடர்ந்து மேலாண்மைக்காக மும்முனைப் போட்டி ஏற்பட்டது. இறுதியில் தங்களுக்குள் இத்தீவுக் கூட்டத்தை பங்கீடு செய்து கொள்ள அமெரிக்காவும், ஜெர்மனியும் ஒப்புக் கொண்டன. இதற்கான இழப்பை வேறறெங்காவது ஈடுசெய்து கொள்ள பிரிட்டனை இணக்கிய பின் 1899-ல் இப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டது

## சீனா, ஜப்பானோடு உறவு

### ஆரம்பக் கால தொடர்புகள்

1784-ல் சீனாவின் பேரரசி என்ற அமெரிக்கக் கப்பல் கான்டன் நோக்கிச் சென்ற போது சீனாவோடு இலாபகரமான வாணிபத்தை ஐக்கிய நாடுகள் மேற்கொண்டது. ஆங்கிலேயர்கள் புரிந்த அபினிப் போர்கள் (opium wars) உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளவும், வெளிநாட்டு வாணிபத்திற்கு தங்களது துறைமுகங்களைத் திறந்து வைக்கவும் சீனர்களைக் கட்டாயப்படுத்தின. இத்துறைமுகங்களனைத்தும் உடன்படிக்கைத் துறைமுகங்கள் என்றழைக்கப்பட்டன. கலேப் குஷிங் என்பவர் தலைமையிலான தூதுக்குழு பீகிங்குடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. இவ்வுடன்படிக்கை பிற அரசுகள் பெற்றிருந்த வணிக உரிமைகளையும் நீதிமன்றங்களை நிறுவும் உரிமைகளையும் ஐக்கிய நாடுகளுக்கு வழங்கியது. வாணிபம், சமயம், கல்வி தொடர்பாக அமெரிக்கர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக அமெரிக்க செல்வாக்கு சீனாவில் உறுதியாக நிலைநாட்டப்பட்டது.

தனித்தொதுங்கியிருந்த ஜப்பானை வெளிக் கொணர்ந்த பெருமை ஐக்கிய நாடுகளைச் சாரும். 1853-ல் காமாடோர் பெரி என்பவரின் தலைமையில் இயங்கிய கடற்படை ஜப்பான் கடலைச் சென்றடைந்த மறுவருடமே ஜப்பானுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. இவ்வுடன்படிக்கையின்படி அமெரிக்க வாணிபத்திற்கு இரு துறைமுகங்கள் திறந்து விடப்பட்டன. வெளிநாட்டினர் வருகை, படைமானிய அயர்விலிருந்து ஜப்பானை விழிப்படையச் செய்ததோடு, தீவுநாட்டை நவீனமாக்குவதற்கு தயார் செய்தது. ஆரம்பகாலத்தில் இவ்விரு நாடுகளுக்கிடையில் சுமுகமான தொடர்பு இருந்தது. எனினும் ஐக்கிய நாடுகள் பசிபிக் பகுதியில் ஒரு ஏகாதிபத்தியமாக ஏழுச்சியடைந்த காலத்திலிருந்து, வளர்ந்தோங்கி வரும் ஜப்பானின் வலிமை தனது நலநன அச்சுறுத்தும் எனக் கருதியது. அமெரிக்காவின் ஹவாய் இணைப்பும், ஜப்பானின் குடிப்பெயர்தல் பிரச்சனையும் 1905-ல் ரஷியாவிடமிருந்து சகாலினை ஜப்பானியர் கைப்பற்றயமைக்கு அமெரிக்ககளது எதிர்ப்பும், இவ்விரு நாடுகளிடையே பகை வளர வழி வகுத்தது.

### திறந்த வாயிற் கொள்கை (Open Door Policy)

சீனாவின்உள்நாட்டு வலிமையின்மையைப் பயன்படுத்தி வல்லரசுகள் அந்நாட்டின் மூலவளங்களைக் கைப்பற்ற முயன்றன. பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகள் சீனாவிடமிருந்து சுரங்கங்களை இயக்குவதற்கும், ரயில் பாதைகளை அமைப்பதற்கும் உரிமைகளைப் பெற்றன. நாளடைவில், சீனாவை இவ்வரசகள் தங்களது செல்வாக்கு மண்டலங்களாகத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டன. எல்லாவற்றிற்கும் மேலாக ரஷ்யா

மஞ்சூரிய கடலோர மாநிலமான உசிறிப் பகுதியைக் கைப்பற்றியது. இங்கிலாந்து ஹாங்காங்கையும், ஜப்பான் தைவானையும் கைப்பற்றிக் கொண்டன. வெளிநாட்டு ஆதிக்கங்களால் சீனா பங்கீடு செய்யப்படலாமென்றும் சீன-அமெரிக்க வாணிபத்திற்கு தடை ஏற்பட்டுவிடுமென்ற நிலை தோன்றியது.

ஐக்கிய நாடுகள் தனது வணிக நலன்களை வளர்ப்பரிலும், பாதுகாப்பதிலும் அதிக ஆர்வம் காட்டியது. ஆனால் தான் ஸ்பெயினோடு போரில் ஈடுபட்டிருந்த போது பிற வல்லரசுகள் சீனாவின் பல பகுதிகளை கைப்பற்றியிருக்கும் என்று எண்ணி ஐக்கிய நாடுகள் வருந்தியது. 1899-ல் ஜனாதிபதி மாக்கின் லீயின் கீழ் மாநிலச் செயலாளராகயிருந்த ஜான ஹே (John Hay) திறந்த வாயிற் கொள்கை பற்றி தனது கருத்துக்களை வெளியிட்டார். அதன்படி 1) வெளிநாட்டு வாணிபம் அனுமதிக்கப்பட்ட உடன்படிக்கைத் துறைமுகங்களை திறந்து வைக்க வேண்டும். மற்றொ அரசின் செல்வாக்கு எல்லைக்குள் தலையிடாது என்றும் அந்நாடு ஏற்றுக் கொள்ள வேண்டும். 2) அத்தகைய துறைமுகங்களில் சீனச் சுங்கவரி, துறைமுகவரி, ரயில்பாதை கட்டண விகிதம் ஆகியவை எல்லாந நாடுகளுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். 3) வாணிபம் செய்வதற்காக சீனா எல்லா நாடுகளுக்கும் திறந்து வைக்கப்படவேண்டும். வாணிபம் செய்வதில் எல்லா நாடுகளுக்கு சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்பதே மேற்குறிப்பிட்ட கொள்கைகளின் நோக்கமாக இருந்தது.

திறந்த வாயிற் கொள்கையை எதிர்த்து 1899-ல் பாக்ஸர் கிளர்ச்சி ஏற்பட்டது. இதைப் பயன்படுத்தி பிற ஐரோப்பிய நாடுகள் ஜெர்மனியின் தலைமையில் படைகளை அனுப்பி, இக்கிளர்ச்சியை அடக்கியது. சீனா அமெரிக்காவுக்கு நஷ்டஈடு வழங்கியது.

**திறந்த வாயிற் கொள்கைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள்**

ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகளில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் திறந்த வாயிற்கொள்கைக்கு வரவேற்பு கிடைத்தது. ஆனால் ஐக்கிய நாடுகள் நாளடைவில் இக்கொள்ளையில் அதிக ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில் சீனாவோடு கொண்ட வாணிபத்தில் அதற்கு பெரும் பங்கு கிடையாது. அதோடு சீனாவின் நிலப்பகுதிகளை கவர வேண்டுமென்று எண்ணிய ஐக்கிய நாடுகளுக்கு திறந்த வாயிற்கொள்கையானது ஒரு தடையாக அமைந்தது. 1900-ல் பீகிங்கிடமிருந்து ஒரு கடற்படைத் தளத்தையும், தென்சீனாவிலுள்ள சாம்சா வளைகுடாவில் நிலச்சலுகையும் பெற செயலாளரான ஹே முயற்சி செய்தார். ஆனால் ஐக்கிய நாடுகள் சமீப நாட்களில் அறிவித்த சீனாவின் நில ஒருமைப்பாட்டுக் கொள்கையை ஜப்பான் ஐக்கிய நாடுகளுக்கு நினைவூட்டி இம்முயற்சியை முறியடித்தது.

இரண்டாவது அச்சுறுத்தல் ரஷ்யாவிடமிருந்து வந்தது. 1901-ல் ரஷ்யா மஞ்சூரியாவிற்கு படைகளை அனுப்பியது. நிலப்பகுதிகளை திருப்பிக்கொடுப்பதற்கு நிபந்தனையாக, படைகளை நிலை நிறுத்தும் உரிமை போன்ற அநேக சலுகைகளை ரஷ்யர்கள் கோரினர். இந்நிலைமை பற்றி ஜப்பான் ஐக்கிய நாடு:களுக்குத் தெரிவித்தது. ஹே ஒரு எதிர்ப்பு அறிக்கையை அனுப்பினார். ஆனால் திறந்த வாயிற் கொள்கைக்கு ஆதரவாக எவ்வித இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ள மறுத்துவிட்டார். ரஷ்யா தனது செல்வாக்கை மஞ்சூரியாவில்

உறுதிப்படுத்தி, அங்கு பிற அரசுகளின் வாணிபத்தைத் தடை செய்தது. இதைத் தொடர்ந்து வேறு பலஅச்சுறுத்தல்களும் ஏற்பட்டன. ஜப்பான் கொரியாவில் முன்னேறிய போது, ஐக்கிய நாடுகள் சீனாவில் தூதரகங்களை நிறுவும் உரிமை பெற்றது. சமவாணி வாய்ப்பை நிலைநாட்ட நாடுகள், குறிப்பாக கிரேட் பிரிட்டனும் ஐக்கிய நாடுகளும் உறுதியான உடன்பாடு ஒன்றை செய்திருக்குமானால் திறந்த வாயிற் கொள்கையை வலிமை வாய்நத ஒன்றாக மாற்றியிருக்க முடியும். இத்தகைய உடன்பாடு இல்லாததால் இறுதியில் அது தோல்வி கண்டது.

1922-ம் ஆண்டு சீனாவின் முடியுரிமை, குடியுரிமை போன்றவற்றை காப்பதற்காக வாஷிங்டனில் ஒன்பதின்மர் உடன்பாடு (Nine power Treaty) ஏற்படுத்தப்பட்டது. திறந்த வாயிற் கொள்கையினால் இதை பாதுகாக்க முடியவில்லை. மஞ்சூரியா மீது ஜப்பானின் ஆக்கிரமிப்பும், மங்கோலியாவின் வெளிபபகுதியை ரஷ்யா கைப்பற்றியதாலும், ஐக்கிய சீனாவின் எழுச்சியினாலும் திறந்ா வாயிற் கொள்கை தோல்வியடைந்தது.

## அலகு - III

### முன்னேற்றச் சட்டங்கள்

### தியோடர் ரூஸ்வெல்ட்

1900-ம் ஆண்டு மாக் கின்லீ கொலை செய்யப்பட்டபோது உதவி ஜனாதிபதியான ரூஸ்வெல்ட் ஜனாதிபதியானார். இவரது எழுச்சி வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பின் நியூயார்க்கில் சட்டமன்ற உறுப்பினாராகவும் மாக் கின்லீயன் கீழ் கடற்படை உதவிச் செயலாளராகவும் ஸ்பெயினோடு ஏற்படுத்தப்பட்ட போரினடபோது கியூபாவில் ‘‘முரட்டுச் சவாரிக்காரர்கள்’’ என்றழைக்கப்பட்ட இராணுவ பிரிவின் கர்னலாகவும், நியூயார்கின் கவர்னராகவும் மாக் கின்லீயின் உதவி ஜனாதிபதியாகவும் இவர் பணிபுரிந்தார். தமது 42-வது வயதில் அமெரிக்க ஜனாதிபதியானார். குடியரசுக் கட்சியின் தலைவரும் சிந்தனையாளருமான இளம் மெட்டி ரூஸ்வெல்ட் நாட்டிற்கு ஒரு நல்ல தேசியக் கொள்கைகளையும் சீர்திருத்தையும் கொண்டு வர விரும்பினார். ஜனாதிபதியான பின் அதனை செயல்படுத்தியானார்.

முக்களின் பல்வேறு பிரிவினருக்கிடையிலுள்ள இடைவெளியை அகற்ற வேண்டுமென்றும், ஒரு சிலருக்கு மட்டுமின்றி எல்லோருக்கும் அரசு பணிபுரிய வாய்பளிக்க வேண்டுமென்றும் அவர் விரும்பினார். இக்கருத்தின் அடிப்படையில் தான் அவரது கொள்கையை சுருக்கமாக :நேர்மைத் திட்டமென்றும்’’ (Square Deal) அவரது காலம் முன்னேற்றக் காலமென்றும் அழைக்கப்படுகிறது. நேர்மைத் திட்டம் என்பது நல்லவைகளைச் செய்ய வேண்டும். நாட்டின் நலனுக்கு உகந்த வகையில், பெரும் வாணிபம் அமைய வேண்டும். தொழிலாளர்களின் நலநன வளர்ப்பதற்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும். ஆனால் அது சட்ட வரம்பை மீறுதல் கூடாது. அரசு முன்னிலையில் அனைவரும் சமம். குற்றம் செய்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பவே முடியாது. பிற நாடுகளிலும் இதே கொள்கையைத் தான் அமெரிக்கா பின்பற்ற வேண்டும். எந்த ஒரு வெளிநாட்டு ஆதிக்கமும்

நல்லது செய்ய மறுத்தால் அவற்றின் மீது ‘‘பெரும் பிரம்பு’’ (Big stick) கொள்கை பின்பற்றப்படும் என்று ரூஸ்வெல்ட் கூறினார். இதன் விளைவாக அவரது வெளிநாட்டுக் கொள்கை ‘‘பெரும் பிரம்பு இராஜதந்திரம்’’ (Big stick Diplomacy) என அழைக்கப்படுகிறது.

**முன்னேற்ற சீர்திருத்தமும் நேர்மைத் திட்டமும்**

முன்னேற்றக் கொள்கை என்பது அதிர்ஷ்டமற்றவர்களின் நலனுக்காக பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த மேற்கொள்ளப்பட்ட அரசு நடவடிக்கையேயாகும். ஆனால் நேர்மைத் திட்டம் என்பது உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் வேறுபாடின்றி அனைவரையும் அரசு சமமாக நடத்துததல் ஆகும். ஐக்கிய நாடுகள் வரலாற்றில் ‘‘முன்னேற்றக் கொள்கை’’ யானது பொதுவாக தியோடர் ரூஸ்வெல்ட், வில்லியம் டாப்ட், உட்ரோ வில்சன் மற்றும் பிராங்லின் டி ரூஸ்வெல்ட் ஆகியோரின் நிர்வாகத்தின் போது பின்பற்றப்பட்டது. பரம்பரைச் கொள்கைகள் கட்டுப்பாடற்ற வாணிப முறைகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் அதிலிருந்து விலகிச் செல்வதே முன்னேற்றக் கொள்கையாகும். ஏனெனிவ் அது கட்டுப்பாடற்ற வாணிப முறைகளுக்கும், சிறப்புச் சலுகைகளுக்கும் எதிராக வாணிப முறைகளை ஒழுங்குப்படுத்தி அதன் வழியாக மக்களுக்கு சமுதாய நீதியை பெற்றுதர அரசு மேற்கொள்ளும் ஒரு புனிதப் போராகும்.

முன்னேற்றக் கொள்கையின் பிறப்பிடமாக ஐரோப்பா திகழ்ந்தது. தொழில்துறையில் காணப்பட்ட சீர்கேடுகளாலும், சோஷியலிசக் கொள்கையாலும் ஜெர்மனி பிஸ்மார்க் தலைமையில் சமுதாயப் பாதுகாப்பிற்கான சட்டங்களை இயற்றியது. இது போன்ற சீர்திருத்தங்களின் தேவையை கருத்திற் கொண்ட ஐக்கிய நாடுகளின் தாராளக் கொள்கையினரும், இடது சாரியினரும் தேவையான சட்டங்களை இயற்ற போராடினர்.

நாட்டின் பொருளாதார அமைப்கை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1890-ல் ஷெர்மன் கூட்டு வாணிபத் தடைச் சட்டம் இயற்றப்பட்ட போதிலும் கூட்டு நிறுவுன அமைப்புகளின் செல்வாக்கு மேலும் வளர்ந்தது. இது ஜனநாயகச் செயல்முறைக்கு ஒரு சவாலாக அமைந்தது. ஏனெனில் செல்வந்தர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் கையூட்டளித்து சட்டமன்றத் தீர்மானங்களை தங்களுக்குச் சாதமாக்கிக் கொண்டனர். சிறிய வணிக நிறுவனங்கள் அழிவுற்றதாலும், போட்டியில்லாததாலும் நெறியற்ற வழிமுறைகள் பெருமளவில் வளர்ந்தன. சுத்தமற்ற உணவுப் பொருள்கள் விற்கப்பட்டதாலும், உற்பத்தியில் தரமற்ற பொருள்கள் பயன்படுத்தப்பட்டதாலும், நேர்மையற்ற ாணிப ஒப்பந்தங்களாலும், குழந்தைகள் பணியில் அமர்த்தப்பட்டதாலும் உடனடி சீர்திருத்தத்திற்கான அவசியத்தை வலியுறுத்தியது. சான்றோர்களும், எழுத்தாளர்களும் தொழிற்துறையில் காணப்படும் சீர்கேடுகளை எடுத்துரைத்தனர். எனவே முதலாளியிடமிருந்து தங்களது நலன்களைப் பாதுகாக்க தொழிலாளர்களும், விவசாயிகளும் தங்களுக்குள் சங்கங்களை அமைத்துக் கொள்ள விரும்பினர்.

**முற்போக்கு அரசியல் சீர்துிருத்தங்கள்**

தல ஆட்சி நிறுவனங்களில் தான் அமெரிக்க முன்னேற்றக் கொள்கை முதலில் ஆரம்பமாயிற்று. பல்வேறு நகரங்களின் மேயர்கள் குறிப்பாக டோல் டோவின் ஜோன்ஸ்,

கிளிவ்லாண்ட் ஜான்சன் ஆகியோர் ஊழலை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அரசுகள் தலையீட்டின்றி நகர நிர்வாக வளர்ச்சிக்கான சட்டங்களை உருவாக்கும் உரிமையை நகரங்களுக்கு வழங்க, நகராண்மை சுயாட்சிச் சட்டங்களை அநேக மாநிலங்கள் இயற்றின. சட்டங்களை அறிமுகப்படுத்த வாக்காளர்களுக்கு உரிமையளிக்கும் தொடக்க முயற்சி (Initative) சட்டங்களை ஏற்றுக் கொள்ளவே நிராகரிக்கவோ மக்களுக்கு உரிமையளிக்கும் மக்கள் வாக்கெடுப்பு (Referendum) சட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பே அவர்களைச் சட்டமன்றத்திலிருந்து வெளியேற்றும் உரிமையை வாக்காளர்களுக்கு வழங்கும் 'திரும்ப அளித்தல் (Recall) போன்ற மக்களாட்சி முறைகள் மாநில அரசியலமைப்புகளில் எழுதப்பட்டன. செட்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வழி-வகைகளை அரசியலமைப்பின் 17வது திருத்தச் சட்டம் அமைத்துத் தந்தது நாள் ஒன்றிக்கு அதிகபட்சம் எட்டுமணி நேர வேலையும், தொழிலாளர்கள் அடைந்த இழப்பு, காயங்களுக்கு இழப்பீடு வழங்க வகை செய்கின்ற நடடிவக்கைகள் செயல்படுத்தப்பட்டன. தியோடர் ரூஸ்வெல்ட் ஜனாதிபதியான பிறகு முன்னேற்றச் கொள்கைகளை தேசிய அளவில் நடைமுறைப்படுத்த கூட்டாட்சி அரசு பெருமளவில் முயன்றது.

**பெரும் வாணிப அமைப்புக்களை ஒடுக்குதல்**

1901-ல் காங்கிரசிடம் பெரம் வாணிபங்களை ஒழுங்குபடுத்தவும், மாநிலங்களுக்கிடையிலான வாணிகக்குழுவின் அதிகாரங்களை விரிவுபடுத்தவும், சிவில் பணிகளைச் சீர்திருத்தவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் பெரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென ரூஸ்வெல்ட் கேட்டுக் கொண்டார். தொடர்ந்து இயற்றப்பட்ட சட்டஙகள் வழியாக, முதலாளித்துவத்தை தடைசெய்யவும், கூட்டு நிறுவனத் தடைச் சட்டங்களை துரிதமாக செயல்படுத்தவும், உழைப்புக்குரிய அந்தஸ்து அளிக்கவும், முதலீடு செய்யவும், பொதுக்களை ஊழல்களிலிருந்து காக்கவும் அவர் முற்பட்டார்.

பெரும் கூட்டு வாணிப அமைப்புகளுக்கெதிராக ரூஸ்வெல்ட்டின் நிர்வகம் நடவடிக்கைகளை எடுத்தது. மேற்குப்பகுதியில் அநேக ரயில் பாதுகாப்பு நிறுவனத்திற்கு எதிராகவே முதல் நீதிமன்ற வெற்றியானது அமைந்தது. வடக்குப் பாதுகாப்பு நிறுவனத்திற்கும் ஐக்கிய நாடுகளுக்கும் எதிரான 1904-ம் ஆண்டு வழக்கில் இந்நிறுவனமானது, ஷெர்மன் கூட்டு வாணி தடை சட்டத்தை மீறியுள்ளதென்றும் எனவே அது கலைக்கப்பட வேண்டுமென்றும் தலைமை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தனக்குச் சாதகமான இந்நீதிமன்றத் தீர்ப்பில் ஊக்கம் பெற்ற ரூஸ்வெல்ட் நிர்வாகம் எண்ணெய், புகையிலை, மின்சாரம் மற்றும் புலால் பக்குவப்படுத்துதல் நிறுவனங்களுக் கெதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. எல்லா நடவடிக்கைகளும் வெற்றி பெறவில்லையாயினும் "டிரஸ்ட்" ஒழிப்பாளர் என்ற பெயரை ரூஸ்வெல்ட் பெற்றதோடு மக்களிடையே தனது செல்வாக்கையும் நிலைநாட்டினார்.

**தொழிலாளர் நலன் பேணுதல்**

1902-ம் ஆண்டின் நிலக்கரிச் சுரங்க வேலை நிறுத்தத்தில் ஜனாதிபதி வெற்றி கண்டார். தங்களது சங்கத்திற்கு அங்கீகாரமும் நாள் ஒன்றிக்கு ஒன்பது மணிநேர வேலையும் இருபது வழுக்காடு ஊதிய உயர்வும் அளிக்கப்பட வேண்டுமென சுரங்கத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர். ஒன்றரை லட்சம்தொழிலாளர்கள் ஈடுபட்ட இவ்வேலை நிறுத்தம் ஐந்து மாதங்கள் நீடித்தது. ரூஸ்வெல்ட் இரு சாராரையும் அழைத்து கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள அவர்களைக் கட்டாயப் படுத்தினார். ஆனால் இயக்குநர்கள் இணக்கத்திற்குத் தயங்கவே இராணுவத்தின் உதவியை நாடினார். புணி அமர்த்துவோர் இப்பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளாவிட்டால் சுரங்கங்களை அரசே எடுத்துக் கொள்ளுமென்று ஜனாதிபதி மறைமுகமாக அச்சுறுத்தினார். எனவே இயக்குநர்கள் பணிந்தனர். சிக்கலான பிரச்சனைகள் நடுவர் குழுவிடம் ஒப்படைக்கப்படவே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. இறுதியில் தொழிலாளர் நாள் ஒன்றிற்கு ஒன்பது மணிநேர வேலையும் பத்து விழுக்காடு ஊதிய உயர்வும் பெற்றனர்.

1903-ம் ஆண்டு இயற்றப்பட்ட எல்கின்ஸ் சட்டம் (Elkings Act) இரகசியத் தள்ளுபடி கொடுத்தலையும், அதனை ஏற்றுக் கொள்ளுதலையும் சட்டத்திற்கு புறம்பானது என்று கூறிற்று. தள்ளுபடி கொடுக்கும் இரயில்பாதை நிறுவனங்களும் அதனைக் ஏற்றுக் கொண்டு பொருட்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்வோரும் தண்டனை பெறுவதற்குரியவராக்கப் பட்டனர். வாணிபக் கூட்டு நிறுவனங்களைப் பற்றி ஆராண்ந்து அவைகளைக் கட்டுப்படுத்த, அதே ஆண்டில் ஒரு வாணிகத் தொழில் துறைக் மற்றும் கூட்டு நிறுவனங்கள் அமைப்பும் (Bureau of corporation) உருவாக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட சீர்திருத்தங்களாலும், பனாமா கால்வாய் பகுதியை விலைக்கு வாங்கியதாலும் 1904-ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக்கட்சி ரூஸ்வெல்ட்டை தனது வேட்பாளராக நியமிக்கும் அளவிற்கு அவர் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தார். தனக்கு எதிராகப் போட்டியிட்ட ஜனநாயக் கட்சி வேட்பாளரான பார்க்கரைத் தோற்கடித்து, இரண்டாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரூஸ்வெல்ட் தனது பெரும்பான்மையான முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தினார்.

1906-ல் காங்கிரஸ் ஹெப்பார்ன் (Heppun) என்ற சட்டத்தை இயற்றியது. இது இரயில் பாதையிலுள்ள பிரச்சனைகளை நீக்குவதற்காக மாநிலங்களுக்கிடையிலான வணிகக் குழுவிற்கு உண்மையான அதிகாரத்தை வழங்கியது. நியாயமற்றதும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதுமான கட்டண விகிதத்தைக் குறைக்கவும், இரயில்வே பணியாளர்களைத் தவிர பிற பயணிகளுக்கு இலவச அனுமதிச்சீட்டு வழங்குவதை தவிர்ப்பதற்கும் ரயில் துறைகள் ஆர்வம் காட்டுகின்ற குறிப்பிட்ட உற்பத்திப் பொருட்களைக் கொண்டு செல்வதை தடை செய்யும் வணிகக் குழுவிற்கு அதிகாமை் வழங்கப்பட்டது. இச்சட்டமானது, குழுவின் அங்கத்தினர் எண்ணிக்கையை ஐந்திலிருந்து ஏழாக உயர்த்தியதோடு எண்ணெய் தொடர்வழித் திட்டங்கள், படகுகள், பாலங்கள் மீதான தனது அதிகார வரம்பை விரிவடையச் செய்தது. மாநிலங்களுக்குக்கிடையில் நடபெறும் வாணிபத்தின் கீழ் அனுப்பப்படுகின்ற கலப்பட மாமிசம், பிற கலப்பட உணவுப்பொருள்கள், கலப்பட மருந்துகள் ஆகியவற்றைத் தடைசெய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு 1906-ம் ஆண்டின் சோதனைச் சட்டமும், சுத்தமான

உணவுப்பொருள்கள் சட்டமும் இயற்றப்பட்டன. 1909-ல் இயற்றப்பட்ட பணி அமர்த்துவோர் பொறுப்பு சட்டமானது, பணியாளர்களின் காயங்களுக்கு இழப்பீடு வழங்குவது பற்றி இருந்தது. ஆனால் தலைமை உயர் நீதிமன்றமானது இதனை அரசியலமைப்பிற்கு முரணானது என்று அறிவித்தது. மேற்குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு 1908-ல் மற்றொரு சட்டமியற்றப்பட்டது. இரயில் ஊழியர்கள் மற்றும் தந்தி இயக்குநர்களின் வேலை நேரத்தைக் குறைக்கவும், அரசியல் பிரச்சார நிதிக்காக தொழில் நிறுவனங்கள் நன்கொடை வழங்குவதைத் தடை செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இச்சட்டங்கள் போக்குவரத்து மற்றும் தொழில் துறையின் பல்வேறு பிரிவுகளுக்கும் கூட்டிணைவுச் சட்டதிட்டங்களை விரிவுப்படுத்தின.

**இயற்கை வளப் பாதுகாப்புச் சட்டம்**

இந்திய இனத்தவர்களிடம் போரிடும்போது வெள்ளைக்குடியேற்றத்தினர், பாரபட்சமற்றமுறையில் கொடிய விலங்குகளையும் காடுகளையும், நீர்வளங்களையும் அழித்தனர். மேற்கு நோக்கி நகர்ந்த பெரும் வாணிகர்கள் மரம் செதுக்குதல், சுரங்கம் வெட்டுதல், பெரும் கால்நடைப் பண்ணைகள் அமைத்தல் போன்றவற்றைத் தங்களுக்கென ஏற்படுத்திக் கொண்டனர். எனவே ரூஸ்வெல்ட் இயற்கை வளங்களைப் பாதுகாக்கத் தேவையான சட்டங்களை இயற்றுவதற்குத் தீர்மானித்தார். வனநிலங்கள் அனைத்தும் கூட்டிணைவு நிறுவனங்களின் அதிகார எல்லையின் கீழ் மாற்றப்பட்டன. அவைகளை நிர்வகிக்க ஐக்கிய நாடுகள் காட்டிலாகாப் பணி உருவாக்கப்பட்டது. நீர்வளங்களைப் பயன்படுத்தவும் வளமற்ற பகுதிகளை விவசாயத்தின் கீழ் கொண்டுவரவும் நீர்ப்பாசனத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் திட்டம் விவசாய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

தனது சீர்திருத்தங்களுக்கு தியோடர் ரூஸ்வெல்ட் நிர்வாகத் தலைமையளித்தார். இவருடைய பணிகளைக் கொண்டு இவரை ஜாக்சன், லிங்கன், விராங்கலின் ரூஸ்வெல்ட் போன்றோர்களுடன் ஒப்பிடமுடியும். எனினும் இவர் தனது அன்றாட வாழ்வில் கூட பிரம்புக் கொள்கை பின்பற்றினார். என்பது மறுக்கமுடியாத ஒன்றாகும். எனவே தான் அவருக்கு ஜனநாயகம் மீதோ அல்லது முன்னேற்றக் கொள்கை மீதோ எத்தகைய திட்டவட்டமான பற்றும் இல்லாதிருந்தது. முற்றிலும் அரசியல்வாதியான டூஸ்வெல்ட் சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதைவிட பிரச்சனைகளை எடுத்துக் காட்டுவதிலே இருந்தார். அவர் மக்களிடத்தில் அளித்த வாக்குறுதிகளை விட அவரது சாதனைகள் மிக குறைவானதே. பெரும் வாணிபங்களை ஒழுங்குபடுத்தவும், இயற்கைவளங்களைக் காப்பதற்கும் அவர் நடவடிக்கை எடுத்தார் என்பது உண்மைதான். ஆனால் அவை உண்மையான சீர்திருத்தங்களல்ல.

ஷெர்மன் கூட்டு வாணிபத் தடைச் சட்டமும் மாநிலங்களுக்கிடையிலான உள்நாட்டு வாணிபச் சட்டமும் கூட்டுத் நிறுவுனங்களைக் கட்டுப்படுத்த இயற்றப்பட்ட சட்டங்களாகும். இதன் அடிப்படையில் தான் ரூஸ்வெல்ட் சட்டங்களை இயற்றி செயல்படுத்தினார் என்பது உண்மை.

**கப்பல் வாணிபத்தைச் சீரமைத்தல்**

வங்கி மற்றும் நாணயங்களை சீர்திருத்தம் செய்தல், உயிர்காப்பு கழகங்களை ஒழுங்குப்படுத்துதல், சிறுவர்கள் வேலையில் சேர்வதைத் தடை செய்தல் போன்ற நடவடிக்கைகள் பெருமளவில் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் 1907-ல் ஒரு பீதி ஏற்பட்டது. அது சிறிது காலமே நீடித்த போதிலும் அநேக வங்கிகள் மூடப்படுவதற்கும், வாணிபம் பாதிக்கப்படுவதற்கும், மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவதற்கும் காரணமாயிற்று. இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் கொள்கையானது அநேக வழிகளில் நலன் பயப்படதாயினும், பிற்காலத்தில் அதிக உற்பத்திக்கும் அதை தொடர்ந்து குடியானவர்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைவதற்கும் காரணமாயிற்று.

**பெரும் பிரம்பு இராஜதந்திரக் கொள்கை**

தியோடர் ரூஸ்வெல்ட்டின் வெளிநாட்டுக் கொள்கை தேசியம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வலிமையற்ற நாடுகளை அச்சுறுத்தியும், அதனுடைய உள்நாட்டின் விவகாரங்களில் தலையிட்டும், நட்புநாடுகளோடு இரகசிய உடன்பாடு செய்தும் அவர் நாட்டின் தேசிய பெருமையை உயர்த்தினார். ரூஸ்வெல்ட் பதவியை விட்டு விலகுவதற்கு முன் ஐக்கிய நாடுகளை பசிபிக் பகுதி, இலத்தீன் அமெரிக்கா, ஆசியா ஆகியவற்றில் பொருளாதார, அரசியல் செல்வாக்குப் பெற்ற நாடாகவும் பிற வல்லரசுகளைப் போன்று உலக அரங்கில் அமைதி ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டுவதில் அதிக ஆர்வம் கொண்ட நாடாகவும் விட்டுச் சென்றார்.

**கியூபாவும் பிளாட் திருத்தமும்**

1898-ல் ஸ்பெயினுக்கு எதிராகப் போர் தொடுக்கத் தீர்மானித்த போது காங்கிரஸ் டெல்லர் திருத்த சட்ட வரைவை நிறைவேற்றியது. அதன்படி போரின் இறுதியில் ஐக்கிய நாடுகள் கியூபாவைவிட்டு வெளியேறி, அத்தீவின் அதிகாரத்தை அதன் மக்களுக்கே கொடுத்து விட வேண்டும். ஆனால் போரில் வெற்றி பெற்ற பிறகு அமெரிக்கா இத்தீவு மக்களுக்கு சுதந்திரம் வழங்க தயங்கியது. அமைதி, ஒழுங்கை நிலைநாட்டும் முயற்சியில் தளபதி வுட் என்பவரின் தலைமையில் இராணுவ ஆட்சி இத்தீவில் ஏற்படுத்தப்பட்டது. இதனால் கியூபா மக்கள் கிளர்ச்சி செய்தனர்.

1901-ல் கியூபாவை அமெரிக்காவின் பாதுகாப்பிற்குட்பட்ட பகுதியாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பிளாட் திருத்த சட்ட வரைவை காங்கிரஸ் இயற்றியது. இத்தீவின் சுதந்திரத்தின் மீது இத்திருத்தச் சட்டத்தை கியூபா ஏற்றுக் கொண்டது. 1902-ல் கியூபா விடுதலையடைந்தது. ஆனால் கியூபா தனது சுதந்திரத்தில் பிறர் தலையிடுவதை தடுக்க முடியவில்லை. முழு சுதந்திரத்தையும் பெற இத்தீவினர் மேற்கொண்ட முயற்சிகளை முறியடிக்க ஐக்கிய நாடுகள் தனது கடற்படை வீரர்களை அடிக்கடி இத்தீவிற்கு அனுப்பியது. 1934-ல் குவான்டனோமோ வளைகுடாவில் (Guantenamo Bay) ஒரு கடற்படைத் தளத்தை ஐக்கிய நாடுகள் அமைக்கும் உரிமை பெற்றது. ஐக்கிய நாடுகள் 1934-ல் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி தான் அந்நாட்டில் தலையிடும் உரிமையை கைவிட்டது.

**வெனிசுலா நெருக்கடி**

டிவெனிசுலாவில் ஐரோப்பியர் தலையீடு ஓர் சர்வதேச நெருக்கடியை உருவாக்கிற்று. தனது கடன் தவணைகளை கொடுத்து உள்நாட்டுப் போரின் போது வெளிநாட்டினர் அடைந்த இழப்பிற்கு இழப்பீடு கொடுத்து அவர்களை திருப்திப்படுத்த அந்நாடு தவறியது. வெனிசுலாவின் ஜனாதிபதியான சிப்ரியானோ காஸ்ட்ரோ (Cipriano castro) என்பவருக்கு 1902-ல் லண்டன் இறுதி எச்சரிக்கை ஒன்றை அனுப்பியது. ஆனால் எத்தகைய விளைவும் ஏற்படாததால் பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் தங்கள் போர்க் கப்பல்களை அனுப்ப வெனிசுலாவிற்குச் சொந்தமான துப்பாக்கிப் படகுகளைக் கைப்பற்றி வெனிசுலாவின் துறைமுகங்களை முற்றுகையிட்டன. ஐரோப்பிய கடற்படையின் வருகையால் நடுக்கமுற்ற காஸ்ட்ரோ, இத’தகராறை ஐக்கிய நாடுகள் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன்படி 1903-ல் ரூஸ்வெல்ட் ஐரோப்பிய நாடுகளின் முற்றுகையைக் கைவிடுமாறு செய்தார். பின்பு அக்கடனைப் பற்றிய பிரச்சனையை நடுவர் குழு மூலம் தீர்த்து வைத்தார்.

இப்பிரச்சனை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. அமெரிக்க நிலப்பகுதிகளை வெளிநாட்டு ஆதிக்கங்கள் கைப்பற்றுதல் மன்றோ கோட்பாட்டை மீறிய செயலாகுமென ஐக்கிய நாடுகள் கருதி அதில் தலையிட முடிவு செய்தது. ஐரோப்பிய நாடுகள் இதில் மன்றோ கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தன. ஒரு இலத்தீன் அமெரிக்க நாடு அமெரிக்கத் தலையீட்டை வேண்டிக் கொண்டது. இதுவே முதல் தடவையாகும். இச்சூழ்நிலையில் ஊக்கம் பெற்ற ஐக்கிய நாடுகள் டொமினிக்கன் குடியரசு மீதான ஒரு பிரச்சனை எழுந்த போது, மன்றோ கொள்கையின் விளைவாய எழுந்த ரூஸ்வெல்ட் கொள்கையை அறிவிக்க முன் வந்தது. ஜெர்மனி, இங்கிலாந்து ஆகியவற்றுடன் அமெரிக்கா கொண்ட தொடர்பில் வெனிசுலா நெருக்கடி ஒரு குழப்பமான விளைவை ஏற்படுத்தியது. இப்பிரச்சனையால் உருவான காழ்ப்புணர்ச்சி, ஜெர்மனி ஐக்கிய நாடுகளுக்கிடையிலான நட்புறவை பாதித்தது. எனினும் வெனிசுலாவிற்கு எதிராக ஜெர்மனியோடு தான் கொண்ட உறவிற்கு ஈடு செய்யும் வகையில் அலாஸ்கா மீதான எல்லைப் பிரச்சனைகளில் ஐக்கிய நாடுகளோடு இணங்கிச் செல்ல பிரிட்டன் ஒப்புக் கொண்டது.

இலத்தீன் அமெரிக்க நலன்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்ட அர்ஜென்டினாவின் வெளிநாட்டு அமைச்சரான லூயி டிராகோ( Louis Drago) தனது நாட்டு மக்களுக்குச் சேர வேண்டிய கடன்களை வசூலிக்க மற்றொரு நாட்டின் விவகாரங்கள் மீது தலையிடும் உரிமை எந்த ஒரு நாட்டிற்குமில்லையென அறிவித்தார். டிராகோ கொள்கை என்றழைக்கப்பட்ட இக்கொள்கை 1907-ம் ஆண்டிற்குள் பிற நாடுகளிடமிருந்து அங்கீகாரம் பெற்றது.

**கொலம்பியாக் கொள்கை**

ஸ்பெயினோடு கொணடம போரின் போது மத்திய மெரிக்க பூசந்தி வழியாகக் கால்வாய் ஒன்றை வெட்ட வேண்டும் என்று அமெரிக்கா உணர்ந்தது. அட்லாண்டிக், பசிபிக் பகுதி மீதான அமெரிக்க ஆர்வத்தின் விளைவாக கடல்படையை ஒரு கடலிலிருந்து மற்றொரு கடலுக்குத் துரிதமாகக் கொண்டு செல்ல தேவையான வழிகள் உருவாக்கப்பட வேண்டும்

என்று கருதியது. பபிபிக் கடலுக்கும் அட்லாண்டிக் சமுத்திரத்திற்கும் இடையே நேரடியாக ஒரு பாதையை உண்டாக்கினால் அது இலத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவோடு அமெரிக்க ஐக்கிய நாடுகள் கொண்ட வாணிபத்தை ஊக்குவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆமெரிக்கக் கருத்துப்படி இவ்வெண்ணங்கள் நல்லவைகளாகத் தோன்றினாலும், பின்பற்றப்பட்ட வழிமுறைகள் பாராட்டுதற்குரியன அல்ல. பெர்டினான்ட் டிலெசப்ஸ் என்பவரும் பனாமாகால்வாய் நிறுவனம் மற்றும் கடற்போக்குவரத்து கால்வாய் நிறுவனம் ஆகியவை கால்வாய் தோண்டும் முயற்சியில் தோல்வியடைந்த பின்னர் ஐக்கிய நாடுகள் இம்முயற்சியில் அதிக ஆர்வம் காட்டிற்று. மத்திய அமெரிக்காவின் குறுக்கே வெட்டப்படுகின்ற எந்த ஒரு கால்வாயும் தங்கள் இரு நாடுகளும் இணைந்தே கட்டவேண்டுமென 1820-ல் பிரிட்டன் ஐக்கிய நாடுகளுக்கிடையே கையெழுதடதான கிளைட்டன்புல்வர் உடன்படிக்கை (Clayton Buler Treaty) கூறிற்று. எனினும் 1901-ல் ரூஸ்வெல்ட்டின் தலைமையின் கீழ், மாநிலச் செயலாளராகப் பணியாற்றிய ஜான் ஹே இங்கிலாந்தோடு பேச்சுவார்த்தை நடத்தி, ஹே-பான்ஸ்போட் உன்படிக்கையைச் (Hay- Pauncefote Treaty) செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கை வெட்டப்படும் கால்வாய் மீதான முழு உரிமையையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கே வழங்கியது. பனாமா வழியாகவோ அல்லது நிகாரகுவா வழியாகவோ கால்வாய் வெட்டப்படலாமென்று புலனாய்வு மூலம் தெரிய வந்தது. பனாமா பகுதியே சிறந்ததாக தோன்றியதால் இப்பகுதி மீது டிலெசப்ஸ் பிரெஞ்சுக் கம்பெனி பெற்றிருந்த உரிமைகளை விலைக்கு வாங்கவும் இப்பகுதி கொலம்பியாவிற்குச் சொந்தமானது ஆகையால் அதனிடமிருந்து நிலப்பகுதி சலுகை பெறவும் தீர்மானிக்கப்பட்டது. எனவே ஒரு கோடி டாலரை இழப்பீடாகவும், அதோடு பத்துமையில் நீளமான நிலப்பகுதியைக் குத்தகைக்குப் பெற ஆண்டென்றிற்கு இரண்டரை இலட்சம் டாலரை வாடகையாகவும் கொடுக்க ஐக்கிய நாடுகள் முன் வந்தது. ஆனால் இழப்பீட்டுத் தொகை குறைவாக இருந்தமையாலும் கொலம்பியாவின் இறைமையை மீறும் வகையில் ஐக்கிய நாடுகள் ஏராளமான உரிமைகளைக் கோரியமையாலும் கொலம்பியாவின் செனட் சபை இந்நிபந்தனைகளை நிராகரித்தது. எனவே சதித்திட்டங்கள் மூலம் நிறைவேற்ற அமெரிக்க தீர்மானித்தது.

ஆமெரிக்க தரகர்களும் பிரெஞ்சுக் கம்பெனி அதிகாரிகளும் பனாமாவின் ஒருசில கூலி படையினரும் பனாமா மீதான கொலம்பியா அதிகாரத்தை மீற சதித்திட்டம் ஒன்றை வகுத்தனர். அதன்படி 1903-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ம் நாள் கிளர்ச்சியை ஆரம்பித்தனர். அமெரிக்கப் போர்க் கப்பல்கள் அதனை அடக்கச் சென்றன. ஆனால் கொலம்பியா ஈராணுவத்தினர் அமெரிக்கக் கப்பல்கள் வருவதை தடைசெய்தனர். இதனால் ஒரு குண்டு கூட வெடிக்கப்படவில்லை. ஒரு துளி இரத்தம் கூட சிந்தப்படவில்லை. பனாமா கால்வாய் பகுதி தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது. உடனே ஐக்கிய நாடுகள் அதனை அங்கீகரித்தது. 1903-ம் ஆண்டில் ஹே-புனாவரில்லா உடன்பாட்டில் கையெழுத்திட்டது. பனாமாவின் சுதந்திரத்திற்கு உத்தரவாதமளித்த ஐக்கிய நாடுகள் அதற்குப் பதிலாக பத்துமைல் நீளமான பூசந்திக்கு குறுக்கேயுள்ள குறுகிய நிலப்பகுதியை ஆண்டொன்றிற்கு

இரண்டரை இலட்சம் டாலர் வாடகையும், ஒரு கோடி டாலர் முன் தொகையும் கொடுத்துப் பெற்றுக் கொண்டது. உரு வலிமையற்ற நாட்டின் மீது தனது சதித்திட்டம் வெற்றியடைந்ததைக் கண்டு ரூஸ்வெல்ட் பெரிதும் மகிழ்ந்தார். கால்வாய் வேலையானது 1904-ல் ஆரம்பிக்கப்பட்டு, 1904-ல் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டது. அமெரிக்காவின் இத்தீய சதித்திட்டத்திற்கு இலத்தீன் அமெரிக்கா முழுவதிலும் எதிர்ப்பு கிளம்பியது. எனினும் கொலம்பியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டபோது, ஐக்கிய நாடுகள் அந்நாட்டு மக்களுக்கு ஆறுதலளிக்கவும், சுரண்டலுக்கான உரிமை பெறவும் முற்பட்டது. தனது சிறப்பான நிலப்பகுதிகளை இழந்தமையால் 1921-ல் ஐக்கிய நாடுகள் இருபத்து ஒன்று மில்லியன் டாலர்களை கொலம்பியாவிற்கு இழப்பீடாகக் கொடுத்தது.

**ரூஸ்வெல்ட் துணைக் கொள்கை**

வெனிசுலா, பனாமா மீதான நடவடிக்கைகளுக்குப் பின்பு டொமினிக்கன் குடியரசு, ரூஸ்வெல்ட்டின் கவனத்தை ஈர்த்தது. இச்சிறிய கரிபியன் குடியரசு குழப்பத்தில் இருந்தது. நேர்மையற்ற சர்வாதிகாரிகள் தங்கள் நலநன விருத்தி செய்ய வெளிநாடுகளிடமிருந்து கடன் பெற்றனர். எனவே பொதுக்கடன் உயர்ந்த போது தாங்கள் வழங்கிய கடனை வசூலிக்க அந்நாட்டின் விவகாரங்களில் தலையிட் போவதாக ஐரோப்பிய வல்லரசுகள் அச்சுறுத்தின. இந்நிலையில் ஐரோப்பாவின் தலையீட்டைத் தடைசெய்ய வேண்டுமென்று ரூஸ்வெல்ட் தீர்மானித்தார். வரி வசூலித்து கடனை தீர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தார். பனாமா கால்வாய் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் கரிபியன் பகுதியில் வெளிநாட்டவர் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டாதும் படைத்தளங்களைப் பாதுகாக்காத வாரும் தடுக்கவேண்டும் எனத் திட்டமிட்டார்.

1904-ல் ரூஸ்வெல்ட் தனது கொள்கையை அறிவித்தார் சமுதாய, அரசியல் விஷயங்களில் குறிப்பிடத்தக்க திறமையோடும் பண்பாட்டோடும் ஒரு நாடு செயல்பட்டு, அமைதியை நிலைநாட்டி, தனது கடமைகளைச் செய்யுமாயின் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தலையீடு பற்றி அந்நாடு அஞ்ச வேண்டிய தேவையில்லை. ஆனால் அதற்கு மாறாக தவறிழைப்பதிலே ஊறி அல்லது திறமையின்மையால் பண்பாடு மிக்க சமுதாயத்தோடு கொண்ட தொடர்பில் பொதுவான நெகிழ்ச்சி ஏற்படுமாயின் நாகரிக நாடுகள் தலையிடும் சூழ்நிலையை அது உருவாக்கும். நாடுகள் வேண்டுமென்றே இத்தகைய தவறிழைத்தாலும் அல்லது திறமையற்றிருந்தாலும் பூகோளத்தின் மேற்குப் பகுதியில் ஐக்கிய நாடுகள் மன்றோ கொள்கையை கடைப்பிடிக்கின்றமையால் சர்வதேச நாடுகளின் காவல் அதிகாரத்தைச் செயற்படுத்த அமெரிக்கா தயக்கத்துடனே முன்வரவேண்டியதிருக்கும். இலத்தீன் அமெரிக்காவில் பிற ஆதிக்கங்களின் தலையீட்டைத் தடுக்கும் இக்கோட்பாடானது தடை செய்யும் தலையீடு அல்லது இலத்தீன் அமெரிக்காவில் பிறர் தலையீட்டை தடை செய்யும் அமெரிக்கத் தலையீடு எனப்படும்.

இக்கொள்கைக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், ஐரோப்பிய நாடுகள் ஒன்றிற்கொன்று வேறுபட்ட வகையில் ஆதரவளித்தன. ஏனெனில் கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படுமென்று அவைகளுக்கு ஒரு புறத்தில் உறுதிமொழி

கொடுக்கப்பட்டு, மறுபுறத்தில் அவைகளது செல்வாக்கு இப்பகுதியில் இல்லாமலாக்கப்பட்டது. 1905-ல் இக்கொள்கையின் படி டொமினிகன் குடியரசில் சுங்க வரியை வசூலித், பொதுக்கடனைத் தீர்க்க அமெரிக்க அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

**ஜப்பானோடு தொடர்பு**

ஆசிய விவகாரங்களில் ரூஸ்வெல்ட் அதிக ஆர்வம் காட்டினார். 1905-ல் ஜப்பானும் ரஷ்யாவும் கிழக்காசியாவில் பெரும் போரில் ஈடுபட்டன. ரஷ்யாவின் எழுச்சி கிழக்காசியாவின் வல்லமைச் சமநிலைக் கொள்கைக்கும், சீனாவின் திறந்த வாயிற் கொள்கைக்கும் அச்சுறுத்தலாக இருக்குமென்று ஜனாதிபதி கருதினார்.எனவே அவர் தனது ஆதரவை ஜப்பானுக்குத் தெரிவிக்கலானார். ஜப்பான் போரில் வெற்றி பெற்ற போதிலும், போரிட்ட இரு நாடுகளுமே நியூஹாம்சையரிலுள்ள போர்ட்ஸ் மவுத்தில் அமைதி மாநாடு ஒன்றில் சந்திக்குமாறு ரூஸ்வெல்ட் விட்ட அழைப்பை ஏற்று, அம்மாநாட்டில் ஜப்பானியர்கள் பெருமளவில் நஷ்டஈடு கோரியதையும் சகாலீன் தீவை முழுமையாகத் தங்களுக்குக் கொடுத்து விட வேண்டுமெனக் கோரியதையும் அமெரிக்கா ஆதரிக்கவில்லை. எனினும் சமாதான உடன்பாடு கையெழுத்தானது. வல்லமைச் சமநிலையை பாதுகாப்பதன் வழியாக பசிபிக் பகுதியில் தனது நலனைப் பேண முடியுமென ஐக்கிய நாடுகள் எதிர்பார்த்தது. 1905-ல் ரூஸ்வெல்ட் ஜப்பானோடு ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டார். கொரியாவில் ஜப்பானின் நலன்களை அமெரிக்கா அங்கீகரித்த போது பிலிப்பைன்ஸில் அமெரிக்க நலன்களை ஜப்பான் அங்கீகரித்தது. 1908-ல் கையெழுத்தான ரூட்-தக்ககிரா ஒப்பந்தப்படி பசிபிக் பகுதியில் ஜப்பானும், அமெரிக்காவும் ஒருவர் மற்றொருவரது ஆதிக்க உரிமையை மதித்து நடக்க வேண்டுமென்றும், சீனாவின் சுதந்திரத்திற்கும் திறந்த வாயிற்கொள்கைக்கும் ஆதரவளிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது.

ஆனால் நாளடைவில் இவ்விரு நாடுகளுக்கிடையிலான தொடர்பு பாதிக்கப்பட்டது. அமெரிக்க எதிர்ப்பின் காரணமாகவே சகாலீன் தீவை முழுமையாக நஷ்டஈடாக பெறமுடியவில்லை என்று ஜப்பான் கருதியது. இப்பிரசசனைகளோடு எழுந்ததே குடிபெயர்தல் பிரச்சனையாகும். ஹவாயிலுள்ள வெள்ளயரசு ஜப்பானியர்கள் இத்தீவுகளுக்குக் குடிபெயர்ந்து செல்வதைத் தடைசெய்தது. கலிபோர்னியாவின் வெள்ளையர்களும் ஜப்பானிய குடிபெயர்தலை எதிர்த்து, மஞ்சள் ஆபத்து எனக் கூக்குரலிட்டு ஜப்பானிலிருந்து குடியமர்ந்தோரை மேற்கு கடற்கரைப் பகுதியிலிருந்து துரத்தவிழைந்தனர். 1906-ல் சான் பிரான்சிஸ்கோ பள்ளி நிறுவனம் தான் இயற்றிய தீர்மானத்தின் வழியாக, தனது பள்ளியின் 93 பேர் அடங்கிய எல்லா ஜப்பானிய மாணவர்களையும் ஒரு தனியான கிழக்கிந்திய பள்ளியில் சேரப் பணித்தது. இவ்வின வேறுபாட்டுக் கொள்கையால் கொதித்தெழுந்த ஜப்பானியர்கள் போராட்டங்கள் நடத்தி தங்களது வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். இப்பிரச்சனையில் ரூஸ்வெல்ட் தலையிட்டதின் விளைவாக மேற்குறிப்பிட்ட பிரச்சனைக்குரிய தனது சட்டத்தை பள்ளி திரும்பப் பெற்றது. எனினும் மறுபடியும் பிரச்சனைகள் ஏற்படாமல் தவிர்க்க கூலி வேலை செய்வோர் அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்து செல்வதைத் தடைசெய்ய ஜப்பான் ஒப்புக்கொண்டது.

ஜப்பானியர்கள் அமெரிக்கரால் கீழ்த்தரமாக நடத்தப்பட்டதால் போர் ஏற்படும் சூழ்நிலை உருவானது. ஆமெரிக்க வலிமையை ஜப்பானுக்கு உணர்த்த முடியுமெனில் போரைத் தவிர்க்கக் கூடுமென ரூஸ்வெல்ட் நம்பினார். எனவே அவர் தனது அமெரிக்கக் கடற்படையின் வலிமையை எடுத்துரைக்கும் எண்ணம் தமது கப்பற்படையை உலகை வலம் வரச் செய்தார்.

**ரூஸ்வெல்ட்டும் ஐரோப்பாவும்**

பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், நடுநிலையாளர் உடன்படிக்கைகள் ஏற்படுவதற்கும் ரூஸ்வெல்ட் பெருமளவில் தொண்டாற்றினார். அலாஸ்காவிற்கும், கனடாவிற்குமிடையிலான எல்லை நிர்ணயிக்கப்படாததால் அப்பிரச்சனையானது நடுநிலையாளர் குழு முன்னிலையில் வைக்கப்பட்டது. ஆனால் அதன் தீர்மானத்தின் தன்மை நிச்சயமற்றதாக இருந்தமையால் ஐக்கிய நாடுகள் உரிமை கொண்டாடுவது போன்றே அதன் எல்லை நிர்ணயிக்கப்படுமென ஜனாதிபதி பிரிட்டனை அச்சுறுத்தினார். வெனிசுலா பிரச்சனையின் போது இவ்எல்லைப் பிரச்சனை இவ்விரு நாடுகளுக்குமிடை யிலான தொடர்பை பாதிக்குமென்று அஞ்சப்பட்டது. எனினும் பிரிட்டன் பணியவே நடுநிலையாளர் குழு ஐக்கிய நாடுகளுக்குச் சாதகமான தீர்மானத்தை எடுத்தது. தாங்கள் வஞ்சிக்கப்பட்டதாக கனடியர்கள் கருதினர். ஆனால் நிலைமையைச் சரிப்படுத்துவது அவர்களன் வலிமைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

ஆப்பிரிக்கா நாடான மொராக்கோ பற்றிய பிரான்ஸ்-ஜெர்மனி தகராறு, ஐரோப்பாவின் அமைதியை பாதிக்கும் சூழ்நிலையை உருவாக்கியது. மொராக்கோவில் பிரான்ஸ் தனது செல்வாக்கை நிலைநாட்டியிருந்தது. இங்கிலாந்தும் பிரான்சின் உரிமைக்கு ஆதரவளித்தது. இரண்டாம் கெய்சர் வில்லியத்தின் கருத்தின் படி, இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அரசுகளின் மாநாடு ஒன்றின் முடிவிற்கு விடுமாறு ரூஸ்வெல்ட் பிரான்சைக் கட்டாயப்படுத்தினார். இதன்படி ஸ்பெயினிலுள்ள அல்ஜிசிராசில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் மொராக்கோவின் ஒருமைப்பட்டை அங்கீகரித்ததுடன் எல்லா நாடுகளின் வணிகர்களுக்கும் மொராக்கோவில் வாணிபம் செய்வதற்கு அனுமதியளிக்குமென்று உறுதியளிக்கப்பட்டது 1907-ல் அமெரிக்க ஜனாதிபதியின் ஆலோசனையின் படி ரஷ்யாவின் சார் மன்னர் இரண்டாவது ஹேக் மாநாட்டை கூட்டி நாடுகளுக்கிடையே எழும் சட்ட சம்பந்தமான சிக்கல்களை தீர்க்க நடுவர் மன்றம் ஒன்றை நிறுவ முடிவு செய்தார்.

தலைசிறந்த இராஜதந்திரியான ரூஸ்வெல்ட் ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைக்கு புது விளக்கமும் உருவமும் கொடுத்தார். ஐக்கிய நாடுகள் சர்வதேச அரசியல் அரங்கில் ஒதுங்கி நிற்கும் கொள்கையை மரபு வழி பின்பற்றியது. ஆனால் ரூஸ்வெல்ட் அக்கொள்கையை மாற்றி சர்வதேச அரசியலில் தீவிர ஈடுபாடு காட்டினார். இக்கொள்கை மாற்றம் இறுதியில் முதல் உலகப்போரில் அமெரிக்கா பங்கு பெற வழி வகுத்தது. சிறந்த போர் வீரரும், நற்குணத்தைக் கொண்டவருமானரூஸ்வெல்ட் பெரும் பிரம்பு இராஜதந்திரக் கொள்கையின் மூலம் மக்களின் செல்வாக்கைப் பெற்றார். ஆனால் அவருடைய கொள்கைகள் நல்ல விளைவுகளை ஏற்படுத்தவில்லை. மன்றோ கொள்கையானது அமெரிக்காவில் ஐரோப்பியத் தலையீட்டைத் தடைசெய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடே உருவாக்கப்பட்டது.

ஆனால் ரூஸ்வெல்ட் இலத்தீன் அமெரிக்காவில் அமெரிக்கத் தலையீடு நியாயமானதே எனக் மன்றோ கொள்கையைப் பயன்படுத்தினார். கொலம்பியா, கியூபா, டொமினிக்கள் குடியரசு நிக்கராகுவா, வெனிசுலா போன்றவற்றில் பின்பற்றப்பட்ட வன்முறை கொள்கை மற்ற நாடுகளிடையே சந்தேகத்தை உண்டாக்கியது. ஆசிய, ஐரோப்பிய கொள்கையானது, சீனாவிலோ அல்லது மொராக்கோவிலோ திறந்த வாயிற் கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் இக்கொள்கையானது செயல்பட முடியாதுபோய்விட்டது.

### வில்லியம் டாப்ட்டும் டாலர் இராஜதந்திர கொள்கையும்

ரூஸ்வெல்ட்க்கு பின் சட்டக்கல்வி மாணவரான வில்லியம் ஹோவார்ட் டாப்ட் என்பவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ஒஹியோ மாநிலத்தை சேர்ந்தவர். சின்சின்னாட்டியில் படித்து பட்டம் பெற்று, பிலிப்பைன்ஸ் கவர்னர் ஜெனராலாகவும், கூட்டிணைவு நீதிபதியாகவும் போர்த்துறைச் செயலாளராகவும் பணியாற்றி நல்ல அனுபவம் பெற்றிருந்தார்.

1908-ல் நடைபெற்ற தேர்தலில் டாப்ட் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான வில்லியம் பிரியன் என்பவரைத் தோற்கடித்து ஜனாதிபதியானார். இவர் ரூஸ்வெல்ட்டைப் போன்று சிறந்த ஜனாதிபரியாகத் திகழவில்லை. எனினும் அவரது நிர்வாகத்தில் கூட்டு வாணிப நிறுவனங்களுக்கு எதிராகவும், டாலர் இராஜதந்திரக் கொள்கைக்கு ஆதரவாகவும் தொடர்ந்து பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவே அவரது வெளிநாட்டுக் கொள்கையாகும். 1912-ல் நடைபெற்ற தேர்தலில் அவர் ஜனநாயக்கட்சி வேட்பாளரான உட்ரோ வில்சலினால் தோற்கடிக்கப்பட்டார். எனினும் தலைமை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக வேண்டுமென்ற தனது குறிக்கோளை 1914-ல் நிறைவேற்றினார்.

ரூஸ்வெல்ட் கொண்டுவந்த சீர்திருத்தங்களை ஜனாதிபதி டாப்ட் தொடர்ந்து செயல்படுத்தினார். 1912-ல் இயற்றப்பட்ட மான் எல்கின்ஸ் என்ற சட்டம் மாநிலங்க்கிடையிலான வாணிகக்குழு அதிகாரத்தை அதிகப்படுத்தியது. டெலிபோன், தந்தி இணைப்புகள் போன்றவை அதன் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன. இயற்கை வளங்களைப் பாதுகாக்க டாப்ட் நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. அலாஸ்காவின் பெரும்பகுதி பொது நிலங்களென ஒதுக்கி வைக்கப்பட்டன. மரங்களடர்ந்த அப்பலேச்சியன் நிலப்பகுதி தேசிய காடுகளாக்கப்பட்டன. சுரங்கங்கள் சம்பந்தப்பட்ட அலுவலகம், தபால் சேமிப்பு வங்கி, பார்சல் அஞ்சல் பணி, தனி வாணிபம் மற்றும் தொழில் துறைகள் உருவாக்கப்பட்டன. அரிசோனாவும், நியூ மெக்ஸிகோவும் மாநிலங்களாகக் கூட்டிணைவோடு இணைக்கப்பட்டன. திறமை வாய்ந்த வழக்கறிஞர்களை கூட்டிணைவு நீதிமன்றங்களில் பணியில் அமர்த்திய டாப்ட் அதன் வழியாக நீதித்துறையின் திறமையை உயர்த்தினார். எனினும் தொழிலாளர் நிறுவனங்களோடு அவர் நல்ல தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. தொழிலாளர் பிரச்சனைகளுக்கும் அவர் முக்கியத்துவம் அளிக்கவில்லை.

ஜனாதிபதி டாப்ட், அவரது மாநிலச் செயலாளரான நாக்ஸ் ஆகியோரது வெளிநாட்டுக் கொள்கை டாலர் இராஜதந்திரக் கொள்கை என்றழைக்கப்பட்டது. பிற நாடுகளில் அமெரிக்க வாணிகர்கள் சுதந்திரமாக செயல்பட வழிகளைத் தேடி அவைகளைப் பாதுகாப்பதே ஐக்கிய நாடுகள் அரசின் கடமையாகும் என்பதே இக்கொள்கையின் பொருளாகும். இது இரு முக்கிய நோக்கங்களைக் கொண்டிருந்தது. அவைகள் முறையே வெளிநாடுகளில் அமெரிக்கச் செல்வாக்கை வளர்ப்பதும், தாய் நாட்டில் செல்வாக்கை உயர்த்துவது மாகும்.

டாலர் இராஜதந்திரக் கொள்கையை நடைமுறைப்படுத்த நாணயமற்ற வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. ஒரு வலிமையற்ற நாடு அமெரிக்கரை ஆதரிக்காவிடில் ஐக்கிய நாடுகள் அந்நாட்டில் கிளர்ச்சியை உண்டாக்கும். புரட்சிக்கரமான அரசினை அமெரிக்கா அங்கிகரிக்க வேண்டுமானால் அவ்வரசானது அரசியல் பொருளாதார சலுகைகளை அதற்கு அளிக்க வேண்டும் என நிர்பந்திக்கப்பட்டது. அரிெக்காவின் விருப்பப்படி நடக்கும் அரசுக்கு எல்லாவிதமான ஆதரவும் கொடுக்கப்பட்டது. இவ்வாறாக சுரண்டப்பட்ட மக்கள், பிற பெரும் வல்லரசுகளின் உதவியை நாடமுடியாதபடி மன்றோ கொள்கை அவர்களைக் கட்டுப்படுத்தும். சுருங்கக்கூறின் டாலர் இராஜதந்திரக் கொள்கையானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சின்னமாக விளங்கிற்று.

கரிபியன் பகுதியில் குழப்பங்கள் ஏற்பட்டபோது அமெரிக்கா அங்கு டாலர் இராஜதந்திரக் கொள்கையை பின்பற்றியது. நிக்கராகுவா ஒரு இராணுவ கேந்திரப் பகுதியாகும். இங்கு ஒரு கால்வாயை வெட்டுவதற்கான உரிமையைப் பிற வல்லரசுகளுக்கு நிக்காராகுவாவின் ஜனாதிபதியான ஜோஸ் ஜெலாயா கொடுத்தார். எனவே அமெரிக்கர் அவரை ஒரு கொடுங்கோலன் என்று கூறி அவருக்கு எதிராக 1909-ல் கிளர்ச்சி ஏற்படுத்தினார். அக்கிளர்ச்சியினால் ஜெலாயா பதவியிலிருந்து நீக்கப்பட்டார். 1911-ல் புதிதாக அமைக்கப்பட்ட அரசுடன் அமெரிக்கா ஒரு உடன்பாடு செய்து கொண்டது. அதன்படி நிதி நிர்வாகம் அமெரிக்க வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டதோடு சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கென படைகளைப் பயன்படுத்துவதற்கும் அமெரிக்காவுக்கு உரிமை அளிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையை எதிர்த்து 1912-ல் நிகராகுவா மக்கள் கிளர்ச்சி செய்தனர். ஐக்கிய நாடுகள் அக்கிளர்ச்சியை அடக்கி, அந்நாட்டுடன் ஓர் உடன்படிக்கையும் செய்து கொண்டது. அதன்படி நிகாராகுவா, கிரேட் கார்ன், லிட்டில்கான் ஆகிய தீவுகளை நீண்டகால குத்தகைக்கு ஐக்கிய நாடுகளுக்கு விட சம்மதம் தெரிவித்தது.

ஐக்கிய நாடுகள் ஹாண்டுராஸின் உள்நாட்டு விவகாரத்திலும் தலையிட்டது. கரிபியன் நாடுகளில் அமெரிக்கா அதனுடைய மூலதனத்தை அதிகரித்தது ஹெயிட்டி தேசிய வங்கியில் மூலதனத்தை முதலீடு செய்ய நான்கு வங்கிகளை துாண்டியது. டாலர் இராஜதந்திரக் கொள்கையின் ஒரு பகுதியாக, அமெரிக்காவிடமிருந்து போர்க்கப்பல்கள்களை விலைக்கு வாங்க இலத்தீன் அமெரிக்க நாடுகளை அமெரிக்க நிர்வாகம் கட்டாயப்படுத்தியது.இதன்படி கப்பல் விற்பனையானது அமெரிக்கக் கப்பற் தொழிலை விருத்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடற்படை இரகசியங்களைப் பற்றி பிற நாடுகள் அறிந்துகொள்ளும் என்ற அச்சத்தால் அம்முயற்சியைக் கைவிட்டது.

டாலர் இராஜதந்திரக் கொள்கை சினாவில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றது. ஜப்பானும், ஐரோப்பிய நாடுகளும் முதலீடு செய்து சீனாவில் சலுகைகளை பெற்றபோது அமெரிக்க நிதியாளர்கள் அதனைப் பின்பற்றத் தயங்கினர். முக்டெனில் ஐக்கிய நாடுகள் கான்சல் ஜெனரலான வில்லார்ட் ஸ்டிரெயிட் (Willard Straight) என்பவர் குறைந்த முதலீட்டின் காரணமாகவே கிழக்கசரியாவில் அமெரிக்கர் செல்வாக்கின்றி இருக்கின்றனரென்று கருதினார். இதற்கிடையில் பெரும் செல்வாக்குப் பெற்ற ரயில்வே விருத்தியாளரான ஹரிமேன் (E.H.Hariman) என்பவர் சீனா வழியாக உலகைச் சுற்றி ஒரு ரயில் போக்குவரத்து அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கூறினார். ‘‘உலகின் உரு பகுதிக்கு தானாக அமெரிக்க மூலதனம் செல்லவில்லை என்றால் இராஜதந்திரத்தின் மூலம் அது திணிக்கப்படும்’’ என்ற கொள்கையை வகுக்க ஸ்டிரெயிட்டும், ஹரிமேனும் நாக்ஸ்யை வற்புறுத்தினர்.

ஹுகுவாங் ரயில் திட்டம் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மத்திய சீனாவில் ரயில் பாதை ஒன்றை அமைக்க ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளுடைய வங்கிதாரர்கள்ஒன்று சேர்ந்து தற்காலிக ஒத்துழைப்பு நிறுவனத்தை ஏற்படுத்தினர். ஆமெரிக்கா ஒரு வங்கியை உடனடியாக உருவாக்கி, சீனாவின் முயற்சியால் அந்நிறுவனத்தில் அது சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆனால் இந்நிறுவனம் எவ்வித வளர்ச்சியும் அடையாததால் அமெரிக்க வங்கி அதிலிருந்து விலகியது.

திறந்த வாயிற் கொள்கையின் மூலம் மஞ்சூரியாவில் ரஷ்யா, ஜப்பான் ஆகியவற்றின் செல்வாக்கை ஒழிக்க வேண்டுமென்று அமெரிக்கா விரும்பியது. ஜப்பானுக்குச் சொந்தமான தெற்கு மஞ்சூரியன் பாதையும், ரஷ்யாவிற்குச் சொந்தமான தெற்கு ரயில் பாதையும் சீனாவில் இந்நாடுகளின் செல்வாக்கு வளர்வதற்குக் காரணமாயிருந்தன. எனவே இப்பாதைகளை அமெரிக்கா விலைக்கு வாங்க முயற்சி செய்தது. ஆனால் அதில் தோல்வியுற்ற போது, தென் மஞ்சூரியன் பாதைக்கு போட்டியாக மற்றொரு ரயில் பாதையை அமக்க அமெரிக்கா தீர்மானித்தது. ஆனால் இத்திட்டமும் உருப்பெறவில்லை.

மாநாடுகள் வழியாக குறிப்பிட்ட சில சர்வதேச நாடுகள் பிரச்சனையைத் தீர்க்க டாப்ட் முயன்றார். அலாஸ்காவிற்கு அருகாமையிலுள்ள ஐக்கிய நாடுகளுக்குச் சொந்தமான பிரிபிலோப் தீவானது நீர் நாய்கள் நிறைந்த இடமாக விளங்கியது. விலை மதிப்புமிக்க தோல்களுக்காக, ஐக்கிய நாடுகள், ஜப்பான், ரஷ்யா, பிரிட்டன் போன்ற பன்னாட்டுக் கடற்பயணிகள் இந்நாய்களை கொன்றனர். இதனால் அவ்வரிய மிருகங்கள் நாளடைவில் மறைந்தன. எனவே 1911-ல் டாப்ட் வாஷிங்டனில் வடபசிபிக் நீர்நாய் மாநாடு ஒன்றை கூட்டி அமெரிக்கர் மட்டுமே சில கட்டுப்பாடுகளுடன் இம்மிருகங்களை வேட்டையாடலாமென்றும் வருவாயில் ஒரு பங்கு ஜப்பானுக்கும், பிரிட்டனுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். 1912-ல் ஆங்கிலோ-அமெரிக்கா மாநாடு ஒன்று நியூபௌண்ட்லாந்தில் மீன் பிடித்தல் பகுதி மீதான சிக்கலைத் தீர்த்து வைத்தது. பரஸ்பரம் பயனள்ள ஒப்பந்தம் ஒன்றை டாப்ட் கனடாவுடன் செய்து கொண்டார். அதன்படி ஏற்றுமதி, இறக்குமதி செய்யும்பொருள்களை வரி இல்லாமலோ அல்லது குறைந்த விலையிலோ ஒவ்வொரு நாடும் ஏற்றுக்கொள்ள வேண்டும்

எனக் கூறப்பட்டது. ஆனால் இந்நடவடிக்கை இணைத்தலுக்கு வழி வகுக்கும் என்றஞ்சிய கனடியப் பாராளுமன்றம் இதனை மறுத்தது. குடியேற்றத்திற்காக மெக்ஸிகோவிற்குச் சொந்தமான மக்டலேனா வளைகுடாவில் (Magdalena Bay) ஒரு சிறிய நிலப்பகுதியை விலைக்கு வாங்க ஒரு ஜப்பானிய நிறுவனம் முற்பட்டது. ஆனால் 1912-ல் செனட் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட லாட்ஜ் கொள்கை அமெரிக்காவிலுள்ள இராணுவ கேந்தி பகுதியை அமெரிக்கா இல்லாத கம்பெனிகளுக்கு கொடுக்கக்கூடாதெனக் கூறியது. இத்தீர்மானம் எதேச்சதிகாரமான மன்றோ கொள்கையை வெளிநாட்டு கம்பெனிகள் மற்றும் ஆசிய நாடுகளுக்கெதிராக எதேச்சதிகாரமான முறையில் விரிவுப்படுத்தியது.

ஐக்கிய நாடுகள் வாணிபம், நிதி போன்றவற்றில் பெரும் ஆதிக்கம் கொண்ட நாடாக விளங்க வேண்டுமென்ற பேராசையின் அடிப்படையிலே டாப்டின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்திருந்தது. இக்கருத்தை மனதில் கொண்ட அவர் ரூஸ்வெல்ட்டின் பாரம்பரிய தலையிடுதல் மற்றும் திறந்த வாயிற் கொள்கையைப் பின்பற்றினார். நாட்டின் பெருமை உயர்த்தபட வேண்டுமென்பதே இவ்விரு ஜனாதிபதிகளின் பொதுவான நோக்கங்களாகும். ஆதனை நிறைவேற்ற ரூஸ்வெல்ட் பெரும் பிரம்புக் கொள்கையும், டாப்ட் டாலர் கொள்கையையும் கடைப்பிடித்தனர். வெளிநாட்டுக் கொள்கையில் டாப்பட் பின்பற்றிய முறைகள் ரூஸ்வெல்ட்டின் கொள்கையிலிருந்து மாறிய போதிலும் அதன் செயல்முறைகள் மாறவில்லை. வாணிப நலனுக்காக பின்பற்றிய இராஜதந்திரக் கொள்கை ஐக்கிய நாடுகளுக்கு நன்மையை விட தீமையே அதிகம் ஏற்படுத்தியது. இலத்தீன் அமெரிக்க நாடுகள் கடுமையாக எதிர்க்கும் அளவிற்கு வாணிப ஆதிக்க வரம்பைக் கட்டாயமாக விரிவுபடுத்தும் அமெரிக்க கொள்கைக்கு எதிர்ப்பு தோன்றியது. அமெரிக்க முதலீடு சீனாவில் அதிகரித்ததால் பிற நாடுகளின் சந்தேகத்திற்கு வழி வகுத்தது. அமெரிக்க நோக்கத்தை முறியடிக்கும் முயற்சியில் ரஷ்யாவும், ஜப்பானும் செயல்பட்டன. இவ்விரு நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட ஒத்துழைப்பு திறந்த வாயிற்கொள்கை ரத்து செய்யப்படவும், கிழக்கு ஆசியாவில் ஐக்கிய நாட்டுக் கொள்கை தோல்வி அடையவும் வழிவகுத்தது.

**ஊட்ரோ வில்சனும் முதல் உலகப் போரும்**

1912-ம் ஆண்டு நடைப்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகட கட்சி வேட்பாளரான தாமஸ் உட்ரோ வில்சன் வெற்றி பெற்றார். பிரஸ்பிட்டீரியன் போதகரின் புதல்வாரன இவர் அட்லாண்டாவில் வழக்கறிஞராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கினார். ஜான்ஸ் ஹாப் கின்ஸ் பல்கலைகழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற பின்பு இவர் அரசியல் பொருளாதார பேராசிரியராகவும், பிரின்ஸ்'டன் பல்கலை கழகத்தின் தலைவராகவும் பணியாற்றினார். நியூ ஜெர்சி கவர்னராக பணியாற்றிபோது இவருடைய முற்போக்குச் சீர்திருத்தங்களை மக்கள் ஆதரித்தனர். ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக இருந்தபோது இவர் கூட்டு வாணிப அமைப்புகளின் ஏகபோக கட்டுப்பாடுகளிலிருந்து சிறு வாணிகர்களுக்கு விடுதலைப் பெற்றுத்தர "புதிய விடுதலை" என்ற தனது கொள்கைக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென வேண்டினார். இதற்கேற்ப ஷெர்மன் கூட்டு வாணிபத் தடைச் சட்டங்களைச் செயல்படுத்தவும்

சுங்கவரியைச் சீர்திருத்தவும், தொழிலாளர்களுக்கு நல்ல வசதிகள் செய்துக் கொடுக்கவும், வங்கி மற்றும் நாணயத்தை மாற்றியமைக்கவும் ஜனநாயகக் கட்சி உறுதியளித்தது. இத்திட்டங்களை வரவேற்று மக்கள் வில்சனை தேர்ந்தெடுத்தனர். தனது முக்கிய ஆலோசகரான கர்னல் ஹவுஸ் மாநிலச் செயலாளரான பிரியன் ஆகியோரின் சிறந்த ஒத்துழைப்புடன் முன்னேற்ற சீர்திருத்தங்களை உள்நாட்டிலும், முற்போக்குக் கொள்கையை வெளிநாட்டிலும் புதிய ஜனாதிபதியான உட்ரோ வில்சன் செயல்படுத்தினார்.

**புதிய விடுதலையும் முற்போக்குச் சீர்திருத்தமும்**

முக்களாட்சி முறையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவரான வில்சன் தனது தொடக்க உரையில் வாணிப முன்னேற்றம், பெரும் வாணிபங்களை ஒழுங்குபடுத்துதல், தொழிலாளர் நலன்களை விருத்தி செய்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், வங்கியைச் சீர்திருத்தியமைத்தல் போன்ற திட்டங்கள் அடங்கிய கொள்கைகள் பற்றி விளக்கிக் கூறினார்.

**பொருளாதாரச் சீர்திருத்தங்கள்**

சுங்கவரிகளைக் குறைப்பதன் மூலம் வாணிபம் வளர்ச்சியடையும் என்ற நோக்கத்துடன் வில்சன் 1913-ம் ஆண்டில் அண்டர்வுட் (Underwood) சுங்கவரிச் சட்டத்தை இயற்றினார். வரியில்லாப் பொருள்களின் பட்டியலை விரிவுப்படுத்திய இச்சட்டம் பல பொருட்கள் குறிப்பாக இரும்பு, எ.்.கு, பருத்தி, கம்பளி போன்ற பொருட்கள் மீதான வரிகளைக் குறைத்தது. புதிய சுங்கவரிச் சட்டத்தினால் வருவாயில் ஏற்பட்ட இழப்பைச் சரி செய்ய வருமானவரிமுறை கொண்டு வரப்பட்டது. மாநிலங்களுக்கிடையிலும், வெளி நாடுகளோடும் நடைபெறும் வாணிபத்தை ஒழுங்குப்படுத்தி, அதிக நலனைப் பெற கிளேடன் கூட்டு வாணிப தடைச் சட்டமும் (Clayton Anti-Trust Act) 1914-ம் ஆண்டின் வர்த்தக கமிஷன் சட்டமும் இயற்றப்பட்டது.

ஹேன்றி கிளேடன் என்பவரது முயற்சியால் இச்சட்டம் இயற்றப்பட்டதால் அது அவர் பெயரால் கிளேடன் கூட்டு வாணிபத் தடைச் சட்டம் என அழைக்கப்பட்டது. பொருள் வைப்பு அமைப்புகள், இரயில் பாதை, தொழிலாளர் போன்ற தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதே இதன் நோக்கமாகும். விலை வேறுபாடு போட்டியிடும் மற்றொரு நிறுவனத்திடமிருந்து பொருட்களை வாங்குவதில்லை எனப் பொருட்களை வாங்குவோர் உறுதி தந்தால் மட்டுமே பொருட்களைவ ிற்றல், போட்டியைக் கட்டுப்படுத்த இருப்புகளைக் குவித்து வைத்தல், தொழில் நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றில் பல்வேறு நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இயக்குநர்களை நியமித்தல் போன்ற நடவடிக்கைகளை இச்சட்டம் தடைசெய்தது. இச்சட்டம் மீறப்பட்டால் மீறப்பட்ட நிறுவனத்தின் இயக்குநர்களும், அதிகாரிகளுமே அதற்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பு ஏற்க வேண்டும். தொழிலாளர் சங்கங்களும், விவசாயிகளின் அமைப்புகளும் தங்கள் நலன்களைப் பாதுகாக்க அமைதியான முறையில் மறியல் செய்ய அனுமதிக்கப்பட்டன. கிளேடன் கூட்டு வாணிபத் தடைச் சட்டம் தெளிவானதாக இருந்ததோடு அதன் உட்கருத்துக்களில் ஷெர்மன் கூட்டு வாணிபத் தடைச் சட்டத்தை விட மிகவும் சிறந்திருந்தது

வர்த்தகக் குழச் சட்டம் ஐந்து பேரடங்கிய குழுவை உருவாக்கியது. அது தனிநபர்களும் நிறுவனங்களும் நியாயமற்ற முறையில் போட்டியிடுவதை தடை செய்தது.தவறிழைத்தால் அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் அனுமதித்தது. வாணிபநிறுவனங்களின் செயல்முறையை ஆராயவும், சோதனையிடவும் இக்குழுவிற்கு விரிவான அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததால் வாணிப நிறுவனங்கள் கூட்டு வாணிபத் தடைச் சட்டங்களை மீறுவது மிகவும் கடினமாக இருந்தது. வில்சன் நிர்வாகம் ஷெர்மன் கூட்டு வாணிபத் தடைச் சட்டத்தை மீறிய பல பொருள் வைப்பு அமைப்புகளுக்குத் தண்டனை வழங்கியது.

விவசாயிகள் தொழிலாளர்கள் ஆகியோரின் நலனில் வில்சன் அதிக கவனம் செலுத்தினார். விவசாயத்திற்கு அதிக முதலீடு செய்ய வேண்டியதாக இருந்ததால் அவர்களுக்கு கடன் வழங்க 1916-ம் ஆண்டில் கூட்டுறவு நிலவங்கிகளைத் தோற்றுவித்தார். நில வங்கி நிர்வாகத்திற்காக நாடு பன்னிரெண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவு நிலவங்கி ஏழரை லட்சம் டாலர் முதலீட்டுடன் நிறுவப்பட்டது. எல்லாநில வங்கிகளும் கூட்டுறவு விவசாயக் குழுவால் மேற்பார்வையிடப்பட்டது. இதன் விளைவாக வங்கிகளின் மூலம் குறைந்த வட்டியில் நீண்ட காலத் தவணையில் விவசாயக்கடன் பெற்றனர்.

1916-ல் தொழிலாளர் நெருக்கடி ஏற்பட்டது. ரயில்வே ஊழியர்கள் சலுகைகள் பெறுவதற்காக கிளர்ச்சி செய்தனர். அவர்களது கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய 1916-ம் ஆண்டில் ஆடம்சன் சட்டம் (Adamson Act) இயற்றப்பட்டது. ரயில்வேயில் பணிபுரிவோருக்கு எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலைச் செய்தால் அதிக சம்பளம் கொடுக்க வேண்டுமென இச்சட்டம் கூறியது.

புதினெட்டாவது திருத்தச் சட்டம் மதுவிலக்கை நாடு முழுவதும் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. மதுவிலக்கை அமுல் படுத்த போராடிய பல அமெரிக்கச் சிந்தனையாளர்கள் அதற்கென அமைப்புகளை நிறுவினர். ஆதில் எதிர்ப்பு சலூன் கழகம் (Anti-saloon League) வில்சனின் ஆதரவைப் பெற்றிருந்தது. இதன் விளைவாக மதுவிலக்கை நடைமுறைப்படுத்த ஒரு அரசியலமைப்பு திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது. இது தோல்வியடைந்ததால் ரத்து செய்யப்பட்டது. 1933-ம் ஆண்டு இயற்றப்பட்ட இருபத்தி ஒன்றாவது திருத்த மசோதா பதினெட்டாவது திருத்த மசோதாவை ரத்து செய்தது முதல் உலகப் போரில் பெண்களாற்றிய அருந்தொண்டினை மனதிற் கொண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்க பத்தொன்பதாவத அரசியலமைப்பு திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது.

**கூட்டிணைவு வைப்புச் சட்டம்-1913 (Federal Reserve Act)**

வில்சன் நிர்வாகத்தில் நிறைவேற்றப்பட்ட கூட்டிணைவு வைப்புச் சட்டம், வங்கி மற்றும் நாணய முறைகளை மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தச் சட்டமாகும். 1907-ல் வங்கிகள் பல திவாலானதால் 1908-ல் ஆல்டிரிக் வ்ரீலாண்ட் சட்டம் (Aldrich Vreeland Act)இயற்றப்பட்டது. செனட்டர் ஆல்டிரிக் தலைமையிலான குழு, வங்கி தொடர்பான

பிரச்சனைகளை ஆராய்ந்து அறிக்கையை காங்கிரசிடம் சமர்பித்தது. அதில் பதினைந்து கிளைகளைக் கொண்ட தனியார்க்குச் சொந்தமான ஒரு மத்திய வங்கி உருவாக்கப்பட வேண்டுமென ஆலோசனை கூறியது.பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் கார்ட்டர் கிராஸ் (Carter Grass) என்பவர் தலைமையிலான மற்றொரு குழு மையப்படுத்தப்பட்ட வங்கி முறையை அமைப்பதற்கான சட்டத்தை தயாரித்தது. காங்கிரஸ் இச்சட்டத்தை கூட்டிணைவு வைப்புச் சட்டமாக இயற்றியது. இச்சட்டம் பின்வரும் ஷரத்துக்களைக் கொண்டிருந்தது. 1) கூட்டிணைவு வங்கி முறைகளை மேற்பார்வையிட கூட்டிணைவு ஒதுக்கீட்டுக் குழு (Federal Reserve Board) ஒன்று அமைக்கப்பட வேண்டும். இக்குழு செனட் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். பின்பு இதன் எண்ணிக்கை எட்டாக உயர்ந்தது. இதன் ஒரு உறுப்பினர் கூட்டிணைவு ஒதுக்கீட்டு வங்கியின் கவர்னராக நியமிக்கப்படுவார். 2) நாடு பன்னிரண்டுளவங்கிகளைக் கொண்ட மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டிணைவு ஒதுக்கீட்டு வங்கி நிறுவப்படவேண்டும். ஒன்பது இயக்குநர்கள் கொண்ட குழுவின் நிாவாகத்தில் அது விடப்படும். அவர்களில் மூன்று இயக்குநர்கள் கூட்டிணைவு வைப்புக் குழுவால் நியமிக்கப்படுவர். ஏனையயோர் வங்கி பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். முாநில வங்கிகள், தேசிய வங்கிகள் போன்றவற்றின் பங்குகளை உறுப்பு வங்கிகள் வைத்திருந்ததால் இது வங்கிகளின் வங்கியாக இருந்தது. கூட்டிணைவு நிதியைச் சேர்த்து வைப்பதும் உறுப்பினர் வங்கிகளுக்கு கடன் வழங்குவதும், கூட்டிணைவு ஒதுக்கீட்டுக் காகித நாணயங்களை வெளியிடுவதும் இதன் பணியாகும். 3) நாற்பது விழுக்காட்டிற்கு தங்க வைப்பும் எஞ்சியவற்றிக்கு வணிகப் பத்திரங்களும் இருக்குமாயின் காகிதப் பணத்தை வெளியிட கூட்டிணைவு ஒதுக்கீட்டுக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இவைகள் தேவையான வங்கிக் காகிதப் பணத்தை தந்தது. கூட்டிணைவு ஒதுக்கீட்டு வங்கி, காலத்தின் தேவைக்கேற்ப பணப்புழக்கத்தை கூட்டவோ குறைக்கவோ முடியும்.

கூட்டிணைவு ஒதுக்கீட்டுச் சட்டம் மிகச் சிறந்த நிதி நடவடிக்கைகளுள் ஒன்று எனக் கருதப்படுகிறது. வுங்கித் துறையில் தேவையற்ற அரசுத் தலையீடு என பல வங்கி நிறுவனங்கள் இச்சீர்திருத்தத்தை எதிர்த்தன. ஆனால் நாளடைவில் அவைகள் தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டு கூட்டிணைவு ஒதுக்கீட்டு முறையில் உறுப்புகளாகச் சேர முயன்றன. இச்சட்டம் சில தீமைகளை நிவர்த்தி செய்தது. இதுவரை வால் தெருவின் செல்வந்தர்கள் பண அங்காடியைக் கட்டுப்படுத்தினர். இவர்களிடமிருந்து நாட்டின் நிதி அதிகாரத்தை கூட்டாட்சி அரசு எடுத்துக் கொண்டது. இரண்டாவதாக, இச்சட்டம் நாணயப் புழக்கத்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. தேவைகளுக்கேற்ப பணப் புழக்கத்தை அதிகரிக்கவோ, குறைக்கவோ முடியும். மூன்றாவதாக, இச்சட்டம் வங்கிகளின் செயல் முறையில் ஓர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியது. கூட்டிணைவு ஒதுக்கீட்டு முறையின் மூலம் வெவ்வேறு வங்கிகள் தங்கள் மூல வளங்களை வழங்கி நெருக்கடி நிலைகளைச் சமாளிக்க முடியும். எனினும், 1929-ல் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டபோதும் பங்கு மதிப்பு குறைந்த

போதும் கூட்டிணைவு ஒதுக்கீட்டு வங்கிகள் பயனற்றுக் காணப்பட்டன. எனவே இம்முறையை விரிவு படுத்தவும், வலுப்படுத்தவும் பிற்காலத்தில் மாற்றங்கள் தேவைப்பட்டன.

**புதிய இராஜதந்திரக் வெளிநாட்டுக் கொள்கை**

வேளிநாட்டு விவகாரங்களில் ஜனாதிபதி வில்சனுக்கு எத்தகைய அனுபவமும் கிடையாது. ஆனால் போதுமான அறிவும் திறமையும் வாய்ந்த இராஜதந்திரிகளால், குறிப்பாக அவரது மாநிலச் செயராளரான பிரியனின் உதவியுடன் அவரது வெளிநாட்டுக் கொள்கை உரவாக்கப்பட்டது. வெளிநாட்டுக் கொள்கையில் அமெரிக்காவின் பங்கு அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்காக சிறந்த வாயிற் கொள்கைகையும் கரிபியனில் அமெரிக்க ஆதிக்கத்தையும் ஆதரித்தார். அவரது புதிய இராஜதந்திரக் கொள்கை சர்வதேச தார்மீக முறையை விலியுறுத்தியது. ஆனால் நடைமுறையில் இது தோல்வியடைந்தது. இவர் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நேரடி தலையீடு செய்தார். நிகாராகுவாவில் மறுபடியும் டாலர் இராஜதந்திரக் கொள்கையைப் பின்பற்றினார். ஐரோப்பாவில் போரிடும் நாடுகளிடையே பாரபட்ச நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.

**கரிபியன் தலையீடு**

இலத்தீன் அமெரிக்க நாடுகளோடு கொண்டதொடர்பில் அமெரிக்க நாடுகளின் உரிமைகளை மதிப்பது போன்று இலத்தீன் அமெரிக்க நாடுகளின் உரிமைகளை மதிப்பதாகவும், அரசியல் அமைப்புச் சட்டமுறைப்படி பதவிக்கு வந்த எந்த அரசுடனும் நட்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாகவும், டாலர் இராஜதந்திரக் கொள்கையைக் கைவிடுவதாகவும் வில்சன் அறிவித்தார். ஆனால் இத்தகைய வாக்குறுதிகளுக்கு அவர் எத்தகைய மதிப்பும் அளிக்கவில்லை.

பிரெஞ்சு மொழி பேசப்படும் நீக்ரோ குடியரசான ஹெயிட்டியில் அடிக்கடி குழப்பம் ஏற்பட்டது. 1915-ல் கிளர்ச்சிக்காரர்களின் தலைவரான குயில்லாமுவைக் கொன்றனர். இச்சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு வில்சன் ஐரோப்பியத் தலையீட்டைத் தடை செய்ய தனது படைகளை அனுப்பி அங்கு அமெரிக்க அதிகாரத்தை நிலைநாட்டினார். ஹெயிட்டியுடன் செய்து கொண்ட ஒரு உடன்படிக்கை. ஆந்நாட்டின் நிதி மீதான கட்டுப்பாட்டை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அளித்தது. அத்தீவு மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஹெயிட்டி குடியரசு அமெரிக்காவின் மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஹெயிட்டி குடியரசு அமெரிக்காவின் காப்பரசாயிற்று. 1916-ல் ஐக்கிய நாடு டொமினிக்கன் குடியரசிற்கு கடற்படை வீரர்களை அனுப்பி அந்நாட்டின் நிரவாகத்தை கைப்பற்றியது. மேற்குறிப்பிட்ட இராணுவ ஆக்கிரமிப்புகள் உண்மையில் இவ்விரு நாடுகளையும் நியூயார்க்கின் தேசிய நகர வங்கி மற்றும் கப்பற்படை துறையின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு நிலப்பகுதியாக்கின. 1917-ல் ஐக்கிய நாடுகள் வெர்ஜின் தீவுகளை (Virgin Insland) டென்மார்க்கிடமிருந்து விலைக்கு வாங்கியது.

**மெக்ஸிகோ தலையீடு**

செல்வச் செழிப்புடன் விளங்கிய மெக்ஸிகோ நாட்டின் வடபகுதிகளை ஐக்கிய நாடுகள் இணைத்துக் கொண்டதால் அது வலிமையிழந்த சிறிய நாடாக மாறியது. இந்நாட்டின்

பெரும்பான்மை மக்கள் இந்தியரானவர். ஆனால் அதன் ஆட்சியாளர்களாகிய ஸ்பானியர் வடபகுதியிலிருந்து அந்நியர்களுக்கு அந்நாட்டின் பொருளாதார உரிமைகளை விற்றுவிட்டனர். அங்கிருந்த சுரங்கங்களையும், எண்ணெய் வயல்களையும், தோட்டங்களையும், ரயில்பாதைகளையும் அமெரிக்கர் தங்கள் அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தனர். கொடுங்கோலர்களுக்கெதிராக மக்கள் கிளர்ந்து எழுந்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தினர். 1913-ல் ஏற்பட்ட புரட்சியின் போது ஹீர்ட்டா என்பவர் பதவிக்கு வந்தார். அரசியல் சாசன முறைகளுக்கு மாறான வழிகளில் தனது எதிரியான மோட்டேரோவைக் (Modero) கொன்று ஹீர்ட்டா ஆட்சியைக் கைப்பற்றியதாக வில்சன் கருதியதால் ஹீர்ட்டாவை ராஜினமா செய்துவிட்டு தேர்தலை மறுபடியும் நடத்தும்படி உத்தரவிட்டார். எனவே ஹீர்ட்டாவைப் பதவியிலிருந்து நீக்க வில்சன் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆயுத உதவியளித்தார். இதனால் கோபமடைந்த ஹீர்ட்டா 1914-ல் ஒரு சில அமெரிக்கக் கடற்படை வீரர்களை தம்பிகோவில (Tampieo') கைது செய்து, பின்னர் விடுதலை செய்தார். ஆகவே ஹீர்ட்டா மன்னிப்புக் கேட்க வேண்டுமென அமெரிக்காகோரிய போது அவர் மறுத்துவிட்டார். உடனே வில்சன் மெக்ஸிகோ துறைமுகமான வெராக்ரூஸைக் கைப்பற்றினார். இதனால் போர் ஆரும்பமானது. ஆனால ABC (Argentina, Brazil, and Chile') நாடுகள் தலையீட்டு பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முன்வந்தன. அமெரிக்கச் சூழ்ச்சிகளுக்கும், கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கும் உள்ளான மெக்ஸிகோ அரசு வீழ்ச்சியுற்றது. ஹீர்ட்டா ஸ்பெயினுக்குத் தப்பி ஓடவே காரன்சா பதவிக்கு வந்தார். முதலில் காரன்சா அரசுக்குப் பெயரளவு அங்கீகாரம் அளித்த அமெரிக்க ஐக்கிய நாடுகள் நாளடைவில் முழு அங்கீகாரமும் வழங்கியது.

எனினும் மெக்ஸிகோவில் குழப்பம் தொடர்ந்து இருந்து வந்தது. காரன்சாவின் எதிரியான பிரான்ஸிஸ்கோ வில்லா (Francisco Villa) மெக்ஸிகோவிற்கு எதிராக ஐக்கிய நாடுகளைப் போரில் ஈடுபடச்செய்து, காரன்சா நிர்வாகத்தை இழிவுபடுத்த வேண்டுமென்று எண்ணி, நியூ மெக்ஸிகோவிலுள்ள கொலம்பஸ் என்னுமிடத்தைத் தாக்கி 17 அமெரிக்கர்களைக் கொன்றார். எனவே வில்சன், ஜெனரல் பெர்ஷிஸ் என்பவரை மெக்ஸிகோ மீது படையெடுத்துச் செல்ல அனுப்பினார். ஆனால் அவரால் வில்லாவைப் பிடிக்க முயடிவில்லை. எனினும் மெக்ஸிகோவிற்கு எதிராகப் போர் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டதாலும், இலத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்கப் போக்கினை எதிர்த்ததாலும், ஜெர்மனிக்கு எதிராகப் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாலும் ஐக்கிய நாடுகள் மெக்ஸிகோவிலிருந்து தனது படைகளை 1917-ல் திரும்பப் பெற்றுக் கொண்டது. பெர்ஷிஸ் படையெடுப்பு ‘‘அழிவுற்ற படையெடுப்பு’’ என்ற புனைப் பெயரைப் பெற்றது.

1917-ல் மெக்ஸிகோ ஒரு அரசியலமைப்பை நடைமுறைக்கு கொண்டு வந்தது. இது எண்ணெய் மற்றும் கனிவளங்களைத் தேசிய உடமை ஆக்க முயன்றது. மெக்ஸிகோவிலுள்ள அமெரிக்க முதலாளிகளை இது பாதித்ததால் ஐக்கிய நாடு ஒரு கிளர்ச்சியை உருவாக்கி, காரன்சாவை கொலை செய்தது. 1920-ம் ஆண்டில் ஜனாதிபதி அல்வாரோ ஓப்ரிகன் (Alvaro Obregon) என்பவர் அரசு உண்மையாக்கப்பட்ட அமெரிக்கச் சொத்துக்களுக்கு பதிலாக

அமெரிக்கர்களுக்கு மெக்ஸிகோ இழப்பீடு வழங்கும் என்று கூறி ஓர் ஒப்பந்தத்தை ஐக்கிய நாட்டுடன் செய்துகொண்டார். மெக்ஸிகோவிற்கு கோபத்தை உண்டு பண்ணியதாலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியதாலும் வில்சனின் மெக்ஸிகோ கொள்கை தோல்வியாக அமைந்தது. கருத்தியற் கோட்பாட்டை கொண்ட வில்சன், வலிமையற்ற நாடுகள் மீது படையெடுப்பை மேற்கொண்டது.போற்றுவதற்குரியது அன்று மத்திய அமெரிக்க நாடுகள், கரிபியன் நாடுகள் ஆகியவை உண்மையில் நிரந்தரமாக அமெரிக்க அச்சுறுத்தலுக்குள்ளாகிக் கொண்டிருந்தன.

**வில்சனும் முதல் உலகப்போரும் (1914-1918)**

**நடுநிலைக்கான காரணங்கள்**

1914-ம் ஆண்டு முதல் உலகப்போர் ஏற்பட்டபோது வில்சன் நடுநிலையைப் பின்பற்ற விரும்பினர். ‘‘சிந்தனையிலும் செயலிலும் நடுநிலை வகிக்க வேண்டுமென’’ அவர் மக்களை டீவண்டிக் கொண்டார். ஆனால் அவர்களால் பாரபட்சமின்றி நடக்க முடியாமல் தங்கள் அனுதாபத்தை நேச நாடுகளுக்குத் தெரிவித்தனர். கடந்த காலத்தில் ஏற்பட்ட தொல்லைகளிடையேயும் தங்களது ஆங்கிலோ-சாக்ஸன் பரம்பரையையும், பண்பாட்டையும் அவர்களால் மறக்க முடியவில்லை. தனது ஸ்காட்லாந்து முன்னோர்களை வில்சனால் மறக்கமுடியவில்லை. அமெரிக்க சுதந்திரப் போரின்போது பிரான்ஸ் செய்த உதவியை நினைவிற் கொண்டிருந்தார்கள். பிரான்சை ஜனநாயகத்தின் கோட்டை என்றும் பிரிட்டனை பண்பாட்டின் தீபமென்றும் அமெரிக்கர்கள் கருதினர். ஸ்பெயினோடு மேற்கொண்ட போரின்போது அவர்கள் செய்த உதவியை அமெரிக்கர் மறக்கவில்லை. உண்மையில் நேசநாடுகள் ஒரு உண்மையான காரணத்திற்காகப் போரிட்டனர். இந்த ஒரு நம்பிக்கையே அமெரிக்க மக்களை நேச நாடுகளை ஆதரிக்கச் செய்தது.

ஆங்கிலேயர்கள் பிரச்சாரம் அமெரிக்க மக்களைக் கவர்ந்தது. உலகின் செய்தித் தாள்களின் தலைநகராக லண்டன் விளங்கியதால் ஐக்கிய நாடுகளின் செய்தித்தாள்கள் பிரிட்டனுக்கு ஆதரவாக இருந்தன.

பொருளியல் வர்த்தகத் தாடர்பின் காரணமாக ஐக்கிய நாடுகள் பிரிட்டனை ஆதரித்தது. வெகுகாலமாக பொருட்களைவ ிற்பதில் அமெரிக்காவுக்கும் ஜெர்மனிக்கும் கடும் போட்டி நிலவிவந்ததால் அமெரிக்காவின் வாணிபம் நலிந்தது. இச்சூழ்நிலையில் போர் ஏற்பட்டது. பிரிட்டிஷ் கடற்படை மத்திய ஆதிக்கங்களுடைய கடற்கரைகளை முற்றுகையிட்டது. இதனால் ஐக்கிய நாடுகளுக்கு ஜெர்மனியுடனும் அதன் நேசநாடுகளோடும் வாணிபம் செய்யமுடியவில்லை. இந்நிலையில் பிரிட்டனிடமும் அதன் நேசநாடுகளுடனும் மேற்கொண்ட வாணிபம் எதிர்பாராத வளர்ச்சியடைந்தது.

இவ்வாறாக இனம், பண்பாடு, பொருளாதாரம் போன்ற காரணங்களால் அமெரிக்க மக்கள் பிரிட்டனை ஆதரித்தனர்.

**நடுநிலை உரிமைகள் பிரச்சனை**

உயிருக்காகப் போராடும் நிலையில், போரிடும் நாடுகள் நடுநிலைமை உரிமைக்கு எத்தகைய மதிப்பும் அளிக்கவில்லை. போர் ஆரம்பித்த உடனேயே ஜெர்மனியின்

துறைமுகங்களை பிரிட்டன் முற்றுகையிட்டது. எனினும் ஜெர்மனி பால்டிக் கடலின் ஆதிக்கத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து, ஸ்காண்டிநேவியா நாடுகளிடமிருந்தும் அந்நாடு பொருள்களைப் பெற்றது.

எனினும் பால்டிக் கடல்வழியாக ஜெர்மனிக்கு செல்லும் பொருட்களை முற்றிலும் தடைசெய்ய முடியாமையால் எல்லாச் சரக்குகளையும் நடுநிலைக் கப்பல்களிலிருந்து பறிமுதல் செய்யப்போவதாக 1915-ல் நேச நாடுகள் அறிவித்தன. போரின் இறுதியில் ஏற்படும் சேதங்களுக்கு சட்ட ரீதியான இழப்பீட கோருவதற்கே இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகளால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. உயிர் இழப்பு இல்லாததால் இதன் எதிர்ப்புக்கு இருதரப்பினரும் முக்கியத்துவம் அளிக்கவில்லை.

அதே சமயத்தில் பிரிட்டிஷ் தீவுகளைச் சுற்றி காணப்படும் பிறநாட்டுக் கப்பல்கள் மூழ்கடிக்கப்படுமென்றும் நடுநிலை நாடுகளின் கப்பல்கள் இப்பகுதிக்குள் வரக்கூடாது என்றும் ஜெர்மனி 1915-ல் அறிவித்தது. பிரிட்டன் தனது உணவுப் பொருட்களில் ஐந்தில் நான்கு பகுதியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ததால் அந்நாட்டின் வாணிபக் கப்பல்களை மூழ்கடிப்பதன் மூலம் விரோதிகளைப் பட்டினியால் வாடச் செய்து அந்நாட்டை சரணடையச் செய்யலாம் என ஜெர்மனி எண்ணியது. ஆனால் அமெரிக்கர்களின் உயிர், உடமை இழப்புக்கும் ஜெர்மனியே பொறுப்பேற்க வேண்டுமென வில்சன் கூறினார். ஊக்கம் இழக்காத ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் பிரிட்டிஷ் கப்பலான ‘‘பலபா’’ (Falaba) என்ற கப்பலை மூழ்கடித்தது அமெரிக்க எண்ணெய் கப்பலான ‘‘குல்பிளைட்’’ டை (Gulflight) சேதப்படுத்தின. 1915-ல் பிரிட்டிஷ் கப்பலான லூாசிடானியா, அயர்லாந்து கடற்கரைக்கு அப்பால் மூழ்கடிக்கப்பட்டது. இதில் 128 அமெரிக்கர் உட்பட 1198 பேர் உயிரிழந்தனர். வில்சன் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். இதனால் போர் ஏற்படலாம் என்று வில்சன் தனது இரண்டாவது உரைவயில் கூறியபோது பிரியன் ராஜினமா செய்தார். அதனால் மாநிலச் செயலாளராக லான்சிங் நியமிக்கப்பட்டார். இந்த சோக நிகழ்ச்சிக்கு ஜெர்மனி அமெரிக்காவிடம் மன்னிப்பு கோரியது. இதற்கிடையில் ‘‘அராபிக்’’ என்ற மற்றொரு பிரிட்டிஷ் கப்பல் நாசமாக்கப்பட்டது. பிரயாணிகளின் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யாமல் எந்த ஒரு பயணக் கப்பலையும் மூழ்கடிப்பதில்லையென ஜெர்மனி வாக்குறுதியளித்தது. இதுவே 1915-ம் ஆண்டின் ‘‘அராபிக் உறுதிமொழியாகும். 1916-ல் ‘‘சசெக்ஸ்’’ என்ற பிரெஞ்சுக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட போது ஒரு சில அமெரிக்கர் காயமடைந்தனர். போர் பிரகடனம் செய்யப் போவதாக ஐக்கிய நாடுகள் அச்சுறுத்தவே, 1916-ம் ஆண்டின் சசெக்ஸ் உறுதிமொழியின் படி முன்னெச்சரிக்கையின்றியும், மனித உயிர்களைக் காப்பாற்றாமலும் வாணிபக் கப்பல்களை மூழ்கடிப்பதில்லையென ஜெர்மனி மீண்டும் வாக்குறுதியளித்தது. நடுநிலை உரிமைகள் பற்றிய பிரச்சனைகளின் போது ஐக்கிய நாடுகள் பிரிட்டன் மீது சற்று மிதமாகவும், ஜொமனி மீது வன்மையாகவும் நடந்துக் கொண்டது.

**அமைதிக்கான முயற்சிகள்**

நடுநிலைக் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டுமானால் போர் நிறுத்தப்பட வேண்டுமென வில்சன் கருதினார். 1915-ல் அமைதி முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் ஐரோப்பிய நாடுகள் போரினைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று விரும்பின. எனினும் 1916-ம் ஆண்டு மறுபடியும் அனுமதியை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. போர் நிறுத்தத்திற்கான மாநாடு ஒன்று கூட்டுவது பற்றி பிரிட்டனுடன் உடன்பாடு ஏற்பட்டது. நேச நாடுகள் தோல்வி அடைவது போன்று தோன்றினால் ஜெர்மனியிடம் கொடுப்பதற்காக இவ்வுடன்பாடு ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. போரில் நேச நாடுகளுக்கு எதிரான சூழ்நிலை ஏற்படுமாயின், ஜெர்மனி மீது போர் தொடுப்பதற்கான ஒரு காரணத்தை உருவாக்கவே அமைதி மாநாட்டைப் பயன்படுத்த, ஐக்கிய நாடுகள் திட்டமிட்டிருந்தது. 1916-ல் வில்சன் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பின் “ஜெர்மனி வெற்றி பெறுமாயின் அது நமது நாகரிகத்தின் போக்கை மாற்றிவிடும்'' என அறிவித்தார்.

**போரை நோக்கி**

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஐக்கிய நாடுகளைப் போரில் ஈடுபடுத்தின. 1917-ல் போர் பிராந்தியத்தில் நுழையும் எல்லா கப்பல்களுமே மூழ்கடிக்கப்ப:மென்று ஜெர்மனி அறிவித்தது. உடனடியாகவே வில்சன் ஜெர்மனியோடு கொண்ட இராஜாங்க உறவை முறித்துக்கொண்டார்.1917-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஜப்பான், மெக்ஸிகோ போன்ற நாடுகளின் உதவியை நாடுகிறது என்ற செய்தியை கேட்டு அமெரிக்கா கோபமடைந்து மெக்ஸிகோவின் ஜெர்மன் அமைச்சரான டாக்டர் ஷிம்மர்மான் அனுப்பிய செய்தியில் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பினை ஆராயும்படி ஆலோசனை கூறப்பட்டிருந்தது. உடன்படிக்கைக்குப் பதிலாக இழந்த பகுதிகளான டெக்ஸாஸ், நியூ மெக்ஸிகோ, அரிசோனா ஆகிய பகுதிகளை மறுபடியும் கைப்பற்ற ஆதரவு அளிப்பதாகவும் ஜெர்மனி வாக்களித்தது. இச்செய்தியை பிரிட்டன் வாஷிஹ்டனுக்கு அனுப்பியது போரை முன்பே பிரகடனப்படுத்த வேண்டுமென விரும்பிய அமெரிக்க நிர்வாகத்திற்கு இது நல்லதோர் வாய்ப்பபைத் தந்தது.

நேச நாடுகளுடன் அமெரிக்கா உடனடியாகச் சேரவேண்டிய அவசரத்தை ரஷ்யப் புரட்சி துரிதப்படுத்தியது. ரஷ்ய முற்றுகை அநேக ஜெர்மன் படைப்பிரிவுகளை கிழக்கரங்கில் ஈடுபடச் செய்தது. ஆனால் 1917-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரஷ்யாவில் குழப்பம் ஏற்பட்டது. ஜெர்மனி மேற்கு அரங்கில் அதிகக் கவனத்தைச் செலுத்தி பிரான்சை முறியடித்து, வெற்றிபெற முடியுமென்ற அச்சத்தை இது ஏற்படுத்தியது. எனவே உடனடியாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரில் இறங்கியது.

**போரில் அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

ஐக்கிய நாடுகள் போரில் இறங்கிய போது நேச நாடுகளின் நிலை மிகவும் இக்கட்டாக இருந்தது. 1917-ல் நவம்பர் மாதத்தில் ரஷ்யா பிரஸ்ட் லிட்டோவ்க்ஸ் (Brest Litovsk) என்ற உடன்படிக்கையை ஜெர்மனியுடன் செய்து கொண்டு, நேச நாடுகளின் கூட்டிலிருந்து விலகியது. கிழக்கரங்கிலிருந்து விடுவிக்கப்பட்ட ஜெர்மன் படைகள் பிரான்சுக்கு எதிராகச் சென்றது. காபோரிட்டோ (Carporetto) போரில் இத்தாலி படுதோல்வியடைந்தது.

பிரிட்டிஷ் கடற்படையின் வலிமையும் பெரும் அளவில் குன்றியிருந்தது. போரின் போக்கைத் திருப்ப வேண்டுமாயின் வலிமை வாய்ந்த முயற்சியை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டியிருந்தது.

போர் பிரகடனப்படுத்தப்பட்ட உடனேயே ஐக்கிய நாடுகள் மாபெரும் படை ஒன்றைத் திரட்டியது. சிற்பு பணிச் சட்டத்தின் (Selective Service Act) கீழ் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்ட அனைவரும் இராணுவப் பணிகளுக்குத் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஆறுமாத ஆரம்ப பயிற்சிக்குப் பின்னர் தீவிர பயிற்சிக்காகவும், நேரடி பயிற்சிக்காவும் அவர்கள் ஐரோப்பாவிற்கு அனுப்பப் பட்டனர். தளபதி பெர்ஷிங் தலைமையின் கீழ் இயங்கிய அமெரிக்காவின் சிறந்த பஙை வந்தடைந்தபோது அது நேச நாடுகளின் படைகளின் உற்சாகத்தை அதிகரித்தது. பாரிசைக் கைப்பற்ற வேண்டுமென்ற முயற்சியில் தோல்வியடைந்த போதிலும் வலிமை வாய்ந்த எதிரிப்படைகள் மீது, ஜெர்மனியர்கள் நம்பிக்கை இழந்த நிலையில் தாக்குதலை மேற்கொண்டனர். நேச நாட்டுப் படைகள் எதிர்தாக்குதலைத் தொடங்கின. வெர்டூனுக்கு அருகாமையில் தளபதி பெர்ஷிங் புதிய போர் முனையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார். 1918-ம் ஆண்டு நவம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் நேசநாட்டுப் படையினர் ஆக்கிரமிப்புப் படைகளை பிரான்சிலிருந்து துரத்தியடித்தனர். ஜெர்மனி மீது தாக்குதல் ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா தயார் செய்தது. ஆனால் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆழ்கடல் போரிலும் அமெரிக்கா உதவி செய்தது. அமெரிக்கக் கடற்படை வாணிபக் கப்பல்களைப் பாதுகாத்தது. மேலும் பிரிட்டிஷ், பிரெஞ்சு கடற்படைகளின் உதவியோடு ஜெர்மனியின் கடற்படை வலிமையை அழித்தது. நேச நாடுகள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கும், வெற்றி பெறுவது வரை கப்பல் தகடு தொழிலை நடத்துவதற்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வழங்கிய கடன்களைப் பயன்படுத்தின.

புயிற்சி பெற்ற துருப்புகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும் பொருளாதார மூலவளங்களை திரட்டுவதற்கும் உள்நாட்டில் எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. சிறப்புப் பணிச் சட்டத்தின்படி எல்லா ஆண்களும் இராணுவத்திலோ அல்லது தேசிய காவல் துறையிலோ பணிபுரிய தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். நிலக்கரி, இரும்பு ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி அவைகளின் பயன்பாட்டைக் குறைக்க எரிபொருள் நிர்வாகம் ஒன்று உருவாக்கப்பட்டது.

போர் முயற்சிகளை விருத்தி செய்யும் பொருட்டு போர்த் தொழிற்கூடங்கள் குழு உற்பத்திக் தொழிலகங்களை ஒழுங்குபடுத்தியது. அவசரகால போர்க்கப்பல்கள் நிறுவனம் கடற்படையின் தேவைகளைக் கவனித்து வந்தது. போர்த் தளவாடங்களைத் துரிதமாகக் கொண்டுசெல்ல, அரசு ரயில் நிர்வாகத்தை மேற்கொண்டு ரயில்களை இயக்கியது. வரிகள் உயர்த்தப்பட்டு, போரைத் திறம்பட நடத்த தனிநபர் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

**பதினான்கு அம்சங்கள்**

நடுநிலை உரிமைகள் பற்றிய பிரச்சனையின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் ஜெர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்தது. ஆனால் நடுநிலை உரிமைகள் பிரச்சனையும்,

கடன் சுதந்திரம் பற்றிய பிரச்சனைகளையும் அமெரிக்க மக்களின் உணர்வை எதிர்பார்த்த அளவு தூண்டவில்லை என வில்சன் உணர்ந்திருந்தார். ரஷ்யாவில் போல்ஷ்விக் பிரிவினர் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் அவர்கள் ஏகாதிபத்திய நாடுகளோடு சார் மன்னர்கள் செய்து கொண்ட ரகசிய உடன்படிக்கைகளை வெளியிட்டனர். இது உலகரங்கில் நேச நாடுகளுக்கு இழுக்கை ஏற்படுத்தியது. ஏனெனில் நேச நாடுகளின் சூழ்ச்சியும் அதனுடைய நோக்கங்களும் இதனால் வெளிப்படுத்தபட்டன. கம்யூனிசப் பிரச்சாரத்தால் ஏற்பட்ட இழப்புகளை நிவர்த்தி செய்ய ஏதாவது செய்தாக வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டது. இத்தகைய சூழ்நிலைகளில் போர் லட்சியங்கள் அடங்கிய அிறகயையானது போரைத் தொடர நேச நாட்டு மக்களுக்கு ஊக்கமளித்து, அதே வேளையில் ஜெர்மன-ஆஸ்திரிய மக்களை ஆர்வம் இழக்கச் செய்யுமென்று வில்சன் கருதினார். இதைத் தொடர்ந்து 1918-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் நாள் பதினான்கு அம்சத்திட்டம் உருவாக்கப்பட்டது. எனினும் வில்சன் அத்திட்டத்தில் தனது இலட்சியத்தையும் உலக அமைதிக்கான நம்பிக்கையையும் புகுத்தியிருந்தார் என்பதை மறுக்க முடியாது.

புதினான்கு அம்சத் திட்டத்தின் கருத்துக்களை மூன்று தலைப்புகளில் அமைக்கலாம். முதல் ஐந்து திட்டங்களும் போரை நிறுத்துவதற்கான பொதுவான காரணங்களைப் பற்றியதாகும். இவை ரகசிய இராஜதந்திரத்திற்குப் பதிலாக வெளிப்படையான இராஜதந்திரத்தையும, கடல்களில் சுதந்திரத்தையும் வாணிகத் தடைகளைக் குறைத்தலையும், படைக்காலக் குறிப்பையும், குடியேற்றஉரிமைகள் பாரபட்சமற்ற முறையில், அப்பகுதி பூர்வீக மக்களின் விருப்பங்களைக் கருத்திற்கொண்டு தீர்க்கப்பட வேண்டுமெனவும் கூறின. ஆறிலிருந்து பதின்மூன்று வரையுள்ள திட்டங்கள் ஐரோப்பிய சுயநிர்ணய பிரச்சனை பற்றியது. தங்கள் விருப்பத்திற்கேற்ற அரசின்கீழ் வாழும் மக்களின் அடிப்படை உரிமைக்கு இது முக்கியத்துவமளித்தது. இதன்படி போலந்து ஒரு தனி சுதந்திர நாடாக்கப்பட வேண்டும். அல்சேஸ், லோரேன் பகுதிகள் பிரான்சிற்குக் கொடுக்கப்பட வேண்டும். பெல்ஜியத்திலிருந்து அண்ணிய ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும். துருக்கியின் சிறுபான்மையினர் பாதுகாக்கப்பட வேண்டும். தேசியத்தின் அடிப்படையில் இத்தாலி பால்கன் நாடுகளின் எல்லைகள் திருத்தியமைக்கப்பட வேண்டும். இறுதித் திட்டமான பதினான்காவது திட்டம் நாடுகளின் பொதுவான அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கையாகும். இது புதிதான ஒன்றல்ல ஆனால் வில்சன் இத்தகைய கருத்திற்கு திட்டவட்டமானவடிவம் தந்து அவரது சமாதானத் திட்டத்திற்குஅதனை அடிப்படையாக மாற்றினார். வல்லமைச் சமநிலைக் கொள்கை அனைத்து நாட்டிலும் அமைதியை நிலைநாட்டத் தவறியதால், வில்சனின் கொள்கை உலகத் தலைவர்களின் ஒப்புதலைப் பெற்றது.

போரை நிறுத்துவதற்கும் பதினான்கு அம்சத் திட்டத்தின் அடிப்படையில் அமைதியை ஏற்படுத்தவும் சர்வதேச நாடுகளின் மாநாடு ஒன்றை வில்சன் கூட்ட வேண்டுமென 1918-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஜெர்மனி ஆலோசனை வழங்கியது. ஆனால் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்பு கெய்சர் உட்பட ஜெர்மனியின் இராணுவத் தலைவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென வில்சன் குறிப்பிட்டார். இரண்டாம்

வில்லியம் தனது பதவியைத் துறந்து ஹாலந்துக்குத் தப்பி ஓடினார். ஜெர்மன் மக்கள் ஒரு ஜனநாயக அரசியலமைப்பை உருவாக்கினர். வெற்றி பெற்ற நாடுகள் தங்களுக்கு அமைதியும், நீதியும் வழங்குமென எதிர்பார்த்த அவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

ஊண்மையில் வில்சனின் கொள்கைகள் பலத்த எதிர்பார்ப்புகளை நோக்க நேர்ந்தது. வெற்றியின்றி அமைதியை ஏற்றுக்கொள்ள நேசநாடுகள் தயாராக இல்லை. தோற்கடிக்கப்பட்ட நாடுகளிடமிருந்து நிலப்பகுதிகளைக் கைப்பற்றவும் போர் நஷ்டஈடு வழங்க அவைகளைக் கட்டாயப்படுத்தவும் வெற்றி பெற்ற நாடுகள் தீர்மானித்தன. பிரிட்டனின் வலிமை அதன் கடற்படையை சார்ந்திருந்தமையால் அது கடல்களின் சுதந்திரத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தது. இனசமத்துவகட கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஜப்பான் கருத்துரை வழங்கியது. பிரிட்டனின் யோசனையினால் வில்சன் அதனை நிராகரித்தார். நாடுகளிடையில் நிலவிய சந்தேகத்தால் அமெரிக்க ஜனாதிபதியின் கருத்தியற் கோட்பாட்டைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. சர்வதேச சங்கம் உருவாக்க அவைகள் ஒப்புக்கொண்ட போதிலும், அதனை அமைதிக்கான வலிமை வாய்ந்த கருவியாக்கும் வகையில் தங்களது உரிமைகளில் போதுமானவற்றை விட்டுக்கொடுக்க நேசநாடுகள் தயாராக இல்லை. ‘‘எல்லா வல்ல கடவுள் பத்துக் கட்டளைகளே வழங்கியுள்ளார்.’’ ஆனால் வில்சன் பதினான்கு கட்டளைகளைக் கொடுத்துள்ளார் என பிரெஞ்சு பிரதமர் கிளமென்சோ அறிவித்ததில் வியப்பொன்றுமில்லை. நேச நாடுகளுக்கு அதனுடைய பொருளாதாரத்தைச் சீர்திருத்தி அமைப்பதற்கு ஐக்கிய நாடுகளின் உதவியின்றியமையாததாக இருந்தது.

வேளிநாட்டு இடையூறுகளைச் சமாளித்த வில்சன், தாய்நாட்டில் பெரும் எதிர்ப்புகளை எதிர் நோக்கினார். 1918-ல் காங்கிரசுக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் அவரது ஜனநாயக்கட்சி பெரும்பான்மை இடங்களைப் பெற இயலவில்லை. குடியரசுக் கட்சி வெற்றி பெற்றது. எனினும் குடியரசுக் கட்சியைச் சார்ந்த முக்கியத் தலைவர்கள் யாரையும் உடனழைத்துச் செல்லாது, பாரீஸ் சமாதானமாநாட்டிற்கு வில்சன் தானே நேரில் சென்று கலந்து கொண்டார். 1919-ம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பமான இம்மாநாட்டுக் கூட்டத்தொடரில் இருபத்தேழு நாடுகள் கலந்து கொண்டன. தன்னுடைய இலட்சியக் கொள்கைக்கு முரணாக, தோற்கடிக்கப்பட்ட நாடுகள் மாநாட்டிற்கு அழைக்கப்படவில்லை. அமெரிக்க ஜனாதிபதி வில்சன் பிரிட்டிஷ் பிரதமர் லாயிட் ஜார்ஜ், பிரெஞ்சுப் பிரதமர் கிளமென்சோ, இத்தாலியப் பிரதம அமைச்சர் ஓர்லாண்டோ ஆகியோர் திறந்த இராஜதந்திரக் கொள்கைக்கு எதிராக இரகசியமாகக் கூடி முக்கியமான பிரச்சனைகள் குறித்து முடிவெடுத்தனர். அதோடு அமெரிக்காவில் அதனுடைய தனிப்பட்ட நலன்களை பிறநாடுகள் அங்கீகரிக்கும்படி வில்சன் செய்தார். இவ்வாறாக சர்வதேச உடன்பாட்டில் மன்றோ கொள்கை புகத்தப்பட்டது. உடன்படிக்கைகள் முடிவு செய்யப்பட்ட போது அவை வெற்றி பெற்றோரின் அமைதிக்கான கருவியாகத் தோன்றியது. ஜெர்மனி மற்றும் அதன் கூட்டு நாடுகளின் எல்லைகள் குறைக்கப்பட்டன. அவைகளின் குடியேற்றங்களை எடுத்துக் கொண்டனர். போர் நஷ்டஈடாக அவைகள் பெரும் தொகை கொடுக்க வேண்டுமெனக் கூறப்பட்டன. நேச நாடுகளின் நலன்களுக்கு ஏற்றவாறு சுய நிர்ணய கோட்பாடு அடிக்கடி மீறப்பட்டது. குடியேற்றங்களுக்கு

சுதந்திரம் வழங்கப்படவில்லை. உண்மையில் அமைதிக்கோ, மக்களாட்சி முறைக்கோ ஏற்றதாக உலகம் ஆக்கப்படவில்லை. எனினும் நாடுகள் சர்வதேச சங்கத்தின் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டன.

ஜனாதிபதி உள்நாட்டில் இல்லாமையால் அவரது செல்வாக்குகுன்றி எதிர்ப்புகள் வளர்ந்தது. சர்வதேச சங்கம் ஒருவித பிரச்சனையை ஏற்படுத்தும் கூட்டு எனவும், இத்தகைய கூட்டுகளில் சேரக்கூடாதென முன்பே வாஷிங்டன், ஜெபர்சன், மன்றோ போன்றோர் அமெரிக்கரை எச்சரித்திக்கின்றனரென்றும் அநேக தலைவர்கள் கூறினர். அமெரிக்காவின் ஜெர்மன் வழித் தோன்றல்கள் தங்களது தாய்நாட்டிற்கு எதிராக வெர்செயில்ஸ் உடன்படிக்கை தேவையற்ற முறையில் கடுமையாக இருப்பதைக் கண்டித்தனர். சீனாவின்ஷாண்டுங் பகுதியை ஜப்பானுக்குக் கொடுப்பதை ஜப்பானிய எதிர்ப்பு நாடுகள் எதிர்த்தன. காங்கிரசில் பெரும்பான்மை பெற்றிருந்த தங்களுக்குப் பாரிஸ் சமாதான மாநாட்டில் உரிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வில்லையென குடியரசுக்கட்சியினர் கோபம் கொண்டனர். இவ்வுடன்பாட்டை வில்சனின் படைப்பாகக் கருதிய அவர்கள் அதனைத் தோற்கடிக்கத் தீர்மானித்தனர்.

1919ல் நாடு திரும்பிய வில்சன் சமாதான உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும்படி மக்களிடம் கேட்க விரும்பினார். ஆனால் பக்கவாதத்தால் பீடிக்கப்படவே அவர் காங்கிரசுக்கு தலைமை ஏற்க செல்ல முடியவில்லை. எனவே அவரது மனைவியே நிர்வாகத்தின் உண்மையான அதிகாரத்தைப் பெற்றதாகத் தெரிகிறது.

**மீண்டும் தலையீடாக் கொள்கை**

1920-ம் ஆண்டிலிருந்து 1930-ம் ஆண்டுவரை அமெரிக்காவில் குடியரசுக் கட்சியைச் சார்ந்த வாரன் ஜி.கார்டிங், கால்வின் கூலிட்ஜ் ஹெர்பெர்ட் ஹீவர் ஆகியோர் ஜனாதிபதியாகத் திகழ்ந்தனர். பின்பு ஜனநாயகக் கட்சி வேட்பாளரான F.D. ரூஸ்வெல்ட் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். குடியரசுக்கட்சி நிாவாகத்தின் இளுதியில் ஏற்பட்ட பெரும் நலிவு மக்களின் பொருளாதார வாழ்க்கையைப் பெரிதும் பாதித்தது.

தலையிடும் கொள்கையிலிருந்து தலையிடாக் கொள்கைக்கும் முன்னேற்றக் கொள்கையிலிருந்து பழமையான கொள்கைக்கும் மீட்டலே இக்காலத்தில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வளர்ச்சிக்கு அநேக காரணங்கள் உண்டு. போரின் விளைவாக அமெரிக்கர் பயங்கர இழப்புகளுக்குள்ளாயினர். நாட்டின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. மேலும் போரின் விளைவுகள் அமெரிக்க மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. தாராள கொள்கையினர் வில்சனின் கருத்தியற் கோட்பாடுகளால் வழி நடத்தப்பட்ட உலகம் ஜனநாயகத்திற்கு ஏற்றதொரு இடமாக்கப்படும் என நம்பினர். ஆனால் ஜனநாயகத்தையும் அமைதியையும் உலகத்தில் நிலைநாட்ட முடியவில்லை. தோற்ற நாடுகளைப் பழிவாங்க வேண்டுமென்று செய்து கொண்ட உடன்படிக்கைகள் பொருளாதாரத்தை கடுமையாகப் பாதித்தது. எனவே புரட்சிகள் ஏற்பட்டது. சர்வாதிகாரம் எழுந்தது. எடுத்துக்காட்டாக ரஷ்யாவில் கம்யூனிசமும், இத்தாலியில் பாசிசமும், ஜெர்மனியில் நாசிசமும் எழுச்சியுற்றன. நேச நாடுகளுக்கு வழங்கிய கடனைக் கூட வசூலிப்பது அமெரிக்காவிற்கு முடியவில்லை.

மேலும் வணிகர்களின் செல்வாக்கைத் தடை செய்ய தாராளக் கொள்கையினர் விரும்பினர். ஆயுதங்களை அதிகமாக உற்பத்தி செய்யும் முதலாளித்துவ நாடுகள் போரைத்தான் விரும்பின. ஆமெரிக்காவில் அநேகர் போரையும் போரின் விளைவுகளையும் வெறுத்தனர். இறுதியில் மறைந்த தலைவர்கள், குறிப்பாக வாஷிங்டன், ஜெபர்சன் மன்றோ ஆகியோர்களுடைய கொள்கைகளை அமெரிக்கா பின்பற்ற எண்ணிய போது சர்வதேச சங்கத்தை நிராகரித்து, தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியது. எனினும் கூட்டுப் பாதுகாப்பைப் போற்றுவதன் மூலம் தலையிடாக் கொள்கையை முற்றுப் பெறச் செய்ய வேண்டுமென விரும்பியதால் குடியரசுக் கட்சியினரால் சர்வதேச அரங்கை முழுமையாகப் புறக்கணிக்க இயலவில்லை.

தேசியக் கொள்கையும், பழமைக் கொள்கையும் வழிகாட்டும் கொள்கைகளாகக் கருதப்பட்டன. முன்னேற்றக் கொள்கையானது கைவிடப்படவில்லை. எனினும் எவ்விதக் கட்டுப்பாடுமற்ற தனியார் பொருளாதாரக் கொள்கை அக்காலத்தில் உறுதியாக மேற்கொள்ளப்பட்டது. ஏனெனில் குடியரசுக் கட்சியை பிரபுக்களும் பெரும் வணிக வர்க்கத்தினரும் ஆதரித்து வந்தனர். மேலும் ரஷ்யப் புரட்சியின் விளைவுகளையும், கம்யூனிச வாதிகளால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளையும் கண்டு அமெரிக்கர் வெறுப்புற்றனர்.

**சர்வதேச சங்கம் நிராகரிக்கப்படல்**

சர்வதேச சங்கம், வெர்செயில்ஸ் உடன்படிக்கை போன்றவற்றை நிராகரித்தது, தலையிடாக் கொள்கையின் ஒரு முக்கிய கட்டமாகும். ஊன்பாட்டிற்கு ஆதரவளித்த வில்சனின் ஜனநாயகட்சியின் ஆதரவாளர்கள், உடன்படிக்கையில் திருத்தங்களை விரும்பும் மிதவாதிகள், உடன்பாட்டிற்கு இணங்காதவர்கள் என மூன்று பிரிவாக செனட்டில் இருந்தனர். சங்கத்திற்கான எதிர்ப்பு பல்வேறு வழிகளிலும் வந்தது. செனட்டில் குடியரசுக் கட்சியை சார்ந்த பெரும்பான்மையோரை வில்சன் கலந்து ஆலோசிக்காமல் சமாதான உடன்படிக்கை செய்ததால் அவர்கள் இவ்வுடன்பாட்டை நிராகரித்தனர். கருத்தியல் கொள்கைவாதிகளும், அமெரிக்க ஜெர்மனியரும், ஜெர்மனிக்கும் அதன் கூட்டு நாடுகளுக்கும் எதிராக உடன்படிக்கை மிகக் கடுமையாக இருக்கிறதென்று கூறி அதனை எதிர்த்தனர். வெறுக்கப்பட்ட ஜப்பானியர்களுக்கு ஜெர்மனியின் கிழக்காசியப் பகுதிகள் கொடுக்கப்பட்டன. சர்வதேச சங்க உறுப்பு நாடுகள் தங்களுடைய வெளிநாட்டுக ் கொள்கையில் தங்கள் சுதந்திரத்தை இழந்துவிடக் கூடுமென்று அஞ்சின. உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் பிற உறுப்பு நாடுகளை ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாக்க வேண்டுமென உடன்படிக்கையின் பத்தாவது ஷரத்துக் கூறியது. இது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றன்று. இதனால் போரில் வெற்றி பெற்ற நாடுகள், நேர்மையற்ற முறையில் ஆக்கிரமித்த நிலப்பகுதிகளை, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆதரிக்க வேண்டியதிருக்கும் என அஞ்சப்பட்டது.

மாசசூசட்ஸைச் சார்ந்த ஹென்றி காபட்லாட்ஜ் சங்கத்தின் உடன்படிக்கையில் பதினான்கு திருத்தங்களைக் கொண்டு வந்தார். அதில் மிக முக்கியமானது உறுப்பு நாடுகளின் ஒருமைப்பாட்டைக் காக்க பத்தாவது ஷரத்துப்படி படை அனுப்ப வேண்டுமாயின்

காங்கிரசின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் ஜனாதிபதி இதனை எதிர்த்தார். இது குடியரசுக் கட்சி ஏற்றம் பெற வழிவகுத்தது.

1919-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் நாள் செனட் வெர்செயில்ஸ் உடன்படிக்கையையும் சர்வதேச சங்கத்தையும் நிராகரித்தது. ஐக்கிய நாடுகள் ஜெர்மனியோடு போரில் ஈடுபட்டடிருப்பதைத் தெளிவாக உணர்த்தியது. எனவே 1921-ல் காங்கிரஸ் ஒரு கூட்டுத் தீர்மானத்தை இயற்றி, போர் முடிவுற்றதாக அறிவித்தது. சுருங்கக் கூறின் மக்களின் அறியாமை, பிறநாடுகளின் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற எண்ணம், போருக்குப் பின்னால் ஏற்பட்ட தவறான கருத்து. செனட்டின் மேலாண்மை நிலைநாட்ட வேண்டுமென்ற ஆசை மற்றும் வில்சனின் வீழ்ச்சி ஆகியவையே சங்கத்தை நிராகரிப்பதற்கான காரணங்களாகும்.

**வூஷிங்டன் மாநாடு**

சர்வதேச சங்கம் நிராகரிக்கப்பட்ட போதிலும் ஐக்கிய நாடுகள் கூட்டுப் பாதுகாப்பின் மூலம் அமைதியை நிலைநாட்ட முயன்றது. ஜப்பானின்செல்வாக்கும், பசிபிக் பகுதிகளில் படை பெருக்குப் போட்டியில் ஏற்பட்ட பிரச்சனைகளும் நீண்ட நாட்களாக ஐக்கிய நாடுகளின் கவனத்தை ஈர்த்தன. 1902-ம் ஆண்டின் ஆங்கிலோ-ஜப்பானிய உடன்பாடு அமெரிக்காவின் ஜப்பானியக் கொள்கைக்குப் பாதகமாயிருந்து தூரக்கிழக்கில் அமெரிக்க நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் ஜப்பானுடன் கொண்ட உடன்பாட்டிலிருந்து பிரிட்டனை பிரித்து, ஆயுதங்கள் உற்பத்தியில் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டுமென்று அமெரிக்கா கருதியது. ஆயுதங்களைக் குறைப்பது பற்றி விவாதிப்பதற்காக ஒரு மாநாடு 1921-ல் அமெரிக்க ஜனாதிபதி ஹார்டிங் வாஷிங்டனில் கூட்டினார். அதில் பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் பங்கெடுத்துக் கொண்டன. பசிபிக் தூரக் கிழக்குப் பிரச்சனைகளை விவாதிக்க பசிபிக் நாடுகளான சீனா, நெதர்லாந்து, பெல்ஜியம், போர்ச்சுக்கல் ஆகியவற்றிக்கு அழைப்பு அனுப்பட்டது. பிரிட்டன மற்றும் அதன் டொமினியன் நாடுகளின் அதிகாரபூர்வமற்ற ஆதரவோட இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ரஷ்ய-ஜப்பானியப் போரிலிருந்து ஐக்கிய நாடுகளுக்கும், ஜப்பானுக்குமிடையில் பதட்ட நிலை வளர்ந்து வந்தது. இவ்விரு நாடுகளுமே பசிபிக் பகுதியில் மிகவும் வலிமை பெற்ற நாடுகளாக உருவெடுத்தன. ஹவாய் தீவுகளையும், பிலிப்பைன்சையும் அமெரிக்கா இணைத்துக் கொண்ட போது தைவான், சகாலின் ஆகியவற்றை ஜப்பான் இணைத்தது. இவ்விருநாடுகளுமே கடற்படையின் பலத்தைப் பெருக்கின. தங்கள் நாட்டில் மக்கட்தொகை பெருக்கம் காரணமாக ஜப்பானியர்கள் ஹவாய் தீவுகளுக்கும், கலிபோர்னியாவிற்கும், பின்னர் மெக்ஸிகோவிற்கும் சென்றுக் குடியேறினர். ஆனால் இப்பகுதிகளில் இந்த குடியேற்றத்தை தடை செய்ய அமெரிக்கர் முயன்றனர். எனவே ஜப்பானியர்கள் மேற்கிலும் ஆசியாவின் மத்திய பகுதிக்கும் சென்றனர். அங்கும் அமெரிக்காவின் திறந்த வாயிற் கொள்கையே அவர்களுக்கு இடையூராயிருந்தது.

எனினும், முதல் உலகப் பொருக்குப்பின் பசிபிக் பகுதியில் பேரரசை நிறுவுவதில் ஜப்பான், ஐக்கிய நாடுகளை விஞ்சிவிடுவது போன்று தோன்றியது. ஜப்பான், மஞ்சூரியாவில்

தனது செல்வாக்கை நிலைநாட்டி, ஷாண்டுங்கைக் கைப்பற்றி ஜெர்மன் குத்தகைப் பகுதியான கியோவோசோவையும், பூமத்திய ரேகை தீவுகளையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது. போல்ஷிவிக் கட்டுப்பாட்டிலிருந்து டிரான்ஸ் சைபீரியன் ரயில் பாதையைக் காக்கும் முயற்சியில் 1919-ல் நேச நாடுகள் தங்கள் படைகளை ரஷ்யாவின் ஆசியப் பகுதிக்கு அனுப்பியது. பிந நாடுகளை விட ஜப்பான் அதிக படைகளை அப்பகுதிகளில் நிறுத்தியது. ரஷ்யன் சைபீரியாவில் (Russian Siberia) ஜப்பான் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்கின்றது என்று ஐக்கிய நாடுகள் அஞ்சியது. இதே வேளையில் பசிபிக் பகுதியில் சிறிய தீவான ‘‘யாப்’’ பற்றிய பிரச்சனையும், கலிபோர்னியாவில் ஜப்பானிய பள்ளி மாணவர்கள் மோசமாக நடத்தப்பட்டமையும், மேலும் நிலைமையை மோசமாக்கியது. ஐக்கிய நாடுகள் ஒரு வலிமையான கடற்படையைக் கொண்டிருந்தது. ஜப்பானும் ஐக்கிய நாட்டிற்குச் சமமான கடற்படையை உருவாக்கி கொண்டிருந்தது. 1902-ல் ஏற்படுத்தப்பட்ட ஆங்கிலோ-ஜபபானிய உடன்படிக்கையின் படி ஜப்பானின் பாதுகாப்பிற்கு பிரிட்டன் உதவ வேண்டும். எனவே இவ்வுடன்படிக்கை ஜப்பானியப் பேரரசின் வலிமைக்கு ஆதரவாக அமைந்தது. இவ்வுடன்படிக்கையிலிரந்து நீங்கினால் ஜப்பானை வலிமையிழக்கச் செய்து விடலாம் என்றும், அதன் பின் ஐக்கிய நாடுகளுக்கு உதவலாம் என்றும் பிரிட்டன் விரும்பியது.

வாஷிங்டன் மாநாட்டுத் தொடர் 1921-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் நாளிலிருந்து இரண்டரை மாதங்கள் நீடித்தது. கடற்படை குறைப்புப் பற்றியும் பசிபிக் பகுதியின் பாதுகாப்புப் பற்றியும் இம்மாநாடு விவாதித்தது. இறுதியில் ஐக்கிய நாடுகள் பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளின் கடற்படையின் வலிமை 5:5:3 என்ற விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டது. மாநாட்டிற்கு வருகை தந்த நாடுகள் இதனை ஏற்றுக் கொண்டன. பேச்சுவார்த்தைகளின் இறுதியில் மூன்று உடன்படிக்கைகள் ஏற்பட்டன.

முதல் உடன்பாடு ஐக்கிய நாடுகள், ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் செய்துகொண்ட நான்கு ‘‘வல்லரசுகள்’’ உடன்படிக்கை ஆகும். இது ஆங்கிலோ-ஜப்பானிய உடன்பாட்டிற்கு முற்றுப்புள்ளியிட்டது. இந்நான்கு வல்லரசுகளுமே ஒன்று மற்ற பசிபிக் குடியேற்றங்களின் நலன்களை மதித்து நடக்குமென்றும் தங்களுக்குள்ளே எழுகின்ற தகராறுகளை சமாதான வழிகளில் தீர்த்துக் கொள்ளுமென்றும் இவ்வுடன்படிக்கை கூறியது. அமெரிக்காவின் கருத்துப்படி, போர் ஏற்படும்போது ஜப்பானுக்கு பிரிட்டிஷ் தீவுகளுக்கு பாதுகாப்பு வழங்குவதே இவ்வுடன்படிக்கையின் நோக்கமாக இருந்தது.

இரண்டாவதாக, ஐக்கிய நாடுகள், பிரிட்டன, ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் சேர்ந்து ‘‘ஐந்து வல்லரசு’’ உடன்படிக்கையைச் செய்து கொண்டது. போர்க் கப்பல்களைக் கட்டுவதில் பத்தாண்டு கால ஓய்வு, கடற்படையைக் குறைப்பது ஆகியவற்றைப் பற்றி இவ்வுடன்படிக்கை குறிப்பிட்டது. ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளின் கடற்படை வலிமை முறையே 5:5:3:1.75:1.75 ஆகிய விகிதத்தில் இருக்க வேண்டும். கடற்படைப் போட்யைத் தடை செய்வதற்காக மேற்கு பசிபிக் பகுதியில் அரணோ, கடற்படைத் தளங்களோ புதிதாக அமைப்பதில்லையென ஐக்கிய நாடுகளும்

பிரிட்டனும் கூறின. ஆனால் நடைமுறையில் இது ஜப்பானுக்கு ஆதரவாகவே இருந்தது. ஏனெனில் ஐக்கிய நாடுகள் அல்லது பிரிட்டனின் கடற்படையில் சரிபாதியை விட அதிகமாக வைத்துக் கொள்ளவும், கடற்படைத் தளங்கள், அரண்கள் அமைக்கவும் ஜப்பான் அனுமதிக்கப்பட்டது. உலகெங்கும் பரவியுள்ள மிகப்பரந்த நிலப்பகுதிகளில் தனது நலன்களைப் பிரிட்டன் பாதுகாக்க வேண்டி இருக்க ஐக்கிய நாடுகள் வெகு தூரத்தில் அமைந்திருந்த கடற்படைத் தளங்கள் வழியாக இருபெரும் சமுத்திரங்களின் நலன்களையும், ஜப்பான் குறைந்த அளவிலான தனது நலன்களை பசிபிக் பகுதியிலும் பாதுகாக்க வேண்டியிருந்தது.

மூன்றாவதாக, ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, சீனா, நெதர்லாந்து, பெல்ஜியம் போர்ச்சுக்கல் ஆகிய நாடுகள் கையெழுத்திட்ட உடன்படிக்கையே ஒன்பது நாடுகள் ஒப்பந்தமாகும். இந்நாடுகள் அனைத்தும் சுங்கத்தை கட்டுப்படுத்தும் சீனாளன் உரிமையை மதிக்கவும், சமமான வாணிப உரிமைகளைப் பாதுகாக்கவும், சிறப்புரிமைகளையும், சலுகைகளையும் பெற அந்நாட்டின் குழப்ப நிலையைப் பயன்படுத்துவதில்லையென்றும் ஒப்புக் கொண்டன. சீனாவில் திறந்த வாயிற் கொள்கையைப் பாதுகாக்கவே இவ்வொப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கேற்ப முதல் உலகப் போரின் போது ஜெர்மனியிடமிருந்து பெற்றுக் கொண்ட ஷாண்டுங் பகுதியிலிருந்து ஜப்பானியர்கள் வெளியேற ஒப்புக் கொண்டனர்.

வாஷிங்டன் மாநாடு அமெரிக்க இராஜதந்திரக் கொள்கைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். ஒருங்கிணைந்து வந்த பெரும் வல்லரசுகள் தங்கள் கடற்படை வலிமையைக் கட்டுப்படுத்த ஒப்புக் கொண்டனர். ஐக்கிய நாடுகளும் தனது தலையிடாக் போக்கிற்கு மாறாக பசிபிக், ஆசிய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண பிற நாடுகளோடு ஒத்துழைத்தது. ஜப்பானைக் கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதற்கும், பசிபிக் பகுதியில் ஆங்கிலோ-அமெரிக்க நலன்களைப் பாதுகாப்பதற்கும், ஆங்கிலோ-ஜப்பானிய உடன்பாட்டை ரத்து செய்வது மிகவும் இன்றிமையாததாக இருந்தது. நான்கு வல்லரசுகள் உடன்படிக்கை வழியாகவே இம்முயற்சியில் வெற்றி கிடைத்தது. ஆனால் இதற்குப் பதிலாக கடற்படைத் தளங்களை நிறுவவும், அரண்களை அமைக்கவும் ஜப்பானுக்கு உரிமை வழங்கப்பட்டது. ஆனால் இத்தகைய உரிமைகள் பிற நாடுகளுக்கு மறுக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக இம்மாநாடு, பசிபிக் பகுதி மீது ஜப்பான், ஐக்கிய நாடுகளுக்கிடையில் போர் ஏற்படும் நிலையைத் தடை செய்தது. உண்மை நிலையை எடுத்தியம்புவதன் வழியாக படைக்குறைப்பு செய்ய நாடுகளை வற்புறுத்த முடியும் என்ற நம்பிக்கையை இது அளித்தது. எனினும் படைக்குறைப்பு செய்யும் முயற்சியில் வாஷிங்டன் உடன்பாடுகள் வலிமையற்றே காணப்பட்டன. மேலும் அந்நிய நாடுகள் சீனாவைத் தொடர்ந்து சுரண்டுவதற்கே இம்மாநாடு வழி செய்தது. நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திறந்த வாயிற் கொள்கை வாணிபத்துக்கு மட்டுமின்றி, எல்லா நாடுகளின் தொழிலுக்கும் சுரண்டலுக்கும் சமமான வாய்பப்பளிக்க உறுதியளித்ததால், இது மிகுவம் திறந்தவாயிறலாகவே இருந்தது. சிறிய போர்க் கப்பல்களைக் கட்டுவதில் போட்டி ஏற்பட்டமையால் ஜனாதிபதி கூலிட்ஜ் ஐந்து வல்லரசு

உடன்படிக்கையில் கையெழுதிட்ட நாடுகளை 1927-ல் ஜெனிவாவில் கூட்டப்பட்ட மாநாட்டிற்கு அழைத்தார். வாஷிங்டன் மாநாட்டில் தங்களுக்கு மிகக் குறைந்த விகிதமே கொடுக்கப்பட்டதால் ஏமாற்றமடைந்த பிரான்சும் இத்தாலியும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்தன. பிறநாடுகள் மாநாட்டில் சந்தித்தன. ஆனால் கடுமையான கருத்து வேறுப்பாட்டின் காரணமாக அம்மாநாட்டில் பிளவு ஏற்பட்டது. 1930-ல் பிரிட்டனின் முயற்சியால் இந்நாடுகள் மறுபடியும் லண்டனில் கூடின. லுண்டன் கடற்படை மாநாடு, சிறிய கப்பல்கள் கட்டுவதையும் சேர்த்து, விகிதத்தை வரைந்தது. எனினும் 1936-ம் ஆண்டிற்குப் பிறகு நிலைமை முற்றிலும் மாறியது. முற்றொரு போருக்கு தயாராகும் நிலையில் கடற்படைக் குறைப்பு உடன்பாடுகளை மீறி, நாடுகள் அனைத்தும் போர்க் கப்பல்கள் கட்டும் திட்டத்தை மேற்கொண்டன. இதன் விளைவாக ஏற்பட்ட படைபலப் போட்டி இரண்டாம் உலகப் போரில் முடிவுற்றது.

**கெல்லாக் பிரியாண்ட் ஒப்பந்தம் 1928**

''இனிமேல் போரே வேண்டாம்'' என்று பெரிய வல்லரசுகள் ஒரு அறிக்கையை வெளியிட்டால் எதிர்காலத்தில் போர் ஏற்படாது என்று சமாதான வழிகளில் தகராறுகளைத் தீர்க்கும் வல்லுநர்கள் நம்பினார்கள். எனவே மேற்கு ஐரோப்பாவிலுள்ள முக்கிய நாடுகள் அனைத்தும் தங்கள் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டுவதற்காக உறுதி கூறி 1927-ல் லொக்கார்னே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். லொக்கார்னோ ஒப்பந்தத்திற்கு காரணமாக விளங்கிய பிரான்சின் பிரதமர் பிரியாண்ட என்பவர் போரைத் தவிர்ப்பதற்காக ஐக்கிய நாடுகளும், பிரான்சும் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார். ஆனால் எல்லா மாநாடுகளும் இதில் சேர வேண்டுமென்று சில தலைவர்கள் கூறினர். ஆதன்படி ஜனாதிபதி கூலிட்ஜின் வெளி நாட்டுறவுச் செயலாளரான கெல்லாக் என்பவர் 1928-ல் கெல்லாக் பிரியாண்ட் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் உட்பட பதினைந்து நாடுகள் இவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட்டன. ஆனால் நாளடைவில் ரஷ்யா உட்பட அறுபத்து நான்கு நாடுகள் இதில் சேர்ந்து கொண்டன. இவ்வொப்பந்தம் போர் ஏற்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. அன்றைய சூழ்நிலையில் எல்லா நாடுகளுமே போர் செய்ய விரும்பவில்லை. இவ்வாறாக எழுத்து வடிவிலாவது போர் தடை செய்யப்பட்டது. சுய பாதுகாப்பு மூலம் போர்ச் செய்யும் உரிமை தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென நாடுகள் வற்றுபுறுத்தியமையாலும், இவ்வுடன்படிக்கையின் ஷரத்துக்களைச் செயல்படுத்த எத்தகைய ஏற்பாடுகளையும் செய்யாததாலும் இவ்வொப்பந்தம் செயல்முறைக்கு ஒவ்வாத ஒன்றாக இருந்தது.

**பெரும் நலிவு (The Great Depression)**

குடியரசுக் கட்சி வேட்பாளரான ஹெர்பர்ட் ஹீவர் 1928-ல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஹீவர் ஒரு சிறந்த பொறியியல் வல்லுநராகவும், வணிகராகவும் ஒரு சிறந்த பொதுநலத் தொண்டராகவும் திகழ்ந்ததால் பொருளாதாரத்தை மேன்மேலும் வளரச் செய்வார் என்று மக்கள் நம்பினார்கள். எனவே அவர்கள் ''விரைவில் செல்வத்தைப்பெற வேண்டுமென்ற'' குறிக்கோளுடன் திகழ்ந்தனர். ஆனால் திடீரென இருப்பு அங்காடியில் (Stock

Market) வீழ்ச்சியும், நலிவும் ஏற்பட்டது. 1929-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐரோப்பா, ஐக்கிய நாடுகள், இலத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் முதலீடு செய்திருந்த நிறுவனங்களில் ஒரு சில நிறுவனங்கள் வீழ்ச்சியுற்றன. அக்டோபர் மாதத்தில் விளை பொருட்களின் விலை குறைந்தது. எனவே விவசாயிகளும், உற்பத்தியாளர்களும் பொருட்களைவ ிற்க முடியவில்லை. இலாபம் குறைந்தது. நஷ்டம் படிப்படியாக உயர்ந்தது. இதன் விளைவாக நியூயார்க்கில் இருப்பு அங்காடிப் பங்குகள் விலை வீழ்ச்சியடைந்தது. இதனால் மக்கள் தங்களுடைய பங்குகளை முதலீட்டு நிறுவனங்களில் விற்க ஆரம்பித்தனர். இருப்புகளின் விலை அதன் உச்ச விலையிலிருந்து ஐந்தில் ஒரு பங்கு விலையாகக் குறைந்த போதிலும், இருப்புகளை வாங்க யாரும் தயராக இல்லை. இதனால் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர் எண்ணிக்கை குறையவே, வங்கிகள் ஒன்றன்பின் ஒன்றாக மூடப்பட்டன. இதுவே பெரும் நலிவின்ஆரம்ப நிலையாகும். இந்நலிவு வெளிநாடுகளையும் பாதித்தது.

**இருப்பு அங்காடி வீழ்ச்சிக்கான காணங்கள்**

பெரும’ நலிவுக்கான காரணங்களைப் பற்றிய மதிப்பீட்டில் வரலாற்று அறிஞர்கள் மத்தியிலும், பொருளாதார அறிஞர்கள் மத்தியிலும் கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. எனினும் பொருளாதார முறையின் சில குறிப்பிட்ட விரும்பத்தகாத தன்மைகள், பொருட்களின் விலைகளில் துரித வீழ்ச்சியை ஏற்படுத்தவும், வாணிபத்தை இலாபகரமற்றதாக்கவும் செய்தன என்பது எல்லோரும் அறிந்ததே. இதன் விளைவாகவே பல வணிக அமைப்புகளும், நிறுவனங்களும் மூடப்பட்டன. இதன் போக்குகளின் குறிப்பிடத்தக்க தன்மைகள் பின்வருமாறு,

உலகப் போரால் ஏற்பட்ட சூழ்நிலை உற்பத்தி பெருமளவில் பெருகுவதற்கு பெரிதும் உதவியது. ஆயுதங்கள் இராணுவத்தளவாடங்கள், எரிபொருள், உடை போன்றவைகளின் தேவை அதிகரித்தது. வயல் வெளிகளும், கிராமங்களும் ஐரோப்பாவில் அழிக்கப்பட்டமையால், ஐக்கிய நாடுகளே உணவுப் பொருள்களையும், கச்சாப் பொருள்களையும் அனுப்ப வேண்டியிருந்தது. வாணிபம் வளர்ந்தது. பொருளாதாரம் எழுச்சி பெற்றது.

**போக்கும் விளைவுகளும்**

ஆக்டோபர் 24-ம் நாள் நியூயார்க் நகரில் வால் தெருவில் மாற்று அங்காடியில் விலை பெருமளவில் வீழ்ச்சியுற்றது. மேலும் விலை குறையக் கூடும் என்ற அச்சத்தில் அதே நாளில் பன்னிரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட பங்குகள் அவசரமாக உடனுக்குடன் விற்கப்பட்டன. ஒவ்வொரு நாளும் இச்சூழ்நிலை நிலவியதால் மாற்று அங்காடியில் பெரும் இழப்பு ஏற்பட்டது. வால் தெரு நடுக்கத்தைத் தொடர்ந்து பொதுவான ஒரு நலிவு ஏற்பட்டது. 4000-க்கும் மேற்பட்ட வங்கிகள் மூடப்பட்டன. தொழிலில் இலாபமில்லாததால் அநேகத் தொழிற்சாலைகள் உற்பத்தியைக் குறைத்தன. இதன் விளைவாக உற்பத்தியில் 48 விழுக்காடு குறைந்தது. நாட்டின் உழைப்பாளர்களில் நான்கில் ஒரு பகுதிக்கு மேற்பட்டோர் வேலையிழந்தனர். விலைகள் மீது எத்தகைய கட்டுபபாட்டையும் செலுத்த முடியாதவர்களான விவசாயிகள் விவசாயத்தை தொடர்ந்தனர். விவசாய மொத்த உற்பத்தியில் ஆறு விழுக்காடு மட்டுமே குறைந்த போது அதன் விலையில் அறுத்தி மூன்று குறைந்தது. 1932-ல் விவசாயிகளின்

வாங்கும் திறன் பத்தாண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட அரைப் பங்காகவே இருந்தது. அவர்களால் கடனையோ அல்லது வட்டியையோ கொடுக்க முடியவில்லை. இந்நலிவு மக்களின் வாணிபத்தை பாதித்ததோடு அதிக வேலையில்லாத் திண்டாட்டத்தையும், மக்களின் துயரத்தையும் அதிகரித்தது. நிவாரண நடவடிக்கைகளை கூட்டாட்சி மற்றும் மாநில நிறுவனங்கள் மேற்கொண்ட போதிலும் அதன் தீய விளைவுகள் நீண்டகாலம் தொடர்ந்து நீடித்தன. இப்போக்கை இரண்டாம் உலகப்போரின் நெருக்கடிகாலத் தேவைகளே மாற்றியமைத்தன.

நலிவின் விளைவுகள் பல. ஒரு சிலர் இதனால் நன்மையடைந்த போதிலும் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கையையும், நாட்டின் பொருளாதாரத்தையும் இது பெருமளவில் பாதித்தது. 1) முழுநேரப் பணிபெற்ற தொழிலாளர்கள் பயனடைந்தார்கள். பொருள்களின் விலை குறைவினாலும் கூலி அதிகமாக வழங்கியதாலும் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. கச்சாப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியை சிகரெட் கம்பெனி போன்ற குறிப்பிட்ட சில வணிக நிறுவனங்கள் லாபரமான தொழிலை மேற்கொள்ளப் பயன்படுத்தினர். 2) ஆனால் நிவின் விளைவாக பெரும்பான்மையான மக்கள் பெருந் துன்பங்களுக்குள்ளாயினர். இலட்சக்கணக்கான மக்கள் வீடிழந்து நகர் புறம்போக்கிலுள்ள குடிசைகளில் வாழ்க்கை நடத்தினர். வேலைக்காகவும், உணவுக்காகவும் தெருக்களில் அலைந்து திரிந்தனர். அவர்களில் அநேகர் ‘‘ஹீவர் வில்லா’’ (Hoovervi las) என்று ஜனாதிபதி ஹீவர் பெயரால் கேலியாக அழைக்கப்பட்ட குடிசைகளில் வாழ்ந்தனர். அநேகத் தொழிலாளர்கள் விவசாயத்தை மேற்கொண்டனர் மற்றும் சிலர் தெருக்களில் பொருட்களைவ ிற்று வாழ்க்கையை நடத்த முற்பட்டனர். தனிப்பட்டவர்களும், நகர அரசு அமைப்புகளும், நலிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தன. ஆனால் பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சியுற்றபோது அவர்களின் மூலவளங்களும் குறைந்தது. இவற்றிக்கு மாநில, கூட்டாச்சி அதிகாரிகள் உடனடியாக நிவாரணமளிக்க முன்வரவில்லை. 3) நலிவால் நசுக்கப்பட்ட இலட்சியவாத அமெரிக்கர் குறிப்பாக எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் போன்றோர் சோஷலிசக் கருத்துக்களால’ கவரப்பட்டனர். சீர்கேடுற்ற பொருளாதாரத்திற்குப் பரிகாரம் ரஷ்யாவில் இருப்பது போன்ற திட்டமிட்ட பொருளாதாரமே என அவர்கள் எண்ணினர். ஏனெனில் ரஷ்யா பொருளாதார நலிவிற்குள்ளாகவில்லை. கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்க உரிமைகளைப் பெறவும் விவசாயிகள் நலனைப் பேணவும், ரஷ்யா ஆதரவுக் கொள்கையைப் பரப்பினர். ஆனால் 1939-ல் ஸ்டாலின் ஹிட்லரோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்ட பிறகு அவர்களது செல்வாக்கு மறைய ஆரம்பித்தது. பொருளாதார சீர்கேடு ஏற்பட்டது. சோஷலிசக் கொள்கை வளர ஆரம்பித்த போதிலும் மக்கள் முதலாளித்துவத்தில் கொண்ட நம்பிக்கையை இழக்கவில்லை. ஐரோப்பாவில் ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளின் ஜனநாயகம், முதலாளித்துவக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பேராபத்தாக இந்நலிவு இருந்தபோது, ஐக்கிய நாடுகளில் அத்தகைய விளைவுகளை ஏற்படுத்தவில்லை. 4) மக்களிடையில் ஏற்பட்ட பீதியை நீக்கத் தவறியதால் குடியரசுக் கட்சியினர் செல்வாக்கிழந்தனர். இது 1982-ம் ஆண்டு ஜனநாயக் கட்சி எழுச்சி பெற வாய்ப்பளித்தது.

**ஹீவரும் பொருளாதார நலிவும்**

தொழிலில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதன் மூலமே நாட்டில் மறுபடியும் செழிப்பை கொணடுவர முடியும் என்று அமெரிக்க நிர்வாகம் கருதியது. நிவாரணமளிப்பதில் கூட்டிணைவு அரசு அதிகமாக ஈடுபடுதலை ஹீவர் எதிர்த்தார். ஏனெனில் தனியார் நிறுவனங்களும், நகர நிர்வாகங்களும், மாநில அரசுகளும், நிவாரண நடவடிக்கைகளைத் திறம்படச் செயலாற்ற முடியுமென அவர் எண்ணினார். இக்கொள்கையின் அடிப்படையில் தொழிலாளர்களின் கூலியைக் குறைக்க வேண்டாமென அவர் வணிகர்களை வற்புறுத்தினார். அதே வேளையில் தனியார்களின் சேவையின் மூலம் கடன் கொடுப்பதை அதிகரிக்கச் செய்தார். கட்டிடங்கள் கட்டும் திட்டங்களை ஏற்று நடத்த தல ஆட்சி நிறுவனங்களைத் தூண்டினார். எனினும் இந்நடவடிக்கைகளினால் மக்கள் பயன் அடையவில்லை. இது ஐரோப்பாவிற்கும் பிறகண்டங்களுக்கும் பரவியதால் நலிவிலிருந்து துரிதமாக மீளமுடியாதென்று தெளிவாயிற்று. இதற்கிடையில் ஜனாதிபதி தேர்தல் நெருங்கியதால் குடியரசுக் கட்சியின் பெருமையை நிலைநாட்ட ஏதாவது செய்தாக வேண்டியதிருந்தது.

நுலிவைப் போக்க ஹீவர் இருவகைக் கொள்கைகளை உருவாக்கினார். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வெவ்வேறு கொள்கைகளை அவர் மேற்கொண்டார். போர்க்கடன், போர்நஷ்ட ஈடு போன்றவற்றின் வசூலை தற்கால்கமாக நிறுத்திவைக்குமாறு அவர் மீட்பை அதிகரிக்க முடியும் என்று நம்பினார். உள்நாட்டில் திவாலாகும் நிலையிலுள்ள நில உடமையாளர்களுக்கு உதவ திட்டம் ஒன்றை உருவாக்கினார். ஆனால் ஜனநாயகக் கட்சியினரால் கட்டுப்படுத்தப்பட்டிருந்த காங்கிரஸ் இதற்கு மறுப்பு தெரிவித்தது. இறுதியில் நீண்ட விவாதங்களுக்குப் பிறகு தேவைப்பட்ட வணிக நிறுவனஙடகளுக்கும் க்டன் வழங்க சீரமைப்பு நிதி நிறுவனங்களையும், வீட்டு உாடமையாளர்களுக்கு உதவ கூட்டிணைவு வீட்டுக்கடன் வங்கிகளையும், விவசாயிகளுக்கு உதவ கூட்டுறவு நிலவங்கிகளையும் காங்கிஸ் நிறுவியது. கூட்டாட்சி அரசின் செலவினங்கள் அதிகரிக்கப்பட்ட போது, பட்ஜெட்டை சமநிலைப் டுத்த வரிகள் அதிகரிக்கப்பட்டன. இந்நடவடிக்கைகளின் விளைவுகளை மதிப்பீடு செய்வதற்கு முன்பே குடியரசுவாதிகள் பதவியிழந்தனர்.

## அலகு – IV

## பிராங்லின் டி ரூஸ்வெல்ட்டும்- புதிய திட்டமும்

1933-ம் ஆண்டு மார்ச் மாதம் பிராங்லின் டி ரூஸ்வெல்ட் மிக நெருக்கடியான நேரத்தில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்ட்டார். அநேக வங்கிகள், வணிக நிறுவனங்கள் போன்றவை மூடப்பட்ரெுந்தன. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்திருந்தனர். ரூஸ்வெல்ட ஒரு சிறந்த நிர்வாகியாக இருந்ததால், அவர் இந்நிலையை சமாளிக்கும் திறமை பெற்றிருந்தார். தியோடர் ரூஸ்வெல்ட்டின் தூரத்து சகோதரரான பிராங்லின் டி ரூஸ்வெல்ட் நியூயார்க் மாநில சட்டமன்றத்திலும், ஜனாதிபதி வில்சனின் தலைமையின் கீழ் கடற்படை உதவிச் செயலாளராகவும் பணியாற்றினார். இருமுறை அவர் நியூயார்க்கின் கவர்னராக தேர்ந்தெடுக்கப்பட்டார். புதிய திட்டத்தின் மூலம் நாட்டை எதிர்நோக்கிய பிரச்சனைகளை நீக்குவதாக வாக்குறுதியளித்த ரூஸ்வெல்ட் 1932-ம் ஆண்டு தேர்தலில் வெற்றியடைந்தார்.

ரூஸ்வெல்ட் குடியரசுவரிகளின் நிர்வாகமுறை, அவர்களின் நிர்வாகத் திறமையின்மை போன்றவற்றை சுட்டிக்காட்டினார். தியோடர் ரூஸ்வெல்ட்முட், வில்சனும் உருவாக்கிய முன்னேற்றக் கொள்கையை பிராங்லின் டி ரூஸ்வெல்ட் பின்பற்றினார்.

## புதிய திட்டத்தின் சட்டம்

### திட்டத்தின் அடிப்படை

ஜனாதிபதி பதவி ஏற்றவுடன் ரூஸ்வெல்ட் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள விரும்பினார். பொதுவாக புதிய திட்டம் மூன்று நோக்கங்ளை கொண்டிருந்தது. அவைகள் நிவாரணம், மீட்பு, சீர்திருத்தம் போன்றவையாகும். தொழிலாளர்கள், விவசாயிகள் வேலையற்றோருக்கு நிவாரணமளித்து, நாட்டின் பொரளாதாரத்தை மீட்டு, வருங்காலத்தில் இத்தகைய பீதி ஏற்படாமல் தடை செய்ய சீர்திருத்தம் கொண்டு வருதலே அவரது திட்டமாகும். பொது நலனைப் பேண பொது நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டும். சமுதாய நீதியை நிலைநாட்ட மாநிலத் தலையீடு தேவையானது என்ற கருத்தின் அடிப்படையில் இத்திட்டங்கள் அமைந்திருந்தன.

பொருளாதார முறையில் காணப்பட்ட குறைபாடுகளை சட்டத்தின் வழியாகவே சரிப்படுத்த முடியுமென்று அரசு உறுதி கூறியது. பொருளாதார முறையில் காணப்பட்ட குறைகள் பின்வருவன:- 1) தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யுமளவிற்கு தொழிலும், விவசாயமும் வளர்ச்சியடைந்தன. உற்பத்திக்கும் நுகர்விற்குமிடையே சமநிலை ஏற்படுத்த உபயோகத்திலிருந்கும் இயந்திரங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதும் வளர்ந்துவரும் புதிய தொழிற்கூடங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதும் தேவையானதாக இருந்தது. 2) விலை இயற்கையானதல்ல: ஆனால் கட்டுப்படுத்தக் கூடியது முற்றுரிமை கூட்டமைப்புகளும் அரைகுறை போட்டியும் பொருட்களின் விலையை அதிகரித்தது. டிரஸ்டுகளையும் முற்றுரிமைகளையும் தாக்குவதன் மூலமே இதனைச் சரிபடுத்த முடியும். 3) சமுதாயத்தில் தொழிலாளர்கள் சிறந்ததோர் இடத்தைப் பெறவில்லை. வாங்கும் திறன் குன்றியதால் தொழிலாளர்கள் தேசிய வருமானத்தில் போதுமான பங்கு பெறவில்லை. குறைந்த அளவு ஊதியத்தையும், வேலை நேரத்தை அதிகரிக்கவும் சட்டங்களை இயற்றினால் தொழிற்சாங்கத்தின் நலன்களைப் பாதுகாக்க முடியும். 4) நிதிமுறையும், வங்கிமுறையும் வணிக ஏற்றத் தாழ்வுக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. எனவே இது ஒழுங்காகச செயல்பட மாநிலக் கட்டுப்பாடு இன்றியமையாதாக இருந்தது. 5) பொருளாதார முறையில் சீர்கேடுகள் அதிகம் காணப்பட்டது. அவைகள் வேலையின்மை, நோய்வாய்ப்படுதல், தகுதியின்மை. முதிர்ந்த வயது இவற்றால் ஏற்பட்ட பாதுகாப்பின்மை, வீட்டு வசதி குறைவு மற்றும் குறைந்த சம்பளம் போன்றவையாகும்.. தனியார் அமைப்புகள் மட்டும் இக்குறைகாடுகளை முழுமையாகச் சரிப்படுத்த முடியாது. 6) இறுதியாக, அதிகமான சுங்கவரி, பங்கு ஒதுக்கீட்டுமுறை, வெளிநாட்டு ஒழுங்குமுறைகள் போன்றவற்றினால் அமெரிக்கப் பொருட்கள் அதிகமாக அங்காடிகளில் விற்க முடியவில்லை உள்நாட்டு அங்காடிகளையும் அவை பிரச்சனைகளுக்கு உள்ளாக்கின. உலக அங்காடி ஒழுங்காகத் திறம்பட செயல்பட வேண்டுமாயின் உற்பத்திக் கட்டுப்பாடும், தடைகள் நீக்கப்படுதலும் மிக இன்றியமையாததாக

இருந்தது. இத்தகைய கருத்துக்களின் அடிப்படையில் தான் புதிய திட்டத்தின் சட்டங்கள் உருவாக்கப்பட்டன.

**நிவாரண நடவடிக்கைகள்**

வங்கிகள் செயல்படுவதும், வேலையற்றோருக்கு வேலை வழங்குவதும், விவசாயிகளின் குறைகளை நிவர்த்திகச் செய்வதுமே நிவாரண நடவடிக்கைகளின் முக்கிய நோக்கமாகும்.

வங்கி நிறுவனங்கள் பெரும் பிரச்சனையாக இருந்தன. ஆகையால் பழைய சட்டத்தின் அடிப்படையில் ஒரு நிர்வாகச் சட்டத்தைப் பிறப்பித்து அதன் மூலம் எல்லா வங்கிகளையும் நான்கு நாட்கள் மூட உத்தரவிட்டார். தங்கத்தைத் திரும்ப பெறவோ அல்லது மாற்றவோ தடை செய்து உத்தரவு பிறப்பித்தார். நான்கு நாட்கள் முடிவடைவதற்கு முன்பே, ஒரு அவசர வங்கிச் சட்டவரைவு தயராக்கப்பட்டது. இப்புதிய சட்டம் கூட்டாட்சி வைப்பு முறையிலுள்ள சிறந்த வங்கிகளை மறுபடியும் திறக்கவும், அவை வரம்பிற்குட்பட்டு செயல்படவும் திவாலான வங்கிகளை மூடவும் அனுமதியளித்தது. இச்சட்டம் கூட்டாட்சி வைப்புக் கடன்களை அதிகப்படுத்த அதிகாரம் வழங்கி, எல்லா தங்கத்தையும் புழக்கத்திலிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ள கருவூலத்தைப் பணித்தது. ஒரு சில நாட்களுக்குள் நாணயமுறையில் எழுந்த பீதி நீக்கப்பட்டு பெரும்பாலான வங்கிகள் செயல்முறைப்படுத்தப்பட்டன. இயற்றப்பட்ட சிக்கனச் சட்டம் பொது ஊழியர்கள் மற்றும் ஓய்வுப் பெற்ற இராணுவ வீரர்களின் ஊதியத்தைக் குறைப்பதற்கு வழி செய்தது. இந்நடவடிக்கை பெரும் எதிர்ப்பை எழுப்பிய போதிலும் செலவின்ங்களைக் குறைக்கவும் பட்ஜெட்டை சமநிலைப்படுத்தவும் அரசுக்கு உதவியது.

வேலையற்றோர், ஊனமுற்றோர் நலனுக்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வேலையின்றி இருக்கும் ஆடவருக்கு வேலை கொடுக்க சிவிலியன் பாதுகாப்பு அணி உருவாக்கப்பட்டது. மரங்களை நடுதல், வீடுகளையும் அணைகளையும் கட்டுதலட, சாலைகளையும், பூங்காக்களையும் மேம்படுத்துதல் போன்ற பணிகளில் ஆட்களை அமர்த்தியது, உணவு, உடை, உறைவிடம் அளிக்கப்பட்டு ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதந்தோறும் முப்பது டாலர் ஊதியம் கொடுக்கப்பட்டது. அதில் ஒரு பகுதியை ஒவ்வொரு தொழிலாளியும் தன்னைச் சார்ந்திலுருப்போருக்கு அனுப்ப வேண்டும். கூட்டாட்சி நெருக்கடி நிவாரண நிர்வாகம், நிவாரணத் திட்டங்களை மேற்கொள்ள மாநிலங்களும் தல ஆட்சி நிறுவனங்களும் நேரடி உதவி செய்தது. எத்தகைய வேலையும் செய்ய முடியாதவர்களுக்கு பணித்திட்டங்கள் நிர்வாகம், சட்டரீதியான அமைப்புக்கள் வழியாக நிதி உதவி அளித்தது. எழுத்தாளர், கலைஞர், நடிகர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிகள், கலை கல்வி ஆகியவற்றை வளர்க்க அவர்களுக்கு உதவியது. வேலையற்றோர்க்கு வேலை தேடித்தருவதற்காக ஐக்கிய நாடுகள் வேலையற்றோர்க்கு வேலை வாய்ப்பளிக்கும் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. எனினும் இந்நிவாரண நடவடிக்கைகளின் விளைவுகள் அற்பமாகவே இருந்தது.

**மீட்பு நடவடிக்கைகள்**

1933-ம் ஆண்டு இயற்றப்பட்ட தேசிய மீட்புச் விவசாய அமைப்புச் சட்டம் போன்றவை மீட்பு நடவடிக்கைகளில் மிக முக்கியமானவையாகும். போட்டிணைக் கட்டுப்படுத்தி, விலையை உறுதிப்படுத்துவன் வழியாக வாணிபத்தைச் சீர்படுத்த தேசிய மீட்பு நிர்வாகம் (The National

Recovery Administration) நிறுவப்பட்டது. அரசு வழங்கும் பாதுகாப்பிற்கு பதிலாக வணிக வர்க்கத்தினர், தொழிலாளர்களுக்கு சலுகைகள் வழங்க வேண்டும். நல்ல போட்டிக்கான சட்டதிட்டங்களை ஏற்றுக் கொள்ளும்படி தொழிற்கூடங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இச்சட்ட திட்டங்கள் அதிக உற்பத்தி, விலைக்குறைப்பு ஆகியவற்றிக்கு வழி வகுக்குமென்று கருதப்பட்டது. ஜெனரல் ஹியூஸ் ஜான்சன் என்பவரின் தலைமையின் கீழ் சட்டத்தின் வலிமையைப் பெற்றிருந்த மேற்குறிப்பிட்ட சட்டதிட்டங்களை, சட்ட திட்ட அதிகாரிகள் செயற்படுத்தினர். கோரிக்கைகளுக்காக ஒன்று சேர்ந்து போராடும் உரிமை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. கம்யூனிஸ்ட் இயக்கம் போல, அணிவகுப்புகள், வாண வேடிக்கைகள், மேடைப் பேச்சுகள் வழியாக தேசிய மீட்பு நிரவகாம் நடைமுறைப்படுத்தப்பட்டது. வணிக நிறுவனங்களுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்த எதிர் டிரஸ்ட் சட்டங்கள் தளர்த்தப்பட்டன. தேசிய மீட்பு நிராவாகம் புதிய சட்டதிட்டங்களில் மிக முக்கியமானதும் அதிக விளம்பரப்படுத்தப்பட்டதும் ஆகும். ஆனால் நடைமுறையில் அது தோல்வியடைந்தது. வணிக ஒத்துழப்பை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்க நிர்வாகம் முற்றுரிமைக் கொள்கைகளுக்கு உதவியது. பொருட்களின் விலைகள் விரைவில் உயர்ந்தன. ஆனால் அதற்கேற்ப ஊதியம் உயரவில்லை. தொழிலாளர்களில் அநேகர் குறிப்பாக ஹென்றி போர்ட் தேசிய மீட்பு நிர்வாகத்தோடு எத்தகைய தொடர்பும் மேற்கொள்ள மறுத்துவிட்டார். சட்டதிட்டங்கள் நிறுவனம் போன்ற எந்த ஒரு நிறுவனத்திற்கும், தனது சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொடுக்க காங்கிரசுக்கு அதிகாரமில்லை என்ற அடிப்படையில் தலைமை உயர்நீதிமன்றம் இச்சட்டம் செல்லாது என்று தீர்ப்பளித்தது. இச்சட்டத்தை மறுபடியும் கொண்டுவரவேண்டுமென்று எத்தகைய முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லையெனினும், தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகள், முறையற்ற போட்டி மீதான கட்டுப்பாடு போன்ற வற்றிலுள்ள சிறப்புதன்மைகளில் சில சட்டங்களில் சேர்க்கப்பட்டன.

விவசாய மீட்புத் திட்டத்தில் விவசாய சீரமைப்புச் சட்டம் (Agricultural Adjustment Act) முக்கியமான ஒன்றாகும். விவசாய உற்பத்தியைக் குறைத்து, விவசாயப் பொருட்களின் விலையை அதிகரிப்பதே இச்சட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை ஏற்றுக் கொண்ட விவசாயிகள் உற்பத்திக்காகப் பயன்படுத்தும் விளைநிலத்தின் பரப்பளவைக் குறைக்க வேண்டும். தரிசாக விடப்பட்ட விளை நிலத்திற்குப் பதிலாக இழப்பீடு பணம் கொடுக்கப்பட்டது. உணவுப் பொருட்களைப் பதனிடுதல் மீது விதிக்கப்பட்ட எக்ஸைஸ் வரி மூலம் தேவையான வருவாய் உயர்த்தப்பட்டது. இத்தகைய அரசு ஒழுங்குமுறைகளை விவசாயிகள் ஆதரிக்கவில்லையெனினும் வேறு வழியில்லாததால் அவர்கள் அவைகளை ஏற்றுக் கொண்டனர். இச்சட்டமானது மாநில உரிமைகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்துமென்றும், எக்ஸைஸ் வரியானது, வரி விதிக்கும் உரிமையை அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானதாகப் பயன்படுத்துதல் ஆகுமென்றும் கூறி 1936-ம் ஆண்டு உயர் தலைமை நீதிமன்றம் இச்சட்டத்தை செல்லுபடியாகாததாக்கிற்று. எனவே “எப்போதும் சீரான தானியக் களஞ்சியத்தை” உருவாக்கும் எண்ணத்தோடு 1938-ல் இரண்டாவது சீரமைப்புச் சட்டம்

இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் விமர்சகர்கள் குறைவாக உற்பத்தி செய்வதற்கு பணம் கொடுப்பது ‘‘பொருளாதார மடமை’’ என அறிவித்தனர். எனினும் விலைகள் அதிகரித்தன. ஆனால் அதன் நலன்களை பெரும்பாலும் செல்வம் படைத்த வணிக விவசாயிகளே அனுபவித்து வந்தனர்.

**சீர்திருத்த நடவடிக்கைகள்**

இருப்பு அங்காடி வீழ்ச்சி மறுபடியும் ஏற்படாமலிருக்க புதிய திட்டங்களில் சட்டங்கள் இயற்றப்பட்டன. கூட்டாட்சி அரசு தேசிய வங்கி முறை மீது கட்டுப்பாட்டை விதிக்கும் முறையைப் பெற்றது. 1933-ம் ஆண்டின் வங்கிச் சட்டம், முதலீட்டு வணிகங்களில் வங்கிகள் ஈடுபடுவதைத் தடைசெய்து வங்கி கடன்களை பதுக்கல் வணிகத்திற்கு பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தி, எல்லா வங்கிகள் மீதும் கூட்டாட்சி வைப்பு முறையின் கட்டுப்பாட்டை விரிவடையச் செய்தது. 5000 டாலர் வரையுள்ள சேமிப்புகளைப் பாதுகாக்க கூட்டாட்சி சேமிப்புக் காப்பு நிறுவனங்களை அது உருவாக்கியது. 1933-ம் ஆண்டின் பாதுகாப்புச் சட்டம், இருப்பு மாற்றுகளின் (Stock Exchange) செயல்முறைகளை ஒழுங்குப்படுத்தி, ஏதாவது தவறான தகவல்களைப் பங்குதாரர்களுக்குத் தெரிவித்தால் நிறுவனத்தின் நிாவாகிகளே அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டுமெனக் கூறியது. 1934-ம் ஆண்டின் பாதுகாப்பு மாற்றுச் சட்டம் (Securities Exchange Act) பாதுகாப்பு வழங்கும் முறைகளை ஒழுங்குப்படுத்த பாதுகாப்பு மற்றும் மாற்றுக்குழு (Securities and Exchange Commission) ஒன்றை உருவாக்கியது.

பழைய நிலைக்குப் பொருட்களின் விலைகளை உயர்த்துவதற்காக ரூஸ்வெல்ட், டாலரின் மதிப்பைக் குறைக்க எண்ணினார். இது பொன் திட்டத்தை (Gold Standard) விட்டுவிடுவதற்கு ஒப்பாக அமைந்திருந்தது. தங்கம் சேர்க்கப்பட்ட டாலரின் மதிப்பு, பழைய டாலரோடு ஒப்பிடும் போது 41 விழுக்காடு குறைக்கப்பட்டபோது காகித டாலரின் மதிப்பு பழைய மதிப்பில் அறுபது விழுக்காட்டிற்கும் குறைவாகவே மதிப்பிடப்பட்டது. அமெரிக்க நிர்வாகம் புழக்கத்திலிருந்த தங்கத்தை திரும்பப் பெற்றுக் கொண்டது. தங்கத்தையும், வெள்ளியையும் விலைக்கு வாங்கி அவைகளை அது சேர்த்து வைத்தது. இதன் விளைவாக உலகின் பிற நாடுகளைப் போன்று ஐக்கிய நாடுகளும் தங்கத்திற்கு நேரடியாக முக்கியத்துவம் அளிக்காமல் நாணயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் நாணய முறையை ஏற்படுத்தியது.

1933-ல் அமெரிக்க நிர்வாகம் டென்னிசீ பள்ளதாக்கு திட்டங்களை பொது உடமையின் கீழ் கொண்டு வரும் ஆய்வினை நடத்தியது. டென்னிசீ நதிப்பள்ளத்தாக்குப் பகுதியில் நீர்ப்பாசன மின்சாரத் திட்டங்களை செயற்படுத்தவும், உரங்களை உற்பத்தி செய்யவும், இந்நதி பாயும் ஏழு மாநிலங்களில் அதிக நிலப்பகுதிகளைப் பண்படுத்தி விவசாயத்தின் கீழ் கொண்டு வரவும் அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. இது போன்ற ஒரு திட்டம் கொலம்பியா நதிப்படுகையிலும் மேற்கொள்ளப்பட்டது. இதுவரை ஐக்கிய நாடுகளில் கேள்விப்படாத இம்முழறயானது சோஷியலிச நாடுகளில்பொதுவாக உள்ள ஒன்றே 1940-ம் ஆண்டிற்குள் டென்னிசி பள்ளதாக்கு நிாவாகம் ஏழு அணைக்கட்டுகளைக் கட்டிமுடித்து, மண்வளப்

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, மின்சாரத்தையும், உரத்தையும் குறைந்த விலைக்கு விற்றுக் கொண்டிருந்தது. புதிய பொருளாதாரக் திட்டத்தின் முன்னோடி என்று டென்னீசி பள்ளதாக்கு நிாவாகத்தை இடது சாரியினர் வரவேற்றனர். ஆனால் வட்டியின்றி, வரியின்றி மக்கள் கொடுத்த பணத்தின் மூலம் உருவான தேவையற்ற முயற்சியென அதனை விமர்சகர்கள் கண்டித்தனர். ஐரோப்பிய நாடுகள் முதியோர் உதவி, வேலையற்றோர் காப்பீடு போன்ற சட்டங்களை இயற்றின. இத்தகைய சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கைகளை மக்கள் கோரியதால் காங்கிரஸ் 1935-ல் சமுதாயப் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது. அறுபத்து ஐந்தாம் வயது முதற்கொண்டு முதியவர்களுக்கு காப்பீட்டு உதவி, வேலையின்மை இழப்பீடு, ஆதரவற்றோருக்கு உதவ மாநில அரசுக்கு உதவி, தாய்மார்களுக்கு பாதுகாப்பு, குழந்தை நலம், உடல ஊனமுற்றோர், வயோதிகர், குருடர் நலம் ஆகியவற்றைக் கண்காணிக்க சமுதாயப் பாதுகாப்புக்குழு ஒன்றை இச்சட்டம் உருவாக்கியது. மக்களில் புறக்கணிக்கப்பட்டோரைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கைகள் முதலாளித்துவநாட்டில் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் முயற்சியாகும்.

**புதிய திட்டமும் நீதித்துறையும்**

நீதித்துறையை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கையோடு ரூஸ்வெல்ட் தனது இரண்டாவது நிாவாகத்தைத் தொடங்கினார். தனது இரண்டாவது நிர்வாகத்தைத் தொடங்கினார். தனது புதிய திட்டக் கொள்கையை தலைமை உயர் நீதிமன்றம் எதிர்த்ததை இவர் விரும்பவில்லை. 1935-ம் ஆண்டிலிரந்து 1937-ம் ஆண்டு வரை புதிய திட்டத்தின் ஏழு அடிப்படைச் சட்டங்களை குறிப்பாக தேசிய மீட்புச் சட்டத்தையும், விவசாய சீரமைப்புச் சட்டத்தையும் அரசியலமைப்பிற்குப் புறம்பானது என நீதிமன்றம் அறிவித்தது. நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகளில் நான்குபேர் பழைமை வாதிகள், நான்குபேர் தாராளக் கொள்கையினர், இராபர்ட்ஸ் என்ற மற்றொரு நீதிபதி நடுநிலையாளர். ஆந்நாள் காலையில் நீதிபதி இராபர்ட்ஸ் என்ன நினைக்கின்றாரோ அதன் அடிப்படையிலேயே நடைமுறையில் அரசு செய்யக் கூடியதும், கூடாததும் அமைந்திருந்தது. அத்துடன் ஒன்பது நீதிபதிகளில் ஏழு நீதிபதிகள், குடியரசுக் கட்சி ஜனாதிபதிகளால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களில் ஆறுபேர் எழுபது வயதைக் கடந்தவர்கள். ஏப்போது பெண்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்த நியூயார்க் மாநிலச் சட்டம், நீதிமன்றத்தில் செல்லுபடியாகாது என அறிவிக்கப்பட்டதோ அப்போது முதற்கொண்டு நீதிமன்றத்தைச் சீர்திருத்தி அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை வலிமை பெற்றது. நீதமன்றம் தனது எதிர்ப்பைத் தெரிவிப்பது வரையிலும் எந்த ஒரு நிறுவனமும் தொழிலாளர் நலநன முன்னிட்டு அவர்களின் ஊதியத்தையோ, வேலை நேரத்தையோ ஒழுங்குபடுத்த முடியாது என அஞ்சியது.

ஒரு நீதிபதி எழுபது வயதைக் கடந்து, ஓய்வு பெறாது பதவியில் நீடித்தால், அக்குறிப்பிட்ட நீதிபதிக்கு உதவ கூடுதலாக மற்றொரு நீதிபதியை நியமிக்க வேண்டுமென்ற கருத்தை ரூஸ்வெல்ட் தெரிவித்தார். இவ்வேளையில் ஆறு நீதிபதிகள் எழுபது வயதைக் கடந்தவராகையால் ரூஸ்வெல்ட்டின் கருத்துப்படி தலைமை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை பதினைந்தாக உயர்த்தப்பட வேண்டும். ஆனால் நீதிமன்ற சட்டவரைவு பெரும்

எதிர்ப்பைஎழுப்பியது. புதிய திட்ட சட்டத்தின் அடிப்படையில் ஜனாதிபதியின் அதிகாரம் தனது விருப்பப்படி ஜனாதிபதி செயல்படுவதைக் தடை செய்ய அவர்கள் இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தனர். இதற்கிடையில் தனது போக்கை மாற்றிக் கொண்ட நீதிமன்றம் புதிய திட்டத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பை வழங்கியது. நீதிமன்றத்தின் இம்முடிவு, நீதிமன்றத்தை மாற்றியமைத்தல் தேவையற்றது என்ற எண்ணத்தை மக்கள் மனதில் வேரூன்றச் செய்ததது. 1937-ல் காங்கிரஸ், நீதிமன்றத்தை மாற்றியமைத்தல் பற்றிய சட்டவரைவிற்கு எதிராக வாக்களித்தது. எனினும், வயோதிக நீதிபதிகளின் பதவி ஓய்வும், இறப்பும் தாராள மனப்பாங்கு கொண்ட இளைஞர்களை நீதிபதிகளாக நியமிக்கும் வாய்ப்பை ஜனாதிபதிக்கு அளித்து, நீதிமன்றத்தில் மாற்றங்களைக் கொண்டுவர ஜனாதிபதிக்கு உதவியது.

**புதிய திட்டம் வளர்ச்சிகரமானதா அல்லது புரட்சிகரமானதா**

புதிய திட்டம் 1938-ம் ஆண்டுவரை நடைமுறையில் பின்பற்றப்பட்டது. அதன்பின் உலகரங்கில் ஏற்பட்ட பிரச்சனைகளில் அமெரிக்கர் அதிகம் தலையிட்டதால் உள்நாட்டில் மேலும் அதிக சீர்திருத்தங்களைச் செய்ய முடியவில்லை. அமெரிக்கா தங்களது பொருள்களைவ ிற்கவும், லாபம் பெறவும், வாணிபத்தைச் சீர்ப்படுத்திக் கொள்ளவும் தேவையான ஒரு புதிய சூழ்நிலையை இரண்டாம் உலகப்போர் உருவாக்கியது. எனவே புதிய திட்ட நடவடிக்கைகள் தேவையற்றனவாயின.

புதிய திட்டத்தினால் ஏற்பட்ட நல்ல விளைவுகள் பின்வருவன:- 1) முதலாளித்துவ முறைக்கு முற்றுப்புள்ளியிடாமல் பெரும் நலிவால் ஏற்பட்ட பிரச்சனைகளை சமாளிக்க இப்புதிய திட்டம் நாட்டிற்கு ரேுதவி புரிந்தது. 2) இத்திட்டம் விவசாயம், விசை பாதுகாப்பு போன்ற பலவகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது 3) வங்கி முறை மீதான கட்டுப்பாட்டை விதிக்க முடிந்த அரசு சமுதாய பாதுகாப்பு பொறுப்பையும் மேற்கொண்டது 4) வளர்ந்துவரும் வணிகவர்க்கத்தினரின் ஆதிக்கத்தை ஈடு செய்ய விவசாயிகள், தொழிலாளர்களுக்கிடையில் இது ஒத்துழைப்பை ஏற்படுத்தியது.

புதிய திட்டத்தால் பல தீய விளைவுகளும் ஏற்பட்டன. 1) நிவாரணம், மீட்பு நடவடிக்கைகளின் பெயரால் உருவாக்கப்பட்ட பயனற்ற திட்டங்களுக்காக பணம் வீணாக செலவிடப்பட்டது. எனவே பொதுக் கடன் அதிகரித்தல், பற்றாக்குறை பட்ஜெட், அதிக வரிவிதித்தல் போன்றவற்றிக்கு இது காரணமாயிருந்தது. 2) தனது அதிகார வரம்பை அதிகரிக்க நிர்வாகத்துறை இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டது. புதிய பல பதவிகளை உருவாக்கி தடையற்ற வணிக கொள்கை முறைகளை மீறி மக்களின் உரிமைகளுக்கு ஒரு சவாலாக அமைந்தது. 3) இது உற்பத்தியை பெருமளவில் பாதித்தது. மக்களின் சேமிப்புக்களை பெருமளவில் முதலீடு செய்யும் பொறுப்பைத் தனியாரிடமிருந்து அரசு பெற்றுக் கொண்டது. ஆனால் புதிய திட்டக் காலத்தில் புதிய முதலீடுகள் செய்யவில்லை. தனியார் வணிக நிறுவனத்தின் மீதான தாக்குதலும், எதேச்சதிக்காரக் கட்டுப்பாடுகளும், அதிக வரிவிதிப்பும், வணிகத்தை விருத்திச் செய்ய முடியாத நிச்சயமற்ற நிலையை உருவாக்கின. 4) புதிய திட்டத்தின் அடிப்படை நோக்கமான முழுமையான

உற்பத்தியையும், வேலை வாய்ப்பையும் மறுபடியும் ஏற்படுத்துவதில் இது தோல்வியடைந்தது. 1937-ல் புதிய திட்டம் நல்ல வளர்ச்சியடைந்த போதிலும் வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரித்தும், தேசிய வருமானம் குறைந்தும் இருந்தது. தனது நிர்வாகத்தின் குறைகளை மறைப்பதற்காக அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டது என்றும் கூறப்படுகிறது.

புதிய திட்டமானது உண்மையில் இயல்பான வளர்ச்சிக் தன்மையைக் கொண்டிருந்த புரட்சிகரமான திட்டமாகும். நடைமுறையில் முன்னேற்றக் கொள்கையின் ஒரு படியாக அது அமைந்ததால்வளர்ச்சித் தன்மை கொண்டதெனக் கூறப்படுகிறது. இதற்கான காரணங்கள் பல. 1) இத்திட்டத்தில் பின்பற்றப்பட்ட முறைகள் அனைத்தும் ஹாமில்டன், ஜெபர்சன் கொள்கையின் அடிப்படையில் இருந்தது. 2) முன்னேற்றக் கொள்கையின் ஒரு தொடர்ச்சியாகவே இத்திட்டம் இருந்தது என்றே கூறலாம். 3) சமுதாயத்தின்அடிப்படைத் தன்மைகளில் புதிய திட்டமானது எத்தகைய மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. தனியார் சொத்து உடமை மீறப்படவோ அல்லது பொருளாதார நிறுவனங்கள் தேசியமயமாக்கப்படவோ இல்லை. தொடர்ந்து அநேக சட்டங்கள் காங்கிரசால் கொண்டு வரப்பட்டபோதிலும், அவை தீமைகளை அகற்றி, சமுதாயத்தின் அடிப்படை அமைப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடனே கொண்டுவரப்பட்டன. ஒரு வெள்ளை மாளிகை அதிகாரி குறிப்பிட்டது போன்று, ‘‘நமது நிறுவனங்களை அழிப்பதற்கான முயற்சியல்ல இது, மாறாக வரையறை இல்லாத பேராசையாகிய விஷத்திலிருந்து அவைகளைக் காத்து பொது முயற்சிகளின் விளைவுகளைப் பயன்படுத்திப ல நன்மைகளைப் பெறுவதற்கே’’ என்பதாகும்.

எனினும் புதிய திட்டத்தின் ஆதரவாளர்களும், எதிர்ப்பாளர்களும், புரட்சியோடு தொடர்புடைய எத்தகைய கொடுமைகளையும் குழப்பங்களையும் இப்புதியத் திட்டம் ஏற்படுத்தாமல் இருந்த போதிலும்’, இதை புரட்சிகரமானதென்றே கூறுகின்றனர். ஒரு சிலவற்றைப் பொறுத்தமட்டில் இக்கூற்று உண்மையானதாகும். குடந்த காலங்களில் அரசானது பொருளாதார நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடவில்லை. வர்த்தகப் போட்டிகளில் நேரடித் தொடர்பையும் வைத்துக்கொள்ளவில்லை. ஆனால் புதிய திட்டக் கொள்கைப்படி அரசு, தலையிடும் கொள்கையை மேற்கொண்டது தனியார் நிறுவனங்களோடு அது போட்டியிட்டது மட்டுமின்று தடையற்ற வணிகத்தின் மீது கட்டுப்பாடுகளை விதித்து தனது எல்லையற்ற அதிகாரத்தையும் மூலவளத்தையும் பயன்படுத்திபண சக்தியை பரவலாக்கி, சமுதாய பாதுகாப்பை ஏற்படுத்தியது. ஒரு சில நிறுவனங்களையும் ஒரு சில ஊழியரையும் கொண்ட தடையற்ற வணிகநாடு கலப்பு முறையினையும் அநேக ரெசு அதிகாரிகளையும் கொண்ட ‘‘சமூகத் தொண்டு நாடாக’’ மாற்றப்பட்டது. இரண்டாவதாக டென்னீசி பள்ளதாக்குத் திட்டம், கொலம்பியா முகத்துவாரத் திட்டம் போன்ற மாநிலத் திட்டங்களை ஆரம்பித்து, தாழ்நிலையுற்றோருக்கு சமுதாயப் பாதுகாப்பு வழங்க பரந்த அயவிலான பொறுப்பை ஏற்றுக் கொண்டது. இம்முறைகளில் சமுதாய நலனையும், சமுதாய நீதியையும், தங்களது கொள்கைகளாகக் கொண்ட ஐரோப்பிய நாடுகளை ஐக்கிய நாடுகள் பின்பற்றியது. மூன்றாவதாக, நாட்டின் அரசியலமைப்பு முறையில் ஒரு சமநிலையை அது உருவாக்கியது.

எப்போதாவது விவசாயிகளோ அல்லது தொழிலதிபர்களோ அரசியல் அரங்கில் ஆதிக்கம் செலுத்தினர். பொரும் வணிக வர்க்கத்தின் வளர்ச்சி பிற வகுப்பினரின் நலன்களைப் பெரிதும் பாதித்தது. தொழிலாளர், விவசாயிகள் ஆகியயோரின் நலனைப் பாதுகாக்கும் முயற்சியில் புதிய திட்டமானது வணிக வர்க்கத்தினருக்கு எதிராக அவர்களிடையே பரஸ்பர ஒத்துழப்பை விருத்தி செய்ய முற்பட்டது.

**அண்டைய நாடுகளுடன் நட்புறவுக் கொள்கை**

ஐக்கிய நாடுகளின் புதிய திட்டத்தின் மூலம் அந்நிய நாடுகளில் குறிப்பாக இலத்தீன் அமெரிக்க நாட்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. மன்றோ கொள்கைக்கு ஆக்கிரமிப்பு விளக்கம் கொடுத்த ஐக்கிய நாடுகள், தனது சுய நலன்களைப் பேணும் நோக்கத்துடன் பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டது. தியோடர் ரூஸ்வெல்ட் பெரும் பிரம்புக் கொள்கையை மேற்கொண்டபோது உட்ரோ வில்சன் பிறநாடுகளிடமிருந்து சலுகைகளைப் பெற வன்மை, வாணிகத்தடை, தலையீடு போன்ற முறைகளைப் பின்பற்றினார். போர்க்காலத்திற்கு பிறகு ஏற்பட்ட குடியரசு நிர்வாகமும், இந்த தீவிர கொள்கையை கடைப்பிடித்தது. போர் இயந்திரத்தால் பாதுகாக்கப்பட்ட அமெரிக்க முதலாளிகள் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பண்ணைகள், சுரங்கங்கள், தொழிற்கூடங்களில் முதலீடு செய்து வாணிபத்தை தொடங்கி வைத்தனர். ஆனால் அவர்களின் நடவடிக்கைகள் அப்பகுதி மக்கள் சுரண்டப்படுவதிலும், அரசியல் சதித்திட்டங்களிலும் முடிவுற்றன. அமெரிக்க அதிகாரிகளாலும் தனியார் நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளை இலத்தீன் அமெரிக்க நாடுகள் எதிர்த்தன. மன்றோ கொள்கைக்குப் பெரும் எதிர்ப்புத் தெரிவித்த இலத்தீன் அமெரிக்கத் தலைவர்கள் வெப்பமோ, மழையோ இல்லதபோது ஐக்கிய நாடுகள் தங்களது நாடுகள் மீது பாதுகாப்புக் குடையைப் பிடிப்பது பற்றி பெரிதும் வருந்தினர்.

ஊலக சூழிநலையாது விரைவாக மாறியதோடு அச்சுறுத்தும் எல்லையை அடைந்து கொண்டிருந்தது. வெளியுலக சவாலுக்கு எதிராக ஒரு ஐக்கிய கூட்டிணைவை ஏற்படுத்த வேண்டுமாயின் ஐக்கிய நாடுகளுக்கெதிரான பிறநாடுகளின் சந்தேக எண்ணங்களைக் குறைப்பது மிகவும் முக்கியமானதாகத் தோன்றியது. இரண்டாவதாக, வெளிநாடுகளில் தலையிடுவது பற்றி உள்நாட்டில் எதிர்ப்பு தோன்றியது. ஒவ்வொரு ஆக்கிரமிப்பும் அல்லது தலையீடும் ஐக்கிய நாட்டு மக்கள் மீது அதிக வரிகளையும், பிற பளுவையும் சுமத்தியது. வெளிநாடுகளில் பெரும் வணிக வர்க்கத்தினரின் நலன்களை முன்னேற்றுவதற்காக அமெரிக்க நிர்வகாம் மேற்கொண்ட கொள்கை மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டது. வலிமைமிக்க நிலையிலிருந்த ஐக்கிய நாடுகள், ஐரோப்பியத் திட்டங்களுக்கெதிராக எப்பொழுதும் தனது நலன்களைக் காக்க பிற சிறிய நாடுகளின் விவகாரங்களில் மேலும் தலையிடுவது தேவையற்றது எனக் கண்டுகொண்டது. மேற்குறிப்பிட்டக் காரணங்களால் இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் ஐக்கிய நாடுகள் நட்புறவு மேற்கொள்ள விரும்பியது.

**ரூஸ்வெல்ட் கொள்கை**

“தன்னைத்தானே மதிப்பது போன்று பிறரது உரிமைகளையும் மதிக்கின்ற நல் அண்டைய நாடுகளின் நட்புறவுக் கொள்கைக்காக இந்நாட்டை அர்ப்பணிப்பேன்” என 1933-ம் ஆண்டு மார்ச் மாதம் ஜனாதிபதி பிராங்லீன் டி ரூஸ்வெல்ட் தனது பதவியேற்பு உரையில் குறிப்பிட்டார். மறுபடியும் அதே ஆண்டு டிசம்பா மாதத்தில், “இப்போது முதல் ஐக்கிய நாடுகளின் திட்டவட்டமான கொள்கை என்னவெனில் அது இராணுவத் தலையீட்டிற்கு எதிரானதாகும்….” ஏனக் கூறினார். இவ்வுறுதி மொழிகளனைத்தும் ஒரு சார்பாக கூறப்பட்ட கொள்கையாததால் இதனை விருப்பத்திற்கேற்ப மாற்றவோ கைவிடவோ முடியும். 1933-ம் ஆண்டு மாண்டி வீடியோவில் கூட்டப்பட்ட மாநாட்டில் மாநிலச் செயலாளரான கார் டெல்ஹல் என்பவர் “மற்றொரு நாட்டின் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு விவகாரங்களில் தலையீட எந்த ஒரு நாட்டிற்கும் உரிமை இல்லை” என அறிவித்து, ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். மூன்று வருடங்கள் சென்ற பின்பு இவ்வுறுதிமொழியானது செனட் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முாக்கின்லே காலத்திலிருந்து பிலிப்ரபன்ஸ் மக்களுக்கு சுதந்திரம் வழங்க வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் எண்ணியது. ஆனால் 1933-ம் ஆண்டு சுதந்திரம் கொடுக்காவிட்டால் இத்தீவுகள் ஜப்பானின் ஆதிக்கத்தறிகுட்படுத்தப்படுமென்று ஐக்கிய நாடுகள் அஞ்சியது. எனவே ஹீவர் பத்தாண்டுகளுக்குப்பின் சுதந்திரம் வழங்கும் சட்டம் ஒன்றை இயற்றினார். இச்சட்டம் இராணுவ அதிகாரத்தை ஐக்கிய நாடுகளுக்கு வழங்கியதால் இத்தீவினர் இச்சட்டத்தை எதிர்த்தனர். எனவே மறுபடியும் 1931-ம் ஆண்டு டைடிங்ஸ் மாக் டப்பி (Tydings Mc Duffei) என்ற சட்டம் இயற்றப்பட்டது. இது முழு சுதந்திரத்தை இத்தீவிற்கு வழங்கியது.

கரிபியனுடன் இதற்கு முன்னாலிருந்து ஜனாதிபதிகள் செய்த உடன்படிக்கைகளை ரத்து செய்ய ரூஸ்வெல்ட் முய்னறார். இத்தீவில் தலையிடுவதற்கான உரிமையை அமெரிக்கருக்கு வழங்கிய பிளாட் திருத்தச் சட்ட வரைவை 1930-ம் ஆண்டின் உடன்படிக்கை ரத்து செய்தது. அதே ஆண்டில் ஹெயிட்டிலிருந்து எல்லா இராணுவத்தினரும் திரும்பும்படி ஆணையிட்டது. 1936-ல் பனாமாவோடு கையெழுத்தான உடன்படிக்கை, இந்நாட்டில் தலையிடுவதற்கான எத்தகைய உரிமையும் ஐக்கிய நாடுகளுக்கு இல்லை என குறிப்பிட்டது. நாற்பது கோடி டாலர்கள் மதிப்புள்ள வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களை மெக்ஸிகோ தேசியமயமாக்கியது. எனவே இழப்பீட பற்றிய பிரச்சனையை ஓர் கூட்டுக்குழுவிடம் ஒப்படைக்க ஐக்கிய நாடுகள் இணங்கியது. 1939-ல் ஓர் உடன்பாட்டின் மூலம் டொமினிக்கன் குடியரசு மீது சுங்கம் வசூலிக்கும் உரிமையை அமெரிக்கா கைவிட்டது. இலத்தீன் அமெரிக் நாடுகளோடு மேற்கொள்ளப்பட்ட பயன்தரும் பரஸ்பர வணிக ஒப்பந்தங்கள், வாணிப வளர்ச்சிக்கு உதவின. இதற்கிடையில் 1933-ல் ரியோ டி ஜெனிரோவிலும் 1936-ல் பியூவனோஸ் எய்ர்சிலும் 1938-ல் லீமாவிலும் நடைப்பெற்ற மாநாடுகள் அமெரிக்க நாடுகளிடையே ஒத்துழைப்பை வளர்த்தன.

நல் அண்டை நாடுகளுடன் நட்புறவுக் கொள்கை பல நன்மைகளை விளைவித்தன. இதுவரை ஐக்கிய நாடுகளின் தன்னிச்சை கொள்கையாக இருந்த மன்றோ கொள்கையானது, இப்பொழுது கூட்டுப் பொறுப்பாக்கப்பட்டது. கூட்டுப் பாதுகாப்பை ஏற்படுத்தும் அவைகளின் முயற்சிக்கு இது உதவியது. ஆரசியல், வணிக நிலைகளில் இது ஒத்துழைப்பை வளர்த்தது. இலத்தீன் அமெரிக்க நாடுகள், குறிப்பாக சிறிய கரிபியன் குடியரசுகள், அமெரிக்க நிர்வாகம் செயல்பட முன்வந்தமையால் தனது பழைய கொள்கையிலிருந்து உண்மையாகவே விலகிச் சென்றது. நேரடியாகத் தலையிடாமல் நிலப்பகுதிகளை கைப்பற்றாமல், அப்பகுதி அரசியல்வாதிகளோடு ரகசியத் திட்டங்களில் ஈடுபட்டு, அரசு அதிகாரிகளுக்கிடையில் தங்களது செல்வாக்கை வளர்த்துக் கொள்வதன் வழியாக எவ்வித சந்தேகத்தையும் எழுப்பாமல், அமெரிக்க நலன்களைப் பாதுகாக்க முடியுமென்று அமெரிக்க அரசு உணர்ந்தது.

**கம்யூனிச அரசு அங்கீகரிக்கப்படல்**

தாங்கள் ரஷ்யாவிற்கு எதிராக நடந்து கொண்ட போதிலும், கம்யூனிச அரசசானது வலிமை பெற்று வருகின்றது என்றும், உலகின் பிற பகுதிகளிலிரந்து அதற்று ஆதரவு கிடைக்கின்றது என்றும், அமெரிக்கர் உணர்ந்தனர். ஐக்கிய நாடுகளில் ரஷ்யாவை அங்கீகரிக்கக் கூடாது என்ற கொள்கையைக் கடைப்பிடித்த குடியரசுக் கட்சியினர் பதவியிலிரந்து வெளியேறியபின் ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த பிராங்லீன் டி ரூஸ்வெல்ட் என்பவர் பதவிக்கு வந்தார். போர் கடனைத் திரும்ப அளிக்காத நாடு ரஷ்யா மட்டுமல்ல, எனவே ரஷ்யாவிற்கு அங்கீகாரம் அளிப்பது கம்யூனிசத்ழத மிதப்படுத்துமென்று தாராளக் கொள்கையினரும் அறிஞர்களும் விவாதித்தனர். ரஷ்யாவிற்கு அங்கீகாரம் அளிப்பதன் மூலம் அந்நாடு தன்னுடைய அங்காடிகளை அமெரிக்கப் பொருள்களுக்குத் திறந்து வைக்குமென்றும், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கப்படும் என்றும், பெரும் வணிக வர்க்கத்தினர் கருதினர். மேலும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் போர் ஏற்படுவதற்குரிய சூழ்நிலையை இருந்தபோது, ரஷ்யாவின் ஈஆதரவு பெறுவது இன்றியமையாததது என அமெரிக்கா எண்ணியது.

பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக 1933-ம் ஆண்டு நவம்பர் 16-ம் நாள் வாஷிங்டனில் ரூஸ்வெல்ட்-லிட்வினாவ் என்ற ஒப்பந்தத்தை ரஷ்யாவுடன் செய்து கொண்டார். 17-ம் நள் ஐக்கிய நாடுகள் சோவியத் அரசை அங்கீகரித்தது. அதற்குப் பதிலாக ருக்கிய நாடுகளுக்கெதிராக, கம்யூனிசப் பிரச்சாரத்தைக் தொடர்வதில்லை எனவும், தன் நாட்டிலுள்ள அமெரிக்கருக்கு வழிப்பாட்டு உரிமையளிக்கவும், சைபீரியாவில் அமெரிக்கப் படையெடுப்பின் விளைவாக ஏற்பட்ட இழப்பீகளுக்குப் பதிலாக விடுத்த எல்லாக் கோரிக்கைகளையும் ரத்து செய்வதாகவும் ரஷ்யா ஒப்புக் கொண்டது.

தாங்கள் அளித்த அங்கீகாரம் எதிர்பார்த்த அளவிற்கு நன்மை பயக்கவில்லையென அமெரிக்கா உணர்ந்தது. பிற உரிமைகளைப் பெறுவதில் இவ்விரு நாடு:களும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டன. போர்க்கால கடனை திருப்பிக் கொடுக்கும்படி ஐக்கிய நாடுகள் கேட்டபோது, மாமான்ஸ்க், ஆர்க்கேஞ்சல் மீதான படையெடுப்பிற்கு

சோவியத் ரஷ்யா அழைப்பீட கேட்டது. இத்தகைய போக்கு இவ்விரு நாடுகளின் உறவைகளையும் பாதித்தது. தங்களது வாணிபத்தைப் பெருக்கிக் கொள்ள அமெரிக்கா முயன்றது. ஆனால் ரஷ்யா அதில் எவ்வித ஆர்வமும் காட்டவில்லை. அவர்களது நடைமுறை வாணிபம் கூட தொடர்ந்து வீழ்ச்சியடைந்து கொண்டே வந்தது. போல்ஷ்விக்குகள் பெருமளவில் கடன் வாங்க விரும்பினர். ஆனால் பிரச்சனைகள் ஏற்படக்கூடும் என்று அஞ்சிய யாங்கியர்கள் கடன் கொடுக்க முன்வரவில்லை. இதன் விளைவாக இவ்விரு நாடுகளுக்கும் எவ்வித நலன்களும் கிடைக்கவில்லை. பேச்சுவார்த்தைகளை பரிமாறிக் கொள்ளும் நிலையிலே இவ்விரு நாடுகளும் இருந்தன. ஆனால் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பின் போது இவ்விரு நாடுகளும் இரண்டாம் உலகப்போரில் ஒன்றுக்கொன்று ஒத்துழைத்தது ஒரு திருப்பமாக அமைந்தது.

**ஐக்கயி நாடுகளும் இரண்டாம் உலகப் போரும்**

1920-ம் ஆண்டிலிருந்து உலக அமைதி, ஜனநாயகம் போன்றவற்றை காக்கும் முயற்சியில் மக்களுக்கு இருந்த நம்பிக்கை குறையத் தொடங்கியது. கிழக்குப் பகுதியில் மறுபடியும் போர் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகின. 1917-ல் ரஷ்யாவில் கம்யூனிஸ்டுகள் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தினர். 1922-ல் பெனிட்டோ முசோலினியின் கருஞ்சட்டை வீரர்கள் சர்வாதிகாரத்தை இத்தாலியில் ஏற்படுத்தினர். அடோல்ப் ஹிட்லர் நாசிக் கட்சியை உருவாக்கினார். 1933-ல் அவர் ஜெனர்மனியில் தனது அதிகாரத்தை நிலைநாட்டினார். இச்சர்வாதிகாரிகள் மக்களின் உரிமைகளை நசுக்கியும் போரினை ஏற்படுத்தியும் ஆக்கிரமிப்புகளில் ஈடுபட்டு இருந்தனர். ஆக்கிரமிப்புப் போரை கைவிடுவதாக கெல்லாக்-பிரியாண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போதிலும் 1929-ல் ரஷ்யா வடமஞ்சூரியா மீது தாக்குதலை ஏற்படுத்தியது. ஆனால் ரஷ்யா இவ்வொப்பந்தத்திற்கு எத்தகைய மதிப்பும் அளிக்கவில்லை. குடியேற்றத்திற்காக ஜப்பான் ஆசியாவின் நிலப்பகுதியினைப் பெற எண்ணியது. ஜப்பான் சர்வதேச ஒப்பந்தம், ஒன்பது ஆதிக்க ஒப்பந்தம், செல்லாக் பிரியாண்ட் ஒப்பந்தம் ஆகியவற்றை மீறி 1931-ம் ஆண்டு செப்டம்பரில் ம்'சூரியாவில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிய சீனா சர்வதேச சங்கத்திடம் முறையிட்டபோது, அதனால் ஜப்பானின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. மாநிலச் செயலாளரான ஸ்டிம்சன் கெல்லாக்-பிரியாண்ட் ஒப்பந்த விதிமுறைகளுக்கு மாறான எந்த ஒரு சூழ்நிலையையும், உடன்படிக்கையையும், ஒப்பந்தத்தையும் அங்கீகரிக்க ஐக்கிய நாடுகள் விரும்பவில்லை எனத் தெளிவாக் கூறினார். இது ஸ்டிம்சன் கொள்கை எனப்படும். 1935-ல் இத்தாலி எத்தியோப்பியாவைக் கைப்பற்றியது. ஹிட்லர், முசோலினி ஆகியோரின் உதவியுடன் பிராங்கோ, ஸ்பெயின் மீது தனது சர்வதிக்காரத்தை நிலைநாட்டினார். ஜப்பானும், ஜெர்மனியும் சர்வதேச சங்கத்தைப் புறக்கணித்து வெளியேறிய போது அது அதனுடைய மதிப்பை இழந்தது.

இதன் பின்னர் ஹிட்லர் 1937-ல் ரோம்-பெர்லின் டோக்கியோ அச்சு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். பின்பு ரஷ்யாவிற்கு எதிராக ‘‘எதிர் கோமின்டர்ன் ஒப்பந்தத்தில்’’

ஜப்பானோடு கையெழுத்திட்டார். இம்முக்கூட்டு உடன்பாட்டிற்கு எதிராக பிரான்சின் கூட்டமைப்பு ஒரு போட்டியாக அமைந்திருந்தது. 1938-ல் ஆஸ்திரியாவையும், 1939-ல் செக்கோல்லாவோக்கியாவையும் இணைத்துக் கொண்ட ஜெர்மனி போலந்தை அச்சுறுத்தியது. இதனால் அச்சமுற்ற பிரிட்டனும், பிரான்சும் போலந்தின் சுதந்திரத்திற்கும் அதன் ஒருமைப்பாட்டிற்கும் உத்திரவாதமளிக்கும் உடன்பாடு ஒன்றை போலந்தோடு செய்து கொண்டன. 1939-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாள் ஜெர்மனி போலந்தை தாக்கியது. இரு நாட்களுக்குப் பின் பிரான்சும், பிரிட்டனும் ஜெர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்தன. இதுவே இரண்டாம் உலகப் போரின் தொடக்கமாகும்.

**நடுநிலைப் பிரச்சனை**

ஆதரவற்ற நிலையில், ஐரோப்பா போர் அரங்கை நோக்கி நகர்ந்த போது ஐக்கிய நாடுகளில் தலையிடாக் கொள்கை வலுப்பெற்றது. இதற்கு காரணங்கள் பல 1) பெரும் நலிவின் காரணமாக அமெரிக்க சீரமைப்புப் பிரச்சனையில் தனது கவனத்தை செலுத்தியததல் வெளிநாட்டுப் பிரச்சனையில் தலையிட விரும்பவில்லை. 2) ஐக்கிய நாடுகளை முதல் உலகப் போரில் ஈடுபட செய்த நிகழ்ச்சிகளைக் குறித்து ஜெரால்ட். பி.நையி தலைமையிலான குழு ஆராய்நத போது வங்கியர்களும் பயங்கரமான ஆயுதங்களை உற்பத்தி செய்வோருமே முதல் உலகப் போரில் அமெரிக்கா இறங்க துாண்டுதலாயிருந்து, அதிக இலாபமடைந்தனர் என்ற அதிர்ச்சி தரும் செய்தியை வெளிப்படுத்தியது. இத்தகைய வாய்ப்பை மறுபடியும் அவர்களுக்கு தராமலிருக்க தலையிடாக் கொள்கையே மிகவும் இன்றியமையாதது என மக்கள் கருதினர். 3) ஜனாதிபதி வில்சன் ஐக்கிய நாடுகளை முதல் உலகப் போரில் ஈடுபடுத்திய போது அவர் இது போருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் என்றும், ஜனநாயக முறைக்கு ஏற்றதாக உலகை ஆக்கும் என்றும் நம்பினார். ஆனால் போரின் முடிவில் ஏற்பட்ட சமாதான உடன்பாடுகளும் போருக்குப் பின்னால் ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் மக்களுக்கு ஏமாற்றத்தையளித்தன. 4) நேச நாடுகளில் பின்லாந்து மட்டும் போர்க்கடன்களை திருப்பித்தந்தது. பணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த வங்கியர்களுக்கு இச்சூழ்நிலை பொருந்தாத ஒன்றாக இருந்தது. இதுபோன்ற மற்றொரு பிரச்சனையில் அவர்கள் ஈடுபடாமல் இருக்க உறுதிக்கொண்டனர். 5) ஐரோப்பாவைப் பிரச்சனைகளிலிருந்து காப்பது என்பது அமெரிக்கர்களுக்குத் தேவையற்றது என மக்கள் கருதினர். இதனால் அமெரிக்கா நடுநிலைமையில் இருக்க எண்ணியது.

**நடுநிலைச் சட்டங்கள்**

நாட்டைப போரில் ஈடுபடாமலிருக்கச் செய்ய 1935-க்கும் 1937-க்கும் இடைப்பட்ட காலத்தில் பலகட்டுப்பாடு சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகள் பின்வருமாறு:- 1) போர்த்தளவாட உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் அனைவரும் மாநிலச் செயலாளரிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும், அனுமதி பெற்ற பின்பு அவர்கள் தளவாடங்களை ஏற்றுமதி செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. 2) போர்த் தளவாடங்கள், ஆயுதங்கள், போர்க்கருவிகள் முதலியவற்றைப் போரிடும் நாடுகளுக்குக் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டது. 3) போருக்கு மறைமுகமாகப் பயன்படும் உணவு,

பருத்தி, இரும்பு போன்ற பொருள்களை பணத்திற்கு பிறநாட்டருக்குக் கொடுக்க வேண்டுமென்றும் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் நாடுகள் தங்கள் கப்பல்களிலேதான் அவைகளைக் கொண்டு செல்லவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டது. 4) போரிடும் நாடுகளுக்கு அமெரிக்கக் கப்பல்களில் ஆயுதங்கள் கொண்டுச் செல்ல இச்சட்டங்கள் தடை விதித்தன. மேலும் போரிடும் நாடுகளின் கப்பல்களில் பயணம் செல்லும் அமெரிக்கக் குடிமக்கள் தங்கள் உயிர் பாதுகாப்புக்குத் தாங்களே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. 5) அமெரிக்காவில் கடன் திரட்டும் உரிமை போரிடும் நாடுகளுக்கு மறுக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் மூலம் அமெரிக்காவின் மரபுக் கொள்கையான கடல் சுதந்திரக் கொள்கையை அது மாற்றியமைத்தது.

எனினும், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் நடுநிலைக் கொள்கையை ஆதரிக்வில்லை. வில்சனைப் போன்று தீவிர பிரிட்டிஷ் ஆதரவாளரான இவர், நேச நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று விரும்பினார். எனவே அவர் நடுநிலைச் சட்டங்களை, நடுநிலைக் கொள்கையைச் செயற்படுத்துவதற்குப் பயன்படுத்தாமல் ஆக்கிரமிப்பாளர்களைத் தண்டிக்கவும் தாக்கப்பட்ட நாடுகளுக்குப் உதவவும் பயன்படுத்தினார். இவ்வாறாகவே 1935-ல் நடைபெற்ற இத்தாலி-எத்தியோப்பியப் போரின் போது ஆயுதப் தடைச் சட்டத்தை அவர் அமுல்படுத்தினார். ஐக்கிய நாடுகளிடமிருந்து எத்தியோப்பியா ஆயுதங்களை வாங்காது இத்தாலியே வாங்கும் என்றும் அறிந்திருந்ததால் அவர் அவ்வாறு செய்தார். 1937-ம் ஆண்டின் சீன-ஜப்பானியப் பொரில் சீனர்கள் ஆயுதங்களைப் பெற வேண்டுமென்ற நொக்கத்தோடு அவர் ஆயுதத் தடைச் சட்டத்தைச் செயற்படுத்தவில்லை. அமெரிக்கா எத்தகைய பிரச்சனைகளிலும் ஈடுபடுவதை அமெரிக்க மக்கள் விரும்பாததால் ரூஸ்வெல்ட் பெயரளவில் நடுநிலைக் கொள்கையைப் பின்பற்ற முயன்றார்.

**ரூஸ்வெல்ட்டின் கொள்கை**

இரண்டாம் உலகப் போர் தொடங்கியதும் அமெரிக்க அதிபர் நடுநிலைக் கொள்கையை அறிவித்தார். போரிடும் நாடுகளுக்கு எதிராக ஆயுதத் தடையையும் நடுநிலைச் சட்டங்களின் பிற ஷரத்துக்களையும் அவர் செயல்படுத்தினார். ஐக்கிய நாடுகளை அச்சு நாடுகள் முற்றுகையிடாமல் பாதுகாக்க நேச நாடுகளின் வெற்றி மிகவும் இன்றியமையாததது என்று ரூஸ்வெல்ட் எண்ணினார். 1940-ல் போரில் ஜெர்மனியின் கை ஓங்கியிருந்தது. அமெரிக்கா போரில் ஈடுபட்டால்தான் நேச நாடுகள் வெற்றி பெறமுடியுமென்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. தோற்கடிக்கப்பட்ட நாடுகளுடன் சேர்ந்து போரிடுவதைவிட தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய நேச நாடுகளோடு சேர்ந்து போரிடுவதே சரியானது எனக் கூறினார். எனினும் ஐக்கிய நாடுகள் போரில் ஈடுபடுவதை அமெரிக்க மக்கள் ஆதரிக்கவில்லை நேச நாடுகளுடன் சேர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் போர் உதவிகளைத் தவிர பிற எல்லா உதவிகளையும் பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் அளிப்பதாக அவர் கூறினார். எனவே நடுநிலைச் சட்டங்களில் மாறுதல்களைக் கொண்டு வரவேண்டியிருந்தது. ஆகவே 1939-ம் ஆஓ்டு நவம்பர் மாதம் இராணுவத்தடைச் சட்டத்தை ரத்து செய்தார். எனினும் போரிடுமட நாடுகள் பணம் கொடுத்து பொருள்களைத்தங்கள்

கப்பல்களிலேயே கொண்டு செல்லவேண்டுமென்ற விதி தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டது.

நிர்வகாத்தின் போக்கு மக்களுக்கு அதிருப்தி அளித்தது. அமெரிக்காவைப் போரில் ஈடுபடுத்திவடும் என அஞ்சி தலையிடாக் கொள்கையினர் நேச நாடுகளுக்கு உதவியளிப்பதை எதிர்த்தனர். இதற்கு மாறாக நேச நாடுகளுக்கு உதவி செய்து அமெரிக்காவைப் பாதுகாக்க வேண்டுமென தலையீட்டுக் கொள்கையினர் வேண்டினர். 1941-ல் போரால் நேரடியாக ஈடுபட வேண்டுமெனப் பறைசாற்றிய தலையீட்டுவாதிகள் ‘‘சுதந்திரத்திற்காகப் போராடுதல் குழுவை’’ தமக்குள்ளே அமைத்துக் கொண்டனர்.

**போர் அரங்கை நோக்கி**

போலந்து, டென்மார்க், நார்வே, நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளை ஜெர்மனி கைப்பற்றியது. 1940-ம் ஆண்டு ஜீன் மாதத்தில் ஜெர்மனி, இத்தாலி கூட்டுப் படைகளிடம் பிரான்ஸ் சரணடைந்தது. எஞ்சியிருந்த பிரிட்டன், சீனா ஆகிய இரு நாடுகளும் வன்மையான தாக்குதலால் மிகவும் பாதிக்கப்பட்டன. பிரிட்டிஷ் பேரரசு வீழ்ச்சியுறக் கூடிய சாத்தியக் கூறு அமெரிக்க நிரவாகத்தைப் பெரிதும் கலங்க வைத்தது.

பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்க நிர்வாகம் நாசகாரிகளைக் கொடத்துவிட்டு அதற்குப் பதிலாகப் பிரிட்டிஷ் பேரரசில் தளங்கள் அமைத்துக் கொள்ளும் உறுதிப்பெற்றனர். இதுவே அமெரிக்கப் போர் பயணத்தின் முதல் கட்டமாகும். இங்கிலீஷ் கால்வாயிலும் வடகடலிலும் நாசக்காரி நடவடிக்கைகளை எதிர்க்கவும், கப்பல்களைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்லவும், வேகமாகச் செல்லக்கூடிய போர்க்கப்பல்கள் பிரிட்டனுக்குத் தேவைப்பட்டன. பிரிட்டிஷ் பேரரசில் எட்டு இடங்களில் 99 ஆண்டு காலத்திற்கு அமெரிக்க இராணுவ தளங்களை அமைத்து அவைகளை பராமரிக்கும் உரிமைகளுக்குப் பதிலாக ரூஸ்வெல்ட் பிரிட்டிஷ் கடற்படைக்கு 50 நாசகாரிகளைக் கொடுத்தார். இது நடுநிலைச் சட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். எனினும் எவ்வித எதிர்ப்புமின்றி, நடந்துவிட்ட இந்நடவடிக்கைக்கு காங்கிரஸ் அனுமதி அளித்தது. ரூஸ்வெல்ட் 1940-ல் மறுபடியும் தேர்ந்தெடுககப்பட்டது இரண்டாவது கட்டமாகும். ஜனநாயக் கட்சி மூன்றாம் முறையாக ஜனாதிபதி தேர்தலில் அவரை வேட்பாளராக நிறுத்தியது. குடியரசுக் கட்சி வெண்டல் எல். வீல்கீ என்பவரை நிறுத்தியது. இருகட்சிகளுமே வெளிநாட்டுப் போரில் ஈடுபடப் பொவதில்லை என அறிவித்தன. ஆனால் ஜனநாயக் கட்சி இவ்வறிக்கையோடு ‘‘தாக்கப்பட்டாலன்றி’’ என்ற சொற்றொடரைச் சேர்த்துக் கொண்டது. ரூஸ்வெல்ட் மூன்றாம் முறையாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்ட்டார் மறுதேர்தல் என்ற நிச்சயமற்ற நிலையிலிரந்து விடுபட்ட அவர் ஒரு நெருக்கடி நிலையை ஏற்படுத்துவது எளிதெனக் கண்டார். இரவல் குத்தகை சட்டம் இயற்றியது மூன்றாவது கட்டமாகும். ரூஸ்வெல்ட் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், பிரிட்டனின் பாதுகாப்பிற்கு மிகவும் தேவையான பொருள்களின் பெயரடங்கிய கடிதம் ஒன்றை பிரிட்டிஷ் பிரதம அமைச்சர் சர்ச்சிலிடமிரந்து பெற்றுக் கொண்டார். போர்க்கடன் என்ற பிரச்சனைகளைக் கிளப்பாமல் பிரிட்டனுக்கு உதவ ரூஸ்வெல்ட் தீர்மானித்தார். இதன் விளைவே இரவல் குத்தகை அளித்தல். இதன்படி

பணத்திற்குப் பதிலாக பொருள்கள் கடனாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் அமெரிக்காவின் பாதுகாப்பை முன்னிட்டுளந்த ஒரு நாட்டின் பாதுகாப்பு அவசியமென ஜனாதிபதி கருதுகிறாரோ, அந்நாட்டிற்குத் தேவையான பாதுகாப்புப் பொருள்கள், உதவிகள், செய்தி விவரங்கள் முதலியவற்றை அளிக்கும் அதிகாரத்தை 1941-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இரவல் குத்தகைச் சட்டம் நிாவாகத்திற்கு அளித்தது. மிதமான அளவில் செய்படுத்தப்பட்ட இத்திட்டமானது 50 ஆயிரம் கோடிக்கும் மேலான மதிப்புள்ள பொருட்களையும், உதவிகளையும் அளித்தது. நடைமுறையில் இது நடுநிலையின் இறுதி எல்லையைக் குறிப்பதாகத் தோன்றிற்று.

அடுத்தப்படியாக அறிவிக்கப்பட்ட நடுநிலைக் கொள்கையை மீறி அச்சு நாடுகளுக்கெதிராக கூட்டு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கா நிர்வாகம் இங்கிலாந்தோடு பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டது. 1941-ம் ஆண்டு பிரிட்டிஷ், அமெரிக்க இராணுவ கடற்படை அதிகாரிகள் வாஷிஹ்டனில் இரகசிய மாநாடுகளைக் கூட்டி தங்களது போர் முயற்சிகளை ஒருங்கிணைக்கத் தீர்மானித்தனர். அணு ஆயுதங்கள், இரகசிய ஆயுதங்கள் போன்றவற்றை ஜெர்மானிய விஞ்ஞானிகள் உருவாக்கக் கூடுமென்று அஞ்சி ஜப்பானைவிட ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்குத் தான் அவர்கள் அதிக முக்கியத்துவம் அளிக்க ஒப்புக் கொண்டனர். 1941, ஜீன் மாதத்தில் ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கியதால் அது நேச நாடுகளுடன் சேர்ந்தது. இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி சர்ச்சிலும், ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் சேர்ந்து 1941-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அட்லாண்டிக் சாசனத்தை வெளியிட்டனர். இது அவர்களுடைய போர் குறிக்கோள்களைக் கொண்டிருந்தது. அவைகள் தங்களது நாடுகளுக்கு புதிய நிலப்பகுதி எதனையும் கைப்பற்ற மாட்டோம் என்ற உறுதி, மக்கள் தாங்கள் விரும்பும் அரசரரை தேர்ந்தெடுக்கும் உரிமை, அச்சம், தேவைகளிலிருந்து விடுதலை, கடல்களின் உரிமை, ஆக்கிரமிப்பு நாடுகளின் படைக்குறைப்பு போன்றவையாகும். ஆதிகாரப்பூர்வமாக நடுநிலை நாடாக இருந்தும், போரிடும் நாட்டோடு சேர்ந்து இத்தகைய சாசனத்தை ஐக்கிய நாடுகள் வெளியிட்டது வியப்பிற்குரியது. இது போரை நோக்கி அமெரிக்கா மேலும் ஓரடி எடுத்து வைத்துள்ளதாக குறிப்பதாகுமென சர்ச்சில் கூறினார்.

ஜெர்மன் கடற்படையுடன் மோதல்களின்றி கடன் குத்தகைப் பொருட்களைக் கொடுப்பது இயலாது அமெரிக்க போர்க் கப்பல்களும், விமானப்படையும் போர் ஆயுதம் தாங்கிக் கப்பல்களை பாதுகாத்துச் சென்று, ஜெர்மானிய கடற்படை நடமாட்டங்கள் பற்றிய தகவல்களைக் கொடுத்தன. அமெரிக்கக் கடற்படைக்கும்ஈ ஜெர்மானிய நீர்முழ்கிக்கும் இடையே ஏற்பட்ட மோதலினால் 1941-ல் ஜெர்மனி, ஐக்கிய நாடுகளின் நாசகாரியான ‘‘கீர்னி’’ யைத் தாக்கியது. போரில் அமெரிக்காவை ஈடுபடுத்த ஏதாவது ஒரு வாய்ப்பபை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தனது நாட்டு மக்களுக்கு, ‘‘நாம் சுடுவதைத் தவிர்க்க வேண்டுமென விரும்பினோம் ஆனால் சுடுதல் தொடங்கிவிட்டது என அறிவித்தார். அவரது கருத்துரையின் பேரில் நாட்டைப் போரில் ஈடுபடுத்துவதற்குத் தடையாக இருந்த நடுநிலைச் சட்ட விதிகளை காங்கிரஸ் நீக்கியது.

''நாசிக் கொடுங்கோன்மையை'' ஒழிக்க அட்லாண்டிக் சாசனம் வழியாக ஜனாதிபதி உறுதி எடுத்துக் கொண்டார். ஜெர்மானிய நீர்முழ்கிகளைச் சுடும்படி அவர் தனது கடற்படைக்கு ஆணை பிறப்பித்தார். இத்தகைய அமெரிக்க நடடிவக்கைகளுக்கிடையே ஹிட்லர் ஒரு சிறந்த இராஜதந்திரி போன்று எத்தகைய எதிர்தாக்குதலையோ, இறுதி எச்சரிக்கையோ விடாது அமெரிக்ரோடு ஒரு போரை வரவழைத்துக் கொள்ள மறுத்துவிட்டார். போர் அறிவிப்புக்காக ஏங்கி கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதியும், பிறபோர் வெறியர்களும் தக்க காரணமின்றி போரை அறிவிக்க அச்சங்கொண்டிருந்த வேளையில், பேர்ல் ஹார்பர் நிகழ்ச்சி அவர்களுக்கு அரியதொரு வாய்ப்பை அளித்தது.

ஜப்பானுக்கு எதிராக அமெரிக்கா பின்பற்றிய தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் இறுதி கட்டமே பேர்ல் ஹார்பர் சம்பவமாகும். புசிபிக் தீவுகளைக் கைப்பற்றிய பின்னர் கிழக்காசியாவில் அரசியல் ஆதிக்கம் பெற அமெரிக்கர் முற்பட்டனர். ரஷ்யாவிடமிருந்து சகாலினை கைப்பற்றும் ஜப்பானின் முயற்சியை அமெரிக்கா முறியடித்ததோடு அமெரிக்காவில் குடிபுகுந்திருந்த ஜப்பானியருக்கெதிராக இன வேறுபாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, அங்கு குடியேறிய ஜப்பானியரைக் கொடுமைப்படுத்த முற்பட்டனர். இதனால் கோபமுற்ற ஜப்பான் 1938-ல் ''கிழக்காசியாவிற்கு புதிய ஒழுங்கு'' என்ற கோட்பாட்டை அறிவித்தது. அதன்படி ஜப்பானியர்கள் தங்கள் செல்வாக்கைத் தெற்கு நோக்கி விரிவடையச் செய்தனர். ஜப்பானின் இந்நடவடிக்கை தென்கிழக்காசியாவில் அமெரிக்க, ஐரோப்பிய மேலாண்மையை அச்சுறுத்தியது. இதன் எதிர் நடவடிக்கையாக 1911-ம் ஆண்டின் வணிக உடன்படிக்கையை ரத்து செய்யும் குறிப்பு ஒன்றை ஐக்கிய நாடுகள் ஜப்பானுக்கு அனுப்பியது. இதனால் தளர்ச்சியுறாத ஜப்பான் தனது படைகளை இந்தோசீனாவிற்கு அனுப்பியதும், ஐக்கிய நாடுகள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சுத்தப்படுத்தப்படாத இரும்பு எ∴கு மீது தடை விதித்து, சீனாவிற்கு பெரிய அளவில் கடன் வழங்கியது. இதைத் தொடர்ந்து அமெரிக்காவில் ஜப்பானின் உடமைகள் முடக்கப்பட்டு அதன் வணிக உரிமைகள் மறுக்கப்பட்டன. நேரடி பேச்சுவார்த்தைகள் மூலம் ஜப்பான் வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டியது. ஆனால் ரூஸ்வெல்ட் அதற்கு மறுப்பு தெரிவித்தார். 1941-ம் ஆண்டு டிசம்பர் 7-ம் நாள் ஜப்பான் பேர்ல் ஹார்பரைக் குண்டு வீசித் தாக்கி 19 அமெரிக்க கப்பல்களை மூழ்கடித்தோ அல்லது சேதப்படுத்தியோ அமெரிக்க பசிபிக் கடற்படைப்பிரிவை செயலற்றதாக்கியது. அடுத்தநாள் ஜப்பான் மீது அமெரிக்கா போர் பிரகடனம் செய்தது. சில நாட்களுக்கு பின் ஜெர்மனியும், இத்தாலியும் ஐக்கிய நாடுகளுக்கெதிராக போர் அறிக்கை விடுத்தன.

**முக்கிய போர்க்கால நடவடிக்கைகள்**

1942-ல் அமெரிக்க இராணுவம் பெருமளவில் போர்க்களத்தில் புகுந்தது. ஆனால் வெகுவிரைவிலேயே தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டது. அச்சு நாடுகள் மேற்கிலும், கிழக்கிலும் வெற்றிகளைத் தொடர்ந்து பெற்றனர். பிரிட்டனுக்கெதிராக கடுமையான தாக்குதல்களை நடத்திய ஜெர்மனி ரஷ்யாவிடமிருந்து பெரும் நிலப்பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது. ஜப்பானியர் பிலிப்பைன்ஸ் மீது படையெடுத்தனர். மேலும் தென்கிழக்காசியாவில்

பிரிட்டிஷ், டச்சு, பிரெஞ்சு குடியேற்றங்களைத் தாக்கினர். பிரிட்டிஷ் ஆசிய கடற்படைப்பிரிவும், அமெரிக்க பசிபிக் கடற்படைப்பிரிவும் பெரிதும் சேதப்படுத்தப்பட்டன. இழப்பை சரி செய்யவும், தாக்குதலை எதிர் நோக்கவும், அமெரிக்கா ஆயுதங்களைப் பெருக்குவதில் அதிக கவனம் செலுத்தியது.

1942-ம் ஆண்டு நவம்பரில் ஐக்கிய நாடுகள், பிரிட்டிஷ் பேரரசின் கூட்டுப்படைகள், வடமேற்கு ஆப்பிரிக்காவை நோக்கிச் சென்றன. தளபதி ஐசன் ஹோவரின் தலைமையில் செயல்பட்ட அப்படைகள் ஜெர்மானிய, இத்தாலியப் படைகளை முறியடித்தன. 1943-ம் ஆண்டு ஜீலையில் நேச நாட்டுப்படைகள் சிசிலி-இத்தாலி போன்றவற்றை கைப்பற்றியது. இத்தாலியில் ஜெர்மன் துருப்புகள் வடக்கு மலைப்பகுதிக்குப் பின்வாங்கின.

1944-மம் ஆண்டு ஜீன் மாதத்தில் அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் பிரான்சின் வட, தென் கடற்கரைப் பகுதிகளைத் தாக்கின. ஜெர்மானியரை பிரான்சிலிருந்தும், பெல்ஜியத்திலிருந்தும் விரட்டியடித்தனர். பெல்ஜியத்தில் நடைபெற்ற பல்ஜ் (Bulge) என்ற போரில் ஜெர்மன் படைகள் திருப்பபித் தாக்கின. ஆனால் அவைகள் தோற்கடிக்கப்பட்டன. ரஷ்யா இதற்கிடையில் ஜெர்மானியரை தனது நிலப்பகுதியிலிருந்து விரட்டியடித்து ருமேனயிா, பல்கேரியா, ஹங்கேரி மற்றும் போலந்து நாடுகளைக் கைப்பற்றியது. பிரிட்டிஷ், அமெரிக்கப் படைகள் மேற்கிலிருந்து ஜெர்மனியைத் தாக்கியபோது ரஷ்ய இராணுவம் கிழக்கிலிருந்து பெர்லினுக்கு முன்னேறிச் சென்றது. அச்சு நாடுகளின் பாதுகாப்பு நிலை குலைந்தது. முசோலினி கொல்லப்பட்டார். ஹிட்லர் தற்கொலை செய்து கொணடார் என நம்பப்படுகிறது. டோயினிட்ஸ் தலமையிலான ஜெர்மானிய அரசு வெற்றி பெற்ற விரோதிகளிடம் சரண்டைந்து ஐக்கிய நாடுகள் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நான்கு நாடுகளும் ஜெர்மனியை நான்கு பிரிவாகப் பிரித்து பங்கீடு செய்து கொண்டன. ரஷ்யா நீங்கலாக ஏனைய மூன்று நாடுகளின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த ஜெர்மன் பகுதிகளை இணைத்து மேற்கு ஜெர்மனியை உருவாக்கும் வரை அமெரிக்கா, பெர்லினின் ஒரு பகுதியையும் ரைன் நதிக்கும் கிழக்கே தெற்கு ஜெர்மனியின் பெரும்பான்மை பகுதிகளையும் தனது உடமையாக வைத்திருந்தது.

கிழக்கில் ஜப்பான் அமெரிக்கரிடமிருந்த பசிபிக் தீவுகளையும் கைப்பற்றிக் கொண்டதோடு பிலிப்பைன்ஸை விட்டு ஆஸ்திரேலியாவுக்கு அமெரிக்காவை விரட்டியது. எனினும், 1942-ல் ஜப்பான் மீது பெற்ற இரு கடற்படை வெற்றிகளுக்குப் பிறகு ஐக்கிய நாடுகள் வன்மையான தாக்குதல்களை மேற்கொண்டது. சாலோமன்சிலுள்ள குவாடல்கனால் தீவில் அமெரிக்கத் துருப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டன. 1944-ம் ஆண்டு அக்டோபரில் பிலிப்பைன்ஸை மீண்டும் அமெரிக்கா கைப்பற்றிய பின் இவோஷிமாவையும், ஒகினாவையும் கைப்பற்றியது. 1945-ம் ஆண்டு ஏப்ரலில் ரூஸ்வெல்ட்டின் மரணத்திற்கு பிறகு பதியேற்ற ட்ருமனின் ஆணைப்படி 1945-ம் ஆண்டு ஆகஸ்டில் அமெரிக்கப்போர் விமானங்கள் ஜப்பானின் முக்கிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி ஆகியவைகள் மீது அணுகுண்டுகளை வீசி அவைகளின் மக்கட் தொகையின் பெரும் பகுதியை அழித்தன. ரஷ்யாவும் ஜப்பான் மீது போர் தொடுத்தது. இந்நிலையில் எவ்வித நிபந்தனையுமின்றி ஆகஸ்டில் ஜப்பான் சரணடைந்தது.

**ஊள்நாட்டில் படை ஆயத்தம்**

வேற்றிபெற வேண்டுமென, காங்கிரஸ் இராணுவப்படை கடற்படை, ஆகாயப்படை, ஆகிய மூப்படைகளையும் விரிவுபடுத்த ஏராளமான பணத்தை ஒதுக்கியது. 1940-க்கும் 1945க்கும் இடைப்பட்ட காலத்தில் கூட்டிணைவு அரசு 3,10,000 மில்லியன் டாலர்களைச் செலவு செய்தது. நிதி திரட்ட வரிகள் உயர்த்தப்பட்டு, போர்ப்பத்திரங்கள் விற்கப்பட்டன. தங்கள் வரலாற்றிலேயே அதிகமான வரியை இக்காலத்தில் அமெரிக்கர் செலுத்தினர். 21 வயதுக்கும் 35 வயதக்கும் இடைப்பட்ட ஆடவர் அனைவரும் இராணுவச் சேவைக்கு தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென தெிந்தெடுத்தல் பணிச்சட்டம் குறிப்பிட்டது. தொடர்ந்து பதினெட்டு வயதுக்கும் நாற்பத்தைந்து வயதுக்கும் இடைப்பட்டோர் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனக் கூறப்பட்டது.

தேசிய பாதுகாப்பு கவுன்சில் கச்சாப் பொருட்களின் விநியேகத்தை நிர்வகித்து, உற்பத்தியை மேற்பார்வையிட்டு, விலையைக் கட்டுப்படுத்தி, தொழிலாளர் பிரச்சனைகளை ஒழுங்குபடுத்தியது. அமெரிக்கா போரில் ஈடுபட ஆரம்பித்தப்பின் இப்பணிகள் அனைத்தும் போர் உற்பத்திக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. இதற்கு உதவியாக விஷேச நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. கூட்டிணைவுக்கடன் நிறுவனம் நிதி கொடுத்தது. போர்க்கால மனித ஆற்றல் குழு வேலையாளர்களை ஒதுக்கியது. போர்க்கால கப்பல் நிர்வாகம் பெரும் போர்க்கப்பல்களைக் கட்டும் பணியை மேற்பார்வையிட்டது. தொழிலாளர் அமைப்புகள் தங்கள் ஆதரவை அளித்ததோடு தொழிலாளர் அமைதியின்மையைத் தவிர்க்கப் பெரிதும் முயன்றன. இரயில்வேத் துறைகள் தொடர்ந்து தனியார் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கின. ஆனால் கூட்டிணைவு அரசு அதிகாரிகள் அவைகளின் பணிகளை ஒழுங்குப்படுத்தினர். 1944-ல் ஐக்கிய நாடுகள் மற்றும் பிரிட்டிஷ் பேரரசின் போர் உற்பத்தி அச்சு நாடுகளைவிட நான்கு மடங்காக அதிகரித்தது.

முக்களின் சிவில் உரிமைகள் மீது கட்டுப்பாடுகள் வதிக்கப்பட்டன. ஜப்பானிய குடியேற்றத்தினர் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர். போரினால் பொருள்களின் விலை உயர்ந்தது. தொழிலாளர் பற்றாக்குறை, கச்சாபொருள் பற்றாக்குறை போன்ற பிரச்சனை ஏற்பட்டது. இதனை நிவர்த்தி செய்ய பங்கீட்டு முறையும் விலை உச்சவரம்பு முறையும் பின்பற்றப்பட்டது.

1943-1944-ம் ஆண்டுகளில் நேசநாடுகளின் பிரதிநிதிகள் போருக்குப்பின் மாநாடுகளைக் கூட்டி சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் தீர்மானித்தனர். டம்பார்ட்டன ஓக்ஸ் மாநாடு ஐக்கிய நாடுகளின் சாசனம் என்ற ஒன்றை வரையத் தீர்மானித்தது.

போர்க்கால மாநாடுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது 1945-ல் யால்ட்டாவில் கூட்டப்பட்ட மாநாடாகும். ஆமைதிக்கான உலக அமைப்பை உருவாக்க1945-ம் ஆண்டு ஏப்ரல் 25-ம் நாள் சான்பிரான்சிஸ்கோவில் ஐக்கியநாட்டு சபையின் கூட்மென்று நடைபெறும் என்று அது அறிவித்தது. ஐக்கிய நாட்டு சபையில் மூன்று வாக்குகள், பாதுகாப்புக் குழுவில் நிரந்தர உறுப்பினருக்குரிய மறுப்பானை உரிமை, கிழக்கு போலந்தில் நிலச்சலுகைகள்,

மஞ்சூரியாவின் மீது ஆதிக்க உரிமை, ஜப்பானிடமிருந்து தென் சகாலினையும் குரைல்சையும் இணைத்துக் கொள்ளல், வெளி மங்கோலியாவை சார்புநாடாக வைத்துக் கொள்ளுதல் போன்ற சலுகைகளை ரஷ்யாவிற்குக் கொடுப்பதாக ரூஸ்வெல்ட் ரகசிய ஒப்புதல் அளித்தார். இச்சலுகைகளுக்குப் பதிலாக ஜப்பான் மீது ஜப்பான் மீது போர் தொடுக்கவும், போலந்து, யுகோஸ்லேவியா ஆகிய நாடுகளில் மக்களாட்சி அரசுகளை அமைக்கவும் ரஷ்யா ஒப்புக்கொண்டது. தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனியை முறையே ஐக்கிய நாடுகள் ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் கீழ் வைக்கவும் இம்மாநாடு தீர்மானித்தது.

ரூஸ்வெல்ட் 1945 ஏப்ரலில் இறந்தார். அமெரிக்க இராஜதந்திரத்தின் பெரும் வீழ்ச்சியை யால்டா மாநாடு எதிர்நோக்கியது. சீனா நேசநாடுகளுடன் சேர்ந்து போரிட்டது. ஆனால் ரஷ்யாவை ஜப்பான் மீது போர் தொடுக்கச் செய்ய சீனாவின் ஒப்புதலின்றி சீனாவிற்குச் சொந்தமான வெளி மங்கோலியாவையும் மஞ்சூரியாவையும் ரஷ்யர்களுக்குக் கொடுத்து, அமெரிக்கா சீனாவிற்கு நம்பிக்கைத் துரோகம் செய்தது. ஜப்பான் வீழ்ச்சியடையும் நிலையை அடைந்தது. இந்நிலையில் ரஷ்யாவின் உதவி அமெரிக்காவிற்குத் தேவையில்லை. ரஷ்யாவிற்கு வழங்கிய அதிக அளவிலான சலுகைகளினால் கிழக்கு ஐரோப்பா, கிழக்காசியா போன்றவற்றின் வல்லமைச் சமநிலைப்பாதிக்கப்பட்டது. மேலும் யால்டா மாநாடு மறைமுகமாக கம்யூனிசம் வளர உதவியது. சீனாவில் சியாங்கே ஷேக்கின் நிர்வாகத்தை வலிமையற்றதாக்கி கம்யூனிசத்தின் வலிமையை வலுப்படுத்தியது. எஸ்தோனியா, லித்வேனியா, வாட்வியா போன்ற நாடுகளை ஸ்டாலின் ரஷ்யாவோடு இணைத்தது மட்டுமின்றி போலந்து, ஹங்கேரி, கிழக்குச் ஜெர்மனி முதலிய நாடுகளில் கம்யூனிச அரசுகளையும் நிறுவினார். இச்சூழ்நிலைகளின் போக்கு கெடுபிடிப் பொரின் ஆரம்பமாகும்.

1945-ல் போட்ஸ்டாமில் மற்றொரு மாநாடு கூடியது. இம்மாநாடு பெர்லினை நான்கு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியையும் முறையே அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் வைப்பதென தீர்மானித்தது. நேச நாடுகள் ஜெர்மனியை வைத்திருப்பது பற்றிய நோக்கத்தை இம்மாநாடு வெளியிட்டது. படைக்குறைப்பு, நாசிக்கட்சியை அழித்தல், போர்த்தொழில் உபகரணங்களை நீக்குதல், மக்களாட்சி முறையிலான அரசுகளை உருவாக்குதல் முதலியன அறிவிக்கப்பட்ட நோக்கங்களாகும்.

நேசநாடுகள் வெற்றி பெறுவதற்கும் கம்யீனிசம் வளர்வதற்கும் உண்மையில் ஐக்கிய நாடுகள் பெரிதும் உதவின. மிகவும் இக்கட்டான வேளையில் நேசநாடுகளுக்கு உதவ அமெரிக்கா முன்வந்தது. நேசநாடுகளின் முக்கியத் தேவைகளை அமெரிக்காவே பூர்த்தி செய்தது. மேற்கில் ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளையும், கிழக்கில் ஜப்பானையும் எதிர்த்துப் போரிட இராணுவத்தினரை பெருமளவில் அமெரிக்கா நேசநாடுகளுக்குக் கொடுத்து உதவியது. எனினும் ஆசியாவில் இரு நகரங்களை அணுகுண்டுகளால் தாக்கி கொடுமையான முறையில் அந்நகரின் மக்களைக் கொன்றொழித்தமை எவராலும் மறுக்க இயலாது. ஊலகின் பல பாகங்களிலும்

பின்பற்றப்பட்ட அமெரிக்க கொடுந்தனமையே இது பிரதிபலிக்கின்றது. போர்க்கால மாநாடுகள், போருக்குப் பின் ஏற்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வுகண்டதோடு ஐக்கிய நாடுகள் நிறுவனத்தையும் தோற்றுவித்தன. இதற்கிடையில் அநேக பிரச்சனைகளை, குறிப்பாக ரஷ்யா, சீனா, ஆகிய நாடுகளுக்கிடையேயுள்ள தொடர்பில் புதிய பிரச்சனைகளை இம்மாடுகள் தோற்றுவித்தன. ரஷ்யர்களுக்கு அளிக்கப்பட்ட பெருமளவிலான சலுகைகள் கம்யூனிசம் வளரப் பேருதவி புரிந்தன.

**ஆனைத்து அமெரிக்க இயக்கம்**

ஊலகப்போர்களின் போது வலுப்பெற்ற அனைத்து அமெரிக்க இயக்கங்கள் அமெரிக்கக் கண்டத்தின் எல்லா சுதந்திர நாடுகளும் பொருளாதாரம், பண்பாடு, அரசியல் ஆகிய துறைகளில் எல்லா வகைகளிலும் ஒத்துழைக்க வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருந்தன. அமெரிக்கா விடுதலைப் பெற்ற காலத்தில் இவ்வியக்கம் தோன்றியதாக 820-ல் ஹென்றி க்ளே என்பவர் அமெரிக்க நாடுகளின் சுதந்திரக் கழகம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை வெளியிட்டார். நான்கு ஆண்டுகளுக்குப்பின் விரெசிலின் தூதரான ஜோஸ்ரெல்லே என்பவர் அமெரிக்கச் சுதந்திரத்தைக் காக்க ‘‘அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பு’’ உன்றை ஏற்படுத்தவேண்டுமென ஜனாதிபதி மன்றோவுக்கு கருத்துரை வழங்கினார். இலத்தீன் அமெரிக்க விடுதலை வீரர்களில் ஒருவரான சைமன் பொலிவர் என்பவர் 1826-ல் கூட்டிய பனாமா காங்கிரஸ், அமெரிக்க நாடுகள் இணைவதற்கான ஒரு இயக்கத்தை ஆரம்பித்தது. எனினும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை, நாடுகளுக்கிடையே போட்டி, ஐரோப்பிய சூழ்ச்சி, ஐக்கிய நாடுகளுக்கு எதிரான சந்தேக எண்ணம் போன்ற பல்வேறு காரணங்கள் அமெரிக்க நாடுகளின் கழகம் ஒன்று உருவாவதைத் தடை செய்தன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவ்வியக்கம் அதிக செல்வாக்கு பெற்றது.

**பிலைனும் ஆரம்பகால முயற்சியும்**

ஜனாதிபதியான கார்பீல்ட், ஹாரிசன் ஆகியோரின் கீழ் மாநிலச் செயலாளராகப் பணியாற்றிய ஜேம்ஸ் பிளைன் என்பவர் அமெரிக்க நாடுகளை ஒன்று சேர்ப்பதற்கான ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டார். இலத்தீன் அமெரிக்க நாடுகளிடையே அடிக்கடி எழும் போர்களையும் பன்னாட்டு வணிகத்திற்கெதிரானத் தடைகளையும் கண்ணுற்ற பிளைன் அமைதியைக் காக்கவும், வாணிபத்தைப் பெருக்கவும் ஒருவகையான கூட்டமைப்பு தேவை எனக் கருதினார். அவரது கருத்துரையினால் ஜனாதிபதி கார்பீல்ட் போரினைத் தவிர்ப்பதற்கான வழியைக் காண 1881-ம் ஆண்டு நவம்பர் 29-ம் நாள் வாஷிஹ்டனில் கூடுமாறு அமெரிக்க நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார். எனினும் பதில் எதுவும் கிடைக்கப் பெறுவதற்கு முன்பாக கார்பீல்ட் கொல்லப்பட்டார். பிளைன் பதவி விட்டு விலகவேண்டிய நிலையேற்றப்பட்டது. எனினும் இவருடைய திட்டத்தை அநேக நாடுகள் வரவேற்றன. பிளைனைத் தொடர்ந்து அயல்நாட்டுச் செயலாளராகப் பதவியேற்ற பிரடெரிகட பிரிலிங்குயிசென் ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையோடு தொடர்புடைய சதித்திட்டங்களையும், ஒழுங்கீனங்களையும் கண்டிக்கும் வாய்ப்பை இவ்வழைப்பு பிற அமெரிக்க நாடு:களுக்கு அளிக்கும் என அஞ்சி அதை ரத்து செய்தார்.

ஜனாதிபதி ஹாரிசனின் கீழ் 1888-ல் பிளைன் மறுபடியும் வெளிநாட்டுச் செயலாளரானார். மீண்டும் பதினெட்டு நாடுகளடங்கிய அமெரிக்க நாடுகளின் முதல் மாநாடு 1889-ல் வாஷிஹ்டனில் சந்தித்தது. இதில் அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் சில தீர்மானங்களே நாடுகளின் ஒப்புதலைப் பெற்றன. எவ்வாறாயினும் வாஷிங்டனை தனது தலைமையகமாகக் கொண்ட பின்னர் அனைத்து அமெரிக்கக் கூட்டமைப்பு என வழங்கப்பட்ட அமெரிக்க குடியரசுகள் அமைப்பே இதன் மிகவும் குறிப்பிடத்தக்க சாதனையாகும். ஆனால் இம்மாநாட்டின் உடனடி விளைவுகள் பயனளிப்பனவாக இல்லை. எனினும் அமெரிக்கத்துவத்தை ஐக்கிய நாடுகளின் ஒரு கொள்கையாக ஆக்கிய பெருமை பிளைனையே சாரும்.

**அனைத்து அமெரிக்க மாநாடுகள்**

1900-க்கும் 1933க்கும் இடைப்பட்ட பல்வேறு காலத்தில் பல்வேறு தலைநகர்களிலும் தொடர்ச்சியாக பல மாநாடுகள் நடந்தன. 1910-ல் மெக்ஸிகோ நகரில் நடைபெற்ற இரண்டாவது மாநாடு அமெரிக்கக் குடியரசுகள் அமைப்பை மாற்றியமைக்கவும், அதனை வலிமைப்படுத்தவும் தீர்மானித்தது. 1906-ல் ரியோ டி ஜெனிவோரோவில் கூடிய மாநாடு குறிப்பிடத்தக்க சாதனை எதையும் செய்யவில்லை. பேோனஸ் அயர்ஸில் 1910-ல் நடைபெற்ற மாநாடு அனைத்து அமெரிக்கக் கூட்டமைப்பின் செயல் திட்டங்களை மக்களுக்குத் தெரிவிக்க மாதாந்திர வெளியீடு ஒன்றை வெளியிடத் தீர்மானித்தது. அனைத்து அமெரிக்கக் கூட்டமைப்பின் தலைமைப் பதவி குறித்தும், மன்றோ கொள்கையை அனைத்து அமெரிக்க நாடுகளின் கூட்டுப் பொறுப்பாக மாற்றுவது குறித்தும் ஐக்கிய நாடுகளுக்கும், பிற அமெரிக்க நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சாண்டியாகோயில் நடைபெற்ற அடுத்த மாநாடு தோல்வியுற்றது. அனைத்து அமெரிக்க கூட்டமைப்பின் தலைமை நாடாக ஐக்கிய நாடுகளை ஏற்றுக் கொள்ள இலத்தீன் அமெரிக்க நாடுகள் மறுத்ததோடு, மன்றோ கொள்கைக்கான ஐக்கிய நாடுகளின் ஏகபோகப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள மறுத்தன. இவ்வித கருத்து வேறுபாடுகளின் காரணமாக அடுத்த மாநாடும் தோல்வியுற்றது.

ஊண்மையில் ஐக்கிய நாடுகள் பின்பற்றிய ஆக்கிரமிப்புக் கொள்கை அனைத்து அமெரிக்கத்துவத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. பிரம்புக் கொள்கையைக் கடைபிடித்த தியோடர் ரூஸ்வெல்ட் பனாமா கால்வாய் பகுதியைக் கொள்ளையடிக்க பனாமாவில் புரட்சி ஏற்படுத்த திட்டம் உருவாக்கினார். பிளாட் திருத்தத்தில் குறிப்பிட்டது போன்று கியூபாவின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கத் தலையீட்டை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தினர். மேலும் அண்டைநாடுகளை பாதுகாப்பு நாடுகளாக்க மன்றோ கொள்கையை ஒத்த ரூஸ்வெல்ட் கொள்கையை அமெரிக்கா அறிவித்தது. இத்தகைய எதேச்சதிக்காரப் போக்கு இலத்தீன் அமெரிக்காவுக்கு சந்தேகத்தை உண்டாக்கியது. ஜனாதிபதி டாப்டின் டாலர் இராஜதந்திரக் கொள்கையும் அமெரிக்கா நாடுகளுக்கிடையே உள்ள ஒற்றுமைக்கு இடையூறாக இருந்தது. படையெடுப்பின் வழியாக மேலும் அதிகமான பகுதிகளை ஐக்கிய நாடுகள் இணைத்துக் கொள்ளாது என உறுதியளித்து, பிற அமெரிக்க

நாடுகளின் அச்சத்தைப் போக்க ஜனாதிபதி வில்சன் முயன்றார். ஆனால் இவ்வறிக்கைக்கு மாறாக அவர் மெக்ஸிகோவில் தலையிட்டார்.

**அண்டை நாடுகளின் நட்புறவுக் கொள்கை**

வெளிநாடுகளில் பதட்டநிலை ஏற்பட்டபோது அதனை நிவர்த்தி செய்வதன் அவசியத்தைஐக்கிய நாடுகள் உணர்ந்தது. ஹெர்பர்ட் ஹீவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் நாடுகளுக்கிடையிலட நல்லெண்ணத்தை வளர்க்க நட்புறவுக் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். ஜனாதிபதி ஹீவரின் முயற்சியால் உருவான இந்நடவடிக்கைகளை இலத்தீன் அமெரிக்க நாடுகள் வரவேற்றன. ஜனாதிபதி பிராஹ்லின் டி ரூஸ்வெல்ட் நிர்வாகத்துடன் இணைத்துப் பேசப்படும் சிறந்த அண்டை நாடுகளின் நட்புறவுக் கொள்கைக்கு அடித்தளம் அமைத்தவர் ஜனாதிபதி ஹீவர் ஆவார்.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் நிாவாகத்தில் ஐக்கிய நாடுகள் பற்றிய தவறான எண்ணத்தைப் போக்கவும், இலத்தீன் அமெரிக்க நாடுகளோடு ஒத்துழைப்பை விருத்தி செய்யவும், ஐக்கிய நாடுகள் உறுதியான முயற்சிகளை மேற்கொண்டது. தாராளக் கொள்கையினரான ரூஸ்வெல்ட் அண்டை நாடுகளின் தேசிய நலன்களை மதிக்க தீர்மானித்தார். அத்துடன் அமெரிக்க விரிவடைதல் கொள்கைக்கு எதிராக வளாந்து வரும் எதிர்ப்பு, அனைத்து நாடுகள் வணிகத்திற்கெதிரான தடைகள், இலத்தீன் அமெரிக்காவின் உள்நாட்டுத் தகராறுகள், ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் வலுப்பெற்று வந்த சர்வாதிக்காரத்தால் உருவாக்கப்பட்ட அச்சுறுத்தும் சூழ்நிலைகள் போன்றவை ஐக்கிய நாடுகளின் மரபான போக்கில் மாறுதல்களைக் கோரின. பிற நாடுகளின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சிறந்த அண்டை நாட்டு நட்புறவுக் கொள்கையை தனது நிாவாகம் பின்பற்றும் தீர்மானத்தை 1933-ல் ஜனாதிபதி அறிவித்தார். இக்கொள்கைக்கு ஏற்ப ஐக்கிய நாடுகள், பிளாட் திருத்தத்தைக் கைவிட்டு, ஹையிட்டி மீதும் டொமிக்கன் குடியரசு மீதும் சுமத்தப்பட்டிருந்த நிதிக் கட்டுபாட்டிற்கு முற்றுப்புள்ளியிட்டு, பனாமாவின் மேலாண்மையை மதிக்க ஒப்புக் கொண்டது. இலத்தீன் அமெரிக்க நாடுகளின் மத்தியல் நிலவிய சந்தேக எண்ணங்களைக் குறைக்க இந்நடவடிக்கைகள் பெரிதும் பயன்பட்டன. போருக்கான சூழ்நிலை திட்டவட்டமானக் கொள்கைகளை உருவாக்க அமெரிக்க நாடுகளைப் பணித்தது. இந்நோக்கத்தை கருத்திற்கொண்டே 1936-ல் போனஸ் அயர்சிலும், 1938-ல் லீமாவிலும் மாநாடுகள் நடைபெற்றன. பிறநாடுகள் எந்த ஒரு அமெரிக்க நாட்டின் உரிமைகளை மீறும் போதும் அதுபற்றி ஒன்றிற்கொன்று கலந்தோசிக்கும்படியும், எல்லாவிதத் தகராறுகளையும் நடுநிலையாளர் குழு வழியாகத் தீர்க்கும்படியும் போனஸ் அயர்ஸ் மாநாடு கூறியது. கூட்டுப்பாதுகாப்பு, கண்டத்து ஒருமைப்பாடு, பிரதேச ஒருமைபாட்டை ஒருவருக்கொருவர் காத்தல், ஆக்கிரமிப்பை ஏற்றுக் கொள்ள மறுத்தல் போன்ற கொள்கைகளை லீமா அறிக்கை உறுதிப்படுத்தியது. இம்மாநாடுகள் அமெரிக்க நாடுகளிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்தவும், இரண்டாம் உலகப்போரில் ஒன்றுபட்டு நிற்கவும் துணை புரிந்தன.

1948ல்போகோடாவில் கூடிய ஒன்பதாவது அனைத்து அமெரிக்க மாநாடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அமெரிக்க நாடகளின் அமைப்பிற்கான சாசனத்தில் இது

கையெழுத்திட்டதோடு ஒழுங்காக அமைக்கப்படாத அனைத்து அமெரிக்க முறைக்கு இது சட்டவடிவம் கொடுத்தது. தகராறுகளை அமைதியான வழிகளில் தீர்த்தல், கூட்டுப்பாதுகாப்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றிக்கு இச்சாசனம் வழிவகுத்தது. அனைத்து அமெரிக்க மாநாடுகள் அமெரிக்கநாடுகளின் குழு, அனைத்து நாடுகளின் கூட்டமைப்பு ஆகியவற்றைக் கொண்ட அமெரிக்க நாடுகளின் அமைப்பு அங்கங்களை இது ஏற்படுத்தியது. 1944ல் காரகாசில் கூடிய பத்தாவது மநாாடு அனைத்துலக கம்யூனிசத்திற்கெதிராக அமெரிக்க நாடுகளின் ஒருமைப்பாட்டை அறிவித்தது.

**ஆனைத்து அமெரிக்க கூட்டமைப்பு**

ஆமெரிக்க நாடுகள் அமைப்பின் மத்திய நிரந்தர அங்கமான அனைத்து அமெரிக்க கூட்டமைப்பழன் தலைமையிடம் வாஷிங்டன் ஆகும். இதில் ஒவ்வொரு பிரதிநிதித்துவ நாடும் ஒரு தூதுவரைக் காலத்திற்கு தங்களது நாட்டின் பிரதிநிதியாக அனுப்பும். இது பத்து வருட காலத்திற்கு அனைத்து அமெரிக்கக் குழுவால் நியமிக்கப்படுகின்ற பொதுச் செயலாளரையும், உதவிப் பொது செயலாளரையும் கொண்டுள்ளது. அமெரிக்க நாடுகளின் அமைப்பு சிறப்பு நிறுவனங்களையும் உருவாக்கியுள்ளது. அவைகள் அனைத்து அமெரிக்க பொருளாதார, சமுதாயக் குழு, அனைத்து அமெரிக்க நீதிபதிகள் குழு, அனைத்து அமெரிக்க பண்பாட்டுக்குழு முதலியவையாகும். புல்வேறு துறைகளிலும் அனைத்து அமெரிக்க நாடுகளின் ஒத்துழைப்பை ஏற்படுத்த இந்நிறுவனங்கள் அடிக்கடி மாநாடுகள் கூட்டின.

‘‘முன்னேற்றத்திற்கு கூட்டு’’ என்ற ஜனாதிபதி கென்னடியின் கொள்கைகளால் உந்தப்பட்டு உருகுவேயில் 1961-ல் கூடிய அனைத்து அமெரிக்க பொருளாதார சமுதாய மாநாடு முன்னேற்றத்திற்கு கூட்டு என்ற அறிக்கையை அனைத்து அமெரிக்க மக்களுக்கும் அளித்தது.

இரு அமெரிக்க கண்டங்களிலும் வாழும் எல்லா மக்களின் வாழ்க்கை நிலையையும் முன்னேற்றுவதற்கான கூட்டு ஒன்றை அமைக்கும் தங்கள் விருப்பத்தை அமெரிக்கக் குடியரசுகள் அறிவித்தன. இந்நோக்கத்தை கருத்திற்கொண்டு மக்களாட்சி நிறுவனங்களை வலுப்படுத்தவும், பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை விரைவுபடுத்தவும், பண்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தவும் அவைகள் தீர்மானித்தன. இவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி திருப்தியற்றதாய் இருந்த போதிலும் இவைகளை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் பிற அமெரிக்க நாடுகளுக்கு உதவ முன் வந்தது.

ஐக்கிய நாடுகளும், இலத்தீன் அமெரிக்க நாடுகளும் அனைதது அமெரிக்கத்துவம் மாறுபட்ட வரலாறு உடையது. சில வேலைகளில் இவ்வமைப்பு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பது போல் தோன்றியது. ஐக்கிய நாடுகளின் பேராசையும், இலத்தீன் அமெரிக்க நாடுகளின் சந்தேக எண்ணமும் அனைத்து அமெரிக்க நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதில் பெரும் தடையாக இரந்தன. உண்மையில் அமெரிக்கத் தலையீட்டுக் கொள்கைக்கும் அனைத்து அமெரிக்கத்துவத்திற்குமிடையே எவ்வித ஒருமைப்பாடும் ஏற்படவில்லை. எவ்வாராயினும் மன்றோ கொள்கையை அமெரிக்க

கண்டங்களின் பொறுப்பாக்கவும், தலையீட்டுக் கொள்கையைக் கைவிடவும் ஐக்கிய நாடகள் ஒப்புக் கொண்டபோது ஒரு சில தடைகள் நீக்கப்பட்டன. ஐக்கிய நாடுகளின் இராணுவ வலிமை, வலிமைமிக்க நாடுகளாக இலத்தீன் அமெரிக்க நாடுகளால் உருவாக முடியாமை ஆகியவற்றின் காரணமாக இவ்விரு பிரிவிற்குமிடையே ஒருமித்த கருத்தையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவது முடியாத ஒன்றாகவே உள்ளது. “குறிப்பாக இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே அனைத்து அமெரிக்கத்துவம் என்ற குறிப்பு பலகையின் கீழ் அமெரிக்க மேலாண்மை, இலத்தீன் அமெரிக்க நாடுகளை ஆக்கிரமிப்பிற்கும், அடிமைத்தனத்திற்கும் உள்ளாக்கி, தொடர்ந்து இலத்தீன் அமெரிக்க மக்களை துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது” என 1973-ல் பாதுகாப்புக் குழுவில் சீனப் பிரதிநிதியான ஹுவாங் ஹுவா அறிவித்த அறிக்கையில் பெரும் உண்மை உண்டு. எனினும் அனைத்து அமெரிக்க இயக்கமும், அடிக்கடிக் கூட்டப்படும் அனைத்து நாடுகள் மாநாடுகளுமடஒன்றுக்கொன்று இடையிலான தொடர்பில் இன்னல் இடையூறுகளைக் களையும் பல வேளைகளில் உலக அரங்கில் திட்டவட்டமான சிறப்பான பங்கை வகிக்கவும் உதவியுள்ளன.

**சிக்கலான நிலைமை**

இரண்டாம் உலகப்போருக்குப் பின் அநேக ஜனாதிபதிகள் வழக்கம் போல் நிர்வாகத்தை நடத்தினர். 1945-ல் F.D.ரூஸ்வெல்ட் இறந்த போது ஹிரோஷிமா, நாகசாகியை அழித்தவரான ஹாரி ட்ருமன் இருமுறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952-ல் குடியரசுக்கட்சியினரான ஜெனரல் ஐசன் ஹோவர் ஜனாதிபதி பதவியைப் பெற்றார். இரு முறைக்குப்பின் அவர் ஓய்வு பெற்றபோது ஜனநாயகக் கட்சியை சேர்ந்த ஜான் F.கென்னடி ஜனாதிபதியானர். 1963-ல் அவர் கொலை செய்யப்பட்டார். இக்கொலை நிகழ்ச்சி உப ஜனாதிபதியான லிண்டன் B.ஜான்சனை நிர்வாகத்துறை தலைவர் பதவிக்கு உயர்த்தியது. அதைத் தொடர்ந்து அவரும் ஒரு முறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1968-ம் ஆண்டின் தேர்தலில் தங்களது வேட்பாளராக ராபர்ட் கென்னடியைத் தேர்ந்தெடுத்த ஜனநாயக் கட்சியினர் ஜனாதிபதி பதவியைத் தாங்களே பெற்றுக்கொள்ள முடியுமென்ற அதிகாரப் பூர்வ நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். ஆனால் ராபர்ட் கென்னடி கொலைக்காரன் ஒருவரால் கொல்லப்பட்டார். இதன் விளைவாக குடியரசுக் கட்சியைச் சார்ந்த ரிச்சர்ட் நிக்சன் ஜனாதிபதியானார். மறுபடியும் இரண்டாவத முறையும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் வாட்டர்கேட் பிரச்சனை விளைவாக ராஜினாமா செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். 1974-ம் ஆண்டு ஆகஸ்டு 9-ம் நாள் உப ஜனாதிபதியான ஜெரால்ட் போர்டு ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்யப்பட்டார். அவருக்குப்பின் ஜனநாயக் கட்சியை சேர்ந்த ஜிம்மி கார்ட்டர் ஜனாதிபதியானார். இவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 40வது ஜனாதிபதியானார்.

மேற்குறிப்பிட்ட ஜனாதிபதிகளின் நிர்வாகத்தில் உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. போர்க்காலத் தேவைகளும், மிகுவும் பின்தங்கிய நாடுகளின் தேவைகளும், விவசாய தொழிலகத்துறைகளின் உற்பத்தியில் பெரும்

வளர்ச்சிக் ஏற்படக் காரணமாயின. எதிர்பாராத அளவிற்கு விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றது. அணுசக்தி கண்டுபிடிக்கப் பட்டமையால் இயந்திர வளர்ச்சியும், இராணுவ வலிமையும் பெருகின. பொருளாதார வளர்ச்சி ஐக்கிய நாடுகளை ஒரு வளமிக்க நாடாக்கி அமெரிக்க மக்கள் வாழ்க்கையைச செல்வ செழிப்பாக்கிற்று. ஐக்கிய நாடுகள் உலகின் முதற்றர வல்லரசு நாடாக எழுச்சியுற்றது. இதற்கிடையில் பல்லாண்டு காலமாக உருவாக்கப் பெற்ற ஏகாதிபத்தியக் கொள்கை திடீரென வீழ்ச்சியுற்றது. ஐரோப்பிய நாடுகள் தங்கள் செல்வாக்கை இழந்தன. குடியேற்றங்கள் தங்கள் சுதந்திரத்தை நிலை நாட்டின. ஆனால் சொத்துக்களைப் பெறுதல், பங்கீடு செய்தல் போன்றவற்றில் ஏற்பட்ட போராட்டம் இப்புதிய அரசுகளையும் அதன் மக்களையும் வலிமையற்றவர்களாக்கின. இச்சூழ்நிலையின் பின்னணியில் உருவான சில நிகழ்ச்சிகள் ஐக்கிய நாடுகளுக்குச் சவால்களையும் தந்தன.

இக்காலக் கட்டம் பெரும்பாலும் நிச்சயமற்றதாயும் பீதி விளைவிப்பதாயும் இரந்தது. எனினும் இக்காலம் செல்வச் செழிப்பும், வலிமையும் பெருகிய காலமாகவும் இருந்தது. ஜனாதிபதிகளைப் பொறுத்து ஐக்கிய நாட்டின் கொள்கைகள் மாறிக் கொண்டே வந்தன. கென்னடியின் காலத்தில் சிறந்து விளங்கிய முன்னேற்றக் கொள்கை நிக்சன் காலத்தில் வீழ்ச்சியடைந்தது. தோல்வியுற்ற நாடுகளின் மீது ஐக்கிய நாடுகள் தனது அதிகாரத்தை மேற்கொண்டது. ரஷ்யாவும் இதே கொள்கையைப் பின்பற்றியது. இந்த போக்கு ஐக்கிய நாடுகளுக்கு, ரஷ்யாவிற்கும் கெடுபிடிப் போரையும் இலத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மோதும் நிலையையும் ஏற்படுத்தியது. சூழ்நிலை எந்த அளவிற்கு சிக்கல் வாய்ந்ததாக இருந்ததென்றால் ஐக்கிய நாடுகளால் தானே உருவாக்கிய இடையூறுகளை சமாளிக்கவோ வரவழைத்த சிக்கல்களிலிருந்து விடுபடவோ இயலவில்லை.

ஜனாதிபதி ட்ருமன் 1945-ம் ஆண்டு முதல் 1952-ம் ஆண்டு வரை பதவியில் இருந்தார். மிசௌரி மாநிலத்தின் ஜனநாயகவாதியான இவர் 1934-ல் செனட் உறுப்பினராகவும், 1944-ல’ உப ஜனாதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1945-ல் ரூஸ்வெல்ட் இறந்த பின் இவர் ஜனாதிபதியானார். ரூஸ்வெல்ட் கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றிய இவர், புதிய திட்டக் கொள்கையைப் பின்பற்றவும், ரஷ்யாவைச் சமானதானப் படுத்தவும் முயன்றார். ஆனால் அது கஷ்டமாக இருந்தது. போருக்குப் பின் தொடர்ந்து முன்னேற்றக் கொள்கை பின்பற்றப்படுவதையும் அதன் விளைவாக கூட்டாட்சி அரசின் அதிகாரம் விரிவடைதலையும் ஐக்கிய நாடுகள் வரவேற்கவில்லை. குடியரசுக் கட்சியின் தலைமையின் கீழ் பழைமைவாதிகள் அவற்றை எதிர்த்தனர். போரிலிருந்து சமாதான மாற்றுக் காலத்தில் சமுதாய அரசியல், பொருளாதார முன்னேற்றத்திற்கான கோரிக்கைள் எழுந்தன. தனது செல்வாக்கை விரிவடையச் செய்ய வேண்டுமென எண்ணிய ரஷ்யா, ஐரோப்பாவானது ஒழுங்கற்ற நிலையில் இருக்கவேண்டுமென விரும்பியது. இது அமெரிக்காவை விழ்த்தெழச் செய்தது. உலகம் முழுவதும் கம்யூனிஸ்ட் எழுச்சியை தடை செய்ய ரூஸ்வெல்ட் பெரும் திட்டங்களைத் தீட்டியதோடு கொரியாவில் ஒரு பெரும் போரில் ஈடுபடவும் வேண்டியிருந்தது.

**ஊள்நாட்டுக் கொள்கை**

பெரும் நலிவும், உலகப் போரும் நிர்வாகத் துறையின் அதிகாரம் விரிவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தின. புதிய சட்டத்திட்டங்களின் செயல்முறையும் போர் நடவடிக்கைகளும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்னல் விளைவிக்கும் பல கட்டுப்பாடுகளை விதித்தன. போர் முடிவுற்ற போது மக்கள் தங்கள் உரிமைகளை மீண்டும் பெறவும் கட்டுப்பாடற்று வாழவும் குடியரசு கட்சியை ஆதரித்தனர்.

1946-ல் காங்கிரஸிற்கு நடைபெற்ற தேர்தலில் குடியரசுக் கட்சியினர் இரு சபைகளிலும் பெரும்பான்மை பெற்றனர். ஜனநாயக முன்னேற்றக் கொள்கையாளரான ஜனாதிபதி ட்ருமன், ரூஸ்வெல்ட்டின் திட்டங்களான சமுதாய நலச் சட்டங்களையும் அது தொடர்பான அரசு ஒழுங்குமுறைகளையும் பின்பற்றப் போவதாக அறிவித்தபோது குடியரசுவாதிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே இவர் இத்திட்டத்தைக் கைவிட்டார்.

பின்னர் முதலாளித்துவ வர்க்கத்தை வலிமையாக்குவதற்கென போர்க் காலங்களில் தொழிலாளர் வர்க்கத்தினர் பெற்றிருந்த உரிமைகளை ரத்து செய்ய குடியரசுவாதஜகள் தீர்மானித்தனர். 1947-ல் டருமனின் மறுப்பானைக்கு மேலாக காங்கிரஸ் டாப்ட் ஹார்ட்லீ (Taft Hartly) சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டம் தொழிற்சங்கங்களின் முறையற்ற விதிமுறைகளை ரத்து செய்தது. அதிகாரவரம்பிற்குட்பட்ட வேலை நிறுத்தங்கள், அனுதாப வேலை நிறுத்தங்கள், இரண்டாம் நிலை புறக்கணிப்பு, அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்குதல் ஆகியவற்றை இச்சட்டம் ரத்து செய்தது. சங்கத் தலைவர்கள் தாங்கள் கம்யூனிஸ்டுகள் அல்லவென்று உறுதிமொழி எடுக்க வேண்டும். வன்மையான முறையில் அரசைக் கவிழ்க்க பிரச்சாரம் செய்யும் எந்நிறுவனத்தையும் தங்கள் அதிகாரிகள் சாராதவர்களென்றும் அவ்வன்முறைக்கு ஆதரவு அளிக்காதவர்களென்றும் அறிவித்தும், தனது நிதி விவரங்களை அரசிடம் சமர்பிக்கும் சங்கங்களின் வழக்குகளையே தொழிலாளர் குழு விசாரிக்கும், சங்கத்தைச் சாராத தொழிலாளர்களை பணியில் அமர்த்த தடை விதித்த இருட்டறை அங்காடிகள் சட்டத்திற்குப் புறம்பாக்கப்பட்டன. ஒப்பந்தத்தை மீறுதல், சேதம் விளைவித்தல் போன்றவற்றிக்காக முதலாளிகள், தொழிலாளர் சங்கத்தின் மீது வழக்குத் தொடர அனுமதி அளிக்கப்பட்டது. வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்காக தொழிற்சங்கங்கள் அறுபது நாட்களுக்கு முன் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது. இத்தகைய கட்டுப்பாடுகளினால் தொழிலாளர்கள் இச்சட்டத்தை ஓர் அடிமைச் சட்ட வரைவு எனக் கண்டனம் செய்தனர். எனினும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வும், ஓய்வு நலன்களும் பெறுவோர்க்கு வீடுகள் வழங்கவும் கூட்டாட்சி அரசுபணம் ஒதுக்கீடு செய்ய தேசிய வீட்டமைப்புச் சட்டம் வழி செய்தது. விவசாயச் சட்டம் பண்ணைப் பொருளுக்கு தக்கவிலை அளித்தது.

1946-ம் ஆண்டின் புனரமைப்புச் சட்டம் (Recorganisation Act) காங்கிரஸின் செயல்முறைகைளச் சீர்படுத்தியது. குழுக்களும், நிறுவனங்களும் உறுதி செய்யப்பட்டு காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு நிதிசார்ந்த உரிமைகள் பல வழங்கப்பட்டன. 1951-ல் இயற்றப்பட்ட அரசியலமைப்பின் 22வது திருத்த மசோதா ஜனாதிபதி இருமுறைதான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று கூறியது. புதியதோர் பாதுகாப்புத் துறையும்,

விமானப்படைத் துறையும் உருவாக்கபட்டன. அணுசக்தி வளர்ச்சியின் விளைவாக அணுசக்தி குழு, அணுசக்தி இணை காங்கிரஸ் குழு ஆகியவற்றை அமைக்க வழி செய்யும் சட்டங்களை இயற்றியது.

**போருக்குப்பின் ஏற்பட்ட உடன்பாடுகள் (Post War Settlements)**

போருக்குப்பின் ஏற்பட்ட பிரச்சனைகளை ஆராய 1945-ல் ட்ருமன், ஸ்டாலின், அட்லி ஆகிய மூவரும் பெர்லினுக்கு அருகிலுள்ள போட்ஸ்டாம் என்னுமிடத்தில் மாநாடு ஒன்றில் சந்தித்தனர். தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனியின் நிாவாகத்தைக் கூட்டுக் கட்டுப்பாட்டுக் குழுவிடம் ஒப்படைக்கவும், பிற தோல்வி கண்ட நாடுகளோடு சமாதான உடன்பாடுகளைச் செய்து கொள்ளவும் அவர்கள் தீர்மானித்தனர். எனவே பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் குழு 1946-ல் பாரிசில் ஒரு சமாதான மாநாட்டைக் கூட்டி இத்தாலி, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, பின்லாந்து ஆகிய நாடுகளோடு சமாதான உடன்பாடகளைச் செய்து கொண்டன. இத்தகைய உடன்பாடுகள் இந்நாடுகளின் நிலப்பகுதிகளை எடுத்துக் கொண்டதோடு போர் நஷ்டஈடு அதிகமாக விதித்து, போர் இயந்திரங்களை அவைகளிடமிருந்து எடுத்துக் கொண்டன. எனினும் ரஷ்யாவுடன் கருத்து வேறுபாடுகள், ஜப்பான் ஜெர்மனியோடு சமாதான உடன்பாடு செய்வதைக் தடை செய்தது.

போர்க் குற்றவாளிகளை விசாரணை செய்து அவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதிலும், இராணுவத்தின் வழியாக ஜப்பான் ஜொமனியைக் கைப்பற்றுவதிலும் ஐக்கிய நாடுகள் திறம்படச் செயல்பட்டது. ஜெர்மனியில் நிர்வாகம் பற்றிய கொள்கை வேறுபாட்டின் காரணமாக, நேசநாடுகளின் கட்டுப்பர்டுக் குழு ஒருமித்தக் கருத்தைக் கொண்டிராததால் ஐக்கிய நாடுகள், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் 1946-ல் தங்களது மூன்று ஜெர்மன் பிராந்தியங்களையும் ஒரே பகுதியாக ஒன்றிணைத்தன. கிழக்கு ஜெர்மனி ரஷ்யக் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து இருந்தது.

**பெர்லின் சிக்கல்**

கிழக்கு ஜெர்மன் பிராந்தியத்தினுள் அமைந்திருந்த மேற்கு பெர்லின் பகுதி அமெரிக்கக் கட்டுப்பாட்டிலிருந்தது. சுற்றிலும் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தினால் சூழப்பட்டிருந்த மேற்கு பெர்லின் கெடுப்பிடிப்போர் காரணமாக பெருஞ்சிக்கலுக்கு உள்ளானது. 1948-ல் ரஷ்யா மேற்கு பெர்லினை முற்றுகையிட்டது. உடனே அமெரிக்கா ஆகாய மார்க்கமாக மேற்கு பெர்லினோடு தொடர்பு கொண்டு அதற்குத் தேவையான பொருட்களை அனுப்பி நிலைமைச் சமாளித்தது. ஓராண்டுகாலம் இது நீடித்தது. அதற்குப்பின் ரஷ்யா முற்றுகையைக் கைவிட்டது. பிரச்சனைகளைத் தீர்க்க பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. ஆனால் அவை வெற்றி பெறவில்லை. எனவே 1949-ல் மேற்கு நாட்டினர் ஏற்கனவே ஒருங்கிணைத்த தங்களின் மூன்று ஜெர்மன் பிராந்தியங்களை ‘‘ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு’’ என்ற நாடாக மாற்றினர். புான் அதன் தலைநகராக்கப்பட்டது. ரஷ்யா தனது பிராந்தியத்தை கம்யூனிச ஆட்சிக்குட்பட்ட ஜனநாயக ஜெர்மனியாக உருவாக்கியது. இச்சூழ்நிலைகள்

ஜெர்மனியை இரு பெரும் பிரிவுகளாக்கி அவைகளை வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் வைத்தன.

**தலையிடாக் கொள்கையைப் புறகணித்தல்**

இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற பிறகு ஐக்கிய நாடுகள் தலையிடாக் கொள்கையைக் கைவிட்டு உலக விவகாரங்களில் அதிகமாக பங்கேற்கத் தீர்மானித்தது. அட்லாண்டிக், பசிபிக் சமுத்திரங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த ஐக்கிய நாடுகள், உலகின் பெரும் பகுதிகளில் தன் செல்வாக்கினை நிலைநாட்டியது. அதனுடைய புதிய கொள்கைக்கு ஏற்ப ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் உறுப்பிரானது பொருளாதார மீட்சிக்காக நேசநாடுகளுக்குக் கொடுத்திருந்த கடனை ரத்து செய்ததோடு போரில் நலிவுற்ற நாடுகளின் சீர்குலைந்த பொருளாதாரத்தைச் சீர்படுத்தவும் பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும் ஐக்கிய நாடுகள் ஏராளமான பணத்தை ஒதுக்கீடு செய்தது.

**கெடுபிடிப்போரின் போக்கு**

ரஷ்யாவின் கம்யூனிசமும் அதன் உலகப் புரட்சிக் கோட்பாடும் அமெரிக்க ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கைக்கும் அதன் முதலாளித்துவக் கொள்கைக்கும் மாபெரும் சவாலாக அமைந்தன. ரஷ்யா, பால்டிக் நாடுகளை இணைத்து, கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிச அரசுகளை நிறுவியதோடு மட்டுமின்றி பிறநாடுகளில் புரட்சி இயக்கங்களுக்கும் ஆதரவு அளித்தது. கிரிசும் துருக்கியும் கம்யூனிச நாடாகி அதன் மூலம் ரஷ்யா தனது செல்வாக்கை மத்திய தரைப்பகுதியில் ஏற்படுத்திவிடும் அபாயம் தோன்றியது. எனவே உள்நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ அச்சுறுத்தப்படும் ஆக்கிரமிப்பிலிருந்து எந்த ஒரு நாட்டின் சுதந்திரத்தையும் காக்க அமெரிக்கா உதவ வேண்டுமென ட்ரூமன் 1947-ல் காங்கிரசிற்கு கோரிக்கை விடுத்தார். இது ட்ரூமனின் கோட்பாடு எனப்பட்டது. இதற்குச் செவிமடுத்த காங்கிரஸ் கிரீஸ் மற்றும் துருக்கிய நாடுகளுக்கு இராணுவம் மற்றும் கடற்படைத் தளபதிகளை அனுப்பி ஆயுதங்களைப் பெறவும் பிற தேவைகளைப் பூர்த்தி செய்யவும் 40 கோடி டாலர்களை ஒதுக்கியது. இதன் மூலம் அந்நாடுகள் தங்களது படைகளை மாற்றியமைத்து கம்யூனிஸ்ட் திட்டங்களை முறியடித்தன.

இதனைத் தொடர்ந்து மார்ஷல் திட்டம் அல்லது ஐரோப்பிய மீட்சித் திட்டம் கொண்டுவரப்பட்டது. 1947-ல் மாநிலச் செயலாளரான ஜார்ஜ் மார்ஷல் புனரமைப்பிற்கான தேவைகள் குறித்து ஐரோப்பிய நாடுகள் ஓர் உடன்பாட்டிற்கு வந்தால் ஐக்கிய நாடுகள் அத்திட்டத்தைச் செயற்படுத்த உதவி செய்யும் என்று அறிவித்தார். இத்திட்டமானது எந்த ஒரு நாட்டின் கொள்கைக்கும் எதிரானதல்ல. ஆனால் பசி, வறுமை, குழப்பநிலை ஆகியவற்றிக்கெதிராக செயல்படுத்தப்படுமென்று அவர் கூறினார். ரஷ்யாவை தவிர மற்ற ஐரோப்பிய நாடுகள் இவ்வறிக்கையை வரவேற்றன. மீட்சிக்கான திட்டங்களை செயற்படுத்த ஐக்கிய நாடுகள் ஏராளமான பணத்தைக் கொடுத்து உதவியது. மெதுவாகவே மீட்சி ஏற்பட்டபோதிலும், அது கம்யூனிசக் கருத்துக்களை பரவாது செய்தது. உண்மையில் டருமன் கோட்பாடும், மார்ஷல் திட்டமும் ஐரோப்பாவில் அமெரிக்க, பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு உருவான திட்டங்களாகும். இது ரஷ்யாவின் ஆதிக்கப்

பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் கையாளப்பட்ட இராஜதந்திரக் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

1948-ல் நட்பு நாடுகளின் ஒத்துழைப்போடு கூட்டுப்பாதுகாப்பு முயற்சியை விருத்தி செய்ய நடவடிக்கைகளை எடுக்க காங்கிரஸ் ட்ரூமனுக்கு அதிகாரம் வழங்கியது. இதற்கேற்ப கம்யூனிசக் கொள்கைக்கு எதிரான நாடுகளோடு ஜனாதிபதி பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தார். இதன் விளைவாகவே 1949-ல் வட அட்லாண்டிக் உடன்படிக்கையும், 1950-ல் வட அட்லாண்டிக் உடன்பாட்டு அமைப்பும் ஏற்பட்டன. இப்பாதுகாப்பு உடன்பாட்டில் சேர்ந்து கொண்ட பன்னிரண்டு நாடுகளும், படை பலத்தின் வழியாக வட அட்லாண்டிக் பகுதியின் பாதுகாப்பை நிலைநாட்டவும், இவற்றில் ஏதாவது ஒரு நாடு தாக்கப்பட்டாலும் அதனை அனைத்து உடன்பாட்டு நாடுகளின் பாதுகாப்பிற்கு ஏற்பட்ட அச்சுறுத்துதல் எனக் கருதுவதாகவும் உறுதிமொழி எடுத்தனர். இவைகளைத் தவிர கம்யூனிசத்திற்கு எளிதாக இடங்கொடுக்காமல் பின்தங்கிய நாடுகளைப் பார்த்து கொள்ளவும், அந்நாடுகளுக்கு விஞ்ஞான தொழில் நுட்ப உண்மைகளை உணர்த்தவும் ஏராளமான பணத்தை அமெரிக்கா ஒதுக்கியது. இதன் காரணமாக தனது செல்வாக்கை மேற்குப் பகுதியில் விரிவடையச் செய்வது மிகக் கடினம் என்று ரஷ்யா உணர்ந்து கொண்டது.

கொரியாப் போர் 1950

1950-ஜூன் 25-ம் நாள் ஏற்பட்ட கொரியாப் போர் அமெரிக்க-ரஷ்ய ஆதரவு ஆதிக்கங்களுக்கிடையே மோதல் ஏற்படவும் கெடுபிடிப்போர் உண்மையான போராக உருவாகவும் காரணமாயிற்று. ரஷ்ய ஆதரவு பெற்ற வட கொரியப் படைகள் 38-வது அட்சரே கையைக் கடந்து அமெரிக்க ஆதரவு பெற்ற தென் கொரியவைத் தாக்கிய போது போர் ஏற்பட்டது. அமெரிக்காவின் தூண்டுதலினால் ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்ததோடு படைகளைப் பின்வாங்குமாறு வட கொரியாவிடம் கோரிக்கை விடுத்தது. ஆனால் வடகொரியா இக்கோரிக்கையை நிராகரிக்கவே, பாதுகாப்பு குழுவானது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அதிகாரம் வழங்கியதோடு கொரியாவில் ஐக்கிய நாடுகள் நிறுவனப் படைக்குக் கூட்டுத் தலைமை வகிக்க அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அனுமதி வழங்கியது.

தேன் கொரியாவை மீட்க ட்ரூமன் உடனடியாகவே படைகளை அனுப்பி, போர் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்க தளபதி மக் ஆர்தர் என்பவரை நியமித்தார். எினனும் கம்யூனிஸ்ட் தாக்குதல் தொடர்ந்து நடந்தது. இதனால் தென் கொரியாப் படைகள் தீபகற்பத்தின் தென்கோடியில் புசான் என்ற பகுதிக்குத் தள்ளப்பட்டனர். உதவிக்கு அதிகமான படைப்பிரிவுகள் வந்து சேரவே அமெரிக்கப் படைகள் எதிதாக்குதலை மேற்கொண்டன. அவைகள் வட கொரியர்களை எல்லைக்கு அப்பால் துரத்தியடித்து அவர்களது தலைநகரான பியாங்யாங்கைக் கைப்பற்றி யாலு நிதியில் சீனா எல்லைவரை முன்னேறிச் சென்றன. வடகொரியாப்படை கள் முறியடிக்கும் நிலையில் சீனா வடகொரியாவிற்கு ஆதரவாக வந்து தாக்குதலை மேற்கொண்டபோது அமெரிக்கர் பின்வாங்கினர். வெற்றி தோல்வி யாருக்குமில்லை

என்ற நிலை ஏற்படும் வரை இருதரப்புப் படைகளும் போரிட்டன. இளுதியில் பழைய எல்லைக்குச் சிறிது வடக்கே போர் நிறுத்தப்பட்டது.

**ஜான்சனும் வியட்நாம் போரும்**

ஜான்சன்,க்சன் ஆகிய இருவரது அரசியல் சிந்தனையும் ‘‘வியட்காங்’’ பிரச்சனை பற்றியே இருந்தது. வியட்நாம் விடுதலை வீரர்களே வியட்காங் எனப்பட்டனர். வியட்நாம் மக்கள் அமெரிக்கர்களுக்கு எவ்வகையிலும் தீங்கிழைக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக, குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அரசியல் விடுதலையும், அந்நியர் சதித்திட்டத்திலிருந்து விடுபட்டு தேசிய ஒருமைப்பாட்டையும் பெற அவர்கள் பெரிதும் முயன்றனர். எனினும் இச்சிறிய நாட்டிற்கு அமெரிக்கர் படைகளை அனுப்பி அதனைத் தாக்கினர். இதனால் பலர் இறந்தனர். அமெரிக்கா அமெரிக்கருக்கே என யாங்கியர்கள் எண்ணும் போது ஆசியா ஆசியருக்கே என ஆசியாவினர் கருதினர். தேசிய ஒருமைப்பாட்டில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் போது பிற மக்களும் இவ்வுரிமைக்கு உரித்தானவர்களே. ஆனால் இதனை ஏற்றுக் கொண்டு பிற மக்களை சுதந்திரமாக வாழவிட அமெரிக்கா தயாராக இல்லை என்ற கருத்தை அவர்களது வெளிநாட்டுக் கொள்கை வெளிபடுத்தியது.

தேன்கிழக்கு ஆசியாவில் நசுக்கப்பட்ட நிலையிலிருந்த பிரெஞ்சு குடியேற்றங்களுக்கு உதவிக்குச் செல்ல அமெரிக்கா எடுத்துக் கொண்ட தீர்மானமே வியட்நாம் துயர நிகழ்ச்சியின் ஆரம்பமாகும். ஊலகப் புரட்சியை விருத்தி செய்ய இப்பகுதி கைபபற்றப்படுதல் மிக முக்கியமானதென கம்யூனிஸ்ட் நாடுகள் கருதிய போது ஆரியர்கள் குடியேற்றத்திற்காக ஆஸ்திரேலியாவை நோக்கிச் சென்றுவிடாது வெள்ளை இனவம்சம் ஆஸ்திரேலியாவைக் காக்கவும், பசிபிக் சமுத்திரத்திலிருந்து இந்திய சமுத்திரம் வரை தங்கள் தொடர்பை நிலைநாட்டவும், வியட்நாம் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் இயங்க வேண்டுமென அமெரிக்கர் எண்ணினர். அவர்களின் இவ்வரசியல் ஆதிக்கக் கொள்கைக்கு வியட்நாமினர் பலியாயினர். வியட்நாமியரின் எதிரிக்கு அமெரிக்கர் ஏராளமான உதவி அளித்த போதிலும் அந்நாட்டு மக்கள் தீவிரப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். எனவே பிரெஞ்சு ஏகாதிபத்தியம் வீழ்ச்சி அடையத் தொடங்கியது. இதிலிருந்து விடுபட முயற்சி செய்த பிரெஞ்சுக்காரர்கள், சைகோனை தலைநகராகக் கொண்டு ஓர் அரசை அமைக்குமாறு 1949-ல் பேரரசர் பாவோ தாயை (Bao Dai) கேட்டுக்கொண்டனர். ஆனால் இதற்கு மாறாக தங்கள் திறமை மிக்கத் தலைவரான ஹோசிமின் தலைமையின் கீழ் ஹனாயைத் தலைநகராக் கொண்டு மற்றொரு அரசை கம்யூனிஸ்டுகள் அமைத்தனர். இவ்விரு அரசுகளும் நாட்டை கம்யூனிச ஆதரவு வடவியட்நாம் , கம்யூனிச எதிர்ப்பு தென்வியட்நாம் இரண்டாகப் பிரிந்தன. 1954-ல் ஜெனிவாவில் நடைபெற்ற மாநாட்டில், மாநாட்டு ஆதிக்கங்கள் 17-வது அட்சரேகையை இரு நாடுகளின் எல்லையென ஏற்றுக் கொண்டதோடு மக்கள் தங்கள் நாடு ஒன்றாக இணைவதை விரும்புகிறார்களா என்பதை உறுதிப்படுத்த வியட்நாமில் தேர்தல் நடத்த ஏற்பாடுச் செய்யப்பட்டது. எனினும் கம்யூனிஸ்ட் தலைமையின் கீழ் வியட்நாம்இணைந்துவிடுமென அச்சமுற்ற தென் வியட்நாமின் புதிய அதிபரான டின்-டியம் (Dinh-Diem) ஐக்கிய நாடுகளின் ஆதரவோடு 1954-ம் ஆண்டின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார். இதனால் ஏமாற்றமடைந்த கம்யூனிச ஆதரவு வியட்காங் மக்கள் இப்பகுதியில் ஒரு மாற்று நிர்வாகத்தை அமைத்தனர். வளர்ந்து வரும் வியட்காங் வலிமையை எதிர்த்துப் போராட கம்யூனிச எதிர்ப்பாளர்களை வலிமைப்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்தால் ஜனாதிபதி கென்னடி இராணுவக் குழுக்களை அனுப்பி தென்வியட்நாம் படையினருக்குப் பயிற்சி அளித்தார். எனினும் இதனால் குறிப்பிடத்தக்க விளைவுகள் ஏதும் ஏற்படவில்லை. டியம் தலைமையின் மீது திருப்தியற்ற அமெரிக்க ஆதரவாளர்கள், அமெரிக்க ஜனாதிபதியின் ஒப்புதல்தோடு சதி செய்து, 1936-ல் அவரைக் கொலை செய்தனர். அதைத் தொடர்ந்து தென் வியட்நாமின் ஜனாதிபதியாக தியூ (Thieu) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வியட்நாமின் போக்கு அமெரிக்க நலன்களுக்கெதிராக துரிதமாக மாறிக் கொண்டு வந்தமையை ஜனாதிபதி லிண்டன் பி.ஜான்சன் கண்டுணர்ந்தார். வட வியட்நாமை ஒடுக்க அளிக்கப்பட்ட உதவித் தொகை தவறான வழியில் செலவிடப்பட்டது. தென் வியட்நாம் படைகளிடையே நிலவிய பிளவு அதிகரித்தது. எனவே சைகான் வீழ்ச்சியை நோக்கி விரைந்தது. நேரடியாகத் தலையிடுவதற்கான சூழ்நிலையை உருவாக்கத் திட்டமிட்ட ஜான்சன், அமெரிக்கக் கடற்படைகளை வட வியட்நாம் கடற்பகுதியின் டான்சின் வளைகுடாவிற்கு

அனுப்பி கம்யூனிஸ்ட் பீரங்கிப்படைகளோடு மோதலில் ஈடுபடச் செய்தார். அதைத் தொடர்ந்து வியட்நாமில் போர் ஆரம்பமானது. கும்யூனிஸ்டுகளை எதிர்த்துப் போரிட படைகள் வியட்நாமிற்கு அனுப்பப்பட்டன. இதனால் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டது. வடக்கு கம்யூனிச அரசுகள் ஹனாய்க்கு ஆதரவாகத் தங்கள் படைகளை ஈடுபடுத்தி எதிர்தாக்குதலில் ஈடுபடவில்லை. எனவே அமெரிக்கத் தாக்குதலை தடுத்து நிறுத்தும் பொறுப்பு வியட்காங்கினிடம் தான் இருந்தது. வியட்நாம் துயர நிகழ்ச்சியினால் ஆசிய மக்கள் வருந்தினர். எனினும் ஐக்கிய நாடுகள் தொடர்ந்து குண்டு வீசியது.

1968-ம் ஆண்டு ஜனவரியில் வியட்காங் மீது ஜெட்தாக்குதலை மேற்கொண்டு குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றது. ஆனால் அது நீடித்த வெற்றியாக இல்லை. எனினும் 1968-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் 20வது அட்சரேகைக்கு அப்பால் குண்டு வீசுவதை நிறுத்துவதாக ஜான்சன் அறிவித்தார். இதைத் தொடர்ந்து போரிடும் நாடுகள் இப்பிரச்சனைகள் பற்றி விவாதிக்க மே மாதம் பாரிசில் கூடினர். அந்நிய நாட்டுப் படைகள் வியட்நாமை விட்டு வெளியேற வேண்டுமென வடவியட்நாம் கோரியது. ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்ததால் பேச்சு வார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. போர் தொடர்ந்து நீடித்ததால் வியட்நாமில் தங்களுடைய வெளிநாட்டுக் கொள்கை தோல்வியடைவதாக அமெரிக்கர் உணர்ந்தனர். எனவே வியட்நாம் போரை நிறுத்துவதற்காக ஜான்சன் 1968-ம் ஆண்டு வடவியட்நாம் அதிபரான ஹோசிமினுடன் பேச்சு வார்த்தை நடத்த முயன்றார்.

ஊள்நாட்டில் கென்னடி பின்பற்றிய தாராளக் கொள்கையைக் கடைபிடிக்க ஜான்சன் விரும்பினார். ''பெரும் சமுதாயக் கொள்கை''யின் சிற்பியான அவர், சமுதாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். சமத்துவமின்மை, அறியாமை, பின்தங்கிய நிலைமை ஆகியவற்றிலிருந்து சமுதாயத்தில் நலிவுற்ற மக்களை விடுவிப்பதே ''பெரும் சமுதாயத்தின்'' நோக்கமாகும். ''அனுகூலக் கட்டம்'' என்ற தனது குறிப்பேட்டில், ''ஜனாதிபதி, மனிதன் என்ற நிலைகளில் தான் பெற்றிருக்கும் ஒவ்வொரு அவுன்ஸ் வலிமையையும் அமெரிக்க கறுப்பர்களுக்கு நியாயம் பெற்றுத்தர பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை அறிந்திருக்கின்றேன்'' என அவர் எழுதியுள்ளார். இதற்கேற்ப நீக்ரோக்களுக்கு ஆதரவாக பொது உரிமைகள் சட்டத்தை அவர் செயற்படுத்தினார். முதியோர்க்கு வைத்திய உதவி அளிக்கவும், கல்விக்கு பெருமளவில் கூட்டாட்சி அரசு உதவி அளிக்கவும், வறுமை, பின்தங்கிய நிலைமை ஆகியவற்றிற்கெதிராக புனிதப்போரை மேற்கொள்ளவும் வகை செய்யும் சமுதாயத் திட்டத்தை அவர் மேற்கொண்டார். வேலை வாய்ப்புக்கான சாத்தியக் கூறுகளை அதிகரிக்கவும், நலிவைத் தவிர்க்கவும், வகை செய்யும் நிதிக் கொள்கையை ஜான்சன் பின்பற்றினார். அவரது நிாவாகத்தில் விஞ்ஞானத் துறையில் நாடு முன்னணியில் நின்றது. அமெரிக்க விண்வெளி வீரர்கள் சந்திரனில் காலெடுத்து வைத்தனர். லிங்கன் F.D. ரூஸ்வெல்ட் ஆகியோரைப் போன்று ஜான்சனும் மிகச் சிறந்தவராக கருதப்படுகிறார். ஏனெனில்

அவர்களைப் போன்றே போரின் மூலம் பொது உரிமை, அமைதி ஆகியவற்றை பெற ஜான்சன் விரும்பினார்.

**நிக்சனின் எழுச்சியும் வீழ்ச்சியும்**

ஜனாதிபதி கென்னடியின் சகோதாரான ராபர்ட் கென்னடி 1968-ல் நடைபெறும் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக போட்டியிடப் போவதாக அறிவித்தார். ஆனால் தேர்தல பிரச்சாரத்தின் போது அவர் கொல்லப்பட்டார். தலைவருக்குரித்தான அனைத்து பண்புகளையும் கொண்ட சிறந்த தலைவரை இக்கட்சி இழந்ததால் குடியரசுக் கட்சியைச் சார்ந்த ரிச்சர்ட் M. நிக்சன் வெற்றி பெற்றார். 1913-ல் கலிபோர்னியாவில் பிறந்த நிக்சன் விட்டியர் கல்லூரியிலும், டியூக் சட்டப் பள்ளியிலும் தனது கல்வியைப் பெற்றார். இரண்டாவது உலகப்போரின் போது கடற்படைத் தளபதியாகப் பணியாற்றினார். 1952-ல் உப ஜனாதிபதியாகவும், 1968-ல் தனது ஐம்பத்தைந்தாவது ஜனாதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வெளிநாடுகளில் தனது நாட்டின் நலநன விருத்தி செய்ய வன்மையான அரசு நடவடிக்கைகளின் மூலம் தான் செய்ய முடியும் என்று நிக்சன் எண்ணினார். தேன் வியட்னாமிலிருந்து அமெரிக்க இராணுவத்தினரை படிப்படியாகத் திரும்பப் பெறவும் சர்வதேச நாடுகள் கண்காணிப்பின் கீழ் போர் நிறுத்தத்தை செய்யவும் தென் வியட்நாமின் வருங்காலத்தை நிர்ணயிக்க சர்வதேச நாடுகள் கண்காணிப்பின் கீழ் தேர்தலை நடத்தவும் 1969-ல் அவர் கூறினார். ஆனால் தென் வியட்நாமை தனிநாடாக ஏற்றுக்கொள்ள வடவியட்நாம் மறுத்ததோடு, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் வியட்நாமை விட்டு வெளியேற வேண்டுமென கோரிக்கை விடுத்தது. ஆனால் அதே ஆண்டில் கம்போடியாவில் நடைபெற்ற போரில் நிக்சன் ஈடுபட்டார். இளவரசர் சிஹானுக்கின் கம்யூனிச ஆதரவுக் கொள்கையால் வெறுப்படைந்த நிக்சன் அவரைப் பதவியிலிருந்து நீக்க மார்ஷல் லான்நோல் என்பவரை ஆதரித்தார். இது கம்போடியாவில் போர் ஏற்படவும் லான்தோல் என்பவருக்கு ஆதரவாக இராணுவத் தலையீடு ஏற்படவும் காரணமாய் இருந்தது. தென்பகுதியில் அதிகப்பகுதிகளை மீட்கும் முயற்சியில் வியட்காங்கினர் இருக்கின்றனர் என்று அறிந்த நிக்சன் 1972-ல் வடவியட்நாமின் பகுதிகளை முற்றுகையிட்டார் மற்றும் போக்குவரத்துக் தடையையும் குண்டு வீச்சையும்' மேற்க்கொண்டார். இதற்கிடையில் ஜனாதிபதி சீனா, ரஷ்யாவோடு கொண்ட தொடர்பை விருத்தி செய்ய முற்பட்டார். சீனாவோடு பேச்சுவார்த்தை நடத்த பீகிங்கிற்கு வருகை தந்த நிக்சன் ரஷ்யாவோடு கொண்ட தொடர்பை விருத்தி செய்ய மாஸ்கோவிற்குச் சென்றார். இதனால் ஐக்கிய நாட்டு நிறுவனத்தில் தைவானுக்குப் பதிலாக சீனா இடம் பெறுவதற்கும் வியட்நாம் சிக்கலில் தீர்வு ஏற்படவும் வழி பிறந்தது. வடவியட்நாம் பிரதிநிதியான லீடக்தோ, நிக்சனின் நிர்வாகத்தின் வெளிநாட்டுச் செயலாளரான ஹென்றி கிஸிங்கர் ஆகிய இருவரும் 1973-ல் பாரீஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். சர்வதேச நாடுகள் கண்காணிப்பின் கீழ் வியட்நாமில் போர் நிறுத்தம் செய்யவும், இந்தோ-சீனாவிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியேற்றம் செய்யவும், வியட்நாமின் வருங்கால அரசியல் நிலையை நிர்ணயிக்கவும், சர்வதேச நாடுகளின் கண்காணிப்பின் கீழ் தேர்தல் நடத்தவும் இவ்வுடன்படிக்கையின்

ஷரத்துக்கள் வகை செய்தன. அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய போரான இது பதினொரு ஆண்டுகாலம் நீடித்தது. இதில் அநேகர் உயிரிழந்தனர். இச்சிறிய நாட்டிற்கு எதிராக அமெரிக்கர், ஆறு லட்சம் இராணுவ வீரர்களையும் ஆறநூறு போர் விமானங்களையும், வலிமைமிக்க கடற்படையும் ஈடுபடுத்தி பெரும் அழிவுகளை ஏற்படுத்தினர். இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்திய அளவைவிட மூன்று மடங்கு அதிகமான வெடிமருந்துகளை வியட்நாம் மீது வீசினர்.

1971-ல் பங்களாதேஷ் மக்கள் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த போது அத் தேசியவாதிகளை கொல்வதற்காக நிக்சன் பாகிஸ்தானுக்கு ஆயுதமும், பணமும் கொடுத்து உதவினார். நியூயார்க் டைம்ஸ் செய்தி இதழ் குறிப்பிட்டது போன்று இவர் சிலியன் இடதுசாரி அரசுக்கு எதிராக எதிர்தரப்பினர் மேற்கொண்ட போராட்டத்தில் எதிர்தரப்பினருக்கு ஆதரவளிக்க மத்திய உளவு நிறுவனத்தைப் பணித்தார். ஆறு வாரங்கள் சென்றபின், சிலி அதிபரான ஆலண்டி (Allende) கொல்லப்பட்டார். அந்நாட்டு நிர்வாகம் இராணுவத்திடம் சென்றது. அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் எதிரான போரில் அவர் இஸ்ரேலுக்கு தனது ஆதரவை வழங்கினார். இந்தியாவின் கடல் வலிமையின்மையை பயன்படுத்தி, இவர் இந்திய சமுத்திரத்தில் டியெகோ கார்சியாவை ஒரு கடற்படைத் தளமாக மாற்றுவதற்கானத் திட்டத்தை உருவாக்கினார். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இவர் 1974-ல் பிரிட்டனிடமிருந்து இத்தீவைக் குத்தகைக்குப் பெற்றார்.

ஊள்நாட்டில் அவரது கொள்கையானது ஜான்சனின் பெரும் சமுதாயக் கோட்பாட்டிற்கு எதிர்செயலாக அமைந்தது. அனைத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்படவில்லையெனினும் பொது உரிமைகளை விரிவுபடுத்துவதிலும், கல்வித் திட்டங்களை விரிவுபடுத்துவதிலும், பொருட்களின் விலையை நிலைப்படுத்துவதிலும், வெளிநாட்டுக்கு உதவி வழங்கும் முறையை செயல்படுத்துவதிலும் அவர் எத்தகைய அக்கறையும் காட்டவில்லை. எனினும் அவரது கொள்கையானது பணவீக்கம், வேலையின்மை, பணஅளிப்பில் சமநிலையின்மை ஆகியவற்றிலிருந்து நிவாரணம் அளித்து, நிதிநிலையை வலிமைப்படுத்தும் நோக்கத்தோடு நடைமுறைப்படுத்தப் பட்டது. நாட்டின் பொருளாதார நிலையை விருத்தி செய்ய இது பெருமளவில் உதவியது.

நிக்சனின் வீழ்ச்சியும் அவரது தீடீர் எழுச்சி போன்றே அமைந்திருந்தது. 1972-ல் நடைப்பெற்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான மாக் கவர்ன் (Mc Govern) என்பவருக்கு எதிராகப் போட்டியிட்டு மாபெரும் வெற்றி பெற்றார். நம்பிக்கைக்குஉகந்த இராஜதந்திரக் கொள்கையை உருவாக்கவும், அமைதியை ஏற்படுத்தவும், சர்வதேச நாடுகளிடையே ஒத்துழைப்பை விருத்தி செய்யவும், வியட்நாமில் இறுதித் தீர்வுக் காணவும், புதிய விவசாயக் கொள்கையை உருவாக்கவும், தனிநபர் சுதந்திரத்தை விரிவுபடுத்தவும், அமெரிக்காவின் மேலாண்மையை நிலைநாட்டவும் நிக்ஸன் தனது இரண்டாவது பதவி காலத்தில் எண்ணினார். ஆனால் வாட்டர்கேட் ஊழல் காரணமாக இதில் எத்தகைய குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் ஏற்படத்த அவரால் முடியவில்லை. இரண்டாவது தேர்தலில் வெற்றிபெற அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்தமை, ஜனநாயக் கட்சியின்

தலைமையகமான வாஷிங்டனிலுள்ள வாட்டர்கேட் கட்டிடத்தில் அக்கட்சியின் நடவடிக்கைகளை ரகசியக் கருவிகள் வழியாக தெரிந்து கொண்டது, ஆகியவற்றிக்காக பத்திரிக்கைகளும் கட்சிகளும் அவர் மீது குற்றம் சாட்டின. எதிர்ப்புகள் ஏற்பட்டபோது, அது நாட்டின் பாதுகாப்பை அச்சுறுத்துவதாக நிக்சன் அறிவித்தார். எனினும் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்க அவர் முயலவில்லை. குற்ற விசாரணை உறுதி எனத் தோன்றியதாலும் தனது நிலைமையை பாதுகாப்பது அரிதெனக் கண்டதாலும் பணிந்து விட ஜனாதிபதி தீர்மானித்தார். எனவே இவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். அமெரிக்க ஜனநாயக வரலாற்றில் நிக்சனின் ராஜினாமா குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்நாட்டின் இருநூறு ஆண்டுகால வரலாற்றில் இதுவே முதல் ராஜினாமாவாகும். ஊள்நாட்டுப் போருக்குப் பின் ஜனாதிபதி ஆண்ட்ரு ஜான்சனைக் குற்றவாளியென நிரூபிக்க காங்கிரஸ் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததிலிருந்து நிர்வாகத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவது கடினம் எனக் கருதப்பட்டது. ஜனாதிபதிகளும் இத்தகையக் கருத்தின் அடிப்படையிலேயே செயல்பட்டனர். எனினும் நிக்சன் பதவி விலகல் இத்தவறான எண்ணத்தை அமெரிக்க அரசியல் முறையிலிருந்து நீக்கியது. ஐக்கிய நாடுகளின் பாரம்பரிய ஜனநாயக் தன்மையின் வலிமையை வெளிப்படுத்தும் ஒன்றாக இது விளங்கியது.

**போர்ட் நிர்வாகம்**

நிதித்துறையில் வல்லுநரான போர்ட் நாணய முறையை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தனர். பெண்களுக்கு சிறந்த இடம் அளிக்கப்படவேண்டுமென அவர் விரும்பிய போதிலும், அவரைக் கொலை செய்ய பெண்கள் முயன்றனர்.

சீனா, ரஷ்யாவோடு கொண்ட அமெரிக்கத் தொடர்பை விருத்தி செய்ய போர்ட் முற்பட்டார். குறிப்பிட்ட இராணுவக் கேந்திர அணு ஆயுதங்களை சம அளவில் குறைக்கும் நோக்கத்தோடு 1974-ல் அவர் ரஷ்யாவுடன் ஒரு உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டார். டீயெகோ கார்சியா தளத்தை வலிமைப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுத்தார்.

இந்தோ-சீனாவில் நடைபெற்ற கம்யூனிச தாக்குதல்களைத் தொடர்ந்து தென் வியட்நாம் மற்றும் கம்போடியாவில் கம்யூனிஸ்டுகள முழுகட்டுப்பாட்டையும் பெற்றனர். தென் வியட்நாமின் அதிபரான தியூவும் கம்போடியாவின் தலைவரான லான்-நோலும் நாட்டை விட்டு தப்பி ஓடினர். இதனைப் பயன்படுத்தி போர்ட், வியட்நாமில் ஐக்கிய நாடுகளின் பங்கு முடிந்துவிட்டதென கூறி உலக வரலாற்றின் துன்பத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.இது தென்கிழக்கு ஆசியாவில் அமெரிக்க உடன்பாட்டை பெரிதும் பாதித்தது. ஆனால் அதனை போர்ட் பொருட்படுத்தவில்லை. எகிப்து, இஸ்ரேல் நாடுகளுக்கிடையிலான பேச்சு வார்த்தைகள் இவ்விரு நாடுகளுக்குமிடையே சமாதான உடன்பாட்டை ஏற்படுத்தி, சூயஸ் கால்வாயைத் திறக்க வழிவகுத்தன. பல்லாண்டு காலத்திற்கும் அமெரிக்காவைப் பாதுகாப்பு நிலையில் வைத்திருக்க உதவும் நவீன வலிமைமிக்க இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டுமென்பதே போர்டின் திட்டமாகும்.

1975-ல் இந்தியப் பிரதமர் இந்திரகாந்தியின் தேர்தல் செல்லாது என அலகாபாத் உயர்நீதிமன்றம் அறிவித்ததைக் தொடர்ந்து நெருக்கடிநிலை பிரகடனப்படுத்தப்பட்டு

பேச்சுரிமை, எழுத்துரிமை, மறுக்கப்பட்டு கட்சி முறைகளில் கட்டுப்பாடுகள் திணிக்கப்பட்டபோது, ‘‘எனது ஞாபகத்தின்படி 1945-ம் ஆண்டுக்குப் பின்பு தாங்கள் அனுபவித்து வந்த எல்லாவித ஜனநாயக உரிமைகளையும் அறுபது போடி மக்கள் இழந்துள்ளனர் என்பது மிகவும் வருநதக் தக்க நிகழ்ச்சியாகும். ஐக்கிய நாடுகளைப் போன்று இந்தியாவிலும் சரியான நேரத்தில் ஜனநாயக முறைகள் மீண்டும் நிலைநாட்டப்படுமென்று நான் நம்புகிறேன்’’ என்று போர்ட் குறிப்பிட்டார். ஆனால் இதனை இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதென்று இந்திய அரசு குறை கூறியது. எனினும் ஜனதா கட்சி வெற்றி பெற்றபோது அவர் எதிர்பார்த்தது நடந்தது. 1976-ம் ஆண்டுத் தேர்தலில் ஜனநாயக் கட்சியைச் சார்ந்த ஜிம்மி கார்ட்டர் வெற்றி பெற்றார்.

## அலகு - V

## உலகபோருக்கு பின் அமெரிக்கா கெடுபிடிப்போர்

இரண்டாம் உலகப் போருக்கு பின் அமெரிக்கா, ரஷியா ஆகிய நாடுகளிடையே நிலவிய கொள்ளை வேறுபாடுகளும், வல்லமை சமநிலையை நிலைநாட்டுவதில் ஏற்பட்ட முரண்பாடுகளும் உலகின் பல்வேறு பகுதிகளில் அமைதியின்மையை ஏற்படுத்தின. இவ்விரு நாடுகளும் தனி அணிகளையும், அமைப்புகளையும் ஏற்படுத்தி தங்களது நிலைகளை உறுதிபடுத்த முனைப்புடன் செயல்பட்டன. குறிப்பாக இரண்டாம் உலகபோருக்கு பின் அமெரிக்காவை ஆட்சி செய்த ஜனாதிபதிகள் ரஷியாவின் பொதுவுடைமை எதிர்பு கொள்கையைத் தீவரமாக கடைபிடித்தார். இதன் விளைவாக உலகம் இரண்டும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்று பகைவுடன் செயல்பட்டன. அல்லது பனிப்போர் என்று பெயர். இப்போர்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அமெக்காவும், ரஷியாவும் பங்கெடுத்தன.

1945ல் ஆண்டு இரண்டாவது உலகப்போர் முடிவடைந்தது. இப்பொர்கள் மனித சமுதாயத்திற்கு பெரிய அழிவினை ஏற்படுத்தியது. 14 மில்லியன் போ்கள் போரில் கொல்லப்பட்டனர். பலகட்டிடங்கள் மண்ணோடு மண்ணாக்கப்பட்டது. கையிழந்து, காலிழந்து துன்பப்பட்டவர்களின் எண்ணிக்கை சொல்ல முடியாது. ஜப்பானில் மட்டும் லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.. ஆனால் அதைவிட கொடுமையான போர் ரஷியா அமொரிக்காவிற்கிடையே தோன்றிய கெடுப்பிடிப் போராகும். இப்போர் பத்திரிக்கை மூலமம், ரேடியோ மற்றும் டெலிவிஷன் மூலமும், இரு நாடகளின் அறிக்கைகள் மூலமும் நடைபெற்றது. இதற்குரிய காரணங்கள் பின்வருமாறு,

**1.கொள்கை வேறுபாடு**

ரஷ்யாவும், அமெரிக்காவும் கொள்கை அடிப்படையில் இரு துருவங்களாயிருந்தன. ரஷியா பொதுஉடைமை கொள்கையையும், அமெரிக்கா தனிமனித உரிமையின் அடிப்படையிலான முதலாளித்துவக் கொள்கையையும் கொண்டிருந்தன. இரண்டுமே தங்கள் கொள்கைதான் சிறந்தது என நிலைநாட்ட முயன்றன.

**2.இரும்புத்திரை**

ரஷியா மேற்கத்திய நாடகளின் தொடர்பின்றி முற்றிலும் விடுவித்துக் கொண்டு தனக்கென தனி உலகத்தை உருவாக்கிக் கொண்டது. ரஷியாவில் என்ன நடக்கிறது என்பதை வெளி உலகம் அறியாவாறு பார்த்துக் கொண்டது. இவ்வாறு கொள்கை அளவிலான இரும்புத்திரை இடப்பட்டது.

**3.கோமின் பார்ம்**

ரஷியா, உலகம் முழுவதிலும் கம்யூனிஸ்ட் கோட்பாடகளைப் பரப்ப கோமின்பார்ம் என்ற அனைத்துலக நிறுவனத்தை ஏற்'படுத்தியிருந்தது. இது பிறநாடகளின் அரசுகளில் ஊடுருவி, தொ்தல் முறையிலோ, கொரில்லா போர் முறையிலோ அந்த அரசுகளை கவிழ்த்துவிட்டு, கம்யூனிஸ்ட் அரசுகளை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டிருந்தது. கம்யூனிசம் பரபுவதைத் தடுப்பதையே தன் புனித கடமையாகக் கொண்ட அமெரிக்கா அதனை எதிர்த்தது.

**4.இரு முகாம்கள்**

ரஷியா கிழக்கு ஐரோப்பிய நாடகளில் கம்யூனிஸ்ட் ஆட்சியை நிறுவி அவற்றை தன் செல்வாக்கு ஆதிக்கத்திற்கு உட்படுத்தியது.அமெரிக்கா மேற்கு ஐரோப்பிய நாடுகளை தனிமனித சுதந்திரக் கோட்பாடுகளின் அடிப்படையிலான முதலாளித்துவ கொள்கையை பின்பற்ற செய்து தன் செல்வாக்கு மண்டலத்தினுள் அவற்றை வைத்திருக்க முயன்றது. இதன் காரணமாக ஐரோப்பா இரு முகாம்களாக பிளவுபட்டு நின்றது.

**கெடுபிடி போரின் தன்மைகள்**

கெடுபிடிபோர் (பனிப்போர்) உண்மையில் பொர்களத்தில் நடைபெறவில்லை. ஆனால் இரு முகாம்களுக்கிடையில் நிலவிய பகையை உணர்ச்சியினால் ஒன்றை ஒன்று அழித்திட துடிக்கும் ஆவேச நடவடிக்கைகள் பெரும் நெருக்கடிகளை உண்டு பண்ணின.

1. எந்த நிமிடத்திலும் எந்த ஒரு சிறு சிக்கலும் பெரிதாகி உலகப் போராக வெடித்து விடும் என்ற அச்சம் உலக மக்களை பிடித்தது.
2. அதனால் இரு நாடுகளும் படைகளை பெருக்குவதிலும் புதிய ஆயுதங்களை கண்டுபிடிப்பதிலும் திவிரமாக இறங்கின. இதில் ஒன்றை ஒன்று மிஞ்ச முயன்றன.
3. தங்கள் அணிக்கு புதிய உறுப்பு நாடுகளை சேர்க்க போட்டியிட்டன.
4. தன்னை சார்ந்த நாடுகளுக்கு இராணுவ உதவி அளித்தன.
5. இராணுவ கூட்டுகள் ஏற்படத்திக் கொண்டன.
6. பிரச்சாரம் செய்து ஒன்றையொன்று மட்டம் தட்ட முயன்றன.
7. ஊலகில் எங்காவது ஒரு மூலையில் ஒரு சிக்கல் ஏற்பட்டு விட்டால் அதில் இருதரப்பாரும் தலையிட்டு அதனை பெரிய பிரச்சனையாக்கின. சுநுங்க கூறினால் போர்க்கருவிகளைக் கொண்டு ஒன்றையொன்று தாக்கிப் கொண்டன. ஐ.நா. சபையில் கூட ரத்து அதிகார கணைகளை வீசி மோதிக் கொண்டன. எங்கும் எதிலும் பரஸ்பரம், பகைமை, பொறாமை, சந்தேகம், ஆவேசம் ஆகியவைகளை கெடுபிடி போராக உருவெடுத்தது.

**கெடுபிடி போர்க்காலத்தில் அமெரிக்காவின் அயல்நாட்டு கொள்கை:**

இரண்டாம் உலகப் போருக்கு பின்பு அமெரிக்காவில் ஜனாதிபதிகளாக இருந்த **ட்ருமன், ஜசன் ஹோவா், கென்னடி, ஜாண்சன், நிக்சன்** போன்றவர்களின் அயல்நாட்டுக் கொள்கையைப் பொறுத்த

அளவில் கம்யூனிச எதிர்ப்பினையே தங்கள் ஒரே நோக்கமாகக் கொண்டனர். கம்யூனிச எதிர்ப்பினையே தங்கள் புனிதப்போர் தொடுப்பது தங்கள் “தெய்வீக உரிமை கொள்கை” எனவும் கூறிக் கொண்டனர். மேலும் இவர்கள் கம்யூனிசம் பரவாதபடியும் பார்த்துக் கொண்டனர்.

**மார்ஷல் திட்டம்**

இரண்டாவது உலகப் போரினால் மேற்கு ஐரோப்பிய நாடுகள் பொருளாதார நெருக்கடிக்கு ஆளானது. இதனால் தேற்கு ஐரோப்பிய நாடகளில் கம்யூனிசம் பரவத் தொடங்கியது. இந்த அபாய அறிகுறியை உணர்ந்த அமெரிக்கா அந்நாடுகளுக்கு பொருளாதார உதவி அளித்து சீரமைப்பு பணிகளை செய்தால் மக்களின் தொல்லையும் தீரும். ஏன்று எண்ணியது. இதற்கு 1947ல் இமெரிக்க வெளியுறவு செயலாளர் ஜார்ஜ் மார்ஷல் ஒரு திட்டம் வகுத்ததார். அது அவர் பெயலஷரால் மார்ஷல் திட்டம என்று அழைக்கப்பட்டது. அதனை நிறைவேற்ற அமெரிக்க காங்கிரஸ் 1948ல் “பொருளியல் கூட்டுறவு சட்டம்” என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. இதற்காக பத்தாயிரம் கோடி டாலர் ஒதுக்கப்பட்டது. அதனால் பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, பெல்ஜியம் உட்பட 16 நாடுகள் பயன்பெற்றன. அந்நாடுகளின் பொருளாதாரமும் சீரடைந்தது. கம்யூனிசத்தின் செல்வாக்கு மங்கியது. இத்திட்டத்தில் ரஷ்ய சார்பு நாடுகளான கிழக்கு ஐரோப்பிய நாடுகள் போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லோவாகியா, ருமேனியா, பங்கேரியா, அல்பேனியா போன்ற நாடகள் சேர மறுத்துவிட்டன.

**ட்ருமன் கொட்பாடு**

பால்கன் பகுதியில் கிரீஸ் தவிர நாடுகளில் கம்யூனிஸ்ட் ஆட்சி நிறுவப்பட்டு விட்டது. கிரீசைச் சூழ்ந்துள்ள கம்யூனிஸ்ட் நாடுகளின் ஒற்றர்களும், தொண்டர்களும் கிரீசுக்குள் புகுந்து அந்நாட்டு அரசைக் கவிழ்க்கும் வேலையில் ஈடுபட்டனர். இதுபோன்று துருக்கியலும் கம்யூனிஸ்ட் கொரில்லாக்கள் தாக்குதல் நடத்தியது. இவ்விரு நாடுகளும் கம்யூனிஸ்ட் இரும்பு திரைக்குள் அடைப்பட்டு விடாதபடி செய்ய அமெரிக்கா முயன்றது. உடனே அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ருமன் ஒரு கோட்பாட்டை வெளியிட்டார். அதில் “கம்யூனிச ஆபத்திலிருந்து காப்பாற்றபட விரும்பும் சுதந்தர நாடகளுக்கு படை மற்றும் நிதி உதவி அளிக்க தயார்” எனக் குறிப்பிட்டிருந்தார். அதன்படி துருக்கியும் கிரீசும் அமெரிக்க படை உதவி மற்றும் நிதி பெற்று கம்யூனிச அபாயத்தை அகற்றின.

**நான்கு அம்சத் திட்டம்**

நான்கு அமசத் திட்டம் ட்ருமனால் வெளியிடப்பட்டது. இதன்படி வளர்ச்சியுறும் நாடுகளுக்குப் பொருளியியல்,தொழில் நுட்ப உதவி வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டது. பின்தங்கிய நாடுகளில் கம்யூனிஸ்ட் செல்வாக்கு வளரவிடாது தடுக்கவும். ஆமெரிக்க செல்வாக்கு வளரவும் இத்திட்டம் பயன்பட்டது.

**பெர்லின் முற்றுகை**

இரண்டாவது உலகப்போருக்கு பின்னு ஜெர்மன் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷியா ஆகிய நான்கு வல்லரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. பின் ரஷியா நீங்கலாக பிரிட்டன், பிரான்ஸ், அமரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து தங்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஜெர்மனியை இணைத்து **ஜெர்மன் கூட்டாட்சி குடியரசாக** ஆக்கியது. உடனே ரஷியா தன் கட்டுபாட்டின் கீழ் இருந்த கிழக்கு பகதியை ஜெர்மன் **ஜனநாயக குடியரசு** என்ற

கம்யூனிஸ்ட் நாடாக்கியது. இதில் பெர்லின் நகர் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்திலுள்ள ஜெர்மன் ஜனநாயக குடியரசுடன் இணைந்து இருந்தது. மேற்கு ஜெர்மனியிலிருந்து கிழக்கு ஜெர்மனிக்கு மக்கள் பெர்லின் நகர் வழியாகத்தான் வரவேண்டும். இதனால் ரஷியா இவ்வழியை மூடியது. இதனைத் தொடர்ந்து ரஷியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் உறவை பாதிக்கும் வண்ணம் பல நிகழ்ச்சிகள் நடந்தன.

**வுட அட்லாண்டிக் உடன்பாடு அமைப்பு NATO) (1949)**

**(NORTH ATANTIC TREATY ORGANISATION)**

கம்யூனிசத்திற்கு எதிரான ஒரு பாதுகாப்பு அமைப்பை உருவாக்க அமெரிக்க ஜனாதிபதி ஜனாதிபதி ட்ருமன் முடிவு செய்தார். அவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்பே **நேட்டோ** எனப்படும். இது 1949ல் ஏற்படுத்தப்பட்டது. இதில் அட்லாண்டிக் கடற்கரையின் இரு பகுதியிலிருக்கும் பிரிட்டன், பிரான்சு, அபல்ஜியம், நார்வே, கனடா, அமெரிக்கா உட்பட 12 நாடுகள் சேர்ந்தன. இதில் 12 நாடுகளுக்கும் பொதுவான பாதுகாப்பு படை ஒன்று அமைக்கப்பட்டது. இதில் அங்கம் வகிக்கும் நாடுகள் இப்படை அமைப்பிற்கான செலவை ஏற்கின்றன. கோடிக்கணக்கான டாலர்கள் செலவில் வலிமையான படை அமைப்பாக இது இயங்கி வருகிறது. இதில் உள்ள உறுப்பு நாடு மீது வேறு ஒரு நாடு வலுத்தாக்குதல் செய்தால் அது தங்கள் அனைவரின் மீதும் தொடக்கப்பட்ட தாக்குதலாக கருதப்பட்டு ராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அமைப்பு கம்யூனிசத்திற்கு எதிராக அமைக்கப்பட்டதால் இதனை சமாளிக்கும் வண்ணம் வார்சா உடன்பாடு அமைப்பு (Warsaw Treaty Organisation) ரஷியாவில் அமைக்கப்பட்டது.

**அன்சுஸ் ஒப்பந்தம் (ANZUS PACT -1951)**

**நேட்**டோ ஒப்பந்தத்தை தொடர்ந்து ஆஸ்திரேலியா நியூசிலாந்து அமெரிக்கா ஆகிய மூன்று நாடகளும் பாதுகாப்பு கருதி அமெரிக்காவிலுள்ள சான்பிரான்விஸ்கோ நகரில் 1951ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாம் நாள் ஒப்பந்தம் கையெழுத்திட்டன. இவ்வொப்பந்தத்தில் பங்கெடுத்த ஆஸ்திரேலியா, (A) நியூசிலாந்து (NZ) அமெரிக்கா (US)ஆகிய நாடுகளின் பெயரால் இது ஆன்சுஸ் (ANZUS)ஒப்பந்தம் என அழைக்கப்பட்டதுஇ. இவ்வொப்பந்தம் படி உறுப்பு நாடுகளில் ஏதாவது ஒன்று தாக்கப்பட்டால் அந்நாட்டின் மீது இக்கூட்டு நாடுகள் இராணுவ தாக்குதலை நடத்தும் என்பதாகும்.

**தேன்கிழக்கு ஆசிய நாடகளின் உடன்படிக்கை (SEATO -1954)**

**(SOUTH EAST ASIAN TREATY ORGANISATION)**

தென்கிழக்கு ஆசிய நாடுகளான இங்கிலாந்து, பிரான்சு, ஆஸ்திரேலியா நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், தாய்லாந்து, ஆகிய நாடகளில் கம்யூனிசக் கொள்ளைகள் பரவும் அபாயம் இருந்ததால் கம்யூனிசத்தின் கோரப்பிடியிலிருந்து தப்புவதற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பிரதிநிதகள் மணிலாவில் கையெழுத்திட்டார்கள். மணிலாவில் செய்துகொண்ட இவ்வுடன்படிக்கை **தென் கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை(South East Asian Treaty Organisation)**என்று பெயர். இவ்வுடன்படிக்கையிள் படி தென்கிழக்கு ஆசியநாடுகளை அண்டைநாடுகள் தாக்கினால் அதனை முறியடிக்க கூட்டாக சீட்டோ (SEATO) நாடுகள் செயல்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஆனால் அமெரிக்கா பொதுவுடமை கோட்பாடுகள் பரவாமல் தடுப்பதற்கு முன்னுரிமை அளித்ததால் இவ்வுடன்படிக்கையை வெற்றிகரமாக செயல்படுத்த முடியாமற் போயிற்று.

**பாத்தாத் உடன்படிக்கை**

1955ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் நாள் இங்கிலாந்து,ஈரான்,ஈராக், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பாக்தாத்தில் கூடி மத்திய கிழக்கு நாடுகளில் பொதுவுடைமை கோட்பாடுகள் பரவாமல் தடுக்க உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டன. ரஷ்யாவிற்கு எதிராக செய்து கொள்ளப்பட்ட இவ்வுடன்படிக்கை செயலிழந்து காணப்பட்டதால் காலப்போக்கில் அமெரிக்காவும் இந்நாடுகளுடன் இணைந்து கொண்டது. ஆனால் இவ்வுடன்படிக்கை நாடுகளுடன் ரஷ்யா நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதால் நாளடைவில் இவ்வுடன்படிக்கை நலியுற்றது.

**வூர்சா உடன்படிக்கை (WARSAW PACT )**

ஆமெரிக்காவில் ஏற்படத்திக் கொண்ட இராணுவ உடன்படிக்கைகளால் ரஷ்யாவிற்கும், கிழக்கு ஐரோப்பிய கம்யூனிச நாடுகளுக்கும் ஆபத்து ஏற்படும் என ரஷ்யா எண்ணியது. எனவே தனது நட்பு நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தம் ஒன்றை செய்துக் கொள்ள ரஷ்யா முடிவு செய்தது. அதன் விளைவால் 1954ம் ஆண்டு எசம்பர் மாதம் அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, போலந்து. ருமேனியா, செக்கோஸ்லோவியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மாஸ்கோவில ஒன்று கூடி இராணுவ ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள முடிவெடுத்தனர். இறுதியில் 1955ம் ஆண்டு மே மாதம் வார்சாவில். மீண்டும் கூடி உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர். நேட்டோ உறுப்பு நாடுகளுக்கு எதிராக செயல்படுவது தான் இவ்வுடன்படிக்கையின் முக்கிய குறிக்கோளாகும். இதன் தலைமையிடமாக மாஸ்கோ விளங்கியது. ஒப்பந்த நாடுகளின் பாதுகாப்பு நிலைமையை சமாளிக்க படை ஒன்றும் அமைக்கப்பட்டது.

**சீனாவில் கம்யூனிச வெற்றி**

இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதும் சீனாவில் தாராள கொள்கையை க9டைபிடிக்கும் சியாங்கே ஷேக் கட்சியான கோமிண்டாங் கட்சியினருக்கும், கம்யூனிஸ்ட்டுக்களுக்கும் உள்நாட்டு போர் மூண்டது. அமெரிக்கா சியாங்கே ஷேக்கிற்கு பண உதவியும், படை உதவியும் தாராளமாக வழங்கியது. கம்யூனிஸ்ட்டுகள் லஷ்யாவிடமிருந்து உதவிப் பெற்றன. இறுதியில் கம்யூனிஸ்ட்டுகள் மாசேதுங் தலைமையில் அமோக வெற்றி பெற்றனர். சியாங்கே ஷேக் தோற்கடிக்கப்பட்டு பார்மோசாவிறிகு (தைவான்) விரட்டியடிக்கப்பட்டார். இதன்பின் 1949ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி சீனாவில் **“சீனமக்கள் குடியரசு”** நிறுவப்பட்டது.

சீன பிரச்சனை ஐ.நா. சபைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. சீனமக்களின் உண்மையான பிரதிநிதித்துவ அரசு “சீன மக்கள் குடியரசு” தான் என்று கூறி அதற்கு

ஐ.நா,வில் உரிய இடம் அளிக்க வேண்டும் என ரஷியா வாதாடியது. அமெரிக்கா அதை எதிர்த்த போதிலும் மாசேதுங் (கம்யூனிஸ்ட்) அரசு தான் ஐ.நா.வில் இடம் பெற்றது.

**கொரிய போர்**

**உலகப்போர் முடியும்** போது கொரியா இரண்டாக பிரிந்து வடகொரியா ரஷ்யாகட்டுப்பாட்டிலும் தென்கொரியா அமெரிக்க கட்டுப்பாட்டிலும் இருந்தது. நாளடைவில் வடகொரியாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியும் தென்கொரியாவில் அமெரிக்க சார்பு ஆட்சியும் ஏற்பட்டது. இச்சமயத்தில் 1950ல்’ வடகொரியா, தென்கொரியா மீது

படையெடுத்தது. உடனே தென் கொரியா ஐ.நா.வில் புகார் செய்தது. ரஷியா ஐ.நாவில் உள்ள பாதுகாப்பு குழு கூட்டத்தை புறக்கணிதது வந்நததால் எந்நதவித முடிவும் எடுக்க முடியவில்லை. உடனே ஐ.நா, அமெரிக்க படைகளை தென் கொரியாவிற்கு ஆதரவாக அனுப்பியது. சீனா படையினர் வடகொரியாவிற்கு ஆதரவாக போரில் இறங்கினர். இப்போர் உலகப் போரை ஏற்படுத்தி விடும் என அஞ்சிய அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் போரை நிறுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைசெய்தார்.

**வியட்நாமில் அமெரிக்க தலையீடு**

இரண்டாவது உலகப்போருக்கு முன்பு பிரான்ஸ், இந்தோசீனாவிலிருந்து வெளியேறியது. ஆங்கு லாவோஸ், கம்போடியா, வியட்நாம் என்ற மூன்று சுதந்திர நாடுகள் உருவாக்கப்பட்டது. இதில் வியட்நாம் மட்டும் வடவியட்நாம், தென்வியட்நாம் என்ற இரு அரசுகளாக துண்டாக்கப்பட்டன. வடவியட்நாமில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் ஏற்பட்டது. மேலும் வடவியட்நாம் கம்யூனிஸ்ட்டுகள் வியட்காங் என்ற விடுதலை படையை உருவாக்கி தென்வியட்நாமுடன் போர் தொடுத்தனர். தென்வியட்நாம் அமெரிக்காவிடம் ஆதரவு கேட்டது. உடனே அமெரிக்கா கம்யூனிஸ்ட்டுகளை அடக்குவதற்கு தென்வியட்நாமிற்கு ஆதரவாக போரில் இறங்கியது. நாளடைவில் வியட்காங் படையினர் தீவிர தாக்குதல் நடத்தியதால் அமெரிக்கா தன்னுடைய போர்வீரர்களையும் விமானப் படையும், கப்பல் படையும் தென்கொரியாவிற்கு அனுப்பி நேரடியாக போரில் இறங்கியது. ஐந்து லட்சத்திற்கும் மேல் அமெரிக்க படைவீரர்கள் போரில் இறங்கினர். 1,85,000 பேர் காயமடைந்தனர். 950 பேர் காணாமறபோயினர். எனினும் அமெரிக்காவால் வியட்காங்குகளை அடக்க முடியவில்லை

ஆமெரிக்காவின் வியட்நாம் கொள்கை படுதோல்வியில் முடிந்தது. அதனால் உள்நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டன. அமெரிக்க ஜனாதிபதி ஜாண்சன் சமாதான பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார். 1969ல் பாரீசில் தொடங்கிய பேச்சுவார்த்தை 1973 வரை நீடித்தது. பேச்சுவார்த்தை நடக்கும்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த நிக்சன் விரைவில் அமெரிக்கப் போர்வீரர்கள் வியட்நாமிலிருந்து தாயகம் திரும்புவார்கள் என அறிவித்தார். அமெரிக்க வெளியுறவு செயலர் கிஸ்ஸிங்கரின் முயற்சியால் 1973ம் ஆண்டு ஜனவரி மாதம் பாரீசில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்பின் வியட்காங் படையினர் பிடித்து வைத்த 590 அமெரிக்க போர் கைதிகளை விடுவித்தனர். பேராற்றல் மிக்க வல்லரசு கூட உரிமை உணர்ச்சியுடன் போரிடும் தேசிய வீர்களைத் தோற்கடிக்க முடியாது என்பதை வியட்நாம் போர் எடுத்துக்காட்டியது. அமெரிக்காவின் வியட்நாம் கொள்னை படுதொல்வியில் முடிந்தது எனலாம்.

**கிழக்கு ஐரோப்பிய சிக்கல்**

1975 ஹங்கேரி நாட்டு பிரதமர் இம்ரேநாகி கம்யூனிச கொள்கைகளை கைவிட்டு தாராள பொருளாதார கொள்கையை கடைபிடித்ததால் ரஷிய படைகள் ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டிற்கு வந்து அவரை பிரதமர் பதவியிலிருந்து அகற்றி, சுட்டுக்கொன்று மிண்டும் கம்யூனிச ஆட்சியை நிரைநாட்டியது. அதேபோல் 1967-68 செக்கோஸ்லோவோக்கியா அதிபர் **அலெக்சாண்டர் ரூபாசக்** கம்யூனிச கொள்கையை தளர்த்த முயன்ற போதும் ரஸியபடைகள் தலையிட்டு அவரை பதவியிலிருந்து அகற்றின. இந்த சம்பவங்களை அமெரிக்கா கடுமையாக

கண்டித்தது. இந்நிகழ்ச்சிகள் கிழக்கு மேற்கு உறவில் தொடர்ந்து இறுக்கமான நிலையை ஏற்படுத்தின.

**யு-2 நிகழ்ச்சி**

ரஷிய போர்கருவிகள் மற்றும் போர்தளவாடற்களை இரகசியமாக கண்டறிய அமெரிக்கா யு-2 விமானங்களை அனுப்பி தகவல் சேகரிப்பது வழக்கம். அவ்வாறு இரகசியமாக இராணுவ தகவல் அறிவதற்கு அமெரிக்கா அனுப்பிய விமானத்தை ரஷியா கண்டறிந்து அதை சுட்டு வீழ்த்தியது. யு2 விமானற்களை அனுப்புவதை ரஷிய அதிபர் குருசேவ் கடுமையாக கண்டித்ததோடு அவ்வாண்டு பாரிசில் நடைபெறவிருந்த உயர்தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் மறுத்தது. இந்த சம்பவம் அமெரிக்கை செல்வாக்கை உலக அரசயரங்கில் வெகுவாக குறைத்தது.

**கியூபா உறவு**

அமெரிக்காவிற்கு மிக அருகில் உள்ளது கியூபா. கியூபாவின் செயல்கள் அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கைக்கு பெரும் சோதனையாக இருந்தது. 19569ல் ∴பிடல்காஸ்ட்ரோ கியூபாவிற்கு அதிபர் னோர். காஸ்ட்ரோ கியூபாவில் பொருளாதார சீர்திருத்தத்தை மேற்கொண்டார். இதனால் அங்குள்ள சர்க்கரை தொழிலிலும் பண்ணை தொழிலிலும் இருந்த அமெரிக்க ஏகபோன ஆதிக்கத்தை உடைத்தெறிந்து அத்தொழிற்சாலைகளை தேசிய மயமாக்கினார். அதே சமயம் அவர் ரஷிய சார்பு கொள்கையைக் கடைபிடித்ததர். ரஷியாவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அமெரிக்க அரசின் கொள்கைகளை கடுமையாக சாடினர். குாஸ்ட்ரோவின் அரசியல் எதிரிகளுக்கு அமெரிக்கா புகலிடம் கொடுத்ததுடன் ஆதரவும் அளித்தது. இதன் காரணமாக அமெரிக்கா கியூபா உறவு சீாகுலைந்தது.

**பிக் வளைகுடா நிகழ்ச்சி**

அமெரிக்காவிற்கு தஞ்சம் புகுந்த காஸ்ட்ரோவின் எதிரிகயுளுக்கு ஆதரவளித்து, அமெரிக்கப் பாதுகாப்புடன் கியூபாவில் இறங்கி காஸ்ட்ரோவிற்கு விரட்ட அமெரிக்கா ரகசிய திட்டம் தீட்டியது. காஸ்ட்ரோவிநற்கு எதிராக கியூபா மக்கள் கலகம் செய்வார்கள் என்று எண்ணி 1964 ஏப்ரல் 17ல் அமெரிக்கா படையெடுததது. ஆனாலட அது படுதோல்வீயல் முடிநதது. குளமிறங்கியவர்கள் கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர். மக்கள் காஸ்ட்ரோவுக்கு ஆதரவாக செயல்பட்டனர். இச்செயல் அமெரிக்க செல்வாக்கை மேலும் குறைத்தது.

**பிற மோதல்கள்**

உலகில் எந்த மூலையிலாவது ஒரு பிரச்சனை தோன்றினால் இந்த இரு வல்லரசுகளும் ஆளுக்கொரு தரப்பை ஆதரித்து சிக்கலைபெரிபடுத்துவதம் வழக்கம். எடுத்துக்காட்டாக இந்தியாவின் காஷ்மீர்சிக்கலில் அமெரிக்கா ராணுவ கூட்டாளியான பாகிஸ்தானை ஆதரித்தது. உடனே ரஷியா இந்தியாவை ஆதரித்தது. காங்கோ உள்நாட்டு சிக்கலில் ரஸ்யா லுமும்பாவை ஆதரித்தது. அமெரிக்கா அதன் அரசியல் எதிரியான லுமும்பாவை ஆதரித்தது. அரபு-இஸ்ரேல்தகராறில் அமெரிக்கா இங்ரேலை ஆதரித்தது. அரபு நாடகளுக்கு ரஷ்யா ஆயுத உதவி செய்தது.

**ஆப்கானிஸ்தானத்தில் ரஷிய படைகள்**

1979ல் ரஷிய படைகள் ஆப்கானிஸ்தானத்தில் நுழைந்து அங்கு ரஷிய அரசை நிறுவியது. இது கெடுபிடி போர் சூழ்நிலையை மீண்டும் ரஷியா ஏற்படுத்தி விட்டதாக அமெரிக்கா கருதியது. இதை தொடர்ந்து மறு ஆண்டில் மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் புறக்கணித்தன.

**கெடுபிடிப்போரின் முடிவு**

1985ல் ரஷிய அதிபரான கோர்பசேவ் கோட்பாடுகளை சற்று தளர்த்தினார். ஆப்கானிஸ்தானத்திலிருந்த ரஷிய படைகளை திருபட்பி அழைத்துக் கொண்டார். அதனை தொடர்ந்து வார்சா ஒப்பந்தம் படி கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிறுத்தி வைத்திருந்த ரஷிய படைகளையும் திருப்பி அழைத்துக் கொண்டார். 1989ல் பெர்லின் சுவர் உடைத்து நொறுக்கப்பட்டது. மறு ஆண்டில் இரு ஜெர்மனிகளும் இணைந்தன. கிழக்கு மூரோப்பிய நாடுகளிலுள்ள கம்யூனிச அரசுகள் வீழ்ந்தன. 1991ல் சோவியத் யூனியன் சிதறுண்டு 15 சுதந்திர குடியரசு நபடுகளாயின. அத்துடன் கெடுபி-டி போரும் ஒரு முடிவிற்கு வந்தது.

## ஜாண் F. கென்னடி

மிக குறுகிய காலமே பதவியிலிருந்து மிக உயரிய புகழ்பெற்ற குடியரசு தலைவர் ஜாண். F.டிகன்னடி ஆவார். மூன்றாண்டிற்கும் குறைவான ஆட்சிக் காலத்திவ் அவர் சாதித்ததை வி-ட சாதிக்க நிஜனைத்தவையே அதிகம். குத்தோலிக்க கிருத்துவ வமயத்தைச் சார்ந்த முதல் குயெரசு தலைவர் இவரே. இந்தியாவுடன் நட்புடன் இருக்க விரும்பியவர். பதவியிலிருக்கும் போதே படுகொலை செய்யப்பட்ட நான்காவது குடியரசு தலைவர் இவர்.∴ சிறந்த நிர்வாகியான இவர் 1963ம் ஆண்டு நவம்பர் 22ம் நாள் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**இளமை பரும்**

சிறந்த இலட்சியவாதியாக தகழ்ந்த கென்னடி 1917ம் ஆண்டு மே மாதம் 29ம் நாள் செல்மிக்க குடும்பத்தில் பறந்தார். இவரது தந்தை ஜோசப் கென்னடி இங்கிலாந்தில் அமெரிக்க தூாதராய் பணிபுரிந்தார். 'ார்வா்டு பல்கலைகழகத்தில் படித்து பட்டம் பெற்றார். இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது அமெரிக்க கப்பற்படையில் சேர்ந்து பணிபுரிந்தார். 1946ல் அமெரிக்க பிரதிநிதிகள் சபைக்கு தேர்ந்தெடக்கப்பட்டார். 1952ல் "மசாசூசட் மாநிலத்திலிருந்து செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது திறமையை பார்த்த அமெரிக்க ஜனநாயகக் கட்சி 1960ம் ஆண்டு நடந்த குடியரசு தேர்தலில் சிலரை நிக்சனுக்கு எதிராக நிறுத்தியது. முதல் முறையாக அதிபர் தேர்தல் பிரச்சாரத்தில் இரு வேட்பாளர்களும் நேருக்கு நேர் தொலைக்காட்சியில் தோன்றி விவாதம் புரிந்தனர். இறுதியில் மிக குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் கென்னடி வெற்றி பெற்றார். கென்னடி 49.6 சதவீத வாக்குகளும் நிக்சன் 49.5 சதவீத வாக்குகளும் பெற்றார்கள்.

**புதிய எல்லை(NEW FRONTIER) கோட்பாடு**

அறிவினையும் அறப்பிணகளையும் வரையறை செய்யும் நிரந்தர எல்லைக்கோடு எதுவும் இருக்ககூடாது. அவை சதா விரிவாக்கம் பெற்றுக் கொண்டே இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் புதிய எல்லை கோட்பாட்டை அமைத்தார். புதிய எல்லை என்பது புதிய அறிவியல் சாதனைகளையும் புதிய மனிதவியல் சக்திகளையுமே குறிப்பினால் உணர்த்துகிறது. குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு ஜனநாயகக் கட்சி வேட்பாளராக அவர் நிறுத்தப்பட்டதும் அவர் தமது புதிய எல்லைக் கொள்கையை இவ்வாறு விளக்கினார்.

“புதிய எல்லைகள் இங்கு இருக்கின்றன. அறிவியலிலும் விண்வெளியிலும் (அன்னமும்) அறிந்திராத உண்9மகள், அமைதியிலும், போரிலும் தீர்க்க முடியாத பிரச்சனைகள்,ஒழிக்க முடியாத அறியாமை தப்பான எண்ணங்கள், விடை கூற இயலாத ஏழ்மை மற்றும் உபரி சார்ந்த பிரச்சனைகள்.”

தாம் குடியரசு தலைவராகப் பதவி ஏற்றபோதும் அத்தகைய புதிய எல்லையை காண அமெரிக்க மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். “நாடு உனக்கு என்னச் செய்ய போகிறது என்று கேட்காதே: நாட்டிற்கு உன்னால் என்ன செய்ய முடியும் என்பதை சொல்” என இளைஞர்களை நாட்டுப் பணியாற்ற அழைத்தார். “முரசு இப்போது தம்மை மீண்டும் அழைக்கிறது. ஆயுதங்களை தாங்குவதற்கு அல்ல. ஆயுதங்கள் நமக்கு தேவை இருந்தாலும் கூட மனிதர்களின் பொது எதிரியான கொடுங்கோன்மை, ஏழ்மை, பிணி, போர் ஆகியவற்றிற்கு எதிராக போரிடுவதற்குதான்…” ஆப்ரகாம் லிங்கனுக்கு பிறகு இத்தகைய மனதைத் தொடும் பதவி ஏற்பு சொற்பொழிவு நடைபெறுவது இதுவே முதல் தடவை.

**உள்நாட்டு கொள்கை**

**1.விட்டு வசதி சட்டம் (1961)**

இதன்படி 5.6 மில்லியன் டாலர் வீட்டு வசதிகளுக்கென ஒதுக்கப்பட்டது. மற்றும் நகரங்களில் பூங்காக்கள் அமைக்கவும் நிதி ஒதுக்கப்பட்டது. இவற்றின் மூலம் 42000 போகள் வேலைவாய்ப்புகள் பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**2.வட்டார மறுமலர்ச்சித் திட்டம் (1961)**

இத்திட்டத்தின் படி சிறுதொழில் நிர்வாகம் என்ற புதிய நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குபவர்களுக்கு குறைந்த வட்டியில் இந்நிறுவனம் கடன் கொடுக்கும், தொழில் துறை இயந்திரமயமாக்கப்பட்டதால் வேலை இழந்தோருக்கு தொழில் பயிற்சியும் இந்நிறுவனம் கொடுத்தது.

**3.குறைந்த பட்ச ஊதியச் சட்டம் (1961)**

தோழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் அதிக பலன் கிடைத்தது. குறைந்த பட்ச ஊதியம் மணி 1க்கு 1.25 டாலராக நிர்ணயிக்கப்பட்டது. இச்சட்டத்தின் படி மூன்று மில்லியன் ஊழியர்கள் புதிதாக பயன் அடைந்தனர்.

**4.வர்த்தக விரிவாக்கச் சட்டம் (1962)**

இச்சட்டம் ஏற்றுமதியை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டிருந்தது. ஐம்பது சதவீதத்திலிருந்து முழுமையாகக் காப்பு வரியை ரத்து செய்யவும் இது குடியரசு தலைவருக்கு அதிகாரம் அளித்தது.

**5.வரிகளை மாற்றியமைக்குமட மசோதா (1963)**

போர்க்காலத்தில் பணவீக்கத்தை தடுக்கும் பொரட்டு விரிக்கப்பட்ட பலவரிகள் குறைக்கப்பட வேண்டும் அல்லது அடியோடு நீக்கப்பட வேண்டும் என கென்னடி விரும்பினார். அனைவருக்கும் பயனளிக்கத்தக்க வகையில் ஆனால் எவரும் எல்லாவற்றையும் அடைந்திடாத வகையில் சாமார்த்தியமாக வரிகள் மாற்றியமைக்கப்பட்டன.

**நீக்ரோக்களின் சிவில் உரிமையை நிலைநாட்டுதல்**

நீக்ரோக்களுக்கு சிவில் உரிமைகள் வழங்குவதில் கென்னடி அதிக ஆர்வம் காட்டினார். முதல் மறையாக நீக்ரோக்களை அயல்நாட்டு தூதுவர்களாக நியமித்தார். அரசு வழக்கறிஞர்களாகவும் பல நீக்ரோக்களை நியமித்தார். கொலம்பியா மாவட்ட ஆணையராக ஒரு நீக்ரோவை நியமித்தார். நீதித்துறையிலும் சிவில் உரிமைகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்தார். நீக்ரோக்களை அவமரியாதை செய்பவர்களுக்கும், நீக்ரோக்களை ஒதுக்குபவர்களுக்கும் எதிராக 36 வழக்குகள் போடப்பட்டு அவை அனைத்திலும் வெற்றி பெறவும் காரணமாக இருந்தார்.

பொது நிறுவனங்களிலும் பள்ளிகளிலும் நீக்ரோக்களை இன்னமும் தனித்தொதுக்கும் முறைக்கு எதிராக கென்னடி “போர் பிரகடனம்” செய்தார். உதாரணமாக வெள்ளையர் மயமாயிருந்த மசிசிப்பி பல்கலைகழகத்தில் **ஜேம்ஸ்மொர்டித்** என்ற நீக்ரோ சேருவதற்கு விண்ணப்பித்த போது அம்மாநில ஆளுநர் பார்னட் அதனை ஏற்க மறுத்தார். நீதிமன்றம் மொர்டித்தை சேர்க்க வேண்டும். என்று தீர்ப்பு வழங்கியது. உடனே கென்னடி மசிசிப்பி மாநிலத்திற்கு அராணுவத்தை அனுப்பி, படை அதிகாரிகளின் பாதுகாப்புடன் மொாட்டித் பல்கலைகழகத்தில் சேர்க்கப்பட்டார். உள்நாட்டு போருக்குப்பின் மாநில-மத்திய அரசுகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களுள் அதுவே தீவிரமானது எனக் கூறப்டுகிறது.
அதேபோல் மற்றொரு சம்பவம் நடைபெற்றது. அதாவது அலாபாமா மாநில ஆளுநர் வாலஸ் என்பவர் அங்குள்ள பல்கலைகழகத்தில் இரு நீக்ரோக்களை சேர்க்க மறுத்தப்போது படை உதவியுடன் அவர்கள் சேர்க்கப்பட்டனர்.

**புதிய சிவில் உரிமைச் சட்ட மசோதா**

நீக்ரோக்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தபட்படுவதைக் கண்ட கென்னடி புதியதொரு மசோதாவை தயாரித்து அதை காங்கிரசுக்கு அனுப்பி வைத்தார். அதில் உணவு விடுதிகள், கேளிக்கை விடுதிகள், கடைகள் ஆகிய பொது இடங்களில் இன ஒதுக்கலை சட்ட விரோதமாக்குவோர் மீது அட்டார்னி ஜெனரலே நேரடியாக வழக்கு தொடர வகைச் செய்தல் போன்றவைக் குறித்து கூறப்பட்டடுள்ளது. ஆனால் அதை காங்கிரஸ் உடனடி நிறைவேற்ற மனமின்றி காலங்கடத்தியது. இதற்கிடையில் கென்னடி சுட்டுக் கொலை செய்யப்பட்டார். உயிரோடு இருக்கும்போதே அவரது திட்டங்களை எதிர்த்த காங்கிரஸ் அவரது மரணத்துக்குப் பின் ஜாண்சன் ஆட்சிக் காலத்தில் 1964ல் அதழைன சட்டமாக்கியது. இவ்வாறு கென்னடி உயிர் கொடுத்து நீக்ரோக்களுக்கு சட்டபூர்வமான உரிமைகளை பெற்றுக் கொடுத்தார்.

**வாஷிங்டன் அணிவகுப்பு**

கென்னடியின் சிவில் உரிமை மசோதாவை காங்கிரஸ்ட விவாதித்துக் கொண்டிருந்த போது தங்கள் உரிமைகளை நிலைநிறுத்த 3000 வெள்ளயைர்கள் உட்பட இரண்டு லட்சம் கறுப்பர்கள் (நீக்ரோக்கள்) வாஷிங்டன் நோக்கி அணிவகுத்து சென்றனர். இவ்வணிவகுப்புத் தலைவர்களுக்கு கென்னடி நல்ல வரவேற்பளித்தது குறிப்பிடத்தக்கது.

**விண்வெளி பயணம்**

முந்திய அதிபர் காலத்தில் விண்வெளிப் பயண ஆய்வுக்கான NASA திட்டம் கென்னடி ஆட்சிக் காலத்தில் மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. அடுத்த பத்து ஆண்டு முடிவிற்குள் அமெரிக்கா சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் என்று கென்னடி தீர்க்க தரிசனமாக கூறினார். அவர் காலத்தில் (1961) ஆலன் ஷெப்பர்டு என்பவர் விண்வெளி பயணம் செய்தார். மறு ஆண்டில் **ஜாண்கிளன்** உலகை மும்முறை வலம் வந்தார்.

மிகச் சிறந்த இலட்சியவாதியாக திகழ்ந்த கென்னடி தனது ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவை அறிவியல் வளர்ச்சியிலும், விண்வெளி வளர்ச்சியிலும் வேகமாக முன்னேறச் செய்தார். கறுப்பு இன மக்களுக்கென பல சட்டங்கள் இயற்றி அவர்களின் வாழ்க்கையை புதுப்பொலிவு பெற வைத்தார்.

**கென்னடியின் வெளிநாட்டுக் கொள்கை**

**(FOREIGN POLICY)**

**கியூபாவின் உறவு முறிவு**

கியூபாவை ஆட்சி புரிந்த பிடல் காஸ்ட்ரோ அமெரிக்காவின் எண்ணங்களுக்கு எதிராக செயல்பட்டு வந்தார். எனவே அவரது ஆட்சியை கவிழ்க்க அமெரிக்க உளவு நிறுவனம் முயன்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டது. இந்த முயற்சியை திறமையாக சமாளித்த காஸ்ட்ரோ அமெரிக்க உளவு நிறுவனத்தை சார்ந்த கூலிப் படையினர் 120 பேரை உயிருடன் பிடித்தார். காஜ்ட்ரோவை கொலை செய்யும் முயற்சியும் தோல்வியடைந்தது. இதனால் ஆத்திரம் அடைந்த அமெரிக்கா கியூபாவுடனான அனைத்து உறவையும் முறித்துக் கொண்டது. இந்த சம்பவம் பிக் வளைகுடா நிகழ்ச்சி என அழைக்கப்படுகிறது.

**லாவோஸ் பிரச்சனை**

1961ம் ஆண்டில் லாவோஸ் அதிபருக்கு எதிராக உள்நாட்டு போர் வெடித்தது. இதில் அமெரிக்கா தலையிட்டு லாவோஸ் அதிபருக்குஎதிராக செயல்பட்டது. இதை ரஷியா விரும்பவில்லை. எனவே இரண்டு நாடகளுக்கிடையே மோதல் ஏற்படும் நிலை உருவானது. இந்நிலையில் கென்னடி புத்தி கூர்மையுடன் செயல்பட்டார். ஒடனே அங்கு வாழ்ந்த மேலைநாட்டவர், நடுநிலைமைவாதிகள், பொதுவுடமை வாதிகள் ஆகியோரிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவை ஏற்படுத்தி லாவோஸ் ஆட்சிப் பொறுப்பை அதனிடம் கொடுத்தார். இதனால் அங்கு அமைதி நிலவியது.

**பெர்லின் பிரச்சனை**

அமெரிக்க அதிபர் ட்ருமன் காலத்தில் தோன்றிய கெடுபிடிபோர் கென்னடி காலத்திலும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. கென்னடி காலத்தில் ரஷ்ய பிரதமராக இருந்த குருசேவ் சில சமயங்களில் ஆவேச பேச்சுக்களாலும், ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளாலும் அச்சுறுத்தி வந்தார். அமெரிக்காவுடனான பிரச்சனைகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள ஆவலாக இருப்பதாக கூறினார். இதன் விளைவாக 1961 ஜீன் 3, 4, ஆகிய தேதிகளில் வியன்னாவில் கென்னடி குருசேவ் சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது நடந்த பேசச்சுவார்த்தையினால் எந்தவித பயனும் ஏற்படவில்லை. மாறாக கெடுபிடி கடுமை அதிகரித்தது. ரஷியாவின் மேற்பார்வையில் இடைப்பட்ட எல்கையை கிழக்கு ஜெர்மனிக்கும் மேற்கு ஜெர்மனிக்கும்இடைப்பட்ட எவ்கையை கிழக்கு ஜெர்மனி 1961ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் நாள் மூடியது. இரு நாடுகளுக்கும் இடையே 62 கி.மீ. நீளமுள்ள சுவரை கட்டியது. இதற்கு **பெர்லின் சுவர்** என்று பெயர். அதன்பின் கிழக்கு ஜெர்மனி ஒரு நாடாக செயல்பட்டு வந்தது. இச்செயலை அமெரிக்கா விரும்பவில்லை. இருந்தாலும் இதற்கு எதிராக படையை பயன்படுத்தவில்லை.

**கியூபாவில் ரஷ்யா ஏவுகணைத் தளம் அமைத்தல்**

ஐரோப்பாவில் தனது படைவிலமையை உறுதிப்படுத்த ரஷ்யா நீண்ட நாட்களாக முயற்சி எடுத்து வந்தது. கியூபாவில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த எண்ணிய ரஷ்யா அங்கே ஏவுகணை தளம் ஒன்றை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டது. இதற்கென 1962ம் ஆண்டு 2100 தொழில் நுட்ப வல்லூநர்கள் ஆலோசகர்கள் ஆகியோருடன் 30 லஷ்ய கப்பல்கள் கியூபாவை சென்றடைந்தன. கியூபாவில் ஏவுகளை தளம் அமைத்தால் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படும் என எண்ணிய அமெரிக்கா ரஷ்யாவிற்கு எதிரான நடவடிக்கையில் இறங்க துணிந்தது. இச்செயலை பல ஐரோப்பிய வல்லரசுகள் வன்மையாக கண்டித்தது. சூழ்நிலை மோசமாகவே ரஷ்யா தனது திட்டத்தைக் கைவிட்டது. இவ்வெற்றிக்கு கென்னடியே காரணமானவர் என பல அரசியல் தலைவர்களும் அவரைப் புகழ்ந்தனர்.

**அணு ஆயுத தடை ஒப்பந்தம்**

இரண்டதம் உலகப்போருக்குப் பின் போரை தவிர்க்க வல்லரசுகள் ஆயுத உற்பத்தியை பல்வேறு ஒப்பந்தங்களை செய்து கொண்டன. இருப்பினும் ஆயுத பெருக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. அணு ஆயுதங்களை அமெரிக்காவும், ரஷ்யாவும் போட்டிப் போட்டு தயாரித்தன. இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா பயன்படுத்திய அணுகுண்டை விட 6000 மட்ங்கு சக்தி வாய்ந்த அணுகுண்டை 1961ம் ஆண்டு அக்டோபர் மாதம் ரஷியா வெடித்து சோதனை செய்தது. இதற்கு பதிலாக 1962ம் ஆண்டு அமெரிக்காவும் அணு ஆயுத சோதனை ஒன்றை நடத்தியது. இருப்பினும் அணு ஆயுத சோதனையை கட்டுப்படுத்தும் நோக்குடன் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி ரஷ்யா அதிபர் குருசேவுடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த முனைந்தார். இதற்கு ரஷ்யா இணங்கவில்லை. இருப்பினும் இதைப்பற்றி நேரடி தொடர்பு கொள்ள வசதியாக வாஷிங்டனுக்கும் மாஸ்கோவிற்குமிடையே நேரடி தொலைபேசி தொடர்பு கென்னடியின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டது.

**இந்தியாவுடன் நல்லுறவு**

1962 அக்டோபரில் சீனர்கள் இந்தியாவில் வடகிழக்கு எல்லையில் ஆக்கிரமிப்பு செயலில் ஈடுபட்டபோது இந்திய பிரதமர் நேரு உதவி கோரி கென்னடிக்கு கடிதம் எழுதினார். உடனே கென்னடி சீனாவின் செயல குறித்து ஆழ்ந்த கவலைக் தெரிவித்ததுடன் உடனடியாக ஆயுதங்கள் அனுப்பவும் ஏற்பாடு செய்தார். எனவே கென்னடிக் காலத்தில் இந்தியா-அமெதிக்க உறவு என்றுமில்லா அளவில் நல்லுறவாக விளங்கியது.

**லத்தீன் நாடுகளுடன் அமெரிக்காவின் உறவு**

கியூபா நீங்கலாக, பிற லத்தீன் அமெரிக்க நாடுகளுடனான உறவை வலுப்படுத்தி, அந்நாடுகளுக்கு உதவி புரியும் கொள்கை ஒன்றை வகுத்தார். அதுவே**"முன்னேற்றத்திற்கான கூட்டு"**(Allance Progress) என அழைக்கப்பட்டது. வீடு, வேலை, நிலம், உடல்நலம், கல்வி ஆகிய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதில் அமெரிக்கா உதவி செய்யத் தயார் என கென்னடி அறிவித்தார். அதன்பயனாக 10 ஆண்டு காலத்தால் 100 மில்லியன் டாலர் வளர்ச்சித் திட்டங்களில் செலவு செய்ய திட்டம் ஒன்று தீட்டப்பட்டது.

தியோடர் சோரான்சன் என்ற வரலாற்நாசிரியர் கூறுவது போல் கென்னடியின் சாதனைகள் அவரது ஆட்சிக்கால அளவை மிஞ்சிவ ிட்டன. "மூன்றாண்டிற்கும் குறைவான காலத்தில் அமெரிக்க இன உறவு முறைகளில் புதிய சகாப்தத்திற்கும், லத்தீன் அமெரிக்க உறவு முறைகளில் புதிய சகாப்தத்திற்கும் நிதி பொருளியல் துறைகளில் புதிய சகாப்தத்திற்கும் விண்வெளி ஆய்வில் புதிய சகாப்தத்திற்கும் அவர் அடிப்படையிட்டார்"

கென்னடியின் விறுவிறுப்பான செயல்பாடுகள் திடீரென நடுவழியில் நின்று போயின. 1963 நவம்பர் 22ல் உட்கட்சி பிரச்சனை உன்றை தீர்த்து வைக்க டெக்சாஸ் மாநிலத்திலுள்ள டல்லாஸ் நகருக்கு சென்ற போது **ஆல்வால்ட்** என்ற தீவிரவாதியால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆஸ்வால்ட் ஏன் கொன்றான்? அவன் பின்னணியில் யார் யார் நின்றார்கள்? என்பதை விசாரித்தவதற்குள் அவனை **ஜேக்ரூபி** என்பவன் சுட்டுக் கொன்று விட்டான். எனவே கென்னடி படுகொலை மர்மம் வெளிவராமலே போய்விட்டது. பதவியிலிருக்கும் போது படுகொலை செய்யப்பட்ட 4வது குடியரசு தலைவர் கென்னடி. இவருக்கு முன் 1865ல் ஆப்ரகாம் லிங்கனும் 1881ல் கார்ஃபீல்டும், 1901ல் மெக்கன்லியும் படுகொலைக்குள்ளான குடியரசுத் தலைவர்கள் ஆவர்.

## தாராளக் கொள்கையின் எழுச்சி

**கென்னடி கால தாராளக் கொள்கை**

அமெரிக்க அதிபர் கென்னடி உள்நாட்டு கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் தாராளக் கொள்கை பின்பற்றினார். பெருகிவரும் வேலையில்லா திண்டாட்டத்தை குறைப்பதற்காக 435 மில்லியன் டாலரை ஒதுக்கினார். அதன்மூலம் நலிவடைந்த தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலையின்றி இருப்பதை தவிர்த்து அவர்களுக்கு புதிய வேலைகள் கொடுக்க முடிந்தது. புதிய முதலீடுகளுக்கு 7 சதவீதம் வரிச்சலுகையை அளித்தார்.

நீக்ரோ விஷயத்திலும் கென்னடி தாராள கொள்கையை கடைபிடித்தார். நீக்ரோக்களுக்கு சிவில் உரிமைகள் வழங்குவதில் அதிக ஆர்வம் காட்டினார். நீக்ரோக்களுக்கு அரசு உயர் பதவி

வழங்கியது. முதன்முதலில் நீக்ரோக்களை அயல்நாட்டு தூதுவர்களாக நியமித்தார். கொலம்பியா மாவட்ட ஆணையராக ஒரு நீக்ரோ நியமித்தார். பல நீக்ரோக்களை அரசு வழக்கறிஞர்களாகவும் நியமதித்தார். நீக்ரோக்களை தனித்து ஒதுக்குபவர்களுக்கு எதிராக 36 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவை அனைத்திலும் வெற்றி பெறவும் காரணமாகயிருந்தார். பள்ளிகளிலும், பொது இடங்களிலும் பொது நிறுவனஙட்களிலும் நீக்ரோக்களை தனித்து ஒதுக்கும் முறைக்கு எதிராக போர் பிரகடனம் செய்தார்.

**நல்லுறவு திட்டங்கள்**

அமைதி பணிக்கெனவும், உள்நாடுகளுக்கிடையே ஏற்படுத்தவும் கென்னடி எடுத்துக் கொண்ட முயற்சிகள் இதுவரை எந்த ஜனாதிபதியும் செய்யாதவைகளாகும். இத்திட்டத்தின் படி தலைசிறந்த ஆசிரியர்கள், விவசாயிகள், மருத்துவர்கள், பொறியியல், வல்லுநர்கள் ஆகியோர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்களை பின்தங்கிய நாடுகளுக்கு அனுப்பி அவற்றின் வளர்ச்சிக்கு பெரும் முயற்சி எடுத்துக்கொண்டார். இத்தகைய முயற்சிகளால் பின்தங்கிய நாடுகள் வளர்ச்சிப் பெற்றன. பின்தங்கிய நாடுகளை முன்னேற்றம் பெற உதவியுதுடன் அமெரிக்கரின் தாராள மனப்பான்மையும், நல்லெண்ணமும், உயரிய நோக்கும் மின உயர்ந்தது என உதகிற்கு தெரியவந்தது. இவ்வாறு கென்னடியின் ஆட்சியில் ஏற்பட்ட சீர்திருத்தங்கயள் அமெரிக்காவில் தாராளக் கொள்கை வளர்ச்சி பெறுவதற்கு வழிவகுத்தது.

**லிண்டன் பெயின்ஸ் ஜாண்சன் காலத்தில் சமுதாய நலத்திட்டங்கள் மற்றும் தாராள கொள்கையின் வளர்ச்சி**

ஜாண்சன் காங்கிரஸ் உறுப்பினர்களை சரிக்கட்டி தாம் விருமிபய வண்ணம் சட்டங்களை இயற்ற எண்ணினார். அவரது தாராள கொள்கையில் ஒன்று மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். அவரது முயற்சியினால் காங்கிரஸ் ஊழ்மை ஒழிப்புச் சட்டம் ஒன்றினை நிறைவேற்றி அதற்காக 200 கோடி டாலர்கள் நிதி ஒதுக்கீடும் செய்தது. அவர் வேலைவாய்ப்பை பெருக்குவதில் தாராளக் கொள்கையை கடைபிடித்தார். வேலைவாய்ப்பை பெருக்க 200 கோடி டாலர்களை ஒதுக்கீடு செய்தார். மேலும் ஜாண்சன் பொதுமக்கள் மீது சுமத்தப்பட்ட வரியையும் குறைத்தார். நீக்ரோ மக்களுக்கு தன்னுடைய தாராள கொள்கை மூலம் உயர்கல்வி முதல் கல்லுஸரி வரை படிப்பதற்கு ஏற்பாடு செய்தார். வயதானவர்களுக்கு மருத்துவ வசதிகளை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

**தாராள கொள்கையின் மூலம் சிவில் உரிமை நிறைவேற்றுதல்**

கென்னடி விட்டுச் சென்ற பணிகளை ஜாண்சன் தொடர்ந்து செய்தார். நீக்ரோக்களுக்கு வாக்குரிமை அளித்தல், வேலைக்கு பயிற்சி அளி-த்தல்,வேலை வாய்ப்பளித்தல், பொது இடங்களில் தாக்கப்படாமல் இருத்தல் ஆகிய அனைத்துப் பணிகளையும் செய்து முடித்தார்.

மேலும் ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை வழங்கினார். கல்வித்துறை மேம்பாட்டிற்கு இவர் காலத்தில் கணிசமான தொகை ஒதுக்கினார். வறுமை ஒழைப்பு திட்டத்திற்கு 100 கோடி டாலர் ஒதுக்கினார். 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு இலவச மருத்துவ

உதவி வழங்க ஏற்பாட செய்தார். குறைந்த விலையில் உணவு பொருட்கள் கிடைப்பதற்கு பதிவு அட்டைகள் வழங்கினார்.

கென்னடி மற்றும் ஜாண்சன் தங்களது தாராள கொள்கைகள் மூலம் ஆக்கபூர்வமான சமுதாய பணிகளை செய்து முடித்தனர். அமெரிக்காவில் தாராளக்கொள்கை வெகுவேகமாக வளர்ச்சியடைவும் வெய்தனர். வெள்ளையர்கள் அனுபவிக்கும் அனைத்து சலுகைகளும் கறுப்பவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதில் அதிக ஆர்வம் கொண்டு பல கறுப்பர் நலத்திட்டங்களை இயற்றுவதற்கு இரு தலைவர்களும் காரணமாயிருந்தனர்.

**சம உரிமைகள் இயக்கம்**

வண்ணம் கறுத்ததால் எண்ணம் கறுத்தவர்களின் கொடுரபிடியில் சிக்கித் தவித்த நீக்ரோக்களை அடிமைத்தளத்திலிருந்து விடுவித்தார் ஆப்ரகாம் லிங்கன். ஆடிமை முறை ஒழிக்'கப்பட்டது என அரசியலமைப்பு கூறியது.ஆனால் மனித நீதியை மதிக்காத மதிகெட்ட நிறவெறியர்கள் நீக்ரோக்களைக் கொடுமைப்படுத்தினர். நீக்ரோக்களை கொல்வதற்காகவே இரகசிய அமைப்புகள் இயங்கின. வேட்டை நாய்களிடம் சிக்கிய கறுப்பு முயல்களாகிய நீக்ரோக்கள் அல்லலுற்றனர். நீக்ரோக்களுக்கு சம உரிமை மறுக்கப்பட்டது. அவ்வுரிமையை பெறுவதற்காக நடந்த இயக்கமே சமஉரிமை சட்ட இயக்கமாகும். பல ஜனாதிபதிகளின் பதவி காலத்தில் வெவ்வேறு சமஉரிமை சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்த சமஉரிமை இயக்கத்தின் தளபதியாக விளங்கபியவர் மார்டின் லூதர் கிங்.

ஆமெரிக்க மக்களாட்சியில் அனைத்து மக்களும் சமஉரிமை பெற வேண்டும் என்ற கருத்து பல்வேறு மாவட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டு வந்தது. 1868ல் செய்யப்பட்ட 14வது அரசியல் அமைப்பு திருத்தம் எல்லா அமெரிக்க மக்களும் சமமான உரிமை பெற்றவர்கள் என்பதையும், அவர்களது அனைத்து உரிமைகளையும் காப்பது மத்திய மற்றும் மாநில அரசுகளின் கடமை என்பதையும் உறுதி செய்தது. ஆனால் பல்வேறு பொது இடங்களிலும் கறுப்பர்களுக்கென தனியான இடங்கள் ஒதுக்கப்பட்டன. இன ஒதுக்கல் தொடர்ந்து நடைபெற்றது. பள்ளிக் கூடங்களில் கறுப்பர்களுக்கென தனியான இடங்கள் இருந்தன. இதனை எதிர்த்து அமெரிக்க உச்ச நீதிமன்றம் அனைவருக்கும் சம உரிமை என்பதை வலியுறுத்தியதோடு கறுப்பர்களை பிரித்து வைப்பது தவறு இல்லை என தீர்ப்பு வழங்கியது. இத்தகைய தீர்ப்பு இன ஒதுக்கல்வாதிகளுக்கு ஊக்கமினத்தது. கல்வி கூடங்களில் இன ஒதுக்கல் தொடர்ந்து நடைபெற்றது.

**ஐசனோவர் ஆட்சிக்காலம்**

ஐசனோவர் ஆட்சிக்காலத்தில் உச்ச நீதிமன்றத்தில் பள்ளிகளில் அன ஒதுக்கல் தொடர்பாக தொடர்பாக ஒரு வழக்கு வந்தது. 1954ல் இந்த வழக்கில் தமது முந்தைய தீர்ப்பை மாற்றி உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பின் படி இன ஒதுக்கல் கொள்கை 14ம் அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிரானது என்றும் கல்விக் கூடங்களில் கறுப்பர் குழந்தைகளை பிரித்து வைக்ககூடாது எனவும் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பு கறுப்பு மக்களின் உரிமைகளுக்காகவே போராடிய “கறுப்பு மக்களின் முன்னேற்றத்திற்கான தேசிய சங்கத்திற்கு” (National Association

for the Advancement of Coloured People - NAACP) ஊக்கமளித்தது. எனினும் தென் மாநிலங்களில் அலபாமா மற்றும் ஜார்ஜியா போன்ற மாநிலங்களில் பொதுக்கல்விக் கூடங்கள் இல்லாமற் செய்து விட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இன ஒதுக்கல் பிரச்சனையில் ஐசனோவர் உறுதியான முடிவுகளை மேற்கொண்டார். 1957ம் ஈண்டில் (மக்களின் உரிமைகளை காக்கும்) பொது உரிமை சட்டம் அனைத்து நோக்கம் நிறைவேற்றப்பட்டது. மக்களின் சிவில் உரிமைகளை காக்கச் சிவில் உர்மை ஆணையம் ஒன்று உருவாக்கப்பட்டது. இவ்வாணையத்தின் ஆணைகளை நிறைறவேற்ற மறுத்தவர்களைத் தண்டிக்க வகை செய்யும் சிவில் உரிமை சட்டமொன்று 1961ல் நிறைவேற்றப்பட்டது.

**கென்னடியின் காலம்**

ஜாண் எப். கேன்னடி நீக்ரோக்களுக்கான உரிமைகளைப் பெற்'று தருவதில் மிகவும் முனைப்புடன் இருந்தார். தமது நோக்கங்களை நிறைவேற்றுவதில் தடையாக இருந்த காங்கிரசை ஒதுக்கிவிட்டு நிர்வாகத்துறை செயல்முறைகளின் வாயிலாக கறுப்பர்களுக்கு உதவ முடிவு செய்தார். நீக்ரோ மபாணவர்களின் உரிமையை காக்க 1962ல் ஆக்ஸ்போர்டு மற்றும் மிசிசிப்பி ஆகிய இடங்களுக்கு மத்தியப் படைப் பிரிவுகளை அனுப்பினார். முதல் முறையாக நீக்ரோக்களை அயல்நாட்டு தூதுவர்களாக நியமித்தார். அரசு வழக்கறிஞர்களாகவும் பலரை நியமித்தார். நீக்ரோக்களை தனித்து ஒதுக்குபவர்கள் மீது 36 வழக்குகள் போடப்பட்டு அவை அனைத்திலும் வெற்றியும் பெற்றார்.

**ஜாண்சன் காலம்**

சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட நீக்ரோக்களை நிலையை மேம்படுத்த எண்ணிய ஜாண்சன் **1964ம் ஆண்டு சிவில் உரிமை சட்டம்** ஒன்றை நடைமுறைக்கு கொண்டு வந்தார். இன ஒதுக்கலில் ஈடுபடும் கல்வி நிலையங்களுக்கு அரசு கொடுக்கும் மானியம் உடனே ரத்து செய்ய இச்சட்டம் வகை செய்தது. இச்சட்டம் நீக்ரோக்களுக்கு சமஉரிமை வழங்கியதே தவிர கல்வி நிலையங்களில் இன ஒதுக்கல் தொடர்ந்து நடைபெற்று தான் வந்தது. நீக்ரோக்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் பொருட்டு 1665ம் ஆண்டு பெப்ரவரி முதல் நாள் அலபாமா மாநிலத்தில் செல்மா என்னும் நகரிலிருந்த அம்மாநில தலைநகரமான மான்கோமலிக்கு நடைபயணம் ஒன்றை மேற்கொண்டார்கள். இந்த நடை பயணத்திற்கு **மார்ட்டின் லூதர்கிங்** தலைமை வகித்தார். ஊர்வலத்தை தடை செய்த மாநில அரசு ஊர்வலத்திற்கு வந்த ஆயிரக்கணக்கான நீக்ரோக்களை கைது செய்தது. இதை எதிர்த்து நாட்டின் பல்வேறு இடங்களில் கலகங்கள் வெடித்தன. உடனே ஜாண்சன் தலையிட்டு மாநில அரசை கண்டித்ததோடு நடைபயணத்திற்கு அனுமதியும் அளித்து போதிய பாதுகாப்பும் வழங்கினார்.

நீக்ரோக்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், வேலை வாய்ப்புக்காகவும் அரசு பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டாலும் சில மாநில அரசுகள் இதை முழுமையாக அமல்படுத்தவில்லை. இருப்பினும் ஜாண்சனின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கடுமையான நடவடிக்கைகளால் நீக்ரோக்கள் சில சிவில் உரிமைகளைப் பெறமுடிந்தது. இவரது ஆட்சிக்காலத்தில்தான் நீக்ரோ தலைவர் மார்டின் லூதர்கிங் கூட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மார்டின் லூதர் கிங்**

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சமஉரிமை மறுக்கப்பட்ட நீக்ரோக்களுக்கு உரிமை குரல் கொடுக்க தோன்றியவர் மார்டின் லூதர்கிங் ஆவார். இன ஒதுக்கலை எதிர்த்தும், நீக்ரோக்களுக்கு சமஉரிமை கேட்கும் அறவழி போராட்டம் தொடங்கினார் மார்டின் லூதர்கிங். 1955ல் அலபாமாவில் கறுப்புப் பயணிகளுக்கு தனியான இருக்கைகள் ஒதுக்கிய பேருந்தை மறுத்தொதுக்கும் போராட்டத்தை நடத்தி வெற்றிப் பெற்றார். 1961ல் முதன்முறையாக அறப்போரில் ஈடுபட்ட குற்றத்திற்காக மார்டின் லூதர் கிங் கைது செய்யப்பட்டார். அதனை தொடர்ந்து பலமுறை சிறை சென்றார். மகாத்மா காந்தியின் அறவழியிலேயே தாமும் போராட்டங்களை நடத்த போவதாக அறிவித்தார்.

1963 ஆகஸ்ட் மாதத்தில் வாஷிங்டன் பேரணி என்னும் அமைதி பேரணியை நடத்தினார். இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட நீக்ரோக்களும், நீக்ரோக்கள் மீது அன்பு கொண்ட வெள்ளையரும் கலந்து கொண்டனர். இப்பேரணி எத்தகைய வன்முறையுமின்றி சிறப்பாக நடைபெற்றது.

அமைதியான முறையில் மார்டின் லூதர்கிங் போராட்டம் நடத்தியதால் 1964ட் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை பெற்றார். சர்வதேச ஒற்றுமைக்கான ஜவஹர்லால் நேரு பரிசை 1969ல் இந்திய அரசு அவருக்கு வழங்கியது. 1986ம் முதல் ஆண்டு ஜனவரி 20ம் நாளை அவரது நினைவு விடுமுறை நாளாக கொண்டாட அமெரிக்க அரசு முடிவு செய்தது. இதற்கான சட்டம் முன்னாள் அமெரிக்க அதிபர் ரீகன் காலத்தில் இயற்றப்பட்டது. இயேசு கிறிஸ்து, கொலம்பஸ், வாஷிங்டன், ஆப்ரகாம் லிங்கன் ஆகியோருக்கு மட்டுமே அளிக்கப்பட்ட இப்பெருமை மார்டின் லூதர்கிங்கிற்கும் அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தோன்றிய பொது உரிமை சட்ட இயக்கம் நீக்ரோக்களுக்கு சம உரிமையை பெற்று தந்தது. வெள்ளையரோடு சமமாக உட்கார்ந்து உணவருந்தும் உரிமையையும் ஒட்டளிக்கும் உரிமையையும் அரசு அலுவலகங்களில் வேலை செய்யும் உரிமையையும் கறுப்பர்கள் தங்கள் இயக்கங்கள் நடத்திய போராட்டங்கள் மூலம் பெற்றனர்.

## மார்டின் லூதர் கிங்

அமெரிக்க வரலாற்றில் மங்காத இடத்தைப் பெற்றுள்ள தலைவர்களுள் மார்டின் லூதர் கிங்கும் ஒருவர். வெள்ளையர்களால் ஒடுக்கப்பட்ட கறுப்பர்களாகிய நீக்ரோக்களின் உரிமைகளுக்காக அறபோராட்டங்கள் பல நடத்தி வெற்றி வாகை சூடிய இவர் மனிதர்களுள் மாணிக்கமாக திகழ்ந்தார்.

**இளமை பருவம்**

நீக்ரோ உரிமைகள் இயக்கத்தின் தலைவராக விளங்கிய மார்டின் லூதர் கிங் 1929ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் நாள் **டென்னசி** மாநிலத்தில் **அடலாண்டு** என்னுமிடத்திலுள்ள **மெம்பிஸ்** என்ற ஊரில் பிறந்தார்.1949ம் ஆண்டு **மூர்ஹவுல்** என்ற கல்லுரியில் பயின்ற பட்டம் பெற்றார். 1952ம் ஆண்டு **குரோஸர்** என்னும் இடத்திலுள்ள இறையியல் கல்லுரியில் பயின்ற இறையியல் பட்டம் பெற்றார். **பாஸ்டன் பல்கலைகழகத்தில்** ஆராய்ச்சியில் ஈடுபட்ட இவர் 1955ம் ஆண்டு டாக்டர் பட்டம் பெற்றார். ஆராய்ச்சியில் ஆடுபட்டுக்கொண்டிருந்த போது **கொரேட்டா ஸ்காட்** என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டார். கல்லூரியில் கல்வி பயின்று

கொண்டிருந்தபோது மார்டின் லூதர் கிங் ஏராளமான நூற்களை கற்றார். குறிப்பாக காந்திஜியின் தத்துவ நூற்கள் பெரிதும் கவர்ந்தன. அதோடு காந்திஜியின் சத்திய சோதனையை நன்கு கற்று காந்திஜி-யின் கொள்கைப்படி நடக்க வேண்டும் என்று கருதினார்.

**இன ஒதுக்கலுக்கு எதிராக செயல்படுதல்**

ஆமெரிக்காவில் நிலவியிருந்த இன ஒதுக்கல் கொள்கை நீக்ரோக்களின் நலன்களை பெரிதும் பாதித்தது. புறக்கணிக்கப்பட்ட இம்மக்களின் நலன்களைப் பாதுகாக்க மார்டின் லூதர் உறுதி பூண்டார். அதற்கெதிராக பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவால் இரண்டாம் உலகப் போருக்குப்பின் அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்த **ஹேரி எஸ். ட்ருமன் சட்டம்** ஒன்றை கொண்டு வந்தார். 1948ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இச்சட்டம் படைத்துறையில் நீக்ரோக்களுக்கு தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்த முறையை ரத்து செய்தது.

அரசு கொள்கை ரீதியாக இன ஒதுக்கலை எதிர்த்தாலும் சில மாநிலங்கள் இதற்கு எதிராக செயல்பட்டு வந்தன. எனவே நீக்ரோக்களின் குடியிருப்பிற்கெனத் தனி தெருக்களை அமைத்ததோடு அவர்களின் பிள்ளைகளுக்கென தனி பேருந்துகள் விடப்பட்டன. இரயிலில் வெள்ளையர்கள் பயணம் செய்யும் பெட்டிகளில் அமர்ந்து பயணம் செய்யக் கூடாது. விடுதிகள், பூங்காக்கள், பொழுதுபோக்கு இடங்கள் ஆகியவற்றில் நீக்ரோக்களுக்கு தனி இடங்கள் ஒதுக்கப்பட்டன. வெள்ளையர்களின் பண்ணைகளில் 16 மணி நேரம் வேலை வாங்கப்பட்டது. அவர்களுக்கு கூலியாக வாரம் தோறும் 5 படி தானியமும், 4 ராத்தல் பன்றி இறைச்சியும் மட்டும் கொடுக்கப்பட்டன. பண்ணைகளில் வேலை செய்யும் நீக்ரோக்கள் கட்டளையை மீறினால் சவுக்கால் அடிக்கப்பட்டனர். சில மாநிலங்களில் வெள்ளையர்களின் வீட்டு பணிகளை நீக்ரோக்கள் செய்ய வேண்டம். இத்தகைய கொடுஞ்செயல்கள் நடந்து கொண்டேயிருந்தன.

1954ம் ஆண்டு மாண்ட் கோமரி நகரத்தின் வளர்ச்சிக் குழுவின் தலைவராக தெரிவுச் செய்யப்பட்ட மார்டின் லூதர் கிங் நீக்ரோ மக்களின் சிவில் உரிமைகளுக்காக அறவழியில் போவதாக உறுதியளித்தார். இன ஒதுக்கீட்டிற்கு எதிராக செயல்பட இவர் வெள்யைர்களும், நீக்ரோக்களும் தனித்தனிப் பேருந்துகளில் பயணம் செய்வதை வன்மையாக கண்டித்ததோடு முதல் துறையாக **அர்தால்** ஒன்றை நடத்தினர். இந்த அர்தால் பெரும்பான்மை மக்கள் ஆதரவளித்தனர். எனவே இப்போராட்டம் வெற்றி பெற்றது.

இது தொடர்பாக வழக்கு ஒன்றும் தொடரப்பட்டது. இவ்வழக்கை விசாரித்த தலைமை நீதிபதியான **ஏர்ல்வாரன்** வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஒன்றை வழங்கினார். இத்தீர்ப்பு நீக்ரோக்களுக்குப் பல சிவில் உரிமைகளை வழங்கியது. பேருந்துகளிலும், பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் இன ஒதுக்கல் பின்பற்றபப்படுவதை இத்தீர்ப்பு கடுமையாக விமர்சித்தது.

இருப்பினும் பல மாநிலங்கள் நீக்ரோக்களுக்கு சம உரிமைகள் வழங்க மறுத்தன. மாநிலங்களின் இச்செயலை ஜனாதிபதி **ஐசன் ஹோவர்** உட்பட பல தேசிய தலைவர்கள் வன்மையாக கண்டித்தனர். குறிப்பான **ஐசன் ஹோவர்** தனது ஆட்சிக்காலத்தில் அர்கான்வாஸ் மாநிலத்திலுள்ள **லிட்டில்ராக்** என்னுமிடத்திலுள்ள பாடசாலையில் ஆளுநரின் ஆணைக்கு எதிராக செயல்பட்டு வெள்ளை மாணவர்களோடு நீக்ரோ மாணவர்களையும் சேர்த்து அவர்களின்

பாதுகாப்பிற்கு தகுந்த ஏற்பாடுகளையும் செய்தா். இது போன்ற அரசின் தீவிர நடவடிக்கைகளால் ஏராளமான பாடசாலைகளில் இன ஒதுக்கல் முறை ஒழிக்கப்பட்டது.

**தென்மாநில கிருத்துவ தலைவா் மாநாடு**

**மாண்ட்** கோமரி வெற்றிக்குப் பின் இன ஒதுக்கலுக்கெதிரான நடவடிக்கைள் தீவிரப்படுத்தப்பட்டன. 1957ம் ஆண்டு தென்மாநில கிருத்தவ தலைவா் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இம்மாநாடு இனஒதுக்கலை மிக வன்மையாக கண்டித்ததோடு அத்றகெதிராக தீா்மானம் ஒன்றையும் நிறைவேற்றியது. அவ்வமைப்பு அட்லாண்டாவை தலைமையிடமாக கொண்டு செயலாற்றியது.

நீக்ரோக்களின் உரிமைக்காக தென்மாநிலங்களில் பல்வேறு போராட்டங்கள் மாா்டின் லூதா் கிங்கினால் நடத்தப்பட்டன. பலமுறை கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனைப் பெற்றாா். பல இடங்களில் இவரது போராட்டங்களுக்கு எதிராக வெள்யைா்கள் தீவிரவாதத்தில் இறங்கினாலும் மாா்டின் லூதா் தனது அகிம்சை கொள்கையிலிருந்து சிறிதளவும் பின்வாங்கவில்லை.

**ஜாண் கென்னடியும் இன ஒதுக்கீடும்**

கேன்னடியின் ஆட்சிக் காலத்தில் நீக்ரோக்களின் போராட்டங்கள் தொடா்ந்து நடைபெற்றன. சிறிய ஓா்களிலும் பெரும் நகரங்களிலும் இன ஒதுக்கலுக்கெதிரான போராட்டங்கள் வலுவடைந்தன. சம உரிமைக்குரல் அமெரிக்கா முழுவதும் ஒலித்தது. போராட்டங்களை ஒடுக்க சில மாநில அரசுகள் இராணுவத்தை பயன்படுத்தியதோடு சில தகாத முறைகளையும் பின்பற்றின. **1963ம் ஆண்டு பிரிமிஸ்ஹமில்** நீக்ரோக்களால் நடத்தப்பட்ட போராட்டத்தில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதோடு நீக்ரோக்கள் கிருத்துவ ஆலயம் ஒன்றும் குண்டு வைத்து தகா்த்தப்பட்டது. இதில் நான்கு நீக்ரோ சிறுமிகள் மாண்டனா். மாா்டின் லூதா் கிங் உட்பட பல முன்னணி நீக்ரோ தலைவா்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனா். இருப்பினும் நீக்ரோ ஆதரவு கொள்கையைக் கடைபிடித்த கென்னடி இத்தகைய நீக்ரோக்களின் போராட்டங்களும் ஆதரவளித்தாா்.

**வஷிங்டன் பேரணி (1663)**

1950 ம் ஆண்டிற்கு பிறகு நீக்ரோக்களின் தானைத் தலைவனாக விளங்கி பல்வேறு போராட்டங்களில் அவா்களை வழிநடத்திச் சென்ற மாா்டின் லூதா் கிங் 1663ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் நாள் அமெரிக்காவின் தலைநகரம் சிவில் உாி9மைகளைக் காக்க மைய அரசிற்கு எல்லா அதிகாரங்களையும் வழங்க காங்கிரஸ் விரிவான சட்டமொன்றை இயற்ற இப்பேரணி வலியுறுத்தியது. இப்பேரணியில் சுமாா் இரண்டு இலட்சம் நீக்ரோக்கள் கலந்து கொண்டனா். பொதுவாக வெள்ளையா்கள் இப்பேரணியை எதிா்த்ததாலும் நல்லெண்ணம் கொண்ட ஏராளமான வெளட்யைா்களும் நீக்ரோக்களுக்கு ஆதரவாக இப்பேரணியில் கலந்து கொண்டனா். எத்தகைய வன்முறையுயின்றி அறவழியில் நடத்தப்பட்ட இப்போராட்டம் வாஷிங்டன் நகரையே குலுக்கியது. இப்பேரணியின் முடிவில் மாா்டின் லூதா் கிங் ஆற்றிய உரை அனைவரையும் அசர வைத்தது. **"எல்லா மனிதா்களும் ஒன்றுபோல் சமமாக படைக்கப்பட்டவா்கள் என்ற உயா்ந்த இலட்சியத்தை எல்லா அமெரிக்கா்களும் உணரவேண்டும்"** என உரத்த குரலில் முழங்கினாா். அப்போதைய ஜனாதிபதியான ஜாண் கென்னடியைச் சந்தித்து அவா்களிடம் தங்களது நிலைமையை

எடுத்துரைத்தனர். அவர்களது கோரிக்கையை நிறைவேற்றுவதாக அவர்களிடம் உறுதியளித்த கென்னடி 1963ம் ஆண்டு எல்லோருக்கும் பொதுஉரிமை வழங்கும் சட்டத்தைக்கொண்டு வந்தார். ஆனால் முழுமையாக செயல்படுத்துவதற்கு முன் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார்.

**ஜாண்சனும் நீக்ரோ பிரச்சனையும்**

டகன்னடியின் மறைவிற்கு பின் ஆட்சிப் பொறுபப்பேற்ற ஜாண்சன் நீக்ரோ பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயன்றார். இவரது ஆட்சி காலத்திலும நீக்ரோக்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டனர்.குறிப்பாக லாஸ்ஏஞ்சல், கிளிவ்லாந்து, டெட்ராயிட், நெவார்க் ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்த நீக்ரோக்களை அங்கே வாழந்து வந்த வெள்ளையர்கள் கொடுமைப்படுத்தியதோடு அவர்'களின் உடமைகளையும் நிர்மூலமாக்கினார்கள். நீக்ரோ பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். இதை எதிர்த்த நீக்ரோக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

இக்கொடுமையை வன்மையாக நீக்ரோக்கள் எதிர்த்ததோடு இதற்கெதிராக ஆர்ப்பாட்டங்களும் ஆபேரணிகளும் நடத்தப்பட்டன. குறிப்பாக 1965ம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் நாள் லூதர் கிங்கின் தலைமையில் பேரணி ஒன்று நடைபெற்றது. இப்பேரணியில் இறுதியில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் நீக்ரோக்களுக்கு எதிராக செயல்பட்ட வெள்யைர்களை மார்டின் லூதர் கிங் கடுமையாக விமர்சித்தார். இக்கொடுமைகளுக்கு காரணமான வெள்யைர்களை கைது செய்துதக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டம் என அரசை மார்டின் லூதர் கிங் கேட்டுக்கொண்டார்.

**கறுப்பர் தேசியம்**

நீக்ரோக்கள் **கறுப்பர் தேசியம்** என்ற உணர்ச்சியால் உந்தப்பட்டு **கறுப்பர் ஆற்றல்** என்ற வன்முறை கோட்பாட்டை வளர்த்தனர். இவர்கள் முள்ளை முள்ளால் எடுப்பது போல வன்முறையை வன்முறையால் எதிர்க்க துணிவு கொண்டனர். சட்டரீதியாக பெற முயொத சமத்துவ உரிமையைப்' போராடி பெற முடிவுக் கட்டினர்.

**1964ம் ஆண்டு சிவில் உரிமைச் சட்டம் (1964)**

நீக்ரோக்களின் இடைவிடாத போராட்டத்தின் விளைவால் ஜாண்சன் பொது உரிமைச் சட்டத்தை 1964ம் ஆண்டு கொண்டு வந்தார். இச்சட்டம் நீக்ரோக்களுக்கு சம உரிமை வழங்கியது. கல்வி நிறுவனங்களிலும் விடுதிகளிலும் காணப்பட்ட இன ஒதுக்கல் அகற்றப்பட்டன. இதைத்தொடர்ந்து நீக்ரோக்ளுக்கான வாக்குரிமைச் சட்டம் இயற்றப்பட்டன. எனவே நீக்ரோக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டன. நீக்ரோக்களின் உரிமைகளுக்காக தியாகங்கள் பல அனுபவித்த மார்டின் லூதர் கிங் 1968ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ம்' நாள் தனது 39 வது வளதில் இனவெறிப்பிடித்த வெள்ளையன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**நோபல் பரிசு**

காந்தியடிகள் பினபற்றிய நேர்மை, அறநெறி போராட்டங்கள், எளிமையான வாழ்வைப் போன்று வாழ்ந்த மார்டின் லூதர் கிங்கின் முடிவும் காந்தியடிகளைப் போன்றே இருந்ததில் வியப்பில்லை. 1964ம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. 1969ல் சர்வதேந ஒற்றுமைக்கான ஜவஹர்லால் நேரு பரிசும் வழங்கப்பட்டது. இப்பரிசை அவர் சார்பாக அவரது மனைவி திருமதி கொரட்டா பெற்றுக் கொண்டார்.

**நீக்ரோக்களின் இன்றைய நிலை**

நீக்ரோ பிரச்சனை இன்றும் இருந்து கொண்டேதான் இருக்கிறது. சுமார் 200 ஆண்டுகளாக அமெரிக்காவின் தென்மாநிலங்களில் பண்ணை வேளாண்மையின் முதுகெலும்பாக விளங்கி, அம்மாநிலங்களின் பொருளாதார வளத்தை மேன்னைபடத்திய நீக்ரோக்கள் இன்று குருதி கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். இது பாழதாபத்துக்குரியதாக இருக்கிறது. மண்ணின் மைந்தர்களான நீக்ரோக்கள் பல கோடி வெள்ளையர்களைவ ிட முந்தி குடியேறியவர்கள். ஆனால் இன்றும இரண்டாந்தர குடிமகனாக நடத்தப்பட்டு இழிவுப்படுத்தப்படுகிறார்கள். உள்றாட்டில் நீக்ரோக்களின் உரிமைகளைப் பற்றி அமெரிக்கா பேசுவது பொருளற்றதாகப் போய்விடும் என அமெரிக்காஉணர்ந்து தான் இரக்கிறது. இப்பிரச்சனைகளை மனசாட்சியின் அடிப்படையில் மனிதாபிமான முறையில் தான் திர்க்க முடியும். இன்று ஐக்கிய நாட்டு சபையில் ஆப்பிரிக்க நாடகள் அமெரிக்காவை எதிர்ப்பதற்கு முக்கியமான காரணம் அதுவேதான். இனஒதுக்கல் கொள்கையை முற்றிலும் ஒழிக்காதவரை சர்வதேச அரசியரங்கில் அமெரிக்கா தலைநிமிர்ந்து நடக்க இயலாது. நீக்ரொ பிலச்சனை நீடிக்கும் வரை உள்நாட்டில் திடீர் கொநதளிப்புகளும், வெளிநாட்டில் அமெரிக்காவின் நற்பெயருக்கு களங்கமும் நீடிக்கும் என்பதில் எந்தவித கருத்து வேறுபாடுகளும் கிடையாது.

**பெண்களின் விடுதலை இயக்கம்.**

அமெரிக்கப் பெண்களுக்கு ஆராம்பகாலம் முதற்கொண்டு அரசியல் உரிமையோ, நீதிதுறையில் உரிமையோ அளிக்கப்படாமல் இருந்தது. இருப்பினும் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உரிமைகள் பற்றிக் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். ஆனால் பண்டைய வழக்கப்படி பெண்கள் இல்லத்திலேயே இருக்க வேண்டியவர்கள், அரசியல் பற்றி அவர்கள் அறிய வேண்டியதில்லை என்று அமெக்கர்கள் அவர்களுக்கு அரசியல் ரீதியாகவும், அதிகாரம் மூலமாகவும் உரிமைகள் தராமல் புறக்கணித்தனர்.

பெண்கள் மேடைகயில் ஏறிநின்று பேசுவதையே தவறாக அமைரிக்கர்கள் கருதி குறை கூறினர். அதனை மீறி இரு பெண்கள் போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூட்டம் கூட்டினர். திருமதி **லுக்கிரீசியாமேட்**(lucretia mott) மற்றும் **எலிசபெத் காடிஸ்டேன்டன் (Elezeabeth Cady Stanton)**ஆகியோர் 1848ல் நியூயார்க்கிலல் ஒரு மாநட்டை கூட்டி ஆண்களின் கொடுமைக்கு பெண்கள் அடிமையாவதை பற்றி கடுமையாகச் சாடி,ஆண்கள் மீது 18 வயதான குறைபாடுகளை கூறினார். அது முதற்கொண்டு பெண்கள் தங்கள் உரிமைகளை பற்றி வீட்டிலும், வெலியிலும் பேசலாயினர். திருமதி. ஸ்டான்டன் செல்வி குஞ்சன் திருமதி. ஆந்தோணி போன்றோரின் கடும் உழைப்பால் பெண்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டது. திருமணத்திற்கு பிறகு சொத்துரிமை அளிப்பது பற்றி முழு உரிமை தரப்பட்டது.

**பெண்கள் கல்வி**

எம்மா, விலிலர்டு காதரின், பீச்சர் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் கல்வியில் வளர்ச்சி காணப்பட்டது. 1837ல் **மேரிலையான்** என்பவர் முதலாவது பெண்கள் கல்லூரியை **மவுண்ட் ஹோலியோக்கில்** தறந்து வழைத்தார். அதுபோல 1834ல் **ஏபர்லின் கல்லூரியையும்** பெண்கள் கல்லூரியாகவே ஆரம்பித்து நடத்தினார். 1853ல் **ஆண்டியோச் கல்லூரி** ஆண்களும், பெண்களும் சேர்ந்து பயிலும் கல்லூரியாக இருந்தது.

**பெண் எழுத்தாளர்கள்**

பெண்கள் எழுத்தாளர்களாகவும் திகழ்ந்தார்க். மார்க்கிரெட் புல்லர் (Margaret Fuller) லிடியா மரியா சைல்டு (Lydia Maria Child) சாரா ஜோசப் ஹலே (Sarah Joseph Hale) போன்றோர் மிகச் சிறந்த பத்திரிக்கையாளராகவும், பத்திரிக்கை தணிக்கையாளர்களாகவும் இருந்தனர். 1849ல் தான் முழு தகுதிபெற்ற பெண் டாக்ராக எலிசபெத் பிளாக்வெல் (Elzabeth Black Well) என்பவர் உருவானார். 1853ல் அண்டாய்ன்ட் பிரவுன் என்ற பெண் அமெரிக்காவின் முதல் பெண் அமைச்சர்களாக பொறுப்பேற்றார்.

**தேசிய அமெரிக்க பெண்கள் வாக்குரிமை சங்கம்**

(NATIONAI AMERICAN WOMEN SUFFRAGE ASSOCIATION)

பேண்கள் இயக்கம் 1890க்கு பின் தீவிரம் அடைந்தது. அதற்கு முக்கிய காரணம் தேசிய அமெரிக்க பெண்கள் வாக்குரிமை சங்கம் (National American Women Auffrage Association) ஆரம்பிக்கப்பட்டதேயாகும். இதன்மூலம் பெண்கள் உரிமையுடன் தங்கள் அரசியல் உரிமைகளை தட்டிக் கேட்க ஆரம்பித்தனர்.

1914ல் எட்டு அமெரிக்க மாநிலங்கள் பெண்களுக்கு வாக்குாஜமை அளித்தன. 1920 ஜீன் 19வது அரசியல் திருத்தம் நிறைவேற்றப்பட்:டு ஆகஸ்ட் 26ல் அரசியல் அமைப்பில் அகு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி ஆண், பெண் இருபாலருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டது. இது அரசியல் அமைப்பு சட்டத்தை நிறைவேற்றுவதில் காங்கிரசிற்கு முழு அதிகாரம் அளிக்கப்படுகிறது என்று 19வது அரசியலமைப்பு பிரிவு அமைக்கப்பட்டது.

**விபச்சாரம் - புகைப்பிடிப்பு – ஆடை- நீதி**

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெண்களுகுரிய சமத்துவம், உரிமை மிக அதிக சட்டரீதியாக அளிக்கப்பட்டதை விட, சமுதாயத்தில் வெளிப்படையாகவே அளிக்கப்'பட்டது. பெண்களில் நடத்தை கெட்ட பெண்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டவர்களும் வேறுபாடு கருதாது நடத்தப்பட்டனர். பொதுவாக பெண்கள் புகைபிடிக்கக்கூடாது என்று இருந்த நிலைமாறி பெண்கள் பொது இடங்களிலும் புகைப்பிடிக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டது. அதுபோல 1928ல் பெண்களின் ஆடையின் அளவு 60 சதவீதம் அளவு குறைக்க அனுமதிக்கப்பட்டது. ஒழுக்கத்தில் இருபாலரும் ஒரே நிலையாக நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இத்தகைய புரட்சி ஐரோப்பிய எழுத்தாளர்களால் அறிவியல் பூர்வமாக எழுதப்பட்டது. இதைபோன்று உரிமைகள் வழங்கப்பட்டன.

**இல்வாழ்க்கை – கருச்சிதைவு – திருமணவிலக்கு**

1940ல் பெண்களுக்கு சமத்துவ உரிமைகள் வழங்கப்பட்டன. திருமணங்கள் அவ்களின் விருப்பப்படி நடக்க உரிமைகள் தரப்பட்டன. திருமண விலக்கு அளிக்க வழி செய்யப்பட்டது. குழந்தைகள் பெற்று எடுக்க அளவும் குறைத்துக் கொள்ளப்பட்டது. கருச்சிதைவும் கவலைப்படாமல் நடத்தப்பட்டது. பொதுவாக இல்வாழ்க்கையில் எந்தவித இடர்பாடும் இருபாலர்'களுக்கும் இருக்க கூடாது என்று கவனமாக கருதப்பட்டது.

திருமண விலக்கு பெறுவதற்கு பெண்களுக்கு உரிமை தரப்பட்டதன் விளைவாக ஒவ்வொரு ஆயிரம் பேர்களுக்கும் 0.7 என்ற திருமண விலக்கு விகிதம் 1900ல் இருந்த நிலை மாறி 1949ல் 2.9 என்ற அளவில் உயாந்தது. பொதுவாக ஒருவர் பல பெண்களை திருமணம் செய்து கொண்டனர். 1946ம் ஆண்டில் பல திருமண விலக்கு வழக்குகள் நீதிமன்றம் வந்தன. 1940-50 ஆண்டுகளில் நடைபெற்ற நான்கு திருமணங்களில் ஒரு திருமணம் திருமண விலக்கில் முடிந்தது.

**குடும்பக் கட்டுப்பாடு**

குடும்ப கட்டுப்பாடுமுறையை கத்தோலிக்கர் அல்லாதவர் ஏற்றுக் கொண்ட போதிலும் கத்தோலிக்கர்கள் அதனை ஒரு பாவமாகவே கருதி அதற்கு இணங்க மறுத்தனர். குடும்பக் கட்டுப்பாடு 1910ல் 100க்கு 27 பேர்கள் என இருந்தது. 1920-30 ஆண்டுகளில் அது 16.9 என்ற குறைந்து மீண்டும் 1945ம் ஆண்டுகளில் அது 25.8 என்ற விகிதத்திற்கு உயாந்தது. குறிப்பாக கிராமத்தில் வாழ்ந்த அமெரிக்கர்கள் அதிகம் குழந்தைகள் பெறுவதையே விரும்பினர்.

பேண்கள் ஆண்களைவ ிட அதிக நாட்கள் வாழ்ந்தனர். 1969-72 ஆண்டுகளில் சராசபரியாக 72.3 ஆண்டுகள் வரை பெண்கள் உயிருடன் வாழ்ந்தனர். ஆனால் ஆண்களுக்கு 63.9 வயது சராசரி என கணக்கிடப்பட்டது. அதுபோல குற்ற வழக்கிலும் 1980ம் ஆண்டு கணக்குப்படி

| | பெண்கள் | ஆஆண்கள் |
|---|---|---|
| திருட்டு | 409 | 873 |
| வன்முறை | 462 | 1346 |
| கற்பழிப்பு | 149 | 23 |

காவல்துறையிலும் பெண்கள் ஈடுபட்டனர். இருப்பினும் அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. நீதித்துறையில் 1980ல் 17% நீதிபதிகளும் 14% வக்கீல்களாகவும் பெண்கள் இருந்தனர்.

பெண்களுக்கு திருமண விலக்கு அளிக்க வழி செய்யப்பட்டது. பெண்கிளல் எந்த உணர் குடியினராயினும் மறுமணம் செய்ய உரிமையும் திருமண விலக்கும் அளிக்கப்பட்டது. கென்னடி மனைவி ஜாக்குலின் அவரது மறைவிற்கு பின் திருமணம் செய்து கொணடார். அது போல ஜனாதிபதி ரீகனும் திருமண விலக்கு செய்த நான்சியை மறுமணம் செய்தார். அவரது முதல் மனைவியும் வேறோலுவரை திருமணம் செய்து கொண்டார்.

1966ல் அனைத்து பெண்கிளனி இயக்கங்களை இணைத்து தேசிய இயக்கத்ததை பீரிடன் என்ற பெண் தோற்றுவித்து அமெரிக்காவில் வாழும் அனைத்து பெண்களுக்கும் அமெரிக்காவில் வாழும் ஆண்களுக்கு உள்ள உரிமைகளைப் போல் அனைத்திலும் இருக்க வேண்டும் என்ற குரல் எழுப்பினர்.

1971ல் பெண்களின் தேசிய இயக்கத்தில் 15000 பெண்கள் உறுப்பின8ராக இருந்தனர். மேலும் பல பெண் எழுரத்தாளர்கள் கடுமையாக ஆண்களின் ஆதிக்கத்தை விமர்சனம் செய்தனர். காடேமில்லத் என்பரின் Sexual Politics

1969 என்ற நூலின் பீரிடன் கூறியது போல் சம உரிமை பெறுவதை விட ஆண் இனத்தின் அடக்கு முறையை அழித்துவிட்டு தீவிரமான முறையில் பெண்கள் வலிமை பெற வேண்டும்.

இதற்கு பெண்கள் ஒன்று கூட வேண்டும் என்றார். அதுபோல ஷீலாமித் பயாஸ்டோன் என்பவரின் The Dialetic of Sex- 1970 என்ற நூலில் பெண்களின் புபுரட்சிப் பற்றி விளக்கப்பட்டது.

பேண்கள் திரைப்படம் இயக்கினர் நடித்தனர், விடுதிகள் நடத்தினர் ஏன் இராணுவத்திலும் பணிபுரியும் நிலைக்கு உயர்ந்தனர்.

## லிண்டன் ஜாண்சன்

**வாழ்க்கை குறிப்பு**

லிண்டன் B. ஜாண்சன் (Lindon Baines Johnson) டெக்சாஸ் மாநிலத்தில் ஒரு வேளாண்மை குடும்பத்தில் பிறந்தவர். இளம் வயதில் ஆரம்பக் கல்வியை பயின்ற இவர் பின் ஆசிரியர் பயிற்சி பெற்று ஆவிரியர் பணியில் சேர்'ந்தார். 1930க்குப்பின் அரசியலில் நுழைந்தார். 1938ல் அமெரிக்க கீழ் சபையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 1948 செனட் உறுப்பினரானார். 1960 தேர்தலில் ஜாண் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்ட இரண்டு மணி நேரத்திற்குள் அவர் வந்த ஜெட் விமானம் ஒன்றில் இயக்க அறையிலே அமெரிக்க ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். இவர் ஜனறாயக கட்சியின் சார்பாக குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடக்கப்பட்டவர். 1964ம் ஆண்டு நடந்த குடியரசு தலைவர் தேர்தலில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**உள்நாட்டுக் கொள்கை**

கென்னடி திடீரென கொலை செய்யப்பட்டதால் அவரது திட்டங்கள் முழுமையாக முடியவிவ்லை. எனவே கென்னடி விட்டுச் சென்ற கொள்கைகளைத் தான் செயல்படுத்தப் போவதாக ஜாண்சன் அறிவித்தார். அமெரிக்க மக்கள் அனைவரும் பயன்பெறும் வண்ணம் சிறந்த சமூகநலத் திட்டங்களை அமுல்படுத்த போவதாக அறிவித்தார்.

**தேசிய மகளிர் அமைப்பு**

ஆமெரிக்க சமுதாயத்தில் பெண்கள் பின்தங்கிய நிலையில் இருந்தார்கள். பெண்கள் ஆண்களுக்கு சமமாக நடத்தப்படவில்லை. எனவே பெண்கள் தங்களது உரிமைகளைப் பெற பல்வேறு இயக்கங்களை ஆரம்பித்தார்கள். அவற்றுள் பெட்டி பிரிட்டன் என்பவர் அமைத்த **தேசிய மகளிர் அமைப்பு** பெண்களின் உரிமைகளுக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தியது. இப்போராட்டத்தின் விளைவால் அரசு பெண்களுக்கு பலிவேறு உரிமைகளை வழங்க முன்வந்தது.

**வறுமை ஒழிப்புத் திட்டம்**

அமெரிக்காவில் வாழ்ந்த நலிவுற்ற வறுமையில் வாடினர். வறுமையை ஒழிப்பதில் முனைப்புடன் செயல்பட ஜாண்சன் பல்வேறு திட்டங்களை வெளியட்டார். இதற்கென சட்டம் ஒன்றையும் அமெரிக்க காங்கிலஸ் மூலம் நிறைவேற்றினார். 100 கோடி டாலர் இதற்கென ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்ற அனைத்து பிரிவுகளை சார்ந்த பிரதிநிதிகள் அடங்கிய ஒரு அமைப்பை உருவாக்கினார்.இந்த அமைப்பின் துணையுடன் செவ்வனே இத்திட்டத்தை செயல்படுத்தினார். வணிகத்திற்கு தடையாக இருந்த வரிகள் அகற்றப்பட்டது. புதிய தொழில்

ஆரம்பிக்க அரசு உதவியதுஇ வணிக, தொழில் வளாச்சிக்கு இவா் காட்டிய அக்கரையாய் வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவு குறைந்தது.

**கல்வி வளர்ச்சி**

சமுதாய வளர்ச்சிக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணா்ந்த ஜாண்சன் அதன் ஆமம்பாட்டிற்காக **"கல்வி சீரமைப்பு திட்டம்"** ஒன்றை உருவாக்கி அதற்கு காங்கிரசின் அனுமதியையும் பெற்றாா். அதற்கென ஒரு பெரும் தொகையை செலவு செய்தாா். அமெரிக்காவில் பெரும்பான்மை கல்வி நிலையங்கள் அரசின் கட்டுப்பாடின்றி இயங்கியது. இதை மாற்ற எண்ணிய ஜாண்சன், நகர, கிராம பகுதிகளில் காணப்பட்ட ஆரம்ப பள்ளிகளை அரசின் கட்டுபாட்டின் கீழ் கொண்டு வந்து, அவற்றிற்கு தேவையான நிதி உதவியும் வழங்கினாா். குறிப்பாக 1964ம் ஆண்டு 500 கோடி டாலா்களும் 1967ம் ஆண்டு கோடி டாலா்களும் அரசு ஒதுக்கியது. எனவே கல்வித்துறை சீரடைந்தது.

**சமூக நலத்திட்டங்கள்**

முதியோா் நலனுக்கென மருத்துவமனைகளும், முதியோா் இல்லங்களும் நாடெங்கிலும் அரசு செலவில் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டத்தின் வாயிலாக 65 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற 19 மில்லியன் முதியவா்கள் மறுவாழ்வு பெற்றனா். நாட்டின் பல்வேறு பகுதிகளில் அரசு இலவச மருத்துவமனைகளைத் துவக்கியது. இத்திட்டத்தின் சுமாா் ஒரு கோடி ஏழைகள் பயன்பெற்றனா். பணம் சோ்ப்பதையே நோக்கமாக கொண்டு செயல்பட்டு வந்த தனியாா் மமருத்துவமனைகள் பல ரத்து செய்யப்பட்டன.

**நீக்ரோ பிரச்சனை**

சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்த நீக்ரோக்களின் நிலையை மேம்படுத்த எண்ணிய ஜாண்சன் 1964ம் ஆண்டு **சிவில் உரிமை சட்டம்** ஒன்றை நடைமுறைக்கு கொண்டு வந்தாா். இச்சட்டம் பெயரளவில் தான் நீக்ரோக்களுக்கு சம உரிமைகள் அளித்ததே தவிர நடைமுறையில் அவா்களுக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்தது. எனவே ஆத்திரம் அடைந்த நீக்ரோக்கள் தங்கள் எதிா்ப்பை காண்பிக்க **அலாபாமா** மாநிலத்திலுள்ள செல்மா என்ற நகரிலிருந்த **மான்கோமாலிக்கு** மாா்டின் லூதா்கிங் தலைமையில் **நடைபயணம்** ஒனட்றை மேற்கொண்டாா். இந்த நடைபயணத்திற்கு அரசு கடும் எதிா்ப்பை தெரிவித்தது. மாா்டின் லூதா் உட்பட சடைபயணத்தை மேற்கொண்ட ஆயிரக்கணக்கான நீக்ரோக்கள் கைது செய்யப்பட்டனா். தங்களது உணா்வை வெளிப்படுத்த மீண்டும் பயணத்தை தொடங்கப்போவதாக மாா்டின் லூதா் கிங் அறிவித்தாா். இதை மாநில ஆளுநா் எதிா்த்தால், இவ்விவகாரத்தில் ஜாண்சன் தலையிட்டு நடைபயணம் நடத்துவதற்கு அனுமதி வழங்கியதோடு போதிய பாதுகாப்பும் அளித்தாா்.

ஜாண்சன் கடுமையான ந்வடிக்கைகளால்' நீக்ரோக்கள் சில சிவில் உரிமைகளை பெற முடிந்தது. மாா்டின் லூதா் கிங் இவா் காலத்தில்தானட் கொலை செய்யப்பட்டாா் என்பது குறிப்பிடத்தக்கது.

**வெளிநாட்டு கொள்கை**

**டொமிளனிக்கன் குடியரசில் தலையிடுதல்**

டொமினிக்கள்குடியரசை ஆட்சிபுரிந்து வந்த அமெரிக்கா ஆதரவாளரான **ட்ருஜில்லோ** 1961ம் ஆண்டு காலமானார். ஆவரை அடுத்த இராணுவ அதிகாரி **ஜீவள்பார்ச்** ஆட்சியை கைப்பற்றினார். அமைரிக்காவிற்கு எதிரான கொள்கையை கடைபிடித்த இவர் பல்வேறு சீாதிருத்தஙகளை அமெரிக்காவிற்கு எதிரான கொள்கையை கடைபிடித்த இவர் பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்தார். இச்சீர்திருத்தங்களை அமெரிக்கா வன்மையாக கண்டித்தது. ஆமலும் ஜீவன் பார்ச்சின் ஆட்சியை கவிழ்ப்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டது. அமெரிக்காவின் இச்செயலை டொமினிக்கன் மக்கள் எதிர்த்ததோடு அமெரிக்காவிற்கு எதிராக கலகத்திலும் ஈடூாட்டனர். கலகத்தை அடக்க 20,000 பேர் கொண்ட படையை ஜாண்சன் இங்கு அனுப்பி வைத்தார். நிலைமை கட்டுக்கடங்காமல போகவே மற்ற லத்தீன் அமெரிக்க நாடுகள் டொமினிக்கன் விவகாரத்தில் தலையிட்டு உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தியது. அதன்படி மீண்டும் தேர்தல் நடந்தது. 1965ம் ஆண்டு நடைபெற்ற இத்தேர்தலில் **பாலகுவார்** என்பவர் தேர்வு செய்யப்பட்டார். இத்தேர்தலுக்குப் பின் அங்கு அமைதி நிலவியது. எனவே அமெரிக்கா தனது படையை திரும்ப அழைத்தது.

**வியட்நாம் போர்**

ஜாண்சன் ஆட்சிக் காலத்தில் கம்யூனிஸ்ட்களின் ஆதிக்கம் வியட்நாமில் பெருகியது. கும்யூனிஸ்ட்களின் ஆதிக்கத்தை முறியடிக்க தென்வியட்நாமிற்கு ஆதரவாக போரில் தீவிரமாக போரிட எண்ணினார். ஜாண்சனுக்கு அமெரிகிக காங்கிலஸ் ஆதரவு கொடுத்தது. 1960ம் ஆண்டு டோக்கின் வளைகுடா பகுதியில் அமெரிக்க படையும் வடவியட்நாம் சார்பாக கம்யூனிஸ்ட் படையும் மோதின. இப்போரில் இரண்டு அமெரிக்க போர் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இதனால் ஜாண்சன் போரை மீவிரப்படுத்த அமெரிக்க படைபலத்தை வியட்நாமில் பெருக்கினார். 1965ல் 2,00,000 ஆக இருந்த அமெரிக்க படை 1966ல் 3,80,000 ஆகவும் 1967ல் மூ,00,000 ஆகவும் உயர்ந்து கொண்டே சென்றது. இப்போரில் 44,000 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர். எனினும் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தை தடுக்க முடியவில்லை.

வியட்நாம் போர் அமெரிக்காவில் கடும் கண்டனத்திற்கு உள்ளானது. ஆரசியல்வாதிகள் மட்டுமின்றி அறிஞர்களும், மாணவர்களும் கண்டித்தனர். நாட்டின் பணமும், படையும் காலணமின்றி பாழடிக்கப்படுவதாக கூறினர். இதனால் ஜாண்சனின் செல்வாக்கு கடுமையாக பாதித்தது. எனவே 1968 மார்ச்சில் அவர் குண்டு வீச்சை நிறுத்த போவதாகவும் வடவியட்நாமியருடன் அமைதி பேச்சை தொடங்க போவதாகவும் மீண்டும் குடியரசு தலைவர் தேர்தலில் நிறக போவதில்லை எனவும் அறிவித்தார்.

இவ்வாண்டு மே மாதம் பாரீசில் இருதரப்பினரிடையே அமைதி பேச்சுவார்த்தை தொடங்கியது. பேச்சுவார்த்தையும் நீடித்துக் கொண்டே சென்றது.

**மதிப்பீடு**

**மக்களின்** நலனில் அதிக அக்கறை கொண்ட ஜாண்சன் பல்வேறு நலத்திட்டங்களை அமுல்படுத்தினார். நீக்ரோக்களின் உரிமையை நிலைநாட்டவும் நலிவுந்நோரின் புனரமைப்பிற்காகவும் மக்கள் நலத்திட்டங்கள் பல அறிவித்தார். ஆனால் இத்திட்டங்கள் யாவும் முழுமையாக வெற்றிப் பெறவில்லை. அதேபோன்று அவரது வெளிநாட்டு கொள்கைகளும் அவருக்கு நல்ல பெயரைத் தேடிக் கொடுக்கவில்லை. வியட்நாம் போரில் அவர் பெற்ற தோல்வி

அவரது பிற சாதனைகளை அடியோடு மறைத்துவிட்டது. இதுவரை வேறு எந்த தலைவரும் பெற்றிராத 62% வாக்குகள் பெ்று அமோக வெற்றிபெற்ற ஜாண்சன் மறுதேர்தலில் நிற்கமாட்டடேன் என்று பகிரங்கமாக முன்னதாகவே அறிக்கை விட்டது அவரதுசெல்வாக்கு சரிவை அவர் புரிந்து கொண்டதையே காட்டுகிறது.

## நிக்சனும் வியட்நாம் போரும்

**வாழ்க்கை குறிப்பு**

ரிச்சர்டு நிக்சன் 19123ல் கலிபோர்னியாவில் பிரான்சிஸ் நிக்சனுக்கு ஹனாயில் ஹவஸ் ஈகியோருக்கும் மகனாக பிறந்தார். பள்ளி படிப்பை முடித்த நிக்சன் கரலிபோர்னியா கல்லூரியில் உயர்கல்வி பயின்றார். 1937ம் ஆண்டு சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரானார். இவர் 1940ம் ஆண்டு பெட்ரீஷியராய் என்ற பெண்ணை மணந்து கொண்டார். இரண்டாம் உலகப்போரின் போது தனது வழக்கறிஞர் தொழிலை தற்காலிகமாக நிறுத்தி வைத்து விட்டு இராணுவத்தில் பணிபுரிந்தார். இரண்டாம் உலகப்போர் முடிந்ததும் அரசியலில் தீவிரமாக ஆடுபட்டார். குடியரசு கட்சி சார்பாக 1946ம் ஆண்டு மக்களவைக்கும், 1949ம் ஆண்டு செனட் சபைக்கும் 1953 முதல் 1961 வரை துணை ஜனாதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1968ம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால் இவர் மீது சாட்டப்பட்ட வாட்டர்கேட் ஊழல் குற்றச் சாட்டு காரணமாக 1974ல் ஜனாதிபதி பதவியை இராஜினமா செய்தார்.

**வியட்நாம் பிரச்சனை**

ஜாண்சன் அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட வியட்நாம் போர் உச்சநிலையை அடைந்திரந்தது. இதனால் அமெரிக்க நாட்டிற்கு மிக அதிகமான இழப்புகள் ஏற்பட்டிருந்தன.

வியட்நாம் வடவியட்நாம் என்றும் தென்வியட்நாம் என்றும் இரண்டு பிரிவுகளாக பிரிந்து இருந்தது. வடவியட்நாம் பொது உடைமையை பின்பற்றியது. சீனா இரத ஆதரித்தது. இந்த நேரத்தில் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்திலருந்து வடவியட்நாம் தாராள மக்களாட்சி கொள்கையை பின்பற்றிய தென்வியட்நாம் மீது படையெடுத்தது. அமெரிக்கா தென்வியட்நாம் மீது படையெடுத்தது. அமெரிக்கா தென்வியட்நாமை ஆதரித்ததோடு தனது நாட்டு படையையும் அனுப்பி ஆதரவு கொடுத்தது. அதே நேரத்தில் 1949ல் உதயமான மா-சே-துங் தலைமையிலான கம்யூனிசட் சீனாவை அமெரிக்கா தனது முதல் எதிரியாக கருதியது. அதோடு வடவியட்நாமில் சீனா தலையிடுவதையும் அமெரிக்கா கண்டித்தது. மா-சே-துங்கின் கம்யூனிஸ்ட் சீனாவை அங்கீகரிக்கவும் மறுத்தது. அதே நேரத்தில் 1968ல் தேர்தலுக்கு வந்தது. இதில் ஜனாதிபதி பதவிக்கு நிக்சன் போட்டியிடும் போது “நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் வியட்நாம் போருக்கு ஒரு முடிவுகட்டுவேன்” என்று சுறியதை மக்கள் நம்பி அவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்தார்கள்.

வியட்நாம் போரில் அமெரிக்கா ஆடுபடுவதற்கு அமெரிக்காவில் பெரிஜய எதிர்ப்பு கிளம்பியது. நிக்சன் பதவி ஏற்றதும் அப்பிரச்சனையை தீர்க்க திட்டம் ஒன்றை சமர்ப்பித்தார்.

அத்திட்டம் 1969லிருந்து பாரீசில் நடைபெற்று வந்த அமைதி பேச்சு வார்த்தை குழுவினரால் பரிசீலிக்கப்பட்டது.

**அமெரிக்க படையின் அழிவு**

1965 பெப்ரவரியில் குறைவான அமெரிக்க படைவீரகளே அனுப்பப்பட்டவர். ஆனால் 1969ல் ஏறத்தாழ ஐந்து லட்சம் அமெரிக்க வீரர்கள் வியட்நாம் போரில் ஈடுபட்டிருந்தனர். வியட்நாமின் அடர்ந்த காடுகளுக்குள் அவர்களால் சரியாக போரிட முடியவில்லை. 1969ம் ஆண்டு இறுதியில் எடுக்கப்பட்ட கணக்குப்படி ஏறத்தாழ 29,000 அமெரிக்க வீரர்கள் காணமடைந்திருந்தனர். இப்போரில் அமெரிக்கப் படை பிரிவினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அமெரிக்காவிற்கு ஏற்பட்ட உயிரிழப்பையும் பொருள் இழப்பையும் கண்ட அமெரிக்க மக்கள் வியட்நாம் போரை எதிர்த்தனர்.

**பாரீசில் அமைதி பேச்சு**

நிகசனின் திட்டம் பாரீசில் 1969ம் ஆண்டு பரிசீலிக்கப்பட்டது. படிப்படியாக திருப்பி அழைத்தார். இந்நிலையில் 1970ம் ஆண்டு வியட்நாமின் பக்கத்து நாடான கம்போடியாவில் அரசியல் புரட்சி ஏற்பட்டது. இராணுவ தளபதி லன்னொல் என்பவர் ஆட்சியை கைப்பற்றினார். புதிய ஆட்சியின் சாதகமாக சூழ்நிலையை பயன்படுத்திகம்போடியாவில் வடவியட்நாம் படைகள் அமைத்திருந்த பதுங்கு குழிகளையும் ரகசிய வழிகளையும் அளிக்கும் பொருட்டு நிக்சன் அங்கு படை ஒன்றை அனுப்பினார். வியட்நாம் போர் கம்போடியாவிற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்று அறிந்த அமெரிக்கர்கள் ஆத்திரம் அடைந்தனர். இதனால் செனட் சபை நிக்சனின் கம்போடிய படையெடுப்பைக் க்ணடித்தது. அடுத்த ஆண்டு 1971லும் இதேபோன்று லாவோஸ் என்ற நடுநிலை நாட்டில் வடவியட்நாம் அமைத்திருந்த படை முகாம்களை அழிக்க நிக்சன் அராணுவத்தை அனுப்பினார்.

இந்த நிகழ்ச்சிகள் பாரீசிஸ் அமைதி பேச்சுக்களை பாதித்தன. குண்டு வீச்சை நிறுத்தி அமெரிக்க படை முழுவதையும் தென்வியட்நாமிலிருந்து அழைக்கப்பட்டால் தான் பேச்சுவார்த்தைக்கு சம்மதிப்போம் என்று கம்யூனிஸ்ட்டுகள் (பொது உடைமை கட்சியை சார்ந்தவர்கள்) நிபந்தனை விதித்தனர். அதேப்போல் தென்வியட்நாம் மீது தாக்குதல் தொடுக்க மாட்டோம் என கம்யூனிஸ்ட்டுகள் உறுதிமொழி அளித்தால் தான் படைகளை வாப்பஸ் பெறுவோம் என நிக்சன் அறிவித்தார். எனவே பேச்சு வார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

இதற்கிடையில் அமெரிக்க வெளிஉறவு செயலாளர் **கிஸ்ஸிங்கர் பாரீசிற்கு** சென்று முட்டுக்கட்டையை அகற்றி பேச்சு வார்த்தைகளுக்கு வழிவகுத்தார். இறுதியில் 1973ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் நாள் உடன்பாடு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து போர் நிறுத்தம் ஏற்பட்டது. அமெரிக்க படைகள் அனைத்தும் திரும்ப அழைக்கப்பட்டன.

இவ்வாறு அமெரிக்காவியட்நாம் சிக்கலிலிருந்த தன்னை முற்றிலும் விடுவித்துக் கொண்டது. அமெரிக்க மக்கள் வியட்நாம் போரின் பயங்கரத்தை மறக்க முடியாத அளவிற்கு அது ஒரு தோல்வி பாடமாக அமைந்தது.

## நிக்சனும் வாட்டர் கேட் ஊழலும்

நிக்சனின் ஆட்சி காலத்தில் நிகழ்ந்த ஒரு முக்கியமான நிகழ்ச்சி வாட்டர் கேட் ஊழலாகும். இது இவரது இரண்டாவது பதவி காலத்தில் (1972) நடைபெற்றது. நிக்சன் தனது வெளிநாட்டுக் உச்சநிலையில் இருந்த பொழுது இவ்வூழல் அம்பலமான்து. இதுவரை எந்த அமெரிக்க குடியரசுத் தலைவரும் செய்யாத ஊழலையும், செய்யக் கூடாததைசெய்ததாலும் பதிவி விலகிய முதல் ஜனாதிபதி நிக்சன் அவர்களே.

**வாட்டர் கேட்** என்பது வாஷிங்டன் நகரில் உள்ள ஜனநாயக கட்சியின் தலைமை செயலாகம் ஆகும். இது பல அடுக்கு மாடிகளை கொண்டது. இங்கு ஜனநாயக கட்சியின் தேசியக்குழு செயல்பட்டு வந்தது. 1972ம் ஆண்டு அமெரிக்க குடியரசு தலைவர் தேர்தலின் போது அக்கட்சியின் தேர்தல் அலுவலபமாக செயல்பட்டது. நிக்சன் குடியரசு கட்சியின் சார்பாக தேர்தலில் போட்டியிட்டார். ஜனநாயக கட்சயின் சார்பாக **மக்கவர்ன்** போட்டியிட்டார். தேர்தலில் தீவரமாக ஈடுபட்ட நிக்சன் தனது தேர்தல் வேலைகளை கவனிக்க கிரீப் (Creep) என்ற **"தேர்வுக்குழு"**ஒன்றை அமைத்திருந்தார். இக்குழு நிக்சனை தேர்தலில் வெற்றியடைய செய்ய பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டது.

**சதி திட்டம்**

ஜனநாயக கட்சியின் நிக்சனை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமெனமுனைப்புடன் தேர்தல் பணியில் ஈடுபட்டனர். எனவே குடியரசு கட்சியைச் சார்ந்த நிக்சன் ஆதாரவாளர்கள் தேர்தலில் வெற்றி பெற பல தகாத வழிமுறைகளை பின்பற்றினர். இக்குழுவை சார்தவர்கள் ஜனநாயக கட்சியினர் தேர்தலில் பின்பற்றும் திட்டங்கள் பற்றி தகாத முறையில் தெரிந்து கொள்ள உளவு பார்க்கும் பணியில் இறங்கினர். இதற்கென ரகசிய திட்டம் ஒன்றை தீட்டி அதை இரசிகயமாகச் செயல்படுத்த சுமார் 60 மில்லியன் டாலர்களைச் செலவிட்டார். எதிர்கட்சியின் தேர்தல் வேலைகளை உடனுக்குடன் அறிய தொலைபேசி கருவியும், புகைப்படக் கருவியும் அவர்கிளின் தோதல் அலுவகத்தில் பொருத்தப்பட்டது. ஜனநாயக கட்சியின் பேசும் பேச்சுக்கள் அனைத்தையும் குடியரசு கட்சியின் அலுவலகத்திலிருந்து கேட்டு அதற்கு ஏற்றவாறு குடியரசு கட்சியின் தேர்தல் வேலைகளை செய்து வந்தார். இத்தகைய செயலில் ஈடுப்பட்ட ஐந்து பேர் 1972ம் ஆண்டு ஜுன் மாதம் 17ம் நான் பிடிபட்டனர்.அவர்கள் மீது நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

தேர்தல் பிரச்சாரத்தின் போது ஜனநாயக கட்சியினர் நிக்சனின் ஆதரவாளர்களின் இந்த முறைகேடான செயலைச் சுட்டிக் காட்டினர். ஆனால் நிக்சனும் அவரது ஆதரவாளர்களும் தங்களுக்கு இது ஒன்றும் தெரியாது என்று கூறி அதனை அலட்சியப்படுத்தினர். தேர்தல் முடிவற்றது. நிக்சன் அமோக வெற்றி பெற்றார்.

இச்செயலுக்கு அப்பொழுது அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஆனால் தேர்தலுக்குப் பின் பத்திரிகைகளும், பொது அமைப்புகளும் இச்செயலை கடுமையாக விமர்சித்ததோடு, தகாத முறையில் நிக்சன் தேர்தலில் வெற்றி பெற்றார் என மக்களிடையே செய்திகளைப் பரப்பின. மிகக்குறுகிய காலத்திற்குள் இது ஒரு முக்கிய அரசியல் பிரச்சனையாக

மாறியது. “இச்செயலுக்கும் தனக்கும் எத்தகையத் தொடர்பும் இல்லை” என நிகசன் தனது அதிகாரத்தை பயன்படுத்தி மறுத்து வந்தார்.

தேர்தலுக்கு பின் வாட்டர் கேட் முறைகேடு பற்றிய நீதி நிசாரணை **கொலம்பியா**மாவட்ட நீதிபதி **ஜான். ஜே. சிரிகா** முன்னிலையில்நடைபெற்றது. அப்போது பல உண்மைகள் வெளிவரலாயின. அவற்றை வெளிக்கொணர்வதில் அமைரிக்கச் செயல்தாள்கள் அதிக அர்வம் காதட்டின. **ஆண்டர்சன்** என்பவர் செய்தி தாள்களில் எழுதிய கட்டுரைகள் பெரும் பரபரப்பூட்டின.

வாட்டர்கேட் ஊழலில் பிடிப்பட்ட **ஜேம்ஸ்மக்கார்ட்** என்ற நபர் நிக்சனின் பிரச்சாரக் குழுவோடு (Creep) நெருங்கிய தொடர்பு கொண்டவர். கைது செய்யப்பட்ட மற்றொருவர் நிக்சனின் கட்சிக்கு 114000 டாலர் நன்கொடை அளித்தவர். நிக்சன் உட்பட வெள்ளை மாளிகை உயர் அலுவர்கள் பலர் இதில் சம்மந்தப்பட்டிருப்பத விசாரணையின் போது தெரிய வந்தது.

உடனே செனட் சபை வாட்டர்கேட் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய ஏழுபேர் கொண்ட ஒரு குழுவை நியுமித்தது. இக்குழுவை வெளடளைமாளிகை அலுவலாடகளை அழைத்து விசாரிக்க முடிவு செய்தது. நிக்சன் முதலில் ஆட்சித்துறை அதிகாரிகள் செனட் முன் சாட்சியம் அளிப்பது மறையாகாகது என்றார். அதற்கு நாடெங்கும் எதிர்ப்பு கிளம்பியதால் பின்னர் தம் அதிகாரிகளை சாட்சி சொல்ல அனுமதித்தார்.

இப்போது நிக்சனை நேரடியாக பாதிக்கும் உண்மை ஒன்று வெளிப்பட்டது. வெள்ளை மாளிகை ஆலோசகரான ஜாண்டீன் என்பவர் சாட்சி சோல்லும் போது வாட்டர் கேட் ஊழல் நிக்சனுக்கு நன்கு தெரியும் என்றுகூறினார். கூட்டாட்சி உளவுத்துறை அதிகாரி **:பாட்ரிக்கரே”** என்பவர் வாட்டர் கேட் சம்பந்தமான பல குறிப்பேடுகள் அழிக்கப்பட்டன. என்று கூறினார். இத்தகவல்கள் பெரும் ாரப்பை ஏற்படுத்தின விசாரணை நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியிழல் காட்டப்பட்டதால் மக்களிடையே அதிக ஆர்வத்தை தூண்டியது. இதற்கிடையில் இரு நிகழ்ச்சிகள் மேலும் அவர் மீதான மதிப்பை குறைப்பதற்காக அமைந்தன.

முதலில் அவரது கட்சியை சார்ந்த துணை குடியரசு தலைவர் **அக்னியு** வருமானவரி கட்டாமல் ஏமாற்றியவர். லஞ்சம் வாங்கியவர் என்ற குற்ற சாட்டுகள் நிருபிக்கப்பட்டதால் அவர் பதவி விலக நேரிட்டது.

மற்றொன்று அவரது தேர்தல் பிரச்சாரக்குழு சட்டவரம்புகளை மீறி பெருமளவு நிதி வநுலித்து தேர்தலில் செலவு செய்தது என பொதுகணக்கு அலுவலகம் குற்றம் சாட்டி 8000 டாலர் அபராதம் விதித்தது.

விசாரணையில் கிடைத்த மற்றொரு தகவல் நிக்சனுக்கு பெருஞ்சோதனையாக இருந்தது. அதாவது ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெறும் உரையபடல் தொலைப்பேசி பேச்சுகள் அனைத்தும் 1971ம் ஆண்டு முதல் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்தது. இப்போது செனட் அந்த ஒலிப்பதிவு நாடாக்களை கொடுக்குமாறு நிக்சனிடம் கோரியது. அதற்கு நிக்சன் மறுத்தார். இது ஆட்சித் தலைவர் என்ற முறையில் தமது சிறப்புகளை பாதிக்கும் என்று கூறினார். பின்னர் அந்த ஒலிப்பதிவுகளை 138 பக்கம் கொண்ட நூலாக நிக்சன் வெளியிட்டார். அதில் பல இடங்களில் சொற்றொடர்கள் விடப்பட்டிருந்தன. இதனால் மக்களின் ஐயப்பாடு

வலுத்தது.நாடாக்கள் அனைத்தையும் விசாரணைக்குழு முன் சமா்ப்பிக்க வேண்டும் என கோரிக்கையும் வலுத்தது.

நிக்சனின் அக்கிரமங்களுக்கு உடந்தையாக இருக்க மறுத்த அதிகாரிகளை நிக்சன் பதவி நீக்கம் அல்லது பதவி மாற்றம் செய்தார். தமக்கு எதிராக வாதிடும் வழக்கறிஞா்களைப் பதவியிலிருந்து நீக்கினார். நாடாக்கள் காணாமற் போய்விட்டன என போய் கூறினார். இச்செயல்கள் அவா் குற்றவாளி என்பதனை ஊா்ஜிதம் செய்தன.

நீதித்துறை, சட்டமன்றத்துறை, பொதுமக்கள் ஆகியோரின் ஒருமித்த குரலுக்கு நிக்சன் இறுதியில் பணிந்தார். 64 ஒலிப்பதிவு நாடாக்களை நீதிமன்றத்தில் முன் வைத்தார். அவை வாட்டா்கேட் பிரச்சனையில் நிக்சன் தலையிட்டதை அம்பலப்படுத்தியது.

உடனே பிரதிநிதிகள் சபை நிக்சன் மீது கீழ்காணும் மூன்று அரசத் துரோக குற்றசாட்டுகளை சுமத்தியது

1. வுாட்டா்கேட் வழக்கை மூடி மறைக்க உதவிபுரிந்து நீதிவிசாரணைக்கு இடையூறு செய்தது.
2. குடியரசு தலைவா் பதவியின் அதிகாரங்களை தவறாக பயன்படுத்தி குடிமக்களின் உரிமைகளை புறக்கணித்தது.
3. நீதிமன்றம் கட்டளைகளுக்கு தொடக்கத்தில் பணிய மறுத்தது. காங்கரசின் அதிகார உரிமைகளில் குறுக்கிட்டது.

இக்குற்றசாட்டுகள் விசாரணைக்காக செனட் சபை முன் வந்தன. அச்சபையும் குற்றசாட்டுகளை உறுதிப்படுத்தி விடும் என்று அஞ்சிய நிக்சன் 1974 ஆகஸ்ட் 9ம் நாள் பதவி விலகினார். அமெரிக்க வரலாற்றில் இராஜினமா செய்த முதல் ஜனாதிபதி இவரே. வுாட்டா்கேட் ஊழல் இவரது பதவி விலகலுக்கு காரணமாக அமைந்தது.

## ஜெரால்டு போா்டு

**இளமைபருவம்**

ஜேரால்டு போா்டு 1912ம் ஆண்டு ஜீன் மாதம் 14ம் நாள் ஓமாகா என்னும் இடத்தில் லெஸ்லிலிஞ்சிக்கிஸ் கிஜஸ்போா்டு என்பவா்களுக்கு மகனாக பிறந்தார். இவா் பிறந்த இரண்டாவது வருடமே தந்தையும், தாயும் விவகாரத்து செய்து கொண்டு வேறு வேறு திருமணங்கள் செய்து கொண்டனா். தாயாரின் பராமரிப்பில் வளா்ந்த போா்டு ஆரம்ப கல்வி பயிலும்போதே உணவு விடுதியில் வேலைபார்த்து வந்தார். இவா் சிறுவயதிலேயே சிறந்த எழுத்தாளராக விளங்கினார்.

அமெரிக்காவின் 38வது குடியரசு தலைவராக ஜெரால்டு போா்டு. இவரது பதவி ஏற்பு இதுவரை இல்லாத வினோத முறையில் நடைபெற்றது. இது அரசியலமைப்பு முறைப்படி நடைபெற்றாலும் அமெரிக்க வரலாற்றில் ஒரு ஆபூா்வமான நிகழ்ச்சியாகவே கருதப்படுகிறது.

துணை குடியரசுத் தலைவா் தோ்தலிலோ, குடியரசு தோ்தலிலோ போட்டியிடாமல் 25வது அரசியலமைப்பு திருத்தத்தின் படி குடியரசு தலைவரான ஒரேநபா் போா்டு தான். 1972ம் ஆண்டு துணைக் குடியரசு தோ்தலில் வெற்றீ பெற்ற **ஸ்பைரோ ஆக்னு** என்பவா் லஞ்ச ஊழல் வழக்கில்

சிக்கியதால் 1973ல் பதவி விலக நேர்ந்தது. 25வது திருத்தத்தின் படி அன்றைய குடியரசு தலைவர் நிக்சன் போர்டை துணைக் குடியரசு தலைவராக நியமித்தார். அதனை முறைப்படி செனட் அங்கீகரித்தது. இந்நிலையில் 1974ல் குடியரசுதலைவர் நிக்சன் வாட்டர் கேட் ஊழல் புகார் காரணமாக துரோக குற்றசாட்டு விசாரணையை எதிர் நோக்க அஞ்சி பதவி விலகியதும், துணை குடியரசு தலைவரான போர்டு அப்பதவியை ஏற்க நேர்ந்தது. இவ்வாறு தேர்தலில் போட்டியிடாமலே போர்டு குடியரசு தலைவரானார்.

மாணவர் பருவத்தில் சிறந்த விளையாட்டு விரராக திகழ்ந்த போர்டு இரண்டாம் உலகப்போரின் போது கப்பற்படையில் சேர்ந்து பணிபுரிந்தார். போருக்குப் பின் குடியரசு கட்சியில் சேர்ந்து அக்கட்சியின் சார்பாக அமெரிக்க காங்கிரசின் பிரதிநிதிகள் சபைக்கு 12 தடவை தொடாச்சியாக தெர்ந்தெடுக்கப்பட்டார். 1965லிருந்து 1873 வரை பிரதிநிதிகள் சபையின் குடியரசு கட்சி தலைவராகவும் பொறுப்பு வகித்தார். நிக்சனின் தீவிர ஆதரவாளரானஇவர் துணை குடியரசு தலைவர் ஆக்னுவின் பதவி விலகலுக்குப் பின் துணை குடியரசு தலைவராக நியமிக்கப்பட்டார். மறு ஆண்டில் நிக்சன் பதவி விலகியதும் போர்டு குடியரசு தலைவரானார். அவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிக்சனின் கெள்கைகளையே பின்பற்றினார்.

**உள்நாட்டு கொள்கை (INTERNAL POLICY)**

போர் குடியரசு தலைவராக பதவி ஏற்றதும் அவர் செய்த முதல் காரியம் நிக்சனுக்கு வாட்டர்கேட் ஊழல் வழக்கில் மன்னிப்பு அளித்தது தான். இதற்கு பொதுமக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. அதே சமயம் வியட்நாம் போரில் பற்கேற்க மறுத்த போர்வீரர்களுக்கும், தப்பி ஓடி வந்த போர் வீரர்களுக்கும் பொது மன்னிப்பு அளித்து அந்த எதிர்ப்பை சமாளித்தார்.

இவரது ஆட்சிக் காலத்தில் பொருளாதார மந்தம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றியதால் ரஷ்யாவிற்கு கோதுமை ஏற்றுமதியை அனுமதித்தார். கியூபாவுடனான வாணிப நடைச் சட்டத்தை நீக்கினார். வேலையில்லா திண்டாட்டத்தை குறைக்கவும், கச்சா எண்ணெயின் விலையை குறைக்கவும் நடவடிக்கை எடுத்தார். 5 சதவீதம் அதிகப்படி வருமான வரி விதிக்கப்பட்டது

போர்டு பதவி காலத்தில் அமெரிக்க காங்கிரசில் எதிர்கட்சியான ஜனநாயகக் கட்சி பெருபான்மை பெற்றிருந்ததால் பல பிரச்சனைகளில் அக்கட்சியோடு போரிட வேண்டியதாயிற்று. கொஞ்சமும் சளைக்காமல் 66 முறை ஜனநாயகக் கட்சியினர் மசோதாக்களை தனது தடுப்பு அதிகாரம் மூலம் தள்ளுபடி செய்தார். இவற்றுள் 12 மசோதாக்களை குயெரசு தலைவரின் தள்ளுபடி அதிகாரத்தையும் மீறி காங்கிரஸ் நிறைவேற்றியது. விண்வெளி ஆய்வு பயணங்களில் ஒரு பகுதியாக அனுப்பப்பட்ட **வைக்கிங் கலம் - 1** செவ்வாய் கிரகம் சென்று வந்தது. இவரது பதவிக்காலத்தில் அமெரிக்கா சுதந்திர பிரசுடனம் வெளியிட்ட 200வது ஆண்டுவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

**வெளியுறவு கொள்கை (FOREIGN POLICY)**

பொதுவாக நிக்சனின் கொள்கைகளைத்தான் வெளியுறவில் கடைப்பிடிக்கப்பட்டன. நிக்சன் காலத்தில் வெளியுறவு செயலாளராக இருந்த கிஸ்ஸிங்கர் தான் போர்டு காலத்திலும் நீடித்தார். நிக்சனை பின்பற்றி போர்டும் 1974ல் ரஷியா விஜயம் செய்தார். அங்கு விளாடி வாஸ்க் நகரிலல் ரஷிய அதிபர் **பிரஸ்னேவை** சந்தித்துப் பேசினார். மறுஆண்டில் சீனாவிற்கு விஜயம் செய்தார்.

போர்டு காலத்தில் நடைபெற்ற பன்னாட்டு மாநாடுகளில் 1975ல் நடைபெற்ற **ஹெல்சிங்கி** மாநாடு முக்கியமானதாகும். 1815ல் நடைபெற்ற **வியன்னா** மாநாட்டிற்கு பின் ஐரோப்பிய நாட்டுதலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அவர்களுடன் அமெரிக்க குடியரசு தலைவரும் கனடா பிரதமரும் கலந்து கொண்டனர். 20 ஆண்டுகளாக தென் வியட்நாமை ஆக்கிரமித்து இணைத்துக் கொண்டதோடு வியட்நாம் போர் முற்றுப் பெற்றது என்பதை மாநாடு ரத்துக் கொண்டது. இந்த ராஜதந்திர தோல்வியை அமெரிக்கா வெறும் பார்வையாளராக இருந்து கண்டது பரிதாபமாக இருந்தது.

**வியட்நாம் பிரச்சனை**

ஆமெரிக்க ஆதரவுடன் இருந்த தென் வியட்நாமிலும் கம்போடியாவிலும் நிலைமை மிகவும் மோசமானது. வுடவியட்நாம் கம்யூனிச புரட்சியாளர்களிடம் கம்போடியா 1975ம் ஆண்டு ஏப்ரல் 1ம் நாள் சலணடைந்தது. இந்த நேரத்தில் )1975 ஏப்ரல் 21) தென் வியட்நாம் குடியரசு தலைவர் **நகூயன்வான் தீயூ** பதவி விலகினார். இந்த சந்தர்ப்பத்தில் வடவியட்நாமியர்கள் பலர் தென்வியட்நாமிற்கு குடியொர்த்தனர். அவர்களுக்கு மனிதாபிமான முறையில் உதவ அமெரிக்கா முன்வந்தது. வடவியட்நாம் கம்யூனிஸ்ட் படை தென்வியட்நாமை தாக்க ஆரம்பித்தது. உடனே போர்டு அவர்கள் ஹெலிகாப்டர் மூலம் தென்வியட்நாமில் இருந்த அமெரிக்கர்களை மீட்க உத்தரவிட்டார். 1975ல் ஏப்ரல் 30 நாள் வியட்காங் என்ற வடவியட்நாம் கம்யூனிஸ்ட் படையிடம் தென் வியட்நாம் சரணடைந்தது.

தேன்வியட்நாம் மற்றும் கம்போடிய அகதிகளுக்கு உதவ 405 மில்லியன் டாலர்கள் செலவிட அமெரிக்க காங்கிலஸ் (பாராளுமன்றம்) அனுமதித்தது. அமெரிக்க படை தன்னுடைய இறுதிபடையை தைவானிலிருந்து 1975 ஜீன் 7ல் விலக்கி கொண்டது. 1975 ஆகஸ்ட் 11ல் வடவியட்நாம் தென்வியட்நாம் நாடுகள் ஐக்கிய நாட்டு சபையில் சேருவதற்கு விண்ணப்பித்தது. அமெரிக்கா தள்ளுபடி ஆணை மூலம் மறுப்பு தெரிவித்தது.

1975 டிசம்பர் 1ல் போர்டு சீனாவிற்கு விஜயம் செய்தார். 1976 ஜனவரி 24ல் ஸ்பெயினுடன் ஐந்தது ஆண்டுகளுக்கு பாதுகாப்பு ஒப்பந்தத்தை அமெரிக்கா செய்து கொண்டது. 1976 மே 19ல் ஒரு நிரந்தர தென் ஆப்பிரிக்காவின் பிரச்சனைக் குறித்து செப்டம்பர் 5 முதல் செப்டம்பர் 8ம் தேதி அமெரிக்க வெளியுறவு செயலர் கிஸ்லிங்கரும், அஸ்ரேல் பிரதமரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

**மதிப்பீடு**

**குடியரசு** தலைவர் பதவிக்கு முதன்முதலாக போட்டியிடாமலேயே நியமிக்கப்பட்டவர் போர்டு. பதவியில் இருக்கும் போது ஜப்பானுக்கு விஜயம் செய்த முதல் அமெரிக்க குடியரசு தலைவரும் இவரே. இவரது ஆட்சிக் காலத்தில் தான் அமெரிக்க ஆதரவு தென்வியட்நாம் வடவியட்நாம் சரணடைந்தது. விமானப் படையில் பெண்களை நியமித்தவரும் இவரே. 1976 ஜீலை 20ம் நாள்

**மார்ஸ்** கிரகத்திற்கு அனுப்பப்பட்ட **வைக்கிங்-1** படம் பிடித்து அனுப்பியது. **வைக்கிங் - 11** செப்டம்பர் 3ம் நாள் மார்ஸில் இறங்கியது. 1976 ஜீலை 4ல் 200 வது சுதந்திர தின விழாவை அமெரிக்கா மிகச் சிறப்பாக இவரது தலைமையில் நடத்தியது. இவரது ஆட்சிக்காலத்தில் பல அயல்நாடுகளுடன் நல்லுறவு ஏற்பட்டது எனலாம்.

## ஜிம்மி கார்ட்டர்

ஜார்ஜியாவைச் சேர்ந்த ஜிம்மிகார்ட்டர் அமெரிக்காவின் 39வது ஜனாதிபதி ஆவார். இவர் 1924ம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் **வில்பெர்ன் எட்கர் ஸ்மித், அல்லிமுர்ரேஸ்மித்** ஆகியோருக்கு மகனாக பிறந்தார். ஆரம்பக் கல்வியை ஜார்ஜியாவில் முடித்துவிட்டு உயர்படிப்பிற்காக அன்னோபோவிஸ் என்னும் இடத்திலுள்ள கடற்படை கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். இவர் கிருத்துவ மதத்தின் ஒரு பிரிவான **பாப்புலிசம்** பிரிவைச் சார்ந்தவர். ஜனநாயக கட்சியில் சேர்ந்து படிப்படியாக முன்னேறி ஜார்ஜிய மாநில ஆளுநரானார். 1976ம் ஆண்டு நடைபெற்ற குடியரசு தலைவர் தேர்தலில் நின்று வெற்றிப்பெற்றார். 1977ம் ஆண்டு ஜனவரி 20ம் நாள் பதவி ஏற்ற இவர் 1981ம் ஆண்டு ஜனவரி 20ம் நாள் வரை அப்பதவியை வகித்தார்.

### உள்நாட்டு கொள்கை (**DoMESTIC**POLICY)

### வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுதல்

ஜிம்மிகார்ட்டர் உள்நாட்டு வளர்'ச்சிக்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். வேலையில்லா திண்டாட்டத்தை கடடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள்' எடுப்பதற்கு இரண்டு சட்ட வரைவுகளை 1977ம் ஆண்டு மார்ச் 13ம் நாள் கார்ட்டர் செனட்டின் வரைவுகளை 1977ம் ஆண்டு மார்ச் 13ம் நாள் கார்ட்டர் செனட்டின் அனுமதியுடன் கொண்டு வந்தார். நான்கு மில்லியன் டாலர் செலவில் வடகிழக்கு பகதியில் பல்வேறு பொதுப்பணித் திட்டங்களை கொண்டு வந்தார். இதன்மூலம் படித்த மக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு கிடைத்தது. ஆமலும் 1977ம் ஆண்டு ஜீன் 20ம் 1142 கி.மீ. நீளமுள்ள **டிரான்ஸ் அலாங்கா** எண்ணெய் குழாயை திறந்து வைத்தார். இவரது ஆட்சிக்காலத்தில் 10 மில்லியன் பேருக்கு மேல் வேலைவாய்ப்பு கிடைத்தது.

### சமூக நலத்திட்டங்கள்

பல்வேறு சமூக நலத்திட்டங்களும் இவரால் அமல்படுத்தப்பட்டன. குறிப்பாக 20,000 டாலர் அதிக வருமானம் பெறும் தனிநபருக்கு சமூகப்பாதுகாப்பு அளிக்கும் திட்டம் இவரால் கொண்டு வரப்பட்டது. மக்களுக்கு வேண்டிய இலவச மருத்துவ வசதிகள் எல்லா கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. கல்வி வளர்ச்சி மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்த கார்ட்டர் அதன் வளர்ச்சிக்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்தார்.

### தொழிலாளர் பிரச்சனையைத் தீர்த்தல்

தொழில் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிய இவர் தொழிலாளர் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் ஆர்வம் காட்டினாரி. குறிப்பாக 110 நாட்களாக வேலைநிறுத்தத்தில் ஆடுபட்ட சுரங்க

தொழிராளர்கள் வேரைநிறுமத்த போராட்டத்தில் இவர் தலையிட்டு 1978ம் ஆண்டு மார்ச் 25தட் நாள் மீண்டும் தொழிலாளர்கள் வேலைக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்தார்.

**விஞ்ஞான வளர்ச்சி**

இவரது ஆட்சிக் காலத்தில் விண்வெளி ஆராய்ச்சிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இதற்கென பல விண்வெளிக் கலகங்கள் அனுப்பப்பட்டன. இவற்றுள் 1978ம் ஆண்டு டிசம்பர் 9ம் நாள் அனுப்பப்பட்ட முதலாம் பயோனியர் என்ற விண்கலமும், 1979ம் ஆண்டு செப்டம்பர் 7ம் நாள் அனுப்பப்பட்ட இரண்டாம் பயோனியர் என்ற விண்கலமும் விண்வெளிக்கு வெற்றிகரமாக அனுப்பப்பட்டது. அமெரிக்காவால் அனுப்பப்பட்ட **முதலாம் வோயாகர்** என்ற விண்வெளிக்கலம் 1979ம் ஆண்டு மார்ச் 5ம் நாள் ஜீப்பிட்டரைச் சென்றடைந்தது. மேலும் ஆஸ்திரேலியா, இந்தியப் பெருங்கடல் ஆகியவற்றின் மேல் விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தை 1979ம் ஆண்டு ஜீலை 11ம் நாள் அமெரிக்கா அமைத்தது. குறிப்பாக இவரது ஆட்சிக் காலத்தில் அறிவு வளர்ச்சியில் நாடு சிறந்து விளங்கியது.

**வெளிநாட்டுக் கொள்கை (FOREIGN POLICY)**

**அமெரிக்க பணயக் கைதிகள்**

ஈரானில் ஏற்பட்ட அரசியல் சிக்கல் காரணமாக அந்நாட்டு மன்னர் **ஷா** அங்கிருந்து வெளியேறி மெக்ஸிக்கோவில் அடைக்கலம் புகுந்தார். ஷாவிற்கு அமெரிக்கா ஆதரவு கொடுத்ததால் ஈரானின் மதத்தலைவர் கோமினியின ஆதரவுடன் அவரது தீவிரவாத ஆதரவாளர்கள் டெக்ரான் தூதகரத்தில் தங்கியிருந்த 66 அமெரிக்கர்களை பணயக் கைதிகளாக பிடித்துக் கொண்டனர். உளவு வேலை பார்த்ததாக இவர்கள் மீது கோமினி குற்றம் சாட்டினார். 14 மாதங்கள் இவர்கள் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். அமெரிக்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அவர்களை மீட்க முடியவில்லை. ஈரானின் இச்செயலை உலக நாடுகள் வன்மையாக கண்டித்தன. பணய கைதிகளை விடுவிக்க அல்ஜிரியா தீவிரமாக செயல்பட்டது. இதன் தலையீட்டால் 1980ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ம் நாள் பயண கைதிகளை விடுவிக்க கோமினி சில நிபந்தனை விதித்தார். இதன்படி ஈரானின் உள்நாட்டு பிரச்சனையில் அமெரிக்கா தலையிடக் கூடாது என்றும், அமெரிக்க வங்கியில் காணப்படும் ஈரானின் சொத்துக்களும், ஷாவின் சொத்துக்களும்ஈரானுக்கு கைமாற்றப்பட வேண்டும் என்றும் ஈரானில் அமெரிக்கா பெற்றிருந்த சலுகைகளை விட்டுவிட வேண்டும் என்றும் நிபந்தனைகளை விதித்தார். இது தொடர்கான பேச்சு வார்த்தையின் போது பல்வேறு கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் இறுதியில் இரு நாட்டவரிடையேயும் சமரசம் ஏற்பட்டது. இதன் காரணமாக அமெரிக்க மக்களிடையே நீண்டநாட்களாக நிலவி வந்த பதட்டம் தணிந்தது.

**பனாமா கால்வாய் ஒப்பந்தம்**

**உட்ரோவில்சன் காலத்தில் அமைக்கப்**பட்ட பனாமா கால்வாய் சுமார் 75 ஆண்டுகளாக அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ் செயல்பட்டு வந்தது. இக்கால்வாயையும் அதன் சுற்றுப்புற இடங்களும் தனக்கு சொந்தமானது என அமெரிக்கா உரிமை கொண்டாடி வந்தது. இச்சூழ்நிலையில் இக்கால்வாயின் பாதுகாப்பு பொறுப்பை பனாமாவிடம் கொடுப்பது தொடர்பாக அமெரிக்க தலைவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இருப்பினும் ஜிம்மி கார்ட்டரின்

ஆட்சிக் காலத்தில் இது பனாமாவின் நிர்வாகத்தின் கீழ்கொண்டு வரப்பட்டது. அதற்கென இரு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டது. முதல் ஒப்பந்தம் 1979ம் ஆண்டு டிசம்பர் 31ம் நாள் வரை நடந்தது. அதன்படி இக்கால்வாய் 1999 டிசம்பர் 31ம் நாள் வரை பனாமாவின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தம் படி 1999ம் ஆண்டிற்கு பின் அக்கால்வாயின் பாதுகாப்பை அமெரிக்காவும், பனாமாவும் இணைந்து மேற்கொள்வதற்கு வகை செய்தது. அமெரிக்காவில் இச்செயலுக்கு பரவலாக எதிர்ப்பு இருந்த போதிலும் 1978ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் அமெரிக்க செனட் இவ்வொப்பந்தத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.

**எகிப்து இஸ்ரேல் ஒப்பந்தம்**

எகிப்து, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கிடையே சுமார் 30 ஆண்டுகள் தொடர்ந்து போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இப்போரில் அமெரிக்கா இஸ்ரேலுக்கும், அரபு நாடுகள் எகிப்துக்கும் உதவியளித்தன. இதன்விளைவாக உலக நாடுகளிடையே பதட்டம் நிலவியது. இச்சூழ்நிலையில் போரை முடிவிற்கு கொண்டு வர எண்ணிய ஜிம்மி கார்ட்டர் எகிப்து, இஸ்ரேல் ஆகிய நாடகளுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக முயற்சியில் ஈடுபட்டார். இதன்விளைவாக 1978ம் ஆண்டு செப்டம்பர் 17ம் நாள் இருநாடுகளும் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டன. இவ்விரு நாடுகளிடையே அமைதியை ஏற்படுத்திய பெருமை ஜிம்மி கார்ட்டரையே சாரும்.

**பாகிஸ்தான் அமெரிக்க உறவு**

இவரது ஆட்சிக் காலத்தில் பாகிஸ்தானிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே நல்லுறவு நிலவியது. ஆப்காகிஸ்தானின் ஒரு பகுதியை ரஷ்யா ஆக்கிரமித்தது. இவ்வாக்கிரமிப்பால் பாகிஸ்தான் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படும் நிலை உருவானது. எனவே பாதுகாப்பு கருதி பாகிஸ்தான் அமெரிக்காவின் துணையை நாடியது. ஆமெரிக்கா 400 மில்லியன் டாலர்களை பாகிஸ்தானின் பாதுகாப்பிற்கென அளித்தது.

**கியூபாவுடன் உறவு**

நீண்டகாலமாக கியூபாவின் விவகாரம் அமெரிக்காவிற்கு பெரும் தலைவேதனையாக இருந்து வந்தது. ரஷ்ய சார்பு நாடதான கியூபா அமெரிக்காவின் எண்ணங்களுக்கு எதிராக செயல்பட்டு வந்தது. ஆனால் ஜிம்மி கார்ட்டரின் ஆட்சிக் காலத்தில் இருநாடுகளுக்கிடையேயான உறவு நிலையில் மேம்பாடு ஏற்பட்டது. இவர் கியூபாவுடன் கட்டுப்பாடான ராஜதந்திர உறவை மேற்கொண்டார்.

**கொரிய விவகாரம்**

வடகொரியாவிற்கு எதிராக அமெரிக்கா தென் கொரியாவிற்கு ஆதரவளிதது வந்தது. எனவே வடகொரியா அமெரிக்காவைப் பகைமை உணர்வுடன் நோக்கியது. இச்சூழ்நிலையில் 1977ம் ஆண்டு ஜீலை மாதம் 4ம் நாள் அமெரிக்க ஹெலிகாப்டர் வடகொரியாவின் மீது பறந்து சென்றது. இதை வடகொரியா சுட்டு வீழ்த்தியது. இதில் மூவர் இறந்தனர். இச்செயல் வடகொரியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான உறவு நிலையை வெகுவாக பாதித்தன.

**கறுப்பர் பிரச்சனை**

ரொடிசியாவில் நிலவிய கறுப்பர் பிரச்சனைக்கு தீர்வு காண விருமிபிய ஜிம்மி கார்ட்டர் 1977ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாள் இங்கிலாந்து பிரதமருடன் சந்தித்துப் பேசினார். இப்பேச்சு வார்த்தையின் போது கறுப்பர்களுக்கு அதிகார மாற்றம் அளிப்பது குறித்து முடிவு செய்யபட்டது.

**இந்தியா விஜயம்**

இந்தியாவிற்கு விஜயம் செய்த இரண்டாவது அமெரிக்க குடியரசு தலைவர் என்ற சிறப்பு ஜிம்மி கார்ட்டருக்கு உண்டு. இந்த இந்திய விஜயம் இந்திய அமெரிக்க உறவை எதிர்பார்த்த அளவிற்கு வலுப்படுத்தவில்லை. காரணம் தாராப்பூர் அணு உலைக்கு ஒப்பந்தம் படி யுரேனியம் வழங்க அமெரிக்கா தயங்கியதுதான்.

**அமெரிக்கா – கனடா – உறவு**

இவரது ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா கனடாவுடன்ட நல்லுறவு கொண்டிருந்தது. குறிப்பாக 1977ம் ஆண்டு செப்டம்பர் 20ம் நாள் இயற்கை வாயுவை அலஸ்காவிலிருந்து தாழ்வான 48 மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல அமெரிக்காவும் கனடாவும் ஒப்புக்கொண்டு அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் விளைவால் 43000 கி.மீ. தூரத்திற்கு குழாய் வழிகள் அமைக்கப்பட்டன.

**அமெரிக்க – ஆப்கான் உறவு**

ஜிம்மிகார்ட்டரின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா ஆப்கானிஸ்தான் உறவில் விரிசல் ஏற்பட்டது. 1979ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் நாள் ஆப்கானிஸ்தானிலஇருந்த அமெரிக்க தூதரை ஈரானிய தீவிரவாதிகளி கடத்தி சென்று கொலை செய்தனர். இதே நாளன்று ஈரானியலிருந்த அமெரிக்க தூதரையும் அவரது அலுவலகத்தில் இருந்த பணியாளர்களையும் இரண்டு மணி நேரம் பணயக் கைதிகளாக வைத்திருந்தனர். இச்செயல்கள் அமெரிக்காவிற்கு ஆத்திரத்தை ஏற்படுத்தின. எனவே பெப்ரவரி 22ம் நாள் முதல் ஆப்கானிஸ்தானிற்கு அளித்து வந்த உதவி தொகையை அமெரிக்கா நிறுத்தியது.

**தேர்தலில் தோல்வியடைதல்**

இரண்டாம் உலகப் போருக்கு பின் அமெரிக்காவை திறம்படி ஆட்சிபுரிந்த ஜனாதிபதிகளுள் ஜிம்மி காரிட்டரும் ஒருவர். இவரது ஆட்சிக் காலத்தில் உள்நாட்டில் வளர்ச்சி ஏற்பட்டதோடு அயல்நாடுகளோடும் நல்லுறவு ஏற்படுத்தப்பட்டன. இருப்பினும் இவரது சில செயல்பாடுகள் இவரது சகோதரர் (பில்லி) விவகாரம் அமெரிக்காவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது இவரது சகோதரர் பில்லி 2,20,000 டாலர் தொகையை பெற்றுக் கொண்டு லிபியாவின் தரகராக செயல்பட்டார். இவ்விவகாரத்தில் ஜிம்மி கார்ட்டர் தனது சகோதரருக்கு ஆதரவாக காங்கிரசிற்கு உள்ளும்புறமும் செயல்பட்டார். இதன் தீய விளைவு அடுத்த தேர்தலில் பிரதிபலித்தது. கடுமையாக விமர்ச்சிக்கப்பட்ட இவர் 1981ம் ஆண்டு தேர்தலில் குடியரசு கட்சியை சார்ந்த ரெனால்டு ரீகன் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்.

**ரெனால்டு ரீகன்**

ரீகன் அமெரிக்காவின் 40வது ஜனாதிபதி ஆவார். ரீகன் இல்லினாவிலுள்ள டாம்பிகோ என்னும் இடத்தில் 1911ம் ஆண்டு பெப்ரவரி 6ம் நாள் ஜான்எட்வர்டு, நெல்லி வில்சன் ரீகன்

ஆகியோர்களுக்கு மகனாக பிறந்தார். ஆரம்ப கல்வியை உள்ளூரில் முடித்த பின் 1932ம் ஆண்டு யுரேகா கல்லூரியில் உயர்க்கல்வி பயின்றார். இவர் 69வது வயதில் **வார்னர் பிரதர்ஸ்** என்ற பிரபல திரைப்பட நிறுவனத்தில் 7 ஆண்டுகளுக்கு நடிகராக ஒப்பந்தமானார். 53 தரைப்படங்களில் நடித்து புகழ்ெற்ற இவர் பொதுமக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றதில் வியப்பில்லை.

ஜனநாயகக் கட்சியில் ஆதரவாளராக அரசியலில் வாழ்க்கையை தொடங்கியவர் 1962ல் குடியரசு கட்சிக்கு தாவினார். 1980ல் ஈரான் பணயக் கைதிகளை மீட்பதில் படுதோல்வியுற்ற அதிபர் கார்ட்டரை வெகு எளிதில் தோற்கடித்து 1981ல் அமெரிக்காவில் 40வது குடியரசு தலைவரானார். 1984ல் இரண்டாம் முறையாக தேர்ந்தெடுக்கப்படும் போது இதுவரை எந்த தேர்தலிலும் இல்லாத அளவில் 50 மாநிலங்களில் 49ல் வெற்றி பெற்றார்.தேர்வுக் குழுவில் 525 வாக்குகள் பெற்றனர்.

**உள்நாட்டு கொள்கை**

இவர் அறிமுகப்படுத்திய சதுமாய நல்ததிட்டங்களும் சமத்துவ உரிமைகளும் மனதில் நீங்காத இடத்தை பெற்றன.

**1.பெண்களுக்கு சம உரிமை**

அமெரிக்கா சமுதாயத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்தாலும், அவர்களுக்கு ஆண்களுக்கு இணையாக சம உரிமைகள் வழங்கப்படவில்லை. மாறிவரும் சமுதாய வளர்ச்சியை மனிதற்கொண்டு பெண்களுக்கு சமுதாயத்தில் சமஉரிமை அளிக்கரீகன் அதிக அக்கரை காட்டினார். இவரது ஆட்சிகாலத்தில் **சான்ராடேகோன்னார்** என்ற பெண்னை அரிசோனா மாநிலநீபதியாக 1981ம் ஆண்டு ஜுலை 7ம் நாள் நியமித்தார். அமெரிக்காவில் பதவியேற்ற முதல் பெண் நீதிபதி இவரே ஆவார். ரீகனின் இச்செயலை மக்கள் பெருந்தன்மையுடன் வரவேற்றார்.

**2.விமான ஊழியர் வேலை நிறுத்தம்**

1981ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13000 விமான பயனியாளர்கள் காலவரையின்றி வேலை நிறுத்தம் செய்தனர். இது அமெரிக்காவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதை ஒரு சவாலாக ஏற்ற ரீகன் இவ்விவகாரத்தில் துணிச்சலுடன் செயலாற்றினர். அரசு அனுமதியின்றி வேலை நிறுத்தம் செய்ததாக கூறி இவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பேச்சுவார்த்தைக்கு பின் 1500 பேர்கள் மட்டுமே தற்காலிமாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். எஞ்சியவர் விவகாரத்தில் மிகவும் கண்டிப்பாக செயல்பட, இவர் நாளடைவில் தனது நிலைமையை மாற்றிக் கொண்டு வேலைக்கு விண்ணப்பத்தால் அவர்கள் புதிய பணியில் அமர்தலாம் என்ற சலுகையை மட்டும் வழங்கினர்.

**விஞ்ஞான வளர்ச்சி**

ரீகன் விஞ்ஞான வளர்ச்சிக்கு அதிக அக்கறை காட்டினர் . விண்வெளியில் விண்கல நிலையங்கள் அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர். அமைரிக்காவின் வலிமையை உணர்த்தும் வண்ணம் Mx என்ற கண்டம் விட்டும் கண்டம் தாவும் ஏவுகணை ஆயுத உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

வேலையில்லாத் திண்டாட்டம் இலரது ஆட்சிக்காலத்தில் 10.6% இருந்தது. 1982ம் ஆண்டு சுமார் 1.2 கோடி மக்கள் வேலையின்றி திண்டாடினர். 1984ம் ஆண்டு பணவீக்கம் 4.3**%** சதவீதமாக

குறைக்கப்பட்டது. இக்காலத்தில் பங்கு மாாகெட்டின் அளவு கணிசமாக அளவு உயா்ந்தது. தனிநபரின் வருமானம் திருப்திகரமாக இருந்தது. 1981ல் பொருளாதரா மந்தம் ஏற்பட்டாலும் வலுவான பொருளியியல் அடிப்படை விரைவிலே சீா்பெற்றது.

## வெளிநாட்டுக் கொள்கை (FOREIGN POLICY)

**1. ரஷியாவிற்கு எதிராக செயல்படுதல்**

கம்யூனிஸ்ட் கொள்கைக்கு எதிராக செயல்பட்ட ரீகன் ரஷியாவை கடுயைமாக விமா்சித்ததோடு அதற்கெதிராகவும் செயல்பட்டு வந்தாா். இதேபோன்று ரஷியாவும் அமெரிக்காவிற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வந்தது. 1981ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள் போப் ஜாண் பால் செயிண்ட் பீட்டா்ஸ் சதுக்கத்தில் துருக்கிய இளைஞா் ஒருவரால் சுடப்பட்டாா். இச்செயலை மிக வன்மையாக கண்டித்த அமெரிக்கா இது ரஷ்யாவின் தூண்டுதலால் நடைபெற்றதுஎன வெளிப்படையாக கூறியது. இதேபோன்று ஆப்கானிஸ்தானத்தில் ரஷியாவின் தலையீடடையும் ரீகன் கடுமையாக எதிா்த்தாா். 1982ம் ஆண்டு ஜீன் 5ம் நாள் ஜப்பான், மேற்கு ஜொ்மனி, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, இத்தாலி ஆகிய ஏழு நாடுகளின் உச்சி மாநாடு வொ்சேல்ஸ் நகரில் வடைபெற்றது. இம்மாநபாட்டிற்கு அமெரிக்காவின் தலையீட்டின் காரணமாக ரஷியாவிற்கு அழைப்பு விடுவிக்கவில்லை.

**லெபனான் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுதல்**

லெபனானில்தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக புரட்சி நடத்தினா். தீவிரவாதிகளை இடக்கவும், அமைதியையும், நிலைநாட்டவும், அமெரிக்க கப்பல் படையை ரீகன் லெபனாகுக்கு அனுப்பினாா். இதனால் ஆத்திரம் இடைந்த லெபனான் தீவிரவாதிகள் **பீரட்டிரிருந்த** அமெரிக்க கப்பற்படை நிறுவனத்தின் தலைமையகத்தை வெடிகுண்டு மூலம் தகா்த்து நிா்மூலமாக்கினாா்கள். இதில் 241 அமெரிக்க கப்பற்படையினா் கொல்லப்பட்டனா். இதன் விளைவாக அமெரிக்கா தனது கப்பற்படையை இங்கிருந்து விலக்கி கொண்டது.

**ஜப்பான் பயணம்**

ரீகன் தனது ஈட்சிக் காலத்தில் ஜப்பானுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டாா். வா்த்தக தடைகள் நீக்கப்பட்டு வணிகத்தை விரிவாக்கும் நோக்குடன் ரீகன் 1983ம் ஆண்டு ஜப்பானுக்கு விஜயம் செய்து அந்நாட்டுப் பிரதமா் யககிரோநாகாசோனையுடன் சந்தித்துதுப் பேசினாா்.

**தென்கொரியா விமான விவகாரம்**

அமெரிக்க வாா்பு நாடான தென் கொரியாவிற்கும், ரஷியாவிற்குமிடையே அரசியல் கருத்து வேறுபாடு நிலவியது. 1983ம் ஆண்டு செப்டம்பா் முதல் நாள் நியூயாா்க்கிலிருந்து ஒரு பயணிகள் விமானம் தென்கொரியாவின் சியோனுக்கு சென்றது. இதை உளவு பாா்க்கும் விமானம் என கருதிய ரஷ்யா தனது எல்கையில் அது வந்தபொழுது சுட்டு வீழ்த்தியது. இந்நிகழ்ச்சி இரு நாடுகளுக்கும் இடையே பதட்ட நிலையை உருவாக்கியது.

**எத்தியோப்பியாவிற்கு உதவுதல்**

ரீகன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது எத்தியோப்பியாவில் கடும் உணவு பஞ்சம் ஏற்பட்டது. இதனால் இலட்சக்கணக்கான மக்கள் வறுமையில் வாடினா். இப்பஞ்சத்தைப் போக்க

ரீகன் பல இலட்சம் டாலர் மதிப்புள்ள உணவு பொருட்களை 1984ம் ஆண்டு அக்டோபர் 24ம் நாள் எத்தியோப்பியாவிற்கு அனுப்பி வைத்தார்.

**நீதிக்கு புறம்பான செயல்**

டெக்ரான் தூதகரத்தில் தங்கியிருந்த 66 அமெரிக்கர்களை பணய கைதிகளாக்கியஈரானுடன் 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் ரீகன் இரகசிய ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் படி ரீகன் அரசு ஈரானுக்கு ஆயுதங்களைவ ிற்பனை செய்தது. இதன்மூலம் கிடைக்கும் லாபத்தை **நிகராகுவாவில்** பொது உடைமை கொள்கைக்கு எதிராக செயல்படும் கொரிலாவுக்கு அளிக்க அரகசிய ஏற்பாடு செய்யப்பட்டது. நீதிக்கு புறம்பான ரீகனின் இச்செயலை அமெரிக்கர்கள் வன்மையாக கண்டித்தனர். இச்செயலினால் ரீகனின் புகழ் மங்கியது.

**மன்ரோ கொள்கையின் முக்கியத்துவம் குறைதல்**

ரீகனின் மற்றொரு தவறு சாதனை புகழ்பெற்ற **"மான்8ரா கொள்கையை"** சரியாக பின்பற்றவில்லை. அர்ஜன்டைனாவிற்கு அருகில் பிரிட்டனுக்கு சொந்தமான பாகிலாந்து தீவுகளை 1983ல் அர்ஜென்டைனா கைப்பற்றிக் கொண்டது. இதன்மூலம் அங்கு நிலவிய பிரிட்டிஷ் காலணி ஆட்சிக்கு முடிவு கட்டியது. ஆனால் பிரிட்டன் அதனை மீண்டும் கைப்பற்ற படையனுப்பியது. மன்ரோ கொள்கைக்கு எதிரான இந்த செயலை அமெரிக்கா கண்டிக்கவில்லை. மாறாக பிரிட்டனுக்கு மறைமுகமாக உதவி புரிந்தது. இதன்மூலம் மன்ரோ கொள்கையை அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது என்ப துநன்கு தெரிகிறது.

**தென்ஆப்பிரிக்க இனவெறி கொள்கைக்கு ஆதரவு**

தென்ஆப்பிரிக்காவில் இனவெறி கொள்கைக்கு எதிராக அந்நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம் இயற்றிய போது ரீகன் அதனை தமது தள்ளுபடி அதிகாரத்தின் மூலம் புறக்கணித்தார். ஆனால் அதனையும் மீறி காங்கிரஸ் அத்தீர்மானத்தை மீண்டும் இயற்றிய போது ரீகனின் செல்வாக்கு சரிய தொடங்கியது.

78வது வயதில் ஓய்வு பெற்ற அதிபர் ரீகன் குடியரசுத் தலைவர் பதவி வகித்தவர்களுள் அதிக வயதானவர். இன்னமும் மக்களிடையே அவரது செல்வாக்கு குறையாமல் இருக்கிறது. ஆனால் மூன்றாம் முறையாக அதிபராவதற்கு அரசலமைப்பின் 22 வது திருத்தம் முட்டுக்கட்டைப் போட்டது. தமது துணை அதிபரான ஜார்ஜ் புஷ் என்பவரை 1988ம் ஆண்டு தேர்தலில் நிற்க வைத்து வெற்றி பெறச் செய்துவிட்டுதான் அரசியலிலிருந்து நிரந்தர ஓய்வு பெற்றார்.

## அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கை

இரண்டாவது உலகப் போருக்குப்பின் அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கை கீழ்கண்ட அம்சங்களை கொண்டிருந்தது.

1. மார்ஷல் திட்டம்
2. ட்ருமன் திட்டம்
3. நான்கு அம்சதிட்டம்
4. பெர்லின் முற்றுகை
5. நேட்டோ இராணுவ ஒப்பந்தம்
6. சீனாவில் கம்யூனிஸ வெற்றி
7. கொரிய சிக்கல்'

**1.மார்ஷல் திட்டம் - 1947**

இத்திட்டம் ட்ருமன் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டது. இரண்டாவது உலகப்போரில் ஏற்பட்ட பொருளியல் நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் மேற்கு ஐரோப்பிய நாடுகள் திணறின. ஆதனால் அந்நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்கு பெற தொடங்கியது. இந்த அபாய அறிகுறி உணர்ந்த அமெரிக்கா அந்நாடுகளுக்குப் பொருளியல் உதவி அளித்து சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளச் செய்தால் மக்கள் தொல்லை தீரும். கும்யூனிச அபாயமும் அகலும் என்ற எண்ணத்தில் 1947ல் அயல்நாட்டு செயலாளர் ஜார்ஜ் மார்ஷல் ஒரு திட்டம் வகுத்தார். அது அவரது பெயரால் **மார்ஷல் திட்டம்** என்று அழைக்கப்படுகிறது. அதனை நிறைவேற்ற 1948ல் காங்கிரஸ் **"பொருளியல் கூட்டுநறவு சட்டம்"** ஒன்றை நிறைவேற்றியது. அதன்படி இரு ஆண்டுகளில் பத்தரியரம் கோடி டாலர் செலவிட்ப்பட்டது. அதனால் பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, பெல்ஜியம் உட்பட 16 நாடுகள் பயன்பெற்றன. பொருளாதாரம் சீர்பெற்றது. கம்யூனிசத்தின் செல்வாக்கு மங்கியது. இத்திட்டத்தை "ஐரோப்பிய மீட்புத் திட்டம்" எனவும் அழைத்தார். மக்களின் வாழ்க்கை தரமும் உயர்ந்தது.

**2.ட்ருமன் கோட்பாடு – 1947**

ஐரோப்பாவில் பொதுவுடைமை கொள்கையை பரப்புவதை முதல் நோக்கமாக கொண்டிருந்தது ரஷியா. அவ்வாறு பொதுவுடைமை கொள்கை பரப்பப்படுவதைத் தடுப்பதையே தனது முக்கிய நோக்கமாக கொண்டு அமெரிக்கா செயல்பட தொடங்கியது. அதன் விளைவாக வெளியிடப்பட்டதே **ட்ருமன் கோட்பாடாகும்.**

"பொருளாதாரத்தில் பின்தங்கி வாடுகின்ற பொழுது தான் பொதுவுடைமைக் கொள்கை பரவுகின்றது" என்பதை உணாந்த ட்ரூமன் பொதுவுடைமைக் கொள்கை பரவாமல் இருக்க இத்திட்டத்தை வெளியிட்டர். இத்திட்டத்திற்கு **ட்ருமன் கோட்பாடு** என அழைக்கப்படுகிறது. இது 1947 மார்ச் 19ல் வெளியிடப்பட்டது. இதற்கென 40,00,00,000 டாலரை காங்கிரஸ் ஒதுக்கீடு செய்தது. அதனைக்கொண்டு துருக்கிக்கும் கிரீசுக்கும் இராணுவம் மற்றும் பொருளாதாரம் வளர உதவி அளிக்கப்பட்டது. இவ்வுதவி உடனடியாக செய்யப்பட்டதால் துருக்கியும், கிரீசும் கம்யூனிச பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டன.

**3.நான்கு அம்சதிட்டம்**

இத்திட்டமும் ட்ருமனால் தான் வெளியிட்ப்பட்டது. வளர்ச்சியுறும் நாடுகளுக்கு பொருளியில் தொழில் நுட்ப உதவி அளிக்கும் திட்டம் இதன்படி வகுக்கப்பட்டது.. பின்தங்கிய நாடுகளில் கம்யூனிஸ்ட் செல்வாக்கு வளரவிடாது தடுக்கவும், அமெரிக்க செல்வாக்கு வளரவும் இத்திட்டம் பயன்பட்டது.

**4.பெர்லின் முற்றுகை – 1948**

பேர்லின் நகர் பிரச்சனை அபெரும் சிக்கலுக்கு வழிவகுத்தது. ஜெர்மனியின் கிழக்கு பகுதி ரஷிய ஆதிக்கத்தின் கீஜம் மேற்பகுதி வல்லரசுகளின் கட்டுபாட்டிலும் இருந்தது. மேற்கு பெர்லினுக்குள் தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் ரஷிய ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஜெர்மனி வழியாகத்தான் செல்ல வேண்டும். கிழக்கு ஜெர்மனி மக்கள் வாழ்க்கைத் தரம் ஆமற்கு ஜெர'மனியைப் போல் சிறப்பாக அமையாததால்' கிழக்கு ஜெர'மனி மக்கள் பலர் அங்கிருந்து மேற்கு பெர்லினுக்கு தப்பி ஓடி மேற்கு ஜெர்மனி அடைந்தனர். இந்த மக்கள் வெளியேற்றம் ரஷியர்களுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது. ஆதனால் பல கட்டப்பாடுகளை விதித்தனர். இறுதியில் பெர்லின் நகரத்தை முற்றுகையிட்டு மேற்கு பெர்லினுக்கு, மேற்கு ஜெர்மனிக்கும் இடையிலான நீர், நிலவழி, மார்க்கங்களை ரஷியா மூடிவிட்டது. அதனால் மேற்கு பெர்லினில் உள்ள 14 லட்சம் மக்களும் பட்டினி கிடக்கும் அபாயம் ஏற்பட்டது. ஆனால் அமெரிக்கா தனக்குள்ள விமான போக்குவரத்து வசதிகளைக் கொண்டு மேற்கு பெர்லின் மக்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் ஏற்றி சென்று மேற்கு பெர்லினில் இறக்கியது. இவ்வாறு ரஷிய பெர்லின் முற்றுகை பயனற்று போகுமாறு அமெரிக்கா செய்தது.

**5.நேட்டோ இராணுவ ஒப்பந்தம் - 1949 ((NATO)**

ரஷிய அச்சுறுத்தல் அதிகமாகி கொண்டு வருவதை கண்ட அமெரிக்கா, அதற்கு ஈடு கொடுக்கும் வண்ணம் வலிமை மிகுந்த இராணுவ கூட்டை உருவாக்கி மேற்கு நாடுகளின் படைவலிமையை ஒருங்கிணைக்க முயன்றது. அதன் பயனாக வடஅட்லாண்டிக் இராணுவ ஒப்பந்தம் (NATO)ஏற்பட்டது. இதில் அட்லாண்டிக் கடற்கரை நாடுகளான பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஐஸ்லாந்து, இத்தாலி, லக்கசம்பாக், நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுகல் இங்கிலாந்து ஆகிய 12 நாடுகள் சேர்ந்தன. இந்த இராணுவ ஒப்பந்தம் 1949ம் ஆண்டு ஏப்ரல் 4ம் நாள் ஏற்பட்டது. இதன்படி நேட்டோ நாடுகளுள் ஏதேனும் ஒன்று தாக்கப்பட்டால் அதனைப் பாதுகாக்க அனைத்து நாடுகளும் அணிசேர வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது.

**6.சீனாவில் கம்யூனிச வெற்றி**

இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதும் சீனாவில் சியாங்கே ஷேக் கட்சியான கோமின்டாங் கட்சியினருக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் இடையில் உள்நாட்டு போர் மூண்டது. இதில் இருதரப்பினருக்கும் அமைதி ஏற்படுத்தி வைக்க அமெரிக்க வெளியுறவு செயலாளர் ஜார்ஜ் மார்ஷல் சீனாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் அவரது முயற்சி தோல்வியுற்றது. அதனால் மீண்டும் போர் மூண்டது. அமெரிக்கா சியாங்கே ஷேக்கிற்கு பண உதவியும், படை

உதவியும் தாராளமாக அளித்தது. கம்யூனிஸ்ட்கள் ரஷியாவிடமிருந்து உதவி பெற்றனர். எனவே கெடுப்பிடிபோர் சீனாவில் உள்நாட்டு போராக மாறியது.

இறுதியில் கம்யூனிஸ்ட்டுகள் மாசேதுங் தலைமையில் அமோக வெற்றி பெற்றனர். சியாங்கே ஷேக் தோற்கடிக்கப்பட்டு பார்மோசாவிற்கு விரட்டியடிக்கப்பட்டார். 1949 அக்டோபர் முதல் தேதி **"சீன மக்கள் குடியரவு"** நிறுவப்பட்டது.

அதன்பின் சீனபிரச்சனை மு.நா, சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சீனமக்களின் உண்மையான அரசு எது என்ற சிக்கல் ஏற்பட்டது. சீன மக்களின் உண்மையான பிரதிநிதித்துவ அரசு சீன மக்கள் குடியரசு தான் ரஷ்யா கூறி அதற்கு ஐ.நா.வில் உரிய இடம் அளிக்க வேண்டும் என்று வாதாடியது. கெடுபிடிப் போர் சூழ்நிலை காரணமாக இதை அமெரிக்கா எதிர்த்தது. இருந்தாலும் கம்யூனிஸ்ட் சீனா அரசு தான் ஐ.நா,வில் இடம் பெற்றது.

**7.கொரிய சிக்கலில் தீர்வு (1952)**

தாராள கொள்கையை பின்பற்றிய தென்கொரியா அமெரிக்க கட்டுப்பாட்டிலும் கம்யூனிச கொள்கையை பின்பற்றிய வடகொரியா, சீனா கட்டுப்பாட்டிலும் இருந்தது. 1950ல் வடகொரியா தென்கொரியா மீது படையெடுத்தது. உடனே தென்கொரியா ஐ.நா. வில் புகார் செய்தது. அச்சமயம் பாதுகாப்புக் குழு கூட்டத்தை ரஷியா புறகணித்து வந்ததால் தென்கொரியாவிற்கு படைகொடுத்து உதவ ஐ.நா. முடிவுசெய்தது. ஐ.நா, சார்பில் அமெரிக்கப் படைகளே பெரும் போரில் ஈடுபட்டன. அமெரிக்க தளபதி மேக் ஆர்தர் ஐ.நா, தளபதியாக செயல்பட்டார். எனினும் போர் தொடர்ந்து நடைபெற்றது. சீனப்படையினர் வடகொரியாவிற்கு ஆதரவாக போரில் இறங்கினார். எனவே கொரியா எல்லையைத் தாண்டி சீன ராணுவ கேந்திரங்களின் மீது குண்டுவீசி அழிக்க வேண்டும் என மேக் ர்தர் திட்டமிட்டார். இச்செயல் ரஷியாவின் நேரடி தலையீட்டையும் உலகப்போரையும் ஏற்படுத்தி விடும் என அஞ்சிய ட்ரூமன் மேக் ஆர்தரை பதவி நீக்கம் செய்தார்.

1952ல் ஐ.நா. கொரியப் போர் நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தது. அதன்படி போர் நின்றது. இவ்வாறு அமெரிக்காவின் அயல்நாட்டு கொள்கை உலகிலுள்ள கம்யூனிஸ்ட் ஆதரவு நாடுகளை ஒடுக்கும் பொருட்டு அமைந்திருந்தது. அதே நேரத்தில் தாராள கோள்கையை பின்பற்றும் நாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வந்தது.